
தென்தமிழ் நாட்டுக் குடைவரைகள்

தொகுதி - 1



மு. நளினி
இரா. கலைக்கோவன்

தென்தமிழ்நாட்டுக் குடைவரைகள்

தொகுதி – 1

மு. நளினி
இரா. கலைக்கோவன்

சேகர் பதிப்பகம்
66, பெரியார் தெரு, எம்.ஜி.ஆர். நகர்,
சென்னை – 78. (044–65383000)

Cave Temples of South Tamilnadu

Volume - 1

Dr. M. Nalini, M.A., M.Phil., D. E.A., Ph.D.,

Dr. R. Kalaikkovan, M.B.B.S., D.O., M.A., M.A., Ph.D.,

முதற் பதிப்பு : ஜூன், 2007

உரிமை : ஆசிரியர்களுக்கு

நூல் அளவு : டெம்மி

தாள் : மேப்லித்தோ

எழுத்து : 12 புள்ளி

பக்கங்கள் : 16 + 208 = 224

விலை : ரூ.100.

ஒளியச்சு :
டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்,
திருச்சிராப்பள்ளி – 620 018.

நூல் அச்சிட்டோர் :
ஜுபிட்டர் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை – 600 024.

உள்ளுறை...

உழைப்பையே உரமாக்கி விளைந்த இந்த ஆய்வுநூல்

'என்றும் வேண்டும் இன்ப அன்பு' என்று

எங்கள் உள்ளங்களைக் கோயில்களாக்கிக் கொண்ட

தமிழ் மாமுனிவர்

தவத்திரு அடிகளார் பெருந்தகையின்

மண்ணளந்த திருவடிகளுக்கும்

மக்களைச் சுமந்த சிந்தனைகளுக்கும்

மு. நளினி

திருச்சிராப்பள்ளி சீதாலட்சுமி ராமசாமி கல்லூரி வரலாற்றுத்துறை இணைப் பேராசிரியர்; டாக்டர் மா. இராச மாணிக்கனார் வரலாற்றாய்வு மையத்தின் மதிப்புறு இணை இயக்குநர்.

1986ல் எறும்பீசுவரர் கோயில் ஆய்வு. 1988ல் முதுநிறைஞர் பட்டத்திற்காக, கீழப்பழுவூர் ஆலந்துறையார் கோயில் பற்றிய ஆய்வு. கல்வெட்டறிஞர் பேராசிரியர் எ. சுப்பராயலு வழிகாட்டலில் கி. பி. ஏழாம் நூற்றாண்டு முதல் பதினேழாம் நூற்றாண்டு வரையிலான புவியியல் சார்ந்த சிராப்பள்ளி மாவட்டக் குடியமர்வு, வேளாண்மை, சமயம் குறித்த முனைவர் ஆய்வு.

அமரர் தவத்திரு குன்றக்குடி அடிகளாரால், 'கல்வெட்டாய்வுக் கலைச்செல்வி' பட்டம் வழங்கப்பெற்ற இவரது பணிகளைப் பாராட்டிக் கோவில்பட்டித் திருவள்ளுவர் மன்றத்தார், 'கல்வெட்டாய்வுக் கலைவல்லார்' விருதும், திருத்தவத்துறை நாடுகாண் குழுவினர், 'கல்வெட்டாய்வுச் செம்மல்' விருதும் அளித்துச் சிறப்பித்துள்ளனர்.

இலங்கை அரசால் அழைக்கப்பெற்று, அரசின் இந்து சமயக் கருத்தரங்கில், சோழர் கட்டடக்கலை, சிற்பக்கலை எனுந் தலைப்புகளில் ஆய்வுரைகள் வழங்கிய பெருமைக்குரியவர். எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டிலும் சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகம் நடத்திய, 'அனைத்துலக அரங்கில் தமிழர்' எனும் பன்னாட்டுக் கருத்தரங்கிலும் பங்கேற்றவர்.

தனியாகவும் பிற ஆய்வறிஞர்களுடன் இணைந்தும் இதுவரை எண்பதிற்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளைத் தந்துள்ள இவருடைய படைப்புகள், இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றக் கருத்தரங்குகளிலும் அகில இந்தியக் கல்வெட்டுக் கருத்தரங்குகளிலும் அறிஞர்களின் பாராட்டைப் பெற்றுள்ளன. இவரது, 'வலஞ்சுழி வாணர்' நூல் தமிழ் எழுத்தாளர் நலநிதி அறக்கட்டளையின் சிறந்த நூலுக்கான பரிசைப் பெற்றுள்ளது.

இரா. கலைக்கோவன்

திருச்சிராப்பள்ளி டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையத்தின் இயக்குநர். கண்மருத்துவப் பணியில் இருந்தபோதும், தமிழ்பால் உற்ற காதலால் முறைப்படித் தமிழ் பயின்று முனைவர் பட்டம் பெற்றவர். வரலாற்றிலும் முதுகலை நிறைவு.

தமிழ்நாட்டின் பெரும்பான்மையான பல்கலைக்கழகங் களில் பேரவை உறுப்பினர், பாடத்திட்டக் குழு உறுப்பினர், துறைசார் ஆய்வுகள் தேர்வாளர் எனப் பல நிலைகளில் பொறுப்புகள் வகித்தவர். எட்டாம் உலகத் தமிழ் மாநாடு, ஆறாம் உலகச் சைவ மாநாடு உள்ளிட்ட எண்பதிற்கும் மேற்பட்ட உலக, தேசிய, மாநிலக் கருத்தரங்குகளில் அமர்வுத் தலைவர், கட்டுரையாளர் எனப் பங்கேற்பு.

'கலைவளர்த்த திருக்கோயில்கள்' என்னும் இவருடைய முதல் நூலே தமிழ்நாட்டரசின் சிறந்த நூலுக்கான முதல் பரிசு பெற்றது. இதுவரை பதினெட்டு நூல்கள் எழுதியுள்ள இவரைப் பொறுப்பாசிரியராகக் கொண்டு வெளிவரும், 'வரலாறு' ஆய்விதழ் பதினேழு தொகுதிகளாக மலர்ந்துள்ளது.

இலங்கை அரசின்அழைப்பை ஏற்று அங்கு நடந்த அரசு சார் கலை, பண்பாட்டு மாநாட்டில் பல்லவர் கட்டடக்கலை, சிற்பக்கலை பற்றி ஆய்வுரைகள் வழங்கியுள்ளார். சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் அழைப்பையேற்று, 'அனைத்துலக அரங்கில் தமிழர்' எனும் தலைப்பில் அமைந்த அப்பல்கலையின் பன்னாட்டு மாநாட்டில் தமிழர் கட்டடக்கலைத் திறன் பற்றி உரை நிகழ்த்தியுள்ள இவரது பணிகளைப் பாராட்டித் தமிழ் நாட்டளவில் இருபத்தைந்திற்கும் மேற்பட்ட விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

மருத்துவத்துறையையும் வரலாற்றுத்துறையையும் இருகண் களாய்ப் போற்றும் இவர் வழிகாட்டலில், பல இளைஞர்களைச் சிறந்த ஆய்வறிஞர்களாக வளர்த்து வரும் டாக்டர் மா. இராச மாணிக்கனார் வரலாற்றாய்வு மையத்திற்கு 2007 வெள்ளிவிழா ஆண்டாகும்.

முன்னுரை

அறிஞர் பெருந்தகை கூ. ரா. சீனிவாசனின், 'Cave Temples of the Pallavas' என்ற இணையற்ற நூலே குடைவரைக் கோயிற் கலையில் ஆர்வம் தோன்றக் காரணமாக அமைந்தது. குடைவரைகளின் அமைப்பை அறியவும் விளங்கிக்கொள்ளவும் அந்த நூலை, அதில் இடம்பெற்றிருக்கும் குடைவரைகளுக்கே எடுத்துச் சென்று, அங்கேயே வரிவரியாகப் படித்து, குடைவரைகளோடு உறவு கொண்டோம். தொடக்க நாட்களில் புரியாதிருந்த பலவும், தொடர்ந்து பார்க்கப் பார்க்க, படிக்கப் படிக்க எளிதில் வயமாயின. குடைவரை அமைப்புகளில் தெளிவேற்பட்டது. அதன் விளைவாக ஒப்பீடுகள் இயலுவதாயின. 'வரலாறு' ஆய்விதழில் தொடர்ந்து எழுதியபோது, குடைவரைக் கட்டுரைகள் வரலாற்று ஆய்வாளர்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றமையை அறியமுடிந்தது.

குடைவரைக் கோயிற்கலையில் பெற்ற பயிற்சியும் தெளிவும் பதிவு செய்யப்பட வேண்டும் என்று கருதியதன் விளைவே, 'மகேந்திரர் குடைவரைகள்' எனும் எங்கள் நூல். பல்லவர் குடைவரைகள் போல் அல்லாது, தென்தமிழ்நாட்டுக் குடைவரைகளைப் பாண்டியர் குடைவரைகள், முத்தரையர் குடைவரைகள் என இனம் பிரிப்பதில் பல இடையூறுகள் உள்ளன. இருக்குமிடம் நோக்கிக் குடைவரைகளைப் பாண்டியர், முத்தரையர் மரபு சார்ந்தனவாகச் சில அறிஞர்கள் அடையாளப்படுத்தி இருப்பதில் எங்கட்கு உடன்பாடில்லை. கல்வெட்டுச் சான்றுகள் இல்லாத இக்குடைவரைகளை அடையாளப்படுத்தவும் கால நிரலுக்குள் கொணரவும் பெருமுயற்சி தேவைப்படுகிறது.

இந்த நூலில் நான்கு குடைவரைகளைப் பற்றிய கட்டுரைகள் உள்ளன. இவை நான்கும் ஒருங்கிணைக்கப்பட்டமைக்கு ஒரே ஒரு காரணம்தான் உண்டு. வணக்கத்திற்குரிய திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி தவத்திரு பொன்னம்பல அடிகளாரின் ஆளுகையில் இவை உள்ளன. இந்நான்கனுள், திருமடத்தின் அழைப்புக் காரணமாய் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட கோயில், திருக்கோளக்குடி மட்டுமே. ஏனைய மூன்று திருக்கோயில்களும் வெவ்வேறு காலகட்டங்களில் ஆராயப்பட்டவை.

இந்நான்கனுள் குன்றக்குடிக் குடைவரைகள்தான் முதலில் ஆய்வு செய்யப்பெற்றன. 1994ல் பலமுறை இக்குடைவரைகளைப் பார்வையிட்டுத் தரவுகளைத் தொகுத்தோம். வரலாறு ஆய்விதழின் இரண்டாம் தொகுதியில் இக்குடைவரையைப் பற்றிய கட்டுரை வெளியிடப்பட்டது. நூலாக்கச் சிந்தனை பிறந்த போது, மீண்டும் ஒருமுறை குடைவரைகளைப் பார்வையிட்டு, முதலாய்வில் நேர்ந்திருந்த சில தவறுகளைத் திருத்தி, விட்டுப் போயிருந்த ஒன்றிரண்டு தரவுகளை இணைத்துக் கட்டுரையை முழுமையுறச் செய்துள்ளோம்.

இக்குடைவரைகளில் ஆய்வுசெய்ய அநுமதி வழங்கிய இந்தியத் தொல்லியல் அளவீட்டுத் துறையின் கண்காணிப்புத் தொல்லியலாளர்கள் திரு. கூரம் திருவாழி நரசிம்மன், திரு. தியாக சத்தியமூர்த்தி இவர்களுக்கும் சென்றபோதெல்லாம் உடனிருந்து ஆய்விற்குப் பலவகையிலும் துணைநின்ற குடைவரைக் காவலர், இனிய நண்பர் திரு. நா. பாலகுமாரனுக்கும் எங்கள் நன்றி உரியது.

குன்றக்குடிக் குடைவரை ஆய்வுகளின்போது, உடனிருந்து உழைத்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர் பேராசிரியர் முனைவர் அர. அகிலா. கல்வெட்டுப் பாடங்களைப் படிப்பதில் அவராற்றிய பங்கு குறிப்பிடத்தக்கது. முதற் கட்டுரையைத் திருத்தங்கள் செய்த பயணத்தின்போது உடனிருந்து உதவியவர் திருமதி வாணி செங்குட்டுவன். குன்றக்குடிப் பயணங்களுள் சிலவற்றின் போது மதிய உணவளித்துத் துணைநின்ற திருமடத்து அலுவலர் கள், அதற்குக் காரணராய் இருந்து அன்பு பாராட்டிய கவிஞர் திரு. மரு. பரமகுரு இவர்கள் உளமார்ந்த நன்றிக்குரியவர்கள்.

குன்றக்குடிக் குடைவரைகள் ஆய்வின்போதுதான் எங்கள் வணக்கத்திற்குரிய தமிழ் மாமுனிவர் தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் பேரன்பை அநுபவித்து மகிழும் வாய்ப்பமைந்தது. ஒருமுறை களப்பணி முடித்துத் திரும்பியபோது, இதய நோயுற்று ஓய்விலிருந்த அடிகளார் பெருந்தகையைத் தொல்லை செய்ய விழையாது அவரைச் சந்திக்காமலேயே திரும்பினோம். மறுமுறை சென்றபோது சந்தித்துச் செல்லுமாறு அறிவுறுத்தப் பட்டோம்.

குடைவரைப் பணி முடித்து அப்பெருந்தகையை அணுகிய போது, 'ஏன் சென்ற முறை என்னைச் சந்திக்காமல் சென்று

விட்டீர்கள்?' என்று உரிமையுடன் வினவினார்கள். காரணத்தைச் சொன்னபோது அந்த அன்புள்ளம் கசிந்தது. 'நீங்கள் தொல்லை யாக மாட்டீர்கள். உங்களுடன் உரையாடுவது இன்பம். தொல்லை என்று கருதி என்னைத் தனிமைப்படுத்தி விடாதீர்கள். ஆய்வுக்கு வரும்போதெல்லாம் தவறாமல் இங்கும் வாருங்கள். உங்களைப் பார்ப்பதும் உரையாடுவதும் மகிழ்வளிக்கும் செயல் கள்' என்று அவர் உரைத்தபோது நெக்குருகினோம். அவர்தம் அன்பைப் பெற எத்தகு பேறு செய்தோம் என்று உள்ளம் கரைந்தோம்.

தவத்திரு அடிகளார் பெருந்தகையின் நேரடிப் பார்வையில் அவருடனிருந்து உணவருந்தும் பேறும் இப்பயணங்களின் போது வாய்த்தது. ஒரு குழந்தையைக் கவனிப்பது போல் அன்பு பாராட்டி, பரிமாறச் செய்து, கூச்சமும் தயக்கமுமாய் அமர்ந் திருந்த எங்களைத் தம் புன்னகையாலும் கலந்துரைகளாலும் இயல்பாக உண்ணுமாறு மாற்றியமைத்த அவரது பெருந் தன்மைக்கும் பேரன்பிற்கும் இணைே"ı கிடையாது. எண்ணுந் தோறும் கண்களை நனைக்கும் நினைவுகள் அவை. குன்றக்குடிக் குடைவரை ஆய்வுகள் முழுமையுறத் துணைநின்ற அப்பெரு மானுக்கும், மேலாய்வுக்குச் சென்ற காலங்களில் அன்பு பாராட்டி அரவணைத்த தவத்திரு பொன்னம்பல அடிகளாருக்கும் எங்கள் நன்றியைப் பதிவு செய்வதில் நிறைகிறோம்.

திருக்கோளக்குடி வளாகக் குடைவரை, கற்றளிகள் இவற்றிற் கான குடமுழுக்குச் செய்யும் எண்ணம் எழுந்த நிலையில், வணக்கத்திற்குரிய தவத்திரு அடிகளார் பெருந்தகை, கோயில் வளாகத்து உள்ள கல்வெட்டுகள் அனைத்தையும் படியெடுத்துக் கோயிலின் வரலாற்றைத் தொகுத்துத் தருமாறு எங்களுக்கு அன்பாணை பிறப்பித்தார். மிகுந்த மகிழ்வுடன் செயற்பட்டோம். எங்களால் மேற்கொள்ளப்பட்ட தமிழ்நாட்டுக் குடைவரை ஆய்வுகளிலேயே நெடுங்கால ஆய்வாக அமைந்தது திருக் கோளக்குடி ஆய்வுதான்.

நூற்றியொரு கல்வெட்டுகள் இடம்பெற்றிருக்கும் இவ்வளா கத்தின் பெரும்பான்மையான கல்வெட்டுகள் சுண்ண, வண்ணப் பூச்சுகளாலும் பிற்காலச் சுவரமைப்புகளாலும் படிக்க முடியாத நிலையிலும் தொடர்பற்றும் இருந்தன. நாங்கள் ஆற்றுப்படுத்து

மாறெல்லாம் இந்தச் சுண்ண, வண்ணப் பூச்சுகளை அகற்றி உதவத் துணைவர்களைத் தவத்திரு அடிகளார் ஒதுக்கியிருந்தார்.

கல்வெட்டுகளைக் கட்டமைப்புகள் மறைத்திருந்த இடங்களில், சுட்டிக் காட்டியவுடனே அவற்றை இடித்துக் கல்வெட்டுகளைத் தொடராகப் படிக்க உதவிய தவத்திரு அடிகளார், பார்வையை மீறிய உயரங்களிலிருந்த கல்வெட்டுகளைப் படிக்கச் சாரம் கட்டித் தரவும் பணித்திருந்தார். பூச்சுவேலை செய்பவர்கள் போல், கயிறுகளால் பிணிக்கப்பட்டிருந்த ஒட்டுப் பலகைகள் மீதமர்ந்தபடி நாளெல்லாம் கல்வெட்டுப் படித்த அந்த நாட்களை இன்று நினைத்தாலும் உடலெல்லாம் வலிப்பதைத் தவிர்க்க முடியவில்லை. வரலாற்றை நேசித்தமையாலும் அடிகளார் பெருந்தகையின் மீதிருந்த அளப்பரிய பத்திமையாலும் எந்தத் துன்பத்தையும் பொருட்படுத்தவில்லை.

தொடக்கப் பயணங்களுக்குத் திருமடமே அனைத்து விதங்களிலும் துணையிருந்தது. கல்வெட்டுகள் அனைத்தையும் படிக்கமுடியாவிட்டாலும், கோயில் வளாகம் முழுமைக்குமான கட்டமைப்புக் கட்டுரையை ஓரளவிற்கு உருவாக்க முடிந்தது. கல்வெட்டுத் தேடலின்போது நேர்ந்த ஒரு சுவையான நிகழ்வை இங்குக் கூறாமல் இருக்கமுடியாது. குடைவரை முகப்பிற்கு முன்னுள்ள தரைப்பகுதியின் வலப்புறத்தே திறப்பொன்று இருப்பதைக் கண்டோம். அதை மூடியிருந்த பலகையை அகற்றிய போது கீழே படிகள் இறங்கின. ‘சுரங்கம்’ என்று நிருவாகத்தால் கருதப்பட்ட அந்தப் படிகளில் இறங்கக் கருதியபோது வேண்டாம் எனத் தடுக்கப்பட்டோம். தவத்திரு அடிகளாரிடம் இதுபற்றிக் கூறியபோது, அவரும் கவிஞர் பரமகுருவும் உடன் இருந்து ஆய்வுசெய்ய உதவினார்கள்.

உள்ளிறங்கும் வழி குறுகலாக இருந்தமையால் எங்கள் இருவரில் நளினி உட்செல்வதே பொருந்துமெனக் கருதினோம். விளக்குடன் நளினி படியில் இறங்கினார். சில நிமிடங்களில் அது சுரங்கம் இல்லையென்றும் உள்ளே கல்வெட்டுகள் இருப்பதாகவும் அவர் கூறக் கேட்டோம். உடன் நானும் துன்பப் பட்டு உள்ளிறங்கிச் சென்றேன். அங்குதான் புகழ்மிக்க பிசாசுக் கல்வெட்டைக் கண்டறிந்தோம்.

குடைவரையின் படிகளே, பின்னாளில் அடைக்கப்பட்ட நிலையில், சுரங்க வழியாகக் கருதப்பட்டது என்பதைத் தவத்திரு அடிகளாருக்கு விளக்கினோம். நளினியின் துணிவையும் அவர் கல்வெட்டுகள் படிப்பதில் காட்டும் ஆர்வத்தையும் ஈடுபாட்டை யும் நேரில் கண்ட அடிகளார் பெருமான், அவ்வாண்டு மணமேற் குடியில் நிகழ்ந்த மங்கையர்க்கரசியார் விழாவில், நளினியைப் பாராட்டிச் சிறப்பித்துக் 'கல்வெட்டாய்வுக் கலைச்செல்வி' என்ற பட்டம் வழங்கி வாழ்த்தினார்.

குடமுழுக்குச் செயல்களை விரைவுபடுத்தும் நோக்கோடு கோளக்குடி முருகன் கோயிலுக்குச் செல்லும் மலைப்பாறை யிலிருந்த குகைத்தளத்தில் தவத்திரு அடிகளாரின் அலுவலகம் அமைக்கப்பட்டது. நாங்கள் சென்றபோதெல்லாம் அவர் அங்கு அமர்ந்தபடி பணிகளை மேற்பார்வையிட்டமையையும், தேவையான செயற்பாடுகளுக்குத் திட்டங்கள் தீட்டி, உரியவர் களுடன் கலந்துரைகள் நிகழ்த்தியமையையும் காணமுடிந்தது. செயல்திறம், ஒழுங்குகள், அரவணைப்பு என அனைத்துப் பரிமாணங்களிலும் அவர் ஒளிர்ந்தார்.

குடமுழுக்கு முடிவுற்றபோதும் கல்வெட்டுப் பணி முடியவில்லை. எங்கள் பொறுப்பில் கோளக்குடிக்குப் பல பயணங்களை மேற்கொண்டோம். இதற்கிடையில் ஒரு நாள் விடியலில் தவத்திரு அடிகளார் பெருந்தகை மறைந்த செய்தி கிடைத்துக் குன்றக்குடிக்கு விரைந்தோம். அவரை இருக்கையில் அமர்த்தியிருந்தார்கள். கண்களில் பெருகிய வெள்ளத்தை நிறுத்தக்கூடவில்லை. ஒரு தூணில் சாய்ந்தபடி அவர் திருமுகத் தையே பார்த்துக் கொண்டிருந்தோம். எத்தனை உயர்ந்த உள்ளம்! எவ்வளவு நேரம் அங்கிருந்தோம் என்பதே தெரிய வில்லை. திடீரென அவர், 'சோம்பி நிற்காதே, போய்க் கோளக் குடிப் பணி முடி' என்று ஆணையிடுவது போல் தோன்றியது. அவ்வளவில் புறப்பட்டுக் கோளக்குடி சென்றோம். கண்ணீ ருடன் அங்குக் கல்வெட்டுப் படித்தது போல் எங்கள் வாழ்வில் வேறொரு நிகழ்வு கூறமுடியாது.

'கோளக்குடிப் பணி முடித்த பிறகே இனி வேறு பணி' என்ற தீர்மானத்துடன் தொடர்ந்தோம். வரலாறு ஆறாம் தொகுதி, கோயில் கட்டமைப்புக் கட்டுரை பெற்றது. ஆனால்,

பல்வேறு சூழல் அமைவுகளால் கல்வெட்டுப் படிக்கும் பணியை 2005ல்தான் நிறைவு செய்ய வாய்த்தது. 'கல்வெட்டுகளில் கோளக்குடி' முதல் முறையாக இந்நூலில்தான் இடம்பெறு கிறது. கோளக்குடியில் பணியாற்றிய காலங்களில் துணை நின்றவர்கள் பலர். குறிப்பாகக் கவிஞர் திரு. மரு. பரமகுரு, திரு. கோ. சங்கர நாராயணன், திரு. அஞ்சப்பன் இவர்களைக் கூறவேண்டும். அனைவருக்கும் எங்கள் நன்றி உரியது.

இரண்டாம் கட்டக் கோளக்குடி ஆய்வுகளின்போது மதிய உணவும் மாலைத் தேநீரும் செய்தளித்தவர் திருமதி சிந்தாமணி. கோளக்குடிக் கோயில் அடிவாரத்தில் உணவுக்கடை வைத்திருக் கும் இவ்வம்மை எங்களைக் கண்டதும் தேவை கேட்டுக் கொண்டு இராங்கியம் மெட்டிற்குச் சென்று காய்கறிகள் பெற்றுச் சமைத்தளித்த பாங்கு மறக்க முடியாதது. அன்பு பாராட்டிச் சுடச்சுட அவர் சமைத்துப் பரிமாறிய உணவையும், உடனிருந்து உதவிய அவர் பெயர்த்தி செல்வி இராதாவையும் கோளக் குடியை நினைக்கும்போதெல்லாம் நினையாதிருக்க முடியாது.

கோளக்குடி ஆய்வுகளில் வழக்கம் போல் பெருந்துணை யாக இருந்தவர் பேராசிரியர் முனைவர் அர. அகிலா. திருமதி வாணி செங்குட்டுவன், பேராசிரியர் முனைவர் கோ. வேணி தேவி இவர்களும் ஓரிரு பயணங்களின்போது உடன்வந்து உதவியுள்ளனர். ஓட்டுநர் அமரர் திரு. இரா. ஜெயசங்கர் பல பயணங்களை இனிமையானவையாய் அமைத்துத் தந்தார்.

கோளக்குடிப் பயணங்களின்போது நாங்கள் பார்த்த கோயில்கள் பல. மகிபாலன்பட்டி, மலையக்கோயில், தேவர்மலை, பூவாலைக்குடி, அரளிப்பட்டி, சதுர்வேதிமங்கலம், கோகர்ணம் எனப் பல கோயில்கள் அப்போது ஆய்வுக்குள்ளாயின. அந்த வகையிலும், கோளக்குடி போல் வேறெந்தக் கோயில் ஆய்வும் இத்தனை பரந்துபட்ட பயன்பாட்டுடன் அமையவில்லை என்றே கூறவேண்டும். கோளக்குடிப் பணி நீண்டகாலம் எடுத்துக்கொண்டமைக்கு இதுவும் ஒரு காரணமாகலாம்.

அரளிப்பட்டிக் குடைவரையும் பிரான்மலைக் குடைவரை யும் முன்பே பார்க்கப்பட்டவைதான் என்றாலும், சதுர்வேதி மங்கலத்து உருத்திரகோடீசுவரம் கோயில் ஆய்வின்போதுதான்

அவையும் முனைப்பான ஆய்வுக்காளாயின. வணக்கத்திற்குரிய தவத்திரு பொன்னம்பல அடிகளாரின் வாழ்த்தும் வழிகாட்டலும் பிரான்மலைக் குடைவரை ஆய்விற்குப் பெரிதும் துணை நின்றமையைக் குறிப்பிடவேண்டும். திரு. சண்முகம், திரு. நீலமேகம், கோயில் சிவாச்சாரியார்கள், திருமதி வாணி செங்குட்டுவன், இசையாசிரியை இரா. இலலிதாம்பாள் இவர்தம் உடனிருப்பு ஆய்விற்குப் பெருந் துணையாயிற்று.

எத்தனையோ இறைத்திருமேனிகளைப் பார்த்துக் களிக்கும் பேறு பெற்ற எங்கள் கண்களில் நீங்காமல் நிறைந்திருக்கும் இறைத்திருமேனிகள் சிலவுண்டு. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை பிரான்மலைக் கருவறை வடிவங்கள். கற்பூர ஒளியில் அந்தத் திருமுகங்கள் சுடர்விட்டதை எப்படி வண்ணிக்கமுடியும்! சொற்கள் பயனற்றவை என்பதை உணர்ந்த மிகச் சில போதுகளில் அக்காட்சிப்போதும் ஒன்று. பிரான்மலை இறைத்திருமேனிகளை உருவாக்கிய கைகள் உன்னதமானவை. தமிழனின் கலைப் புதையல்களுள் பிரான்மலைத் திருமேனிகளுக்குத் தனியிடம் உண்டு.

பிரான்மலைத் தேவசபைச் சிற்பங்கள் அற்புதமானவை. அவற்றைப் பற்றி விரிவான கட்டுரை எழுதும் வாய்ப்பை எதிர்நோக்கியுள்ளோம். பிரான்மலைத் திருக்கோயிலையும் முழுமையான ஆய்விற்கு உட்படுத்தவேண்டும். அருமையான கல்வெட்டுகள் பல உள்ளன. காலம் கனியும் என்ற நம்பிக்கையோடு காத்திருப்போம். அரளிப்பட்டிக் குடைவரை எளிய அமைப்பினது. இது போலவும் சில குடைவரைகள் தமிழ் நாட்டில் உள்ளன.

குன்றக்குடி, கோளக்குடி, பிரான்மலை, அரளிப்பட்டி இந்நான்கு இடங்களிலுமே குடைவரைகளை உருவாக்கியவர்களை அடையாளப்படுத்தும் கல்வெட்டுகள் கிடைக்காமையின், கிடைத்திருக்கும் சான்றுகளின் அடிப்படையில் இவற்றின் பின்புலம் ஆராயப்பட்டுள்ளது. ஒப்பீடும், உணர்தலுமே இது போன்ற நிலைகளில் ஏற்கத்தக்க முடிவுகளைத் தரமுடியும்.

வரலாற்றை நேசிக்கும் இனியவர் திரு. வெள்ளையாம் பட்டுச் சுந்தரம் இந்நூலை வெளியிடுவது எங்கள் உழைப்பிற்குக்

கிடைத்த பெருமை. அவருக்கும் இந்நூலின் பின்புலமாக இருந்து எங்களை ஊக்கிய மருத்துவர் திருமதி அவ்வை கலைக்கோவன், பல பயணங்களின்போது உணவு படைத்து உறுதுணையான திருமதி பாப்பா வெங்கடாசலம், புதிய கல்வெட்டுகள் கண்டறியப்பட்ட போதெல்லாம் அச்செய்திகளை வரலாற்று ஆர்வலர்களுடன் பகிர்ந்துகொள்ளத் துணைநின்ற தினமணி திரு. மு. பாண்டியராஜன், இந்து திரு. ச. கணேசன், இப்பணியை வாழ்த்திப் போற்றும் சீதாலட்சுமி ராமசாமி கல்லூரிச் செயலர் திரு. ரா. பஞ்சாபகேசன், ஒருங்கிணைப்பாளர் திருமதி வசந்தா பஞ்சாபகேசன், முதல்வர் முனைவர் கி.செண்பகவல்லி, துணை முதல்வர் திருமதி கி. கீதா, வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் கோ. வேணிதேவி இவர்கட்கும் இந்நூலாசிரியர்களின் நன்றி உரியது.

தமிழ்நாட்டுக் குடைவரைகள் தமிழர்தம் கலைத்திறனின், உழைப்பின், திட்டமிடும் ஆற்றலின் மிகச் சிறந்த சான்றுகள். இங்குள்ள சிற்பங்கள் பழங்கால, இடைக்காலத் தமிழ்ச் சமுதாயத்தின் சிந்தனைகளையும் பண்பாட்டையும் ஓரளவிற் கேனும் வெளிப்படுத்துவனவாய் உள்ளமையை மறுக்கமுடியாது. கல்வெட்டுப் பதிவுகள் அவ்வக் கால வாழ்வியலை அழகாகப் புலப்படுத்துகின்றன. தமிழ்நாட்டுக் குடைவரைகள் அனைத்தை யும் ஒரு வீச்சில் பார்க்க முடியுமானால் கி. பி. ஆறாம் நூற்றாண்டு தொட்டு கி. பி. பத்தாம் நூற்றாண்டு வரையிலான தமிழ்நாட்டின் கலைப் பண்பாட்டு வரலாற்றை உருவாக்குவது இயலுவதாகும். அந்த நாளை நோக்கிய நிமிர்ந்த நன்னடையின் இரண்டாம் சுவடாக இந்நூல் வெளிவருகிறது. கனவுகள் வளர்ப்பது உயிர்களின் விருப்பம். கலைக்காமல் முடிப்பது கடவுளின் சித்தம்.

அன்புடன்,

மு. நளினி,

இரா. கலைக்கோவன்.

தென்தமிழ்நாட்டுக் குடைவரைகள்

தொகுதி – 1

1. குன்றக்குடிக் குடைவரைகளும் கல்வெட்டுகளும்

சிவகங்கை மாவட்டத்தில் திருப்புத்தூருக்கும் காரைக்குடிக் கும் இடையில் அமைந்துள்ள குன்றக்குடி, வணக்கத்திற்குரிய அடிகளார் பெருமானால் உலகப் பார்வையைப் பெற்றுவிட்ட சீரான சிற்றூர். இங்குள்ள குன்றின் மேல், குமரனுக்கான கற்றளி ஒன்று அமைந்துள்ளது. இதே குன்றின் தென்சரிவில் மூன்று குடைவரைகள் அடுத்தடுத்துக் குடையப்பட்டுள்ளன. தமிழகத் தில் இந்த அமைப்பு முறையைக் குன்றக்குடியில் மட்டுமே பார்க்க முடிகிறது.[1]

இக்குடைவரைகளின் முன்னே, இவற்றை முழுவதுமாய்ப் பார்வையிலிருந்து மறைத்துப் பெருமண்டபமொன்று பிற்காலத் தில் எடுக்கப்பட்டுள்ளது. இம்மண்டபத்தை எடுப்பித்த பெரு மக்கள் இங்குள்ள தூண்களில் நின்றபடி கைகுவித்து வரவேற் கின்றனர். இவர்களின் பெயர்களைத் தெரிந்துகொள்ள இங்குள்ள கல்வெட்டுகள் ஒத்துழைக்காதபோதும், இவர்தம் தோற்றம் இம்மண்டபத்தின் காலத்தைப் பதினெட்டாம் நூற்றாண்டாகக் கருதவைக்கிறது.

இந்த வெளிப் பெருமண்டபத்தின் முகப்பு, வாயில்களின்றி முற்றிலும் திறப்பாக அமைந்துள்ளது. மண்டபத்தின் மேற்கில் வரிசையாக மூன்று திருமுன்கள் கிழக்கு நோக்கி அமைந்துள் ளன. இவற்றின் வாயில்கள் மேல் யானைத்திருமகள் சிற்பங்கள். முதல் திருமுன்னில் அழகுடைநாயகி ஆட்சிசெய்கிறார். இறைவடி வம் இல்லாமையால் இரண்டாம் திருமுன் இந்தியத் தொல்லியல் துறையின் காப்பறையாகியுள்ளது. மூன்றாம் திருமுன்னில், தேனாற்றுநாதர் என்ற பெயரிலமைந்த இலிங்கத்திருமேனி உள்ளது. காப்பறையின் முகப்புச் சுவரில் இறைவனும் இறைவியும் காளைமீது வீற்றிருக்க, இருபுறமும் போற்றும் ஆடவர்களும் கவரிப்பெண்களும் காட்டப்பட்டுள்ளனர்.

இறைவன், இறைவித் திருமுன்கள் இரண்டும் உள்மண்ட பம், கருவறை கொண்ட ஒருதளத் திராவிட விமானங்களாகப் பிற்பாண்டியர் காலத்தில் எழுப்பப்பட்டவை. வெளிப் பெரு மண்டபம் கட்டிய காலத்தில், இவை ஒவ்வொன்றின் முன்னா லும் முகமண்டபமொன்று இணைக்கப்பட்டு, வாயில்கள்

பெருமண்டபத்தில் இருக்குமாறு அமைக்கப்பட்டன. இம்முக மண்டபங்கள் இன்று ஒழுங்கின்றி அமைந்துள்ளன.

தேனாற்றுநாதர் திருமுன் சுவர்களில் ஐந்து கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அழகுடைநாயகி திருமுன் வாயிலில் வராகி, இந்திராணி தவிர்த்த பிற அன்னையர், வீரபத்திரர், பிள்ளையார், சேட்டை இவர்தம் சிற்பங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் பல பொரிந்துள்ளன. உத்குடியாசனத்தில், தளர்ந்த மார்பகங்களும் வலக்கையில் ஓங்கிய கத்தியுமாய்க் காட்சிதரும் சாமுண்டியின் தோற்றம் குன்னத்தூர், கோகர்ணம் சாமுண்டிச் சிற்பங்களை ஒத்துள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது.[2]

தேனாற்றுநாதர் திருமுன்னுக்கு முன்னால் வெளிப் பெரு மண்டபத்தில் நந்தியும் காப்பறைக்கும் இறைவன் திருமுன் வாயிலுக்கும் இடையிலுள்ள மேடையொன்றில் பிள்ளையார் திருமேனியும் இலிங்கமும் இருத்தப்பட்டுள்ளன. பெருமண்ட பத்தின் பின்சுவர் தேனாற்றுநாதர் திருமுன்னுக்குச் சற்று முன் வரை வந்து நின்றுவிடுகிறது. இரண்டு வாயில்களையும் மூன்று சாளரங்களையும் கொண்டுள்ள இப்பின்சுவர், மலைக்கொழுந்து நாதர் திருமுன்னாகப் பெயரிடப்பட்டுள்ள மூன்றாம் குடைவரை யின் முன்னால் உருவாக்கப்பட்டுள்ள அதன் பெருமண்டப மேற்குச் சுவருடன் இணைகிறது.

பின்சுவரிலுள்ள வாயில்கள் இரண்டுமே நடுக் குடை வரையை அடைவதற்காக அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் பெரியது ஏறத்தாழக் கருவறைக்கு நேராக எடுக்கப்பட்டுள்ளது. சிறிய வாயில் அக்குடைவரையில் நிறுவப்பட்டிருக்கும் சேத்ர பாலர் திருமேனி இருக்கும் இடத்தைத் தனித் திருமுன் போல் காட்டுவதற்காக அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாயில்களின் மேலும் யானைத்திருமகள் சிற்பம் காணப்படுகிறது.

இவ்வாயில்கள் அமைந்துள்ள சுவரின் மேற்பரப்பில் கிடந்த கோலத்தில் பெருமாள். வாயில்களின் இடப்புறம் மிகச் சிறிய சாளரமொன்றும் வலப்புறம் இரண்டு சாளரங்களும் உள்ளன. இடச்சாளரம் நடுக் குடைவரைக்கும் மூன்றாம் குடைவரைக்கும் இடையிலுள்ள மலைப்பாறையில் செதுக்கப்பட்டிருக்கும் பிள்ளையார் வடிவத்தைக் காண்பதற்காக அமைக்கப்பட்டுள் ளது. வலச்சாளரங்கள் இரண்டனுள் பெரியது நடுக் குடைவரை

யின் மேற்குப்புற வாயிற்காவலரைப் பார்க்க உதவுகிறது. சிறிய சாளரம் முதல் குடைவரைக்கும் நடுக் குடைவரைக்கும் இடையிலுள்ள கோட்ட இலிங்கத்தை மட்டும் பார்க்கும் நிலையில் அமைக்கப்பட்டுள்ளது.

வெளிப் பெருமண்டபத்தின் கிழக்கில் மண்டபத்திற்குள் பிதுக்கமாய் அமைந்திருக்கும் மூன்றாம் குடைவரையின் பெருமண்டபச் சுவர்களில் கல்வெட்டுகள் உள்ளன.[3] அவற்றுள் ஒன்று அப்பெருமண்டபத் திருப்பணி கி. பி. 1559ல் நடைபெற்றதாகக் கூறுகிறது. இக்கல்வெட்டின் தொடர்பற்ற நிலையே பிற்காலத்தில் மீண்டுமொரு திருப்பணிக்கு இம்மண்டபம் ஆளானதைத் தெளிவாக்குகிறது.

வெளிப் பெருமண்டபப் பின்சுவர் வாயில்களின் வழியாகவோ, அல்லது மேற்கே இச்சுவர் நின்றுவிடுவதால் உண்டாகியிருக்கும் வழியாகவோ உள் நுழைந்தால் முதலிரண்டு குடைவரைகளுக்கு முன்னால் எடுக்கப்பட்டிருக்கும் நீளமான, அகலம் குறுகிய பிற்காலத் திருப்பணியான திருநடைமாளிகையை அடையலாம்.

இந்நடைமாளிகையின் கிழக்கில் மூன்றாம் குடைவரையின் பெருமண்டபச் சுவர் தடுப்பாக அமைய, மேற்கில் வாயிலில்லா வழி, காற்றும் ஓரளவு வெளிச்சமும் உள்வர அனுமதிக்கிறது. தேனாற்றுநாதர், அழகுடைநாயகி விமானங்களைக் காணவும் குன்றின் சரிவைப் பார்வையிடவும் இவ்வழி உதவுகிறது.

இருவரிசைத் தூண்களோடு நீளும் திருநடைமாளிகையின் தூண்களுள் பல, சரியாகப் பொளியப்படாமல் உள்ளன. இவற்றின் வெட்டுப் போதிகைகள் பிற்காலத் தழுவலாகும். சில தூண்கள் சிற்பங்களோடு உள்ளன. முன் வரிசைத் தூண்களில் ஐந்து தவிர, பிற தூண்கள் வெளிப் பெருமண்டபப் பின்சுவருடன் ஐக்கியமாகி உள்ளன.

பின்வரிசையின் முதல் தூண், முதல் குடைவரையின் தொடக்கப்பகுதியுடன் இணைக்கப்பட்டுள்ளது. இரண்டாம் மூன்றாம் தூண்கள் முதல் குடைவரையின் முன் உள்ளன. நான்காம், ஐந்தாம் தூண்கள் கோட்ட இலிங்கமுள்ள பாறையின் இருமுனைகளிலும் இணைக்கப்பட்டுள்ளன. ஆறாம் தூண் நடுக் குடைவரையின் முன் நிற்கிறது. ஏழாம் தூண் சேத்ரபாலரைத்

தனித்துக் காட்டக் கட்டப்பட்டுள்ள பிற்காலச் சுவரமைப்பில் மறைந்துள்ளது.

இச்சுவர், நடுக் குடைவரையின் கிழக்கு முகப்புத் தூணில் தொடங்கித் திருநடைமாளிகைத் தூண்வரை ஏறத்தாழ 1. 89 மீ. தெற்காக நீண்டு, பின் கிழக்கில் திரும்பிப் பிள்ளையார் கோட்டப் பாறைவரை தொடர்கிறது. இத்தொடரின் இடையில், வெளிப் பெருமண்டபச் சிறு வாயிலுக் ந நேராக, 83 செ. மீ. அகலத்தில் ஒரு வாயில் உள்ளது. இதில் நுழைந்தால், நடுக் குடைவரையின் கிழக்குப்பகுதியை அடையலாம். குடைவரை முகமண்டபத்தில் நிறுவப்பட்டுள்ள சேத்ரபாலர்[4] திருமேனியைப் பார்க்கவும் அத்திருமேனி தனித் திருமுன்னில் இருப்பது போன்ற தோற்றத்தை உண்டாக்கவும் இச்சுவரமைப்பு எடுக்கப்பட்டுள்ளது.

குடைவரைகள்

குன்றின் தென்சரிவில் மூன்று குடைவரைகள் அடுத்தடுத் துக் குடையப்பட்டுள்ளன. ஒவ்வொன்றின் இடையிலும் ஏறத்தாழ 1. 50 மீ. அளவிலான பாறை விடப்பட்டுள்ளது. இப்பாறைப் பகுதிகளின் குடைவரைப் பக்கங்கள் சுவர்களாகப் பொளியப்பட்டுள்ளன. குடைவரைகளுக்கு இடையிலான பாறைப்பகுதிகளில் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

முதல் குடைவரைக்கும் இரண்டாம் குடைவரைக்கும் இடையிலுள்ள பாறைப்பகுதியில் ஒரு மீட்டர் உயரம், 82 செ. மீ. அகலத்திற்குக் கோட்டமொன்றை அகழ்ந்து, அதில் ஆவுடை யாருடன், இலிங்க பாணத்தை உருவாக்கியிருக்கிறார்கள்.[5]

இரண்டாம் குடைவரைக்கும் மூன்றாம் குடைவரைக்கும் இடையிலுள்ள பாறையில், 1. 10 மீ. உயரத்தில் 1. 05 மீ. அகலத்தில் கோட்டம் அகழ்ந்து பிள்ளையாரைச் செதுக்கியுள்ளனர். அர்த்த பத்மாசனத்தில்[6] இடமுன்கையால் உதரபந்தத்தைத் தொட்டபடி, வலமுன்கையிலும் வலமாய்ச் சுற்றிய துளைக்கையிலும் மோதகங்களை ஏந்திக் காட்சியளிக்கும் இவர் வலப்பின்கையில் அடர்ந்த தோகையுடன் கரும்பு உள்ளது.[7] இடப்பின்கையில் உள்ள பொருள் மலர் மொட்டாகலாம். கைகளின் மேற்பகுதியில் கங்கணங்களும் மணிக்கட்டுகளில் பட்டை வளைகளும் கொண்டு மகுடமற்ற தலையராய்[8] அமர்ந்திருக்கும் இவரின்

இரண்டு தந்தங்களும் உடைந்துள்ளன. முப்புரிநூல் நிவீதமாக உள்ளது. கழுத்தில் ருத்திராக்கமாலை. அரைக்கச்சின் முடிச்சுத் தொங்கல்கள் கால்களின்மீது படர்ந்துள்ளன.

முதல் குடைவரை

கருவறை, முகமண்டபம், முகப்பு என்றமைந்துள்ள இந்தக் குடைவரையின் மேற்குச் சுவரையொட்டி, மலைப்பாறையில் இருந்து திருநடைமாளிகையின் மேற்குப்பகுதியில் தெற்காகச் சிறிய தடுப்புச் சுவரொன்று பிற்காலத்தே எடுக்கப்பட்டுள்ளது. இது மலைவெளிக்குச் செல்லும் பாதையிலிருந்து குடைவரையைப் பிரிக்கிறது. திருநடைமாளிகையின் தரையமைப்பிலிருந்து குடைவரையின் முகப்புக்கு முன்னுள்ள தரை 33 செ. மீ. உயரத்தில் அமைந்துள்ளது. இத்தரையின் முகப்பு கருவறைக்கு எதிரில் மட்டும் சற்று மழுங்கலாக மடிந்தும் அதன் இருபுறங்களிலும் பட்டையாக மடிந்தும் கீழிறங்குமாறு அமைக்கப்பட்டுள்ளது. இத்தரைப்பகுதியிலும் மடிப்புகளிலும் படிக்க முடியாத நிலையில் சிதைந்த கல்வெட்டொன்று காணப்படுகிறது.

ஏறத்தாழ 76 செ. மீ. அகலமும் 5. 88 மீ. நீளமும் உள்ள இத்தரையின் வடபுறத்தே சதுரமாகச் செதுக்கி நடுவில் குழி ஒன்று அகழப்பட்டுள்ளது. பார்ப்பதற்கு ஆட்டுக்கல் போலத் தோற்றமளிக்கும் இதனருகே குழவி ஒன்றும் கிடத்தப்பட்டுள்ளது. மிகப் பிற்பட்ட காலத்துச் செதுக்கலான இவ்வமைப்பு இன்றும் பயன்பாட்டில் உள்ளது.

இத்தரையிலிருந்து, 5 செ. மீ. உயரத்தில் உள்ள 5. 39 மீ. நீளம், 60 செ. மீ. அகல முகப்புத் தளத்தின்மீது நான்கு தூண்கள் எழுகின்றன. இத்தூண்கள் தளத்தின் விளிம்பிலிருந்து ஏறத்தாழ ஐந்திலிருந்து ஏழு சென்டிமீட்டர் அளவிற்கு உள்தள்ளி எழுகின்றன. இந்தத் தளஅமைப்பு முகமண்டபத் தரையோடு சரிந்து இணைந்தாலும் இரண்டிற்கும் இடையே வேறுபாடு தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. இத்தளமும் தூண்களுமே முகமண்டபத்தையும் முன்னுள்ள தரையையும் பிரிக்கின்றன.

முகப்புத் தூண்களுள் இடைத்தூண்கள் இரண்டும் முழுத் தூண்களாக அமையப் பக்கத்தூண்கள் அரைத்தூண்களாக உள்ளன. இடைத்தூண்கள் சதுரம், கட்டு, சதுரம் என அமையப்

பக்கத்தூண்கள் நான்முகத் தூண்களாய் விடப்பட்டுள்ளன.[9] நான்கு தூண்களிலுமே கல்வெட்டுகள் உள்ளன. இத்தூண் களின் போதிகைகள் அளவிலும் கனத்திலும் சிறியனவாய் உள்ளன. விரிகோணத்தில் திரும்பும் இவற்றின் மேற்கைகளை விடக் கிழ்க் கைகள் சிறியனவாக உள்ளன. மேற்கைகள் உத்திரத்தை அடையும் இடத்தில் சிறிய மடிப்புக் காட்டப் பட்டுள்ளது. இவ்வமைப்பு இங்குள்ள மூன்று குடைவரை களிலுமே காணப்படுகிறது.

போதிகைகளின் கிழ்க்கைகளைவிட கனம் குறைந்ததாய், அளவில் சிறுத்துக் காணப்படும் உத்திரத்தின் மேல் பிதுக்கமாய் வாஜனம். வாஜனத்தை ஒட்டிய பாறைச்சரிவு 96 செ. மீ. அளவுக்கு நீண்டு முகப்புக்கு முன்னுள்ள தரையமைப்புவரையில் கூரை என அமைந்துள்ளது. குடைவரையின் முன்னாலுள்ள திருநடை மாளிகையின் கூரை இப்பாறைச்சரிவுடன் பொருந்த இணைக்கப் பட்டுள்ளது.

முகப்புத் தூண்களுக்குப் பின்னால் 6. 30 மீ. நீளம் 1. 43 மீ. அகலம் கொண்டமைந்துள்ள முகமண்டபத்தின் பின்சுவரிலோ பக்கச் சுவர்களிலோ சிற்பங்கள் ஏதுமில்லை. மாறாகக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. முகமண்டபத்தின் கூரையும் வெறுமையாக உள்ளது. இம்முகமண்டபத்தின் மேற்குச் சுவர் அருகே முருகன் வள்ளி, தெய்வானையுடன் எழுந்தருளியுள்ளார். இத்திருமேனிகளை மாறவர்மர் சுந்தரபாண்டியரின் மூன்றாம் ஆட்சியாண்டில் புவனகங்கன் என்பார் எழுந்தருளுவித்ததாகத் தேனாற்றுநாதர் திருமுன் கல்வெட்டுக் கூறுகிறது.[10]

முகமண்டபப் பின்சுவரின் நடுப்பகுதியில் 2. 14 மீ. உயரமும் 98 செ. மீ. அகலமும் உடைய வாயிலுடன் கருவறை குடையப் பட்டுள்ளது. வாயிலின் இருபுறமும் முகமண்டபத் தரையில் நாகர் வடிவங்கள் சில இருத்தப்பட்டுள்ளன. கருவறைக்கு முன்னுள்ள மூன்று படிகளுள், கிழ்ப்படி அரைநிலா வடிவத்தில் உள்ளது.

இறுதிப் படியைவிட 6. 5 செ. மீ. உயரமான தரையமைப்புப் பெற்றுள்ள கருவறையின் உயரம் 2. 30 மீ. இதன் அகலம் தென் வடலாக 3.13 மீ. நீளம்; கிழக்கு மேற்காக 3.55 மீ. சுவர்களும் கூரையும் வெறுமையாக உள்ள இக்கருவறையின் நடுப்பகுதியில் தாய்ப் பாறையில் 1. 36 மீ. பக்கமுடைய சதுர ஆவுடையாரும் 76 செ. மீ.

உயரமும் 1. 60 மீ. சுற்றளவுமுள்ள பாணமும் உருவாக்கப் பட்டுள்ளன.

ஜகதி, எண்பட்டைக் குமுதம், கம்புகளின் தழுவலோடு பாதங்கள் பெற்ற பெரிய அளவிலான கண்டம், பட்டிகை, மேற்கம்பு என ஆவுடையாரின் வெளிப்பகுதி அழகுபடுத்தப் பட்டுள்ளது. ஆவுடையாரின் வலப்புறம் பட்டிகைப்பகுதியில் மேற்குப் பார்வையில் சிறியதாய்க் காணப்படும் கோமுகத்தைப் பூதமொன்று தலையில் தாங்குகின்றது. இப்பூதம் தன் கைகளை முழங்கால்களில் அழுத்திக் கொண்டு நன்றாகக் குனிந்து முட்டுக் கொடுப்பது போல் கோமுகத்தைத் தாங்கும் அழகு சிறப்பாகக் காட்டப்பட்டுள்ளது. இதன் பாதங்கள் கண்டத்தின் கீழ்க் கம்பில் இருக்கத் தலை, கோமுகத்தைத் தாங்கக் கண்டப் பகுதியில் பொருந்தியுள்ளது.

முகமண்டபப் பின்சுவரில் கருவறை வாயிலையொட்டி அதன் இருபுறமும் 2 மீ. உயரத்திற்கு வலப்புறம் 75 செ. மீ. அகலத் திற்கும் இடப்புறம் 65 செ. மீ. அகலத்திற்கும் குடைவரையின் சுவர்ப்பகுதி அகற்றப்பட்டு, அவ்விடங்களில் அதே அளவிலான பாறைப் பாளங்கள் வைத்துப் பூசப்பட்டுள்ளன. தமிழகத்தில் உள்ள வேறெந்தக் குடைவரையிலும் காணப்பெறா அதிசயம் இது. இவற்றுள் வலப்புறப் பாளத்தின்மீது சடையவர்மர் ஸ்ரீவல்லபரின் நான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுக் காணப் படுகிறது.[11] இந்த அகற்றலும் பொருத்தலும் ஏன் நிகழ்ந்தன என்பது புதிராகவே உள்ளது.

சிற்பங்கள்

குடைவரைக் காலத்தைச் சேர்ந்தவையாக எந்தச் சிற்பமும் இங்கில்லை.[12] சுந்தரபாண்டியர் காலத்து முருகன் தேவியருடன் எழுந்தருளியுள்ளார். இவரது பின்கைகளில் வலப்புறம் சத்தியும் இடப்புறம் வஜ்ரமும் உள்ளன. வலமுன்கை காக்கும் குறிப்பில் இருக்க, இடமுன்கை கடியவலம்பிதமாக உள்ளது. கரண்ட மகுடம், மகர குண்டலங்கள், மூன்று ஆரங்கள், கங்கணங்கள், வளைகள், ஸ்கந்தமாலை, உதரபந்தம், உபவீதமாய் முப்புரிநூல், தாள்செறி, பட்டாடை அணிந்து எடுப்பான நாசியும் இளநகை யுமாய்க் காட்சிதரும் வேலவரின் வலப்புறம் தெய்வானையும் இடப்புறம் வள்ளியும் உள்ளனர். பின்னால் மயில்.

கரண்ட மகுடர்களாகக் காட்சிதரும் தேவியர் இருவரும் ஒருகையை நெகிழ்த்தி மறுகையில் மலரேந்தியுள்ளனர். உடைந்து போயிருக்கும் வள்ளிச் சிற்பத்தின் தலைப்பகுதி மெழுகால் உடலுடன் இணைக்கப்பட்டுள்ளது. நாகர் வடிவங்களில் பாம்புப் படத்தின் கீழே கண்ணனின் ஆடல் தோற்றம் காட்டப் பட்டுள்ளது.

கல்வெட்டுகள்

இக்குடைவரையில் மட்டும் பதினாறு கல்வெட்டுகள் உள்ளன. தூண்களில் எட்டும் சுவர்களில் ஏழும் முகப்புத் தரையில் ஒன்றுமாய் வெட்டப்பட்டுள்ள இவற்றுள் புதிதாகக் கண்டறியப் பட்ட இரண்டும் முகமண்டப மேற்குச் சுவரில் முருகன் திருமேனிக்குப் பின்புறத்தே உள்ளன. இப்பதினாறு கல்வெட்டு களுள் முதலாம் குலோத்துங்கர் காலத்தவை ஆறு. பாண்டியர் களுடையவை ஏழு. மன்னர் பெயரற்றவை மூன்று. இக்கல்வெட்டு களிலிருந்து கிடைக்கும் செய்திகளைக் கல்வெட்டுகளின் பார்வை யில் குன்றக்குடி என்ற தலைப்பின் கீழ் விரிவாகப் பார்க்கலாம்.

இரண்டாம் குடைவரை

முதல் குடைவரையை அடுத்துள்ள இரண்டாம் குடைவரை யும் கருவறை, முகமண்டபம், முகப்பு என்ற அமைப்பிலேயே குடையப்பட்டுள்ளது. 3. 67மீ. நீளமும் 1. 06 மீ. அகலமும் உள்ள முன் தரையையும் முகமண்டபத் தரையையும் நான்கு தூண்கள் அமர்ந்துள்ள 5. 62 மீ. நீளமும் 73 செ. மீ. அகலமும் கொண்ட முகப்புத் தளம் பிரிக்கின்றது. இத்தூண்களுள் இடைத்தூண்கள் சதுரம், கட்டு, சதுரமெனப் பொளியப்பட்ட முழுத்தூண்கள். பக்கத் தூண்கள் அரைத்தூண்களாய் முதல் குடைவரை போலவே நான்முகமாகக் காட்டப்பட்டுள்ளன. இத்தூண்கள் எழும் தளம் முன்தரையைவிட 12 செ. மீ. உயர்த்தப்பட்டுள்ளது. முகமண்டபத் தரை இத்தளத்தினும் சற்றுத் தாழ்வாக உள்ளது.

தூண் போதிகைகளின் கீழ், மேற்கைகள் சில இடங்களில் ஏறத்தாழ ஒரே அளவினதாகவும் சில இடங்களில் கீழ்க்கையைப் போல் மேற்கை இருமடங்கு அளவினதாகவும் உள்ளன. மேற்கை உத்திரத்தைத் தொடுமிடத்தில் முதல் குடைவரையைப் போலவே

சிறிய மடிப்புப் பெற்றுள்ளது. போதிகைகளின் மேல் உத்திரமும் உத்திரத்தின் மேல் வாஜனமும் காட்டப்பட்டுள்ளன.

வாஜனம் முதல் குடைவரையைப் போல் முகப்போடு நின்றுவிடாமல், முகப்பின் பக்கச் சுவர்களில் இறங்கி அங்குள்ள வாயிற்காப்போர் கோட்டங்களின் வெளி அரைத்தூண்களின் மேல் முடிகிறது. பாறையின் இயற்கைச் சரிவு முகப்புக் கூரையாக நீள்கிறது. இதனுடன் சரியாகப் பொருந்துமாறு திருநடை மாளிகையின் கூரை ஒட்டப்பட்டுள்ளது. முன்தரையில் கருவறைக்கு எதிரே பிற்காலத்து நந்தியொன்று உள்ளது.

முகப்பை ஒட்டிய பக்கச் சுவர்க் கோட்டங்களில், தரையில் இருந்து நன்றாக உயர்த்தப்பட்டுள்ள தளங்களின்மீது (மேற்கில் 42 செ. மீ. கிழக்கில் 41 செ. மீ.), நின்ற கோலத்தில் நேர்ப் பார்வையராய் வாயிற்காவலர் காட்சிதருகின்றனர். இவர்கள் நிற்கும் கோட்டங்களின் வெளிப்புறத்தே அகலம் குறைந்த அரைத்தூண்கள் பொளியப்பட்டுள்ளன. இத்தூண்களுக்கும் வாயிற்காவலர் தளங்களுக்கும் இடையில் இடைவெளி உள்ளது.

கிழக்கு மேற்காக 5. 96 மீ. நீளமும் தென்வடலாக 1. 58 மீ. அகலமும் கொண்டமைந்துள்ள முகமண்டபத்தின் பின்சுவரில் கருவறை குடையப்பட்டுள்ளது. கருவறை வாயிலுக்கு இருபுற மும் உள்ள சுவர்களும் கிழக்குச் சுவரும் கூரையும் வெறுமையாக உள்ளன. மேற்குச் சுவரில் கோட்டம் அமைத்துப் பேரளவின ராகத் திருமாலும் அருகே தோழமைத் தொண்டராய்க் கருடனும் பொளியப்பட்டுள்ளனர். இவர்கள் நிற்கும் தளம் முகமண்டபத் தரையிலிருந்து 45 செ. மீ. உயரத்தில் உள்ளது.

பெருமாளும் கருடனும் செதுக்கப்பட்டிருக்கும் 2 மீ. உயரமும் 1. 54 மீ. அகலமும் கொண்டமைந்துள்ள கோட்டத்தின் பக்கங்களில் இரண்டு சிறிய அரைத்தூண்கள் எளிய போதிகை களுடன் காட்டப்பட்டுள்ளன. இப்போதிகைகள் முடியும் சிறிய அளவிலான உத்திரம், கோட்டத்தின் மேல்நிலையாக அமைந்துள்ளது. முகமண்டபத்தின் இடப்புறத்தே சேத்ரபாலர் திருமேனி ஒன்று தனிச் சிற்பமாய் நிறுவப்பட்டுள்ளது. குடைவரையோடு தொடர்பில்லாத, இப்பிற்பாண்டியர் கால நிறுவல் குறித்து இரண்டு கல்வெட்டுகள் பேசுகின்றன.[13]

இத்திருமேனியிருக்கும் இடத்தைத் தனித் திருமுன்னாகக் காட்ட முயன்றதன் விளைவாகக் கற்சுவரொன்று முகப்பில்

இருந்து நடைமாளிகைவரை நீண்டு அதன் பின்வரிசைத் தூண் களை ஒட்டிக் கிழக்கு முகமாகத் திரும்பிப் பிள்ளையார் கோட்டப் பாறையுடன் முடிகிறது. இச்சுவரின் அரவணைப்பால் முகமண்டப இடப்புற முழுத்தூண் தன் எழிலையும் தன்மீதுள்ள கல்வெட்டில் பாதியையும் இழந்து பரிதவித்து நிற்கிறது. கலை நோக்கற்ற பிற்காலத் திருப்பணியாளர்கள் பல கோயில்களில் இது போல் தேவையற்ற கட்டுமானங்களை உருவாக்கியுள்ளனர்.

கிழக்கு மேற்காக 2. 87 மீ. நீளமும் தென்வடலாக 2. 80 மீ. அகலமும் 2.18 மீ. உயரமும் பெற்றுள்ள கருவறையின் வாயில் நிலையமைப்புப் பெற்றுள்ளது. 1. 82 மீ. உயரமும் 97 செ. மீ. அகலமும் பெற்றுள்ள இவ்வாயிலுக்கு இரண்டு படிக்கட்டுகள் உள்ளன. கருவறையின் தரை, கீழ் நிலையைவிடச் சற்றுத் தாழ்வாக இருக்கக் கூரை மற்றும் பக்கச் சுவர்கள் வெறுமையாக உள்ளன.

கருவறையின் நடுவில் தாய்ப்பாறையில் உருவாக்கப் பட்டுள்ள இலிங்கம் உபானம், ஜகதி, எண்பட்டைக் குமுதம், கம்புகள் தழுவிய கண்டம், பட்டிகை இவற்றால் அழகூட்டப் பெற்ற 72 செ. மீ. உயரமான சதுர ஆவுடையாரும் 1. 50 மீ. சுற்றளவும் 66 செ. மீ. உயரமும் கொண்ட பாணமும் பெற்றுள்ளது. ஆவுடையாரின் இடப்புறமும் வலப்புறம் மேற்குப் பார்வையாய் அமைந்துள்ள சிறு கோமுகமும் சிதைந்துள்ளன.

சிற்பங்கள்

வாயிற்காவலர்களும்[4] திருமால் கருடன் தொகுதியும் குடை வரைக் காலத்துச் சிற்பங்கள். சேத்ரபாலர், பிற்பாண்டியர் காலத் தினர். வாயிற்காவலர்கள் முகப்பின் பக்கச் சுவர்களில் மேற்கில் ஒருவரும் கிழக்கில் ஒருவருமாய் எதிரெதிர்ப் பார்வையில் உள்ளனர்.

முகப்புத் தரையிலிருந்து 42 செ. மீ. உயரத் தளத்தின்மீது வலப்பாதத்தைப் பார்சுவத்திலும் இடப்பாதத்தை நேராகவும் வைத்தபடி, பாம்பு சுற்றிய உருள்தடியின் மீது வலமுழங்கை படிந்திருக்க, மணிக்கட்டையும் விரல்களையும் கீழ்நோக்கி நெகிழ்த்தி நிற்கும் மேற்குக் காவலரின் வலப்பாதம் சரியாகப் பொளியப்படவில்லை. உருள்தடியின் கீழ்முனை விரல்களுக்கு இடையில் உள்ளது.

இடக்கையைத் தொடையில் ஊன்றிக் கோவணச் சிற்றாடையுடன் விளங்கும் இவரின் இடைக்கட்டு முடிச்சுத் தொங்கல் வலப்புறம் நெகிழ்ந்துள்ளது. அரைக்கச்சின் முடிச்சுத் தொங்கல்கள் கால்கள்மீது படிந்துள்ளன. பட்டையான உதர பந்தம், பாம்புக் கங்கணங்கள், மணிகள், ருத்திராக்கம் பதித்த பட்டை வளைகள், திரட்சியான உபவீத முப்புரிநூல், சரப்பளி, மகர, பூட்டுக் குண்டலங்கள் அணிந்து சடைமகுடராய்க் காட்சி தரும் இவர் மகுடத்தின் வலப்புறம் பிறையும் பின்னால் தலைச் சக்கரமும் காட்டப்பட்டுள்ளன. மகுடமுகப்பில் காட்டப்பட்டுள்ள மழு இவரை மழுவடியாராக அடையாளப்படுத்துகிறது.[15]

கிழக்குக் காவலர் 41 செ. மீ. உயரத் தளத்தின்மீது வலப் பாதத்தைத் திரயச்ரமாகவும் இடப்பாதத்தை நேராகவும் வைத்துச் சற்றே வலப்புறம் சாய்ந்த நிலையில் காட்சிதருகிறார். வலச்செவியில் பனையோலைக் குண்டலம்; இடச்செவியில் செவிப்பூ, சிறுவளையம்; மார்பில் மணிகள் பதித்த முப்புரிநூல்; கழுத்தில் சரப்பளி. இடக்கை மார்பின் குறுக்கே வலப்புறம் வந்து உருள்தடியின் மேற்பகுதியைப் பற்றத் தடியின் மேல் முனை, நெகிழ்கையாக[16] உள்ள வலக்கைக் குழிவுக்குள் பொருந்தி யுள்ளது. இவ்வலக்கையின் கீழ்ப்புறத்தே பாம்பு.

சடைமகுடத் தலையின் பின்னால் தலைச்சக்கரமும் மகுட முகப்பில் தலையோடும் காட்டப்பட்டுள்ளன. மேற்புறத்தார் போல இவருக்குப் பிறையில்லை. எனினும், அதற்குப் பதிலாக இவரது மார்பின் இடமேற்பகுதியில் முப்புரிநூலின் பிரம்ம முடிச்சையொட்டியும் இடச்செவி வளையத்திற்கு அருகிலுமாய்க் கால்களை மார்போடு மடித்துக் கீழ் நீட்டியுள்ள நிலையில் இறக்கைகள் ஒன்றுசேர மடிக்கப்பட்ட தோற்றத்தில் பறவை போன்ற ஒரு வடிவம் காட்டப்பட்டுள்ளது. இது அணிகலனா அல்லது வேறு எதையேனும் குறிக்கும் குறியீடா என்பது தெரியவில்லை.

இக்காவலரின் தோள்களுக்குப் பின்னால் வடிக்கப்பட்டுள்ள சூலஇலைகள்[17] இவரைச் சூலதேவராக அடையாளப்படுத்துகின்றன. முந்தானையுடனான கோவணஆடை பெற்றுள்ள இவரது அரைக்கச்சும் அதன் முடிச்சுத் தொங்கல்களும் அழகு படக் காட்டப்பட்டுள்ளன. பக்கத்திற்கு மூன்று புரிகளாய் இரு

தொடைகளின்மீதும் படர்ந்து, ஆங்காங்கே சிறிய வளையங்களால் பிணைக்கப்பட்டு, நடுப்பகுதியில் பின்னல் முடிச்சுகளால் அழகுபடுத்தப்பட்டுள்ள இடைத்தொங்கல் அணி தமிழர்தம் கலைத்திறனுக்குச் சான்றாக நிற்கிறது.

திருமாலும் கருடனும்

முகமண்டபத்தின் மேற்குச் சுவர் கோட்டத்தில் திருமாலும் கருடனும் அருகருகே காட்டப்பட்டுள்ளனர். திருமால் கிரீட மகுடத்துடன், கச்சம் வைத்த பட்டாடையும் இடைக்கட்டும் அணிந்து, இடைக்கட்டின் முடிச்சுகள் இருபுறமும் சரிய, இட முன்கையின் முழங்கைப் பகுதியைக் கருடனின் வலத்தோளின் மீது அழுத்திக் கையை நெகிழவிட்டுக் காட்சிதருகிறார்.[18]

இவரது வலமுன்கை முழங்கையருகே மடக்கப்பட்டு மார்பருகே திருப்பப்பட்டுள்ளது.[19] இக்கையின் கட்டைவிரல் நடுவிரலின் மேல்கணுவைத் தொட்டபடி இருக்க, மற்ற விரல்கள் நீண்டு இன்னதென்று விளங்காத ஒரு முத்திரையில் காட்சி தருகின்றன. ஆடற்கலை நூல்களிலோ, சிற்ப நூல்களிலோ இம்முத்திரையை இனம் காணமுடியவில்லை.

வலப்பாதத்தை நேராகவும் இடப்பாதத்தைப் பார்சுவமாகவும் வைத்து நிற்கும் திருமாலின் பின்கைகளில் இடப்புறம் சங்கு. வலப்புறம் சக்கரம் இருந்து பிற்காலத்தில் தகர்க்கப்பட்டுள்ளது. செவிகளில் மகரகுண்டலங்கள், செவிப்பூ. இவரது கிரீடத்தின் பின்னால் தலைச்சக்கரம் காட்டப்பட்டுள்ளது. மார்பில் சன்னவீரம்.[20] கங்கணங்கள், பட்டை வளைகள் அணிந்து மலர்ச்சியான முகத்துடன் காட்சியளிக்கும் இவரது இடச்சுண்டுவிரலை மோதிரமொன்று அழகுசெய்கிறது. கால்களில் தாள்செறிகள்.

திருமாலின் இடப்புறம் பயபக்தியுடன், இருபுறமும் இறக்கைகளைச் சுருக்கியபடி மனிதவடிவில் கருடன் காட்சி தருகிறது. இதன் பாதங்களும் திருமாலின் பாதங்களைப் போலவே அமைந்துள்ளன. இருகைகளையும் மார்பின் குறுக்காக மடித்தவாறு காட்சிதரும் கருடனின் கழுத்தில் சரப்பளி. செவிகளில் பனையோலைக் குண்டலங்கள். கைகளில் கங்கணங்கள், வளைகள். குமிழ் போன்ற எழுச்சியுடன் உள்ள மகுடம் சற்றுப் புதுமையாக, மாமல்லபுரப் பாறைச் சிற்பத்தொகுதியில் உள்ள

குரங்கு ஒன்றின் தலையலங்காரத்தை ஒத்தமைத்துள்ளது. இடையில் அரைக்கச்சு இருத்தும் கோவணஆடை.

சேத்ரபாலர்

சுடர்முடியுடன் நிர்வாணியாய்க் காட்சிதரும் சேத்ரபாலரின் பின்கைகளில் வலப்புறம் உடுக்கையும் இடப்புறம் பாசமும் இருக்க, வலமுன்கையில் முத்தலை ஈட்டியும் இடமுன்கையில் தலையோடும் உள்ளன. உதரபந்தம், உபவீதமாய் முப்புரிநூல், குண்டலங்கள், வீரக்கழல்கள் கொண்டு சமபாதராய்த் தளத்தின் மீது நிற்கும் இறைவனின் பின்புறம் நாய். இது இறைவன் கையிலுள்ள தலையோட்டிலிருக்கும் ஊனையருந்த முனைப்புக் காட்டுவது போல் அமைக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டுகள்

முகப்பு முழுத்தூணின் மேற்சதுரத்திலுள்ள வட்டெழுத்துக் கல்வெட்டால் மசிலீச்சுரம் என்றழைக்கப்படும் இந்த நடுக் குடைவரையில், இதையும் சேர்த்து ஒன்பது கல்வெட்டுகளும் சேத்ர பாலருக்காக எடுக்கப்பட்டுள்ள சுவரில் இரண்டு கல்வெட்டுகளும் உள்ளன. இவை தரும் செய்திப்பிழிவுகளைக் கல்வெட்டுகளின் பார்வையில் குன்றடிக்குடி என்ற தலைப்பின் கீழ்ப் பார்க்கலாம்.

மூன்றாம் குடைவரை

முதலிரண்டு குடைவரைகளின் நடைமாளிகை வழியே மூன்றாம் குடைவரைக்குச் செல்ல முடியாதபடி அதன் முன் கட்டப்பட்டுள்ள பெருமண்டபச் சுவர் தடுப்பாய் அமைந்துள்ளது. வெளிப் பெருமண்டபத்தினுள் பிதுக்கமாய் நிற்கும் இந்தப் பெருமண்டப வாயில் எப்போதும் பூட்டப்பட்ட நிலையிலேயே உள்ளது. இந்தியத் தொல்லியல்துறையின் பராமரிப்பில் உள்ள குன்றக்குடிக் குடைவரைகளுள் இம்மூன்றாம் குடைவரையில் மட்டுமே அதிக அளவில் சிற்பங்கள் இருப்பதால் பாதுகாப்புக் கருதி இந்நிலை.

பெருமண்டபத் திருவாயில் மேல் சுதையுருவங்களாகச் சில சிற்பத்தொகுதிகள். வாயிலைத் திறந்து உள் நுழைந்ததும் பதினைந்தாம் நூற்றாண்டுக் கலைமுறையில் அமைந்த நான்கு

தூண்கள் தாங்கி நிற்கும் மண்டபத்தின் வரவேற்பு. குடைவரைக் கூரைச் சரிவின் மேல் பாறைப் பாளங்களை நுழைத்து மண்டப மாக இழுத்திருக்கிறார்கள். இம்மண்டபத் திருப்பணி பற்றிப் பேசும் கல்வெட்டு மண்டப வெளிச்சுவரில் காணப்படுகிறது. குடையப்பட்டிருக்கும் கருவறையை நோக்கியவாறு இந்த மண்டப நடுவில் நந்தியொன்று ள்ளது.

மாமல்லபுரத்து அதிரணசண்டேசுவரம் போன்ற முகப்பு. குன்றின் இயற்கையான சரிவு, நீளமான கூரைக்கும் கோட்டம் அமைக்க வாய்ப்பான பக்கப்பகுதிகளுக்கும் நின்று நோக்க நல்ல அகலமான தரையமைப்பிற்கும் இடம் தந்திருக்கிறது. பக்கப் பகுதிகளின் கீழ்ச்சரிவுகளில் மேற்கில் முருகனும் கிழக்கில் பிள்ளையாரும் செதுக்கப்பட்டுள்ளனர்.

கிழக்கு மேற்காக 5. 36 மீ. நீளமும் தென்வடலாக 80 செ. மீ. அகலமும் உள்ள முகப்புத் தளத்தின் மேல், பக்கங்களில் அரைத் தூண்களும் இடையில் முழுத்தூண்களுமாய் நான்கு தூண்கள் பொளியப்பட்டுள்ளன. இத்தூண்கள் அமைந்திருக்கும் தளம் முன்தரையைவிட 9 செ. மீ. அளவும் முகமண்டபத் தரையைவிட 4 செ. மீ. அளவும் உயர்த்திக் காட்டப்பட்டுள்ளது. முன்தரை இத்தளக் கீழ் விளிம்பிலிருந்து 1. 08 மீ. அளவிற்குத் தெற்கிலும் 5. 30 மீ. அளவு கிழக்கு மேற்காகவும் பரந்துள்ளது.

தளத்தின் மீதுள்ள தூண்கள் முதலிரண்டு குடைவரைகள் போலவே அமைந்துள்ளன.[21] இவற்றின் போதிகைகள் சிறிய கீழ்க் கைகளையும் இருமடங்கு பெரிய மேற்கைகளையும் உடையன. விரிகோணத்தில் திரும்பும் மேற்கைகள் மடிப்புடன் உத்திரம் தொடுகின்றன. மேலே வாஜனம். இது, இரண்டாம் குடைவரையைப் போல் முகப்பின் பக்கச் சுவர்களில் இறங்கி ஆங்கமைந்துள்ள கோட்டங்களுக்கு மேல்நிலையாகியுள்ளது.

இக்கோட்டங்களின் வடபுற அணைவாக முகப்பின் பக்க அரைத்தூண்கள் அமைய, தென்புறத்தே சிறிய அளவிலான நான்முக அரைத்தூண்கள் உள்ளன. கோட்டங்களின் அடித் தளங்கள் முன்தரையிலிருந்து மேற்கில் 41 செ. மீ., கிழக்கில் 21 செ. மீ. என உயர்த்தி அமைக்கப்பட்டுள்ளன. இக்கோட்டங் களில் பேரளவினராய் வாயிற்காவலர்கள் நிற்கின்றனர்.

வாஜனத்திற்கு மேலிருந்து 1. 29 மீ. அளவிற்குத் தெற்கில் சரிந்து இறங்கும் பாறை முன்தரை முழுவதற்கும் கூரை போல்

அமைந்துள்ளது. பாறையின் இயற்கையான இச்சரிவை அதிக வேலைப்பாடுகளுக்கு உட்படுத்தாமல் எளிய கூரையாகப் பயன் படுத்தியிருக்கிறார்கள். இவ்வளவு நீண்ட கூரையை மிகமிக அருமையாகவே குடைவரைகளில் பார்க்கமுடிகிறது. கூரை முகப்பின் மேற்பகுதியில் முழு நீளத்திற்கும் கிழக்கு மேற்காகக் குழி உண்டாக்கி மழை நீரோட்ட வடிகாலாய்ச் செய்திருக்கிறார்கள்.

முகமண்டபம்

தெற்கு வடக்காக 1. 60 மீ., கிழக்கு மேற்காக 5. 68 மீ. அளவு களில் அமைந்துள்ள முகமண்டபத்தின் கூரை வெறுமையாக உள்ளது. கிழக்கிலும் மேற்கிலும் இக்கூரையை ஒட்டி வாஜனம் காட்டப்பட்டுள்ளது. முகமண்டபச் சுவர்களில் முப்புறத்திலும் கோட்டங்கள் அகழ்ந்து சிற்பங்களைச் சமைத்துள்ளனர்.

மேற்குக் கோட்டத்தைத் திருமாலும் கருடனும் பகிர்ந்து கொள்ளக் கிழக்குக் கோட்டத்தை ஆடல்தோற்றத்தில் சிவபெரு மான் அலங்கரிக்கின்றார். முகமண்டபப் பின்சுவரில் வலப் புறத்தே நீள்எரியாய் நிமிர்ந்தவரும் இடப்புறத்தே கொற்றவையும் சங்கரநாராயணரும் காட்சிதருகின்றனர். இச்சிற்பக் கோட்டங் களின் கீழே தளஅமைப்புக் காணப்படுகிறது. இத்தளம் முக மண்டபத் தரையமைப்பிலிருந்து வெவ்வேறு அளவுகளில் உயர்த்திக் காட்டப்பட்டுள்ளது.

திருமால் கருடன் தளம்	43 செ. மீ.
இலிங்கோத்பவர் தளம்	55 செ. மீ.
கொற்றவைத் தளம்	19 செ. மீ.
சங்கரநாராயணர் தளம்	28 செ. மீ.
சிவபெருமானின் ஆடல்தோற்றத் தளம்	68 செ. மீ.

கருவறை

முகமண்டபத்தின் பின்சுவரில் அமைந்துள்ள கருவறையை அடைய நான்கு படிகள் உள்ளன. கீழ்ப்படி அரைநிலா வடிவத் தில் இருக்க, மேற்படி, கருவறை வாயிலின் கீழ் நிலையாக அமைந்துள்ளது. தாங்குதள அமைப்பின்றி 1. 88 மீ. உயரமும் 1. 03 மீ. அகலமும் கொண்டமைந்துள்ள கருவறை வாயிலின் இருபுறமும் பக்கத்திற்கொன்றாக நான்முக அரைத்தூண்கள் போதிகைகளின்றிக் காட்டப்பட்டுள்ளன.[22]

இத்தூண்களின் மேல் அமர்ந்துள்ள உத்திரம் கருவறையின் பக்கங்களில் படிந்து முகமண்டபப் பின்சுவர்க் கூரையை ஒட்டி முழு நீளத்திற்கும் கிழக்கு மேற்காகத் தொடர்கிறது. அரைத்தூண்களையொட்டி இவ்வுத்திரம் அவற்றின் மேற்பரப்பில் இருந்து சற்று வெளிவாங்கி, அதே அகலத்தில் கருவறை வாயிலின் மேல்நிலையாக அமர்ந்துள்ளது.

கருவறைத் தரையமைப்பு, வாயில் கீழ்நிலையின் அளவில் இருப்பதால் இவ்வாயில் நிலையை அடுத்துப் பிற்காலத்தில் சிறு தடுப்பு அமைத்துள்ளனர். தென்வடலாக 2. 95 மீ. நீளமும் கிழக்கு மேற்காக 2. 91 மீ. அகலமும் 2. 21 மீ. உயரமும் பெற்றுள்ள கருவறையின் கூரையும் சுவர்களும் வெறுமையாக உள்ளன. கருவறையின் நடுப்பகுதியில் மற்ற இரண்டு குடைவரைகளைப் போலவே தாய்ப்பாறையிலேயே செய்தமைத்த இலிங்கத்திருமேனி அமைந்துள்ளது. 1. 08 மீ. பக்க அளவுள்ள சதுர ஆவுடையாரின் மீது 57 செ.மீ. உயரமுள்ள பாணம் காட்சிதருகிறது. இதன் சுற்றளவு 1. 18 மீ. கோமுகம் மேற்கு முகமாக உள்ளது.

சிற்பங்கள்

குடைவரைக்கு முன்னுள்ள பகுதியில் நான்கு சிற்பங்களும் முகமண்டபத்தில் நான்கு சிற்பத் தொகுதிகளும் ஒரு தனிச் சிற்பமும் உள்ளன.

முகப்புக்கு முன் உள்ள சிற்பங்கள்

முகப்பொட்டிய பாறைச்சரிவுக் கோட்டங்களில் கிழக்கில் ஒன்றும் மேற்கிலொன்றுமாய் இரண்டு வாயிற்காவலர் வடிவங்கள் காணப்படுகின்றன. இவற்றின் உயரம் இரண்டு மீட்டர். அளவில் பெரிய இவ்வடிவங்கள் மண்டகப்பட்டு, தளவானூர்க் குடைவரைக் காவலர்களை நினைவூட்டுகின்றன.

இக்குடைவரையின் இருகாவலருமே நேர்ப் பார்வையினராய்ச் சடைமகுடத்துடன் முப்புரிநூல், உதரபந்தம் அணிந்து வீரப்பெருமிதர்களாய்க் காட்சிதருகின்றனர். மேற்கிலுள்ளவருக்கு இரண்டு சிறிய கோரைப்பற்கள். இவரது இடப்பாதம் நேராகவும் வலப்பாதம் திரயச்ர உத்கட்டிதத்திலும் உள்ளன. வலமுழங்கையை உருள்தடியின் மேல் வைத்து இடக்கையை ஊருஅஸ்தமாக்கியுள்ளார்.[23]

இடப்பாதத்தை நேராகவும் வலப்பாதத்தைத் திரயச்ரத்திலும் இருத்தியுள்ள கிழக்கர் இடக்கையைக் கடகமாக்கித் தொடை மீது ஊன்றியுள்ளார்.[24] வலக்கை மணிக்கட்டுப்பகுதியை உருள் தடியின் மீது தாங்கலாக வைத்துள்ளார். இருவர் தடிகளின் மீதும் பாம்புகள் சுற்றியுள்ளன. இவற்றுள் கிழக்குப் பாம்பு படமெடுத்த நிலையில் காவலரின் வலத்தொடையருகே காட்சிதர, மேற்குப் பாம்போ மேல்நோக்கித் தன் தலைவரைப் பார்க்கிறது. மேற்கில் உள்ளவர் தடியின் கீழ்ப்பகுதியில் சிறிய கத்தி காட்டப்பட்டுள்ளதால் இதை மழுவாகக் கொள்ளலாம்.

இருவருமே கனமான இடைக்கட்டுகளுடன் காட்சி தருகின்றனர். ஆடைமுடிச்சுகளின் பக்கவாட்டுத் தொங்கலும் முன் வளையங்களும் கி. பி. எட்டாம் நூற்றாண்டு மரபை ஒட்டிக் காட்சிதருகின்றன. இருவர் கழுத்திலும் சரப்பளி. கைகளில் கங்கணங்கள்; பட்டை வளைகள்; செவிகளில் பனையோலைக் குண்டலங்கள்.

கிழக்கர் தோள்களையொட்டி இருபுறமும் சூலஇலைகள்[25] பக்கத்திற்கொன்றாக உள்ளன. நெற்றிக்கண்ணோடு நிற்கும் இவர் சடைமகுடத்தின் வலப்புறத்தே பிறை. வாயிற்காவலர் மகுடத்தில் பிறைவடிவம் இடம்பெறல் அரிதெனலாம். குன்றக்குடி இரண்டாம் குடைவரைக் காவலர் ஒருவர் மகுடத்திலும் இது போல் பிறை உள்ளமை குறிப்பிடத்தக்கது. சூலஇலைகள், பிறை, நெற்றிக்கண் இவை மூன்றும் உள்ள இவரை ஆயுதபுருஷராகக் கொள்ளலாம்.

இரண்டு காவலர்களுமே முழங்கால்வரை அமைந்த இடையாடையுடன் உள்ளனர். மேற்கர் புலிமுகப் பதக்கமும் செவ்வகக் கற்களும் பதித்த அரைக்கச்சு அணிந்துள்ளார். கச்சின் முடிச்சுத் தொங்கல்கள் புலியின் வாய்க்கடையிலிருந்து நெகிழுமாறு அமைய, இருவருக்குமே முந்தானை காட்டப்பட்டுள்ளது. அடர்த்தியான சடைக்கற்றைகள் கழுத்தின் இருபுறமும் நெகிழ, நன்றாகப் பொளியப்பட்ட புருவமும் நெற்றிப்பகுதியும் முகத்திற்குத் தனி அழகைத் தருகின்றன.

முருகன்

மேற்குக் காவலரின் வலப்புறமுள்ள பாறைச்சரிவில் சிறிய வடிவினராய் நான்கு கைகளுடன் சமபாத நிலையிலுள்ள

முருகனைச் சென்னியும் இடப்பின்கையிலுள்ள சிறிய அளவிலான முத்தலை ஈட்டியும்[26] அடையாளம் காட்டுகின்றன. வலப்பின்கை கடக முத்திரையிலுள்ளது. இக்கையின் மேற்பகுதியில் காட்டப்பட்டுள்ள கருவியை அடையாளம் காணமுடியவில்லை.[27] இடமுன்கை கடியவலம்பிதத்தில் இருக்க, வலமுன்கை கடகத்தில் உள்ளது.[28]

செவிகளில் பனையோலைக் குண்டலங்கள்; அரைக்கச்சு இருத்தும் அரையாடையும் இடைக்கட்டும் உபவீதமாய் முப்புரி நூலும் கொண்டுள்ள இவரது தலையைக் கரண்டமகுடம் அணி செய்கிறது. கழுத்தில் சரப்பளி. தமிழகக் குடைவரைகளில் முருகனின் சிற்பங்கள் குறைந்த அளவிலேயே இடம்பெற்றிருப்பதால் இளநகை ததும்பும் இச்சிற்பம் சிறப்புக்குரியதாகிறது.

பிள்ளையார்

கிழக்குக் காவலரின் இடப்புறப் பாறைச்சரிவில், அர்த்த பத்மாசனத்தில் உள்ள பிள்ளையாரின் வலக்கையில் மோதகம்; இடக்கையைத் தொடைமேல்[29] இருத்தியுள்ளார்.[30] இடத்தந்தம் உடைந்துள்ளது; துளைக்கை வலம்புரியாகக் காட்டப்பட்டுள்ளது. கரண்டமகுடமும் உபவீதமாய் முப்புரிநூலும் உதரபந்தமும் கங்கணங்களும் வளைகளும் அணிந்து தளத்தின்மீது அமர்ந்துள்ள இவர் கழுத்தில் பெரிய அளவிலான ருத்திராக்கங்கள் கோத்த மாலை. இது போன்ற ருத்திராக்க மாலையணிந்த பிள்ளையாரைப் பல்லவர் பகுதியில் பார்த்ததில்லை.

முகமண்டபச் சிற்பங்கள்

முகமண்டபச் சிற்பங்களின்மீது கனமான சுதை பூசப்பட்டு வண்ணம் தீட்டப்பெற்றுள்ளது. சில இடங்களில் இச்சுதை சிதைந்து திருமேனிகளின் மெய்யான தோற்றம் தெளிவாய்த் தெரிகிறது.

திருமாலும் கருடனும்[31]

மேற்குக் கோட்டத்தின் பெரும்பகுதியில் நெடிய திருமேனியராய் முகத்தைச் சற்று வலப்புறம் சாய்த்த நிலையில் திருமாலும் அவருக்கு இடப்புறத்தே அணுக்கமாகச் சற்றுச் சிறிய அளவில் மனிதவடிவில் கருடனும் ஏறத்தாழ இரண்டாம் குடைவரையில்

இருப்பது போலவே காட்டப்பட்டுள்ளனர். திருமாலின் வலப்பாதம் நேராக இருக்க, இடப்பாதம் பார்சுவத்தில் உள்ளது. கச்சம் வைத்த கனமான இடுப்பாடை நடுவில் மடிப்புகளுடன், கணுக்காலுக்குச் சற்று மேல்வரை காட்டப்பட்டுள்ளது. இதன் கீழ் மடிப்பும் கனமாக உள்ளது. இடைக்கட்டு அணிகலன் போல அலங்கரிக்கப்பட்டுள்ளது.

வலமுன்கையைக் கடியவலம்பிதத்தில் கொண்டுள்ள இறைவன் இடமுன்கையை அருகே உள்ள கருடனின் வலத் தோளின் மேல் மென்மையாக அமர்த்திக் கையின் கீழ்ப்பகுதியை, உள்ளங்கை கருடனைப் பார்த்திருப்பது போல் நெகிழ்கையாய்த் தாழ்த்தியுள்ளார்.[32] இருசெவிகளையும் மகரகுண்டலங்கள் அலங்கரிக்கக் கிரீடமகுடராய், உபவீத முப்புரிநூலும் உதரபந்த மும் சரப்பளியும் முத்தாரமும் அணிந்துள்ள இப்பெருமாளின் பின்கைகளில் வலப்புறம் சக்கரம். இடப்புறம் சங்கு. அரைக் கச்சின் யாப்புப் புலிமுகம் பெற்றுள்ளது. தோள்களின் இருபுறமும் அழகிய ஸ்கந்தமாலை.

சிற்பம் முழுவதும் சுதை பூசப்பட்டிருப்பதால் அணிகலன் கள் மெய்யானவையா அல்லது சுதையால் உருவாக்கப்பட்ட வையா என்பதை அறியமுடியவில்லை. கருடாழ்வார் வலப் பாதத்தை நேராக வைத்து இடப்பாதத்தைப் பார்சுவத்தில் திருப்பியுள்ளார். பூட்டுக் குண்டலங்கள் செவிகளை அலங்கரிக்க, கரண்டமகுடராய்க் கைகள் இரண்டையும் குறுக்கீடு செய்து உள்ளங்கைகளை மார்பில் பதித்துப் பத்திமையுடன் காட்சி யளிக்கும் இவரது முகம் கூச்ச உணர்வுடன் இடப்புறம் சாய்ந் துள்ளது. இடப்புற இறக்கை மடிந்த நிலையில் காட்டப் பட்டுள்ளது.

இலிங்கோத்பவர் தொகுதி

முகமண்டபப் பின்சுவரில் தெற்கு நோக்கிய நிலையில் கருவறை வாயிலின் வலப்புறத்தே இத்தொகுதி அமைந்துள்ளது. இத்தொகுதியில் நடுநாயகமாகப் பேரளவில் இலிங்கோத்பவரும் வலப்புறத்தே நான்முகனும் இடப்புறத்தே திருமாலும் உள்ளனர். இலிங்கோத்பவரின் முகத்தில் சுதை பெரும்பாலும் அகன்றுள்ள மையால் மெய்க்கோலம் கண்டு மகிழலாம்.

இந்த இலிங்கோத்பவர் வடிவம் சற்று மாறுதலானது. தொடக்கக் கால இலிங்கோத்பவர் வடிவங்களுள் ஒன்றாய்

இதைக் கொள்ளலாம். இது போன்ற வடிவங்கள் பிள்ளையார் பட்டியிலும் திருமெய்யத்திலும் உள்ளன. கீழ்ப்பகுதி இலிங்கத் திருமேனியாய் அமையப் பிளந்திருக்கும் அம்மேனியிலிருந்து பரவும் மனிதவடிவாய்த் தொடையளவினராய்ச் சிவபெருமான் காட்சியளிக்கிறார்.

வலமுன்கை ஆகூயவரத முத்திரையில் நெகிழ்கையாகத் தாழ, இடமுன்கை கடியவலம்பிதமாய்[33] இருக்கப் பின்கைகளில் வலப்புறம் மழுவும் இடப்புறம் மானும் சுதையில் காட்டப் பட்டுள்ளன. இறைவனின் சடைபாரத்துக்கு மேல் சுதையில் ஒளிவட்டம் காட்டப்பட்டுள்ளது. இதன் வலப்புறம் அன்னம் ஒன்றும் சுதையில் வடிக்கப்பட்டுள்ளது. உதரபந்தமும் உபவீத மாய் முப்புரிநூலும் காட்டப்பட்டுள்ளன. வலச்செவியை மகர குண்டலமும் இடச்செவியைப் பனையோலைக் குண்டலமும் அழகுசெய்கின்றன.

சிவபெருமானின் வலப்புறம் மூன்று திருமுகங்களுடன், முன் கைகள் இரண்டையும் மார்பருகே வணக்க முத்திரையில் காட்டிப் பின்கைகளில் வலப்புறம் அக்கமாலையும்[34] இடப்புறம் கமண்டலமும் கொண்டு, சமபாதராய்க் காட்சிதரும் நான்முக னின் கச்சம் வைத்த பட்டாடை முழங்காலுக்குச் சற்றுக் கீழ்வரை காட்டப்பட்டுள்ளது.

சிவபெருமானின் இடப்புறம் அதே போல் முன்கைகளை வணக்க முத்திரையில் கொண்டு, பின்கைகளில் வலப்புறம் சக்கரமும் இடப்புறம் சங்கும் ஏந்திக் கிரீடமகுடமும் கச்சம் வைத்த பட்டாடையுமாய்த் திருமால் காட்சிதருகிறார்.

கொற்றவைத் தொகுதி

கருவறை வாயிலின் இடப்புறத்தே முகமண்டபத்தின் பின் சுவரில் கொற்றவையும் அடுத்து சங்கரநாராயணரும் காட்சி தருகின்றனர். மகிடத்தின் தலைமேல் நிற்கும் கொற்றவையின் வலப்பாதம் திரயச்ரமாகத் திரும்ப, இடப்பாதம் நேராக உள்ளது. கரண்டமகுடம், பனையோலைக் குண்டலங்கள், நெற்றிக்கண், கோரைப்பற்கள் இவற்றுடன் பல அணிவகைகளும் மார்புக் கச்சும் அணிந்தவராய்க் காட்சிதரும் கொற்றவையின் தலைக்கு மேல் குடையொன்று காட்டப்பட்டுள்ளது. அம்மையின் தோளுக்குப் பின்னால் அம்புகள் நிறைந்த கூடுகள்.

எட்டுத் திருக்கைகளில் வலமுன்கை அருட்கையாய்த் தாழ்ந் திருக்க வலப்பின்கைகளில் மூன்றாவதில் வாளும் நான்காவதில் எறிநிலைச் சக்கரமும் உள்ளன. இரண்டாம் வலக்கையில் உள்ள கருவியைச் சுதை பூசப்பெற்றிருப்பதாலும் ஒருபகுதி சிதைந் திருப்பதாலும் உறுதியாக இன்னதென்று அடையாளம் காண முடியவில்லை.[35] இடமுன்கையில் தலையோடு.[36] இடப்பின்கை களில் கீழிருந்து மேலாக வில், கேடயம், சங்கு ஆகியன உள்ளன.

அம்மையின் இருபுறமும் அடியவர் இருவர் பக்கத்திற் கொருவராகக் குத்துக்காலிட்டு அமர்ந்துள்ளனர். வலப்புறம் உள்ளவர் தலைமுடியை இடக்கையால் பிடித்துக்கொண்டு வலக்கையால் கழுத்தை அறுத்துக் கொற்றவைக்குத் தரும் செயற் பாட்டில் இருக்கிறார். சடைபாரத்தோடு இருக்கும் இடப்புறத் தார் கைகளில் சிறிய பாத்திரமொன்றை ஏந்தியுள்ளார்.[37]

சங்கரநாராயணர்[38]

சமபாதராய் நிற்கும் சங்கரநாராயண வடிவத்தின் வலப்புறத் தைச் சிவபெருமானும் இடப்புறத்தைத் திருமாலும் பங்கிட்டுக் கொள்கின்றனர். புலித்தோலாடையும் சடைமகுடமும் நெற்றிக் கண்ணும் கொண்டிலங்கும் சிவப்பகுதியின் வலமுன்கை காட்டும் குறிப்பை ஆகூயவரதமாகக் கொள்ளலாம். வலப்பின் கைக்கு உரியதாய்ச் சுதை விழுந்த இடத்தில் நீளமான மழுவைக் காணமுடிகிறது. இது தவிர சுதையாலான சிறுமழுவொன்றும் உள்ளது. திருமால்பகுதி கிரீடமகுடமும் பட்டாடையும் கொண்டு பின்கையில் சங்கேந்தி இடமுன்கையைக் கடியவலம்பிதத்தில்[39] கொண்டுள்ளது. இவ்வடிவத்தின் இருசெவிகளையும் மகர குண்டலங்கள் அலங்கரிக்கின்றன. உதரபந்தமும் உபவீதமாய் முப்புரிநூலும் அணிகலன்களும் கொண்டுள்ள இவ்வடிவம் பல்லவக் குடைவரைகளில் காணப்பெறாத திருத்தோற்றமாகும்.

சிவபெருமானின் ஆடல் தோற்றம்

முகமண்டபக் கிழக்குச் சுவர் முழுவதும் சிவபெருமானின் ஆடல்தோற்றம் பரவியுள்ளது. ஆடும் பெருமானின் கீழே இருபுறத்தும் அமர்நிலையில் பக்கத்திற்கொருவராய் இசைக் கலைஞர்கள். வலப்புறம் இருப்பவர் தம் கால்களுக்கிடையில், ஒரு கண் முழவுகள் இரண்டை அருகருகே நிறுத்திக் கால்களால்

அணையிட்டு இறையாடலுக்கு இசையெழுப்பும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். இடக்கை ஒரு முழவின்மீது பட்டு இசை எழுப்ப, வலக்கை அடுத்த தட்டுக்காக உயர்ந்துள்ளது.

சடைபாரத்துடன் இருசெவிகளிலும் பனையோலைக் குண்டலங்கள் அணிந்து, வலப்புறம் இலேசாய்ச் சரிந்த சிரித்த முகத்துடன் காட்சியளிக்கும் இவ்வடிவம் இயக்கும் முழவுகள், குடமுழவுகளை ஒத்திருப்பினும் ஒன்றிலிருந்து ஒன்று வடிவத்திலும் அலங்கரிப்பிலும் வேறுபட்டுள்ளன.

இடப்புறப் பூதநாயகர் இலலிதாசனத்தில் இறைவனின் ஆடலைத் தலை நிமிர்த்திக் கண்டவாறே, கைகளில் உள்ள தாளங்களை இயக்குகிறார். புடைத்த வயிறும் சடைபாரமுமாய்க் காட்டப்பட்டிருக்கும் இவர் செவிகளிலும் பனையோலைக் குண்டலங்கள். இடுப்பில் ருத்திராக்கங்களாலான அரையணி.

இந்த இருவரும் தரும் தாளத்திற்கேற்ப ஆடும் சிவபெருமானின் அர்த்தஸ்வஸ்திகம்,[40] உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் விதத்தில் பரவியுள்ளது. இந்தக் கரணம் இராஜசிம்மர் காலக் கற்றளிகள் சிலவற்றில் பல்லவப் படைப்பாய் மிளிர்வதை இங்கு நினைவுகூரலாம். ஆடும் இறைவனைச் சுற்றிலும் சுதையில் திருவாசிச் சுடர்கள் காட்டப்பட்டுள்ளன. இவை சில இடங்களில் உதிர்ந்திருப்பதால் முதல் வடிவத்தில் இச்சுடர்கள் இடம் பெறவில்லை என்பதும் பின்னாளைய சுதைப்பூச்சின்போது மேற்கொள்ளப்பட்ட அலங்காரமே இது என்பதும் புலனாகின்றன. சுதையை முற்றிலுமாய் நீக்கினாலொழிய இந்த இறைவடிவத்தின் முழுமையை உணர்ந்து மகிழ முடியாது.

எட்டுத் திருக்கைகளில் வலமுன்கை மார்பருகே தர்ஜனியாய்[41] அமைய, வலப்பின்கைகளில் கொடித்தண்டு,[42] மழு, துடி உள்ளன. இடமுன்கை அர்த்தரேசிதமாய்[43] எழுந்து தாழப் பிற பின்கைகளில் பாம்பு, தீ, ஓலைச்சுவடி.[44] மண்டலநிலையில், இடப் பாதத்தைப் பார்சுவமாக்கி, வலக்காலை இடக்காலின் பின்னால் குறுக்கிடு செய்து, இடப்பாதத்தின் விரல்களை அக்ரதல சஞ்சாரத்தில் நிறுத்தியுள்ள இறைவனின் இந்த ஸ்வஸ்திகப் பாதநிலை அற்புதமானது. செவிகளில் வலப்புறம் பனையோலைச் சுருள்; இடப்புறம் மகரகுழை.[45] வரிசையாய் அடுக்கிய கொக்கிறகும் செருகிய ஊமத்தம் பூக்களும் கொண்ட மகுடத்தையும் மீறி,

ஆடலின் விரைவுக்கேற்ப இருபுறமும் அலைபாயும் விரிசடைக் கற்றைகள். தலை இடப்புறச் சாய்வாக இருந்தாலும் முகம் இலேசாகவே திரும்பியுள்ளது. இதழ்களின் விரிவில் விளைந்திருக்கும் புன்னகை இறைவனின் முகத்தோற்றத்திற்கு எழில் கூட்டுகிறது.

கல்வெட்டுகள்

மூன்றாம் குடைவரையில் நான்கு கல்வெட்டுகளே உள்ளன. இவற்றுள் ஒன்று முதலாம் இராஜராஜருடையது. மற்றொன்று முதலாம் இராஜேந்திரருடையது. ஏனைய இரண்டும் சுந்தர பாண்டியருடையவை. இக்குடைவரையின் பெருமண்டபச் சுவர்களில் ஐந்து கல்வெட்டுகள் உள்ளன. இவ்வொன்பது கல்வெட்டுகளின் சாரத்தையும் கல்வெட்டுகளின் பார்வையில் குன்றக்குடி என்ற தலைப்பின் கீழ்ப் பார்க்கலாம்.

மூன்றாம் குடைவரையை அடுத்துள்ள பாறைச்சரிவு

வெளிப் பெருமண்டபத்திற்கு வெளியே, மூன்றாம் குடைவரையைத் தொடர்ந்து அமைந்துள்ள மலைச்சரிவில் கோட்டம் செய்து சண்டேசுவரரைப் பொளிந்துள்ளனர். இச்சிற்பத்திற்கு முன்னால் சிறுமண்டபமொன்றும் கட்டப்பட்டுள்ளது. அர்த்த பத்மாசனத்தில் உள்ள சண்டேசுவரர் இரண்டு கைகளையும் தொடைகளின் மீது இருத்தியுள்ளார். அவற்றுள் வலக்கை கடகத்தில் உள்ளது. பட்டையான முப்புரிநூல், பூட்டுக் குண்டலங்கள், கண்டிகை, சடைபாரம் எனக் காட்சிதரும் சண்டேசுவரரின் வலப்புறத்தே மழுவொன்று வடிவமைக்கப்பட்டுள்ளது.

சண்டேசுவரர் திருமுன்னுக்கு முன்னாலுள்ள திறந்த வெளியிலிருந்து பெருமண்டபக் கிழக்குச் சுவரின் மேற்பகுதியைக் காணலாம். உத்திரத்தில் முடியும் இச்சுவரின் சில பகுதிகள் இலேசாய்ச் சிதைந்துள்ளன. உத்திரத்தின் மேல் வலபியும் அதை அடுத்துக் கூடுகளுடனான கபோதமும் அழகற்ற நிலையில் காட்டப்பட்டுள்ளன. இக்கபோதத்தின் மேல், முதல் தள முடிவைக் காட்டும் வகையில் பூமிதேசமாக யாளி வரிமானம் தொடர்கிறது.

சண்முகநாதப் பெருமான் கோயில்

குடைவரைகள் உருவாக்கப்பட்டுள்ள மலையின் மேல், பிற்பாண்டியர் கால முருகன் கோயிலொன்று அமைந்துள்ளது.

இக்கோயிலுக்கு அழைத்துச் செல்லும் மலைப்பாதையிலுள்ள சிறு மண்டபமொன்றின் கூரையில் நாயக்கர் கால ஓவியங்கள் கதை விளக்கத்துடன் சிதைந்த நிலையில் காணப்படுகின்றன. கோபுரவாயிலுடன் அமைந்துள்ள சண்முகநாதப் பெருமான் விமானம் ஒருதளத் திராவிடமாகும். இறைவன் வீற்றிருக்கும் கருவறையின் முன் முகமண்டபமும் இடைநாழிகையும் உள்ளன. விமானச் சுவர்களில் பிற்பாண்டியர் காலக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

ஞானியார் மடம்

முருகன் கோயிலுக்குப் பின்புறத்தே, மலைப்பகுதியிலுள்ள குகைத்தளம் ஞானியார் மடம் என்றழைக்கப்படுகிறது. இதை அடையக் குடைவரைகளைக் கடந்து திருக்குளத்தின் கரை வழியே மேலேறிச் செல்லவேண்டும். வழியெல்லாம் மலைமீது கூடக் குடியிருப்புகள். மலைப்பாறையிலுள்ள இயற்கையான குகைத்தளத்தில் ஏழு படுக்கைகள் அடுத்தடுத்த நிலையில் வெட்டப்பட்டுள்ளன.[46] நன்கு சமன்செய்து வழவழப்பாக்கப் பட்டுள்ள இப்படுக்கைகளுள் இரண்டிற்குச் சற்று உயரமான தலையணை அமைப்பு உள்ளது. ஒரு படுக்கைக்கு உயரம் குறைந்த தலையணை அமைப்புக் காணப்படுகிறது

இக்குகைத்தளத்தின் கூரைச்சரிவின் முகப்பில் வலப்புறம் ஒரு கல்வெட்டும் இடப்புறம் ஒரு கல்வெட்டும் பழந்தமிழ் எழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ளன. இடப்புறக் கல்வெட்டு இந்தக் குகைத்தளத்தையொட்டிக் கட்டப்பட்டுள்ள கருங்கல் கட்டமைப்பில் தன் தொடர்ச்சியை இழந்துள்ளது. இக்குகைத் தளத்திற்கு அருகிலுள்ள கபோதபந்தத் தாங்குதள மேடைமீது ஆஞ்சநேயர், நாகர், பிள்ளையார் சிற்பங்களும் இங்கு வழிபாட் டில் உள்ளன. சற்றுத் தள்ளி பத்மாசனத்தில் ஒரு முனிவர் சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது. ஆண்டு தோறும் இங்கு விழா எடுக்கப் படுவதாக ஊரார் கூறுகின்றனர்.

கல்வெட்டுகளின் பார்வையில் குன்றக்குடி

குன்றக்குடி மலையிலுள்ள குகைத்தளம், குடைவரைகள், கற்றளிகள் இவற்றிலிருந்து படியெடுக்கப்பட்டுள்ள கல்வெட்டு களின் எண்ணிக்கை ஐம்பத்தொன்றாகும்.[47] இவற்றுள் நாற்பத்

தாறு கல்வெட்டுகள் நடுவண் அரசின் கல்வெட்டுத்துறையால் ஐந்து நிலைகளிலும்[48] எஞ்சிய ஐந்து கல்வெட்டுகள் டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையக் களஆய்வுகளின் போதும் படியெடுக்கப்பட்டன.[49]

இவற்றுள் முப்பது கல்வெட்டுகள் குடைவரைகளில் இடம் பெற்றுள்ளன. குடைவரை சார்ந்த மண்டபச் சுவர்களில் எட்டுக் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. வெளி மண்டபத்தில் உள்ள தேனாற்றுநாதர் திருமுன்னில் நான்கு கல்வெட்டுகளும் அதையடுத்துள்ள அறையின் உட்புறச் சுவர்களில் மூன்று கல்வெட்டுகளும் மலை மேல் உள்ள முருகன் திருக்கோயிலில் நான்கு கல்வெட்டுகளும் குன்றக்குடி மலையிலுள்ள இயற்கை யான குகைத்தளத்தின் முகப்பில் பழந்தமிழ்க் கல்வெட்டுகள் இரண்டும் காணப்படுகின்றன.

காப்பியூர் ஆதன் சாத்தனைச் சுட்டும் பழந்தமிழ்க் கல்வெட் டின் காலத்தைக் கி. பி. மூன்றாம் நூற்றாண்டாகக் குறிப்பிடும் ஐராவதம் மகாதேவன், கட்டமைப்பில் சிக்கியுள்ள மற்றொரு பழந்தமிழ்க் கல்வெட்டை, 'ஊறுது' எனப் படித்து, 'ஊருணி' எனப் பொருள்கொண்டுள்ளமையுடன், அதன் காலத்தையும் கி. பி. மூன்றாம் நூற்றாண்டாகக் குறிப்பிட்டுள்ளார்.[50] இந்த இரண்டு கல்வெட்டுகளும் தனித்தனியே வெட்டப்பட்டிருக்கும் நிலையிலும் இவை ஒன்றோடொன்று தொடர்புடைய ஒரே கல்வெட்டின் இரண்டு பகுதிகளாகலாம் என்பது அவர் கருத்தாக உள்ளது. நடுக் குடைவரைத் தூணொன்றில் இருவரிகளில் பொறிக்கப்பட்டுள்ள கி. பி. எட்டாம் நூற்றாண்டினதாகக் கொள்ளத்தக்க வட்டெழுத்துக் கல்வெட்டு இக்குடைவரையை மசிலீச்சுரம் என்கிறது.[51]

பழந்தமிழ், வட்டெழுத்துக் கல்வெட்டுகளைத் தவிர்த்து விட்டால் இங்குள்ள ஏனைய கல்வெட்டுகளுள் காலத்தால் பழைமையானது முதலாம் இராஜராஜரின் இருபத்து மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டேயாகும். இவரது மகனார் முதலாம் இராஜேந்திரரின் மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும் இங்குள்ளது. இவ்விரண்டும் ஒரே குடைவரையில் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிற சோழ வேந்தர்களுள் முதலாம் குலோத்துங்கரின் கல்வெட்டுகள் மட்டுமே இங்குக் காணப்படுகின்றன. இவை இவ்

வேந்தரின் இருபத்திரண்டாம் ஆட்சியாண்டிலிருந்து நாற்பத்தொன்பதாம் ஆட்சியாண்டுவரை பரவியுள்ளன. இவற்றுள் ஆறு கல்வெட்டுகள் முதல் குடைவரையிலும் ஒரு கல்வெட்டு நடுக் குடைவரையிலுமாய் இடம்பெற்றுள்ளன.

சோணாடு வழங்கியருளிய மாறவர்மர் சுந்தரபாண்டியர், சடையவர்மர் ஸ்ரீவல்லபதேவர்,[52] விக்கிரமபாண்டியர், மாறவர்மர் குலசேகரபாண்டியர் கல்வெட்டுகள் மிகுதியாக உள்ளன. இவற்றுள் சோணாடு வழங்கியருளிய சுந்தரபாண்டியரின் கல்வெட்டுகள் பன்னிரண்டு ஆகும். இம்மன்னரின் மூன்றாம் ஆட்சியாண்டிலிருந்து பதினெட்டாம் ஆட்சியாண்டுவரை பரவியுள்ள இக்கல்வெட்டுகள் முருகன் கோயில், குகைத்தளம் தவிர கல்வெட்டுகள் காணப்படும் ஏனைய அனைத்து இடங்களிலும் காணப்படுகின்றன. மன்னர் பெயரற்ற கல்வெட்டுகள் பதினான்கு உள்ளன.

இங்குள்ள மூன்று குடைவரைகளில், எட்டாம் நூற்றாண்டிலேயே பெயரிடப்பட்டிருப்பது நடுக் குடைவரைதான். மூன்றாம் குடைவரையில் காணப்படும் முதலாம் இராஜராஜர், முதலாம் இராஜேந்திரர் கல்வெட்டுகள் இங்குள்ள இறைவனைக் குன்றக்குடிப் பரமசாமி என்றழைக்கின்றன. முதலாம் குலோத்துங்கரின் ஏழு கல்வெட்டுகளுள் நான்கு, திருக்குன்றக்குடித் திருமலை உடைய மகாதேவர் என்றும் இரண்டு, திருமலை உடைய நாயனார் என்றும் இறைவன் பெயரைக் குறிக்கின்றன.

இக்கல்வெட்டுகளுள் ஐந்து முதல் குடைவரையில் உள்ளன. ஒன்று நடுக் குடைவரையில் உள்ளது. எனவே இக்கல்வெட்டுகள் குறிக்கும் பெயர்கள் இங்குள்ள மூன்று குடைவரை இறைவர்க்கும் பொதுவானவையாக இருந்தனவோ என்று கருதவேண்டி உள்ளது. பிற்காலக் கல்வெட்டுகளிலும் இது போலவே தேனாற்று நாயகரென்றும் மலைக்கொழுந்து நாயனாரென்றும் பொதுப் பெயரிட்டு அழைக்கும் முறையைப் பார்க்கிறோம். முதல் குடைவரையிலுள்ள சடையவர்மர் ஸ்ரீவல்லபதேவரின் இரண்டு கல்வெட்டுகளும் இங்குள்ள இறைவனை ஸ்ரீமூலஸ்தானம் உடைய நாயனார் என்று குறிப்பிடுகின்றன.

நாட்டுப்பிரிவுகள் - அரசியலமைப்பு

முதலாம் இராஜராஜரின் கல்வெட்டில் பாண்டிய நாடான இராஜராஜ வளநாட்டுத் தேனாற்றுப் போக்கிலிருந்த பகுதி

யாகக் குன்றக்குடி குறிக்கப்படுகிறது. முதலாம் குலோத்துங்கர் காலத்தில் இப்பாண்டிய நாடு இராஜராஜர் பெயரையேற்று இராஜராஜப் பாண்டிய நாடாக மாற, இதற்குள்ளிருந்த இராஜ ராஜ வளநாடு, இராஜேந்திர வளநாடாகப் பெயர் மாற்றம் பெற்றது.

பிற்பாண்டியர் கல்வெட்டுகளில் மண்டலப் பெயர் மறைந்து இராஜேந்திர வளநாடு, கேரளசிங்க வளநாடாகப் பெயர் மாற்றம் பெறுவதைப் பார்க்கிறோம். இவ்வளநாட்டினுள் அடங்கிய அதலையூர் நாட்டுத் தேனாற்றுப் போக்கிலிருந்த ஊராகக் கல்வெட்டுகளில் குன்றக்குடி நிலைபேறடைகிறது. பிற்பாண்டி யர் கல்வெட்டுகளில் சில, நியமப் பற்றிலிருந்த ஊராகக் குன்றக் குடியைக் குறிக்கின்றன. முதலாம் குலோத்துங்கரின் இருபத் திரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் மட்டும் குன்றக்குடி யான தென்புகலூர் என்று குன்றக்குடியின் மற்றொரு பெயர் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

குன்றக்குடிக் கல்வெட்டுகளில் குறிக்கப்படும் மற்றொரு வளநாடு திருவழுதி வளநாடாகும். முதலாம் இராஜேந்திரரின் காலத்தில் பாண்டிய மண்டலத்தில் இருந்த வளநாடுகளில் இதுவும் ஒன்று போலும். அதலையூர் நாடு, கல்வாயில் நாடு, நியமப்பற்று என்பன இக்கல்வெட்டுகளில் குறிக்கப்படும் நாட்டுப் பிரிவுகள். இவற்றின் கீழிருந்த ஊர்களுள் சிலவற்றின் பெயர்களைக் கல்வெட்டு வரிகளில் காணமுடிகின்றது.

இவற்றுள் பெரும்பான்மையானவை மங்கலம், குடி, ஊர், நல்லூர் என்னும் பின்னொட்டுகளைக் கொண்டுள்ளன. குடி யென்று முடியும் பெயர்களே அதிக அளவில் காணப்படுகின் றன. வயல் என்று முடியும் இரண்டு ஊர்களும் வாயில் அல்லது வாசல் என்று முடியும் இரண்டு ஊர்களும் உள்ளன. இவை தவிர செங்கணி, படைகாணி, மணியாத்திறல், ஆர்க்காடு, நியமம், முள்ளிக்குண்டு, கோனேரி, குறட்டி, நடுவக்கோட்டை, துழயூர் வல்லி, குலசேகரபுரம் என்னும் ஊர்களும் சுட்டப்படுகின்றன. இரண்டு ஊர்கள் இரண்டு பெயர்களுடன் இருந்துள்ளன. சாழியாகிய திருச்சமணமழகிய நல்லூர் மன்னர் பெயரற்ற கல்வெட்டிலும் இடைக்குடியான இரவிகுலமாணிக்க நல்லூர் முதலாம் குலோத்துங்கரின் கல்வெட்டிலும் இடம்பெறுகின்றன.

குன்றக்குடிக் கல்வெட்டுகள் அக்காலத்து அரசியல் அமைப் பையும் அலுவலர்களையும் ஓரளவுக்குப் படம்பிடித்துக் காட்டு

கின்றன. முதலாம் இராஜராஜரின் கல்வெட்டு அவரது பெருந்தரம் முகுந்தனூர் உடையார் காடன் ஸ்ரீயாரூர் தேவரை அறிமுகப் படுத்துகிறது. அரசின் உயர் அலுவலரான இவர் இந்நாளைய அரசுச் செயலர் போன்றவர் எனலாம். நாடுகள் நாட்டாரின் ஆளுகையில் இருந்தன. இவர்களுக்கென்று சில நிருவாகப் பொறுப்புகளும் கடமைகளும் வரையறுக்கப்பட்டிருந்தன.

அதலையூர், கல்வாயில் நாடுகளின் தலைமைப் பொறுப் பேற்றிருந்த பெரியவர்கள், 'நாடாள்வான்' என்ற சிறப்புப் பெயரால் குறிக்கப்பட்டுள்ளனர். ஏறத்தாழப் பதினொரு கல்வெட்டுகள் இவர்தம் பணிகளைப் பற்றிப் பேசுகின்றன.

முதலாம் இராஜேந்திர சோழரின் கல்வெட்டு, இராஜேந்திர சோழ அதலையூர் நாடாள்வாரை அறிமுகப்படுத்துவதுடன் நாடாள்வாரின் கிழ்ப் படையமைப்புகள் இருந்தமையையும் தெரிவிக்கிறது. முதலாம் குலோத்துங்கரின் நாற்பதாம், நாற்பத் தொன்பதாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் ஐநூற்றுவன் உய்ய வந்தானான அதலையூர் நாடாள்வார், நாட்டான் வீரசேகரனான விருதராஜ பயங்கர அதலையூர் நா_ாள்வார் ஆகியோரை அறிமுகப்படுத்த, ஸ்ரீவல்லபரின் கல்வெட்டுகள் அதலையூர் நாடாள்வார்கள் வெள்ளானை விடங்கன் அவை பஞ்சானனை யும் மும்முடிச் சோழன் வீரசேகரனையும் சுட்டுகின்றன.

விக்கிரம பாண்டியரின் ஆறாம் ஆட்சியாண்டுக் கல்வெட் டும் சோணாடு கொண்ட சுந்தரபாண்டியரின் எட்டாம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டும் மேலுமிரண்டு அதலையூர் நாடாள்வார் களின் பெயர்களைத் தருகின்றன. சோணாடு கொண்டருளிய சுந்தரபாண்டியரின் மூன்று கல்வெட்டுகள் கண்டன் ஆளுடை யானான கல்வாயில் நாடாள்வாரை வெளிக்கொணர்கின்றன.

இந்த நாடாள்வார்கள் நிலவரிகளில் செய்த சீரமைப்புகள், வரிவிலக்கங்கள், நாட்டார்க்கு இவற்றைத் தெரிவிக்க மேற் கொண்ட நடைமுறைகள் பற்றிச் சில கல்வெட்டுகள் விரிவான தகவல்களைத் தருகின்றன. இக்கல்வெட்டுகளால் பல ஊரவை அமைப்புகளைத் தெரிந்துகொள்ளமுடிகிறது. இவற்றுள் குன்றக் குடி ஊரவையும் ஒன்று. இந்த நிலவரிக் கல்வெட்டுகளில் நான்கு ஓலைச் செய்திகள் பேசப்படுகின்றன.

அதலையூர் நாட்டாருக்கு, அதலையூர் நாடாள்வாராலும் கல்வாயில் நாடாள்வாராலும் நிலவருவாய் குறித்து அனுப்பப்

பட்ட இரண்டு ஓலைகள் சோணாடு கொண்டருளிய சுந்தர பாண்டியரின் எட்டாம் ஆட்சியாண்டில் மாசித் திங்கள், இரண்டாம் நாளில் எழுதி அனுப்பப்பட்டவை. புழக்கத்தில் கொணரப்பட்ட புதிய அளவுகோலான குடிதாங்கியால் அதலை யூர் நாட்டு நிலங்களை அளந்து, அதற்கேற்ப நிலவரிவிதிப்பைச் சீரமைத்துக் கொள்ளுமாறு அதலையூர் நாட்டாருக்கு இவை அறிவுறுத்துகின்றன. இப்பகுதிகளில் நிலமளக்கப் பயன்பட்ட பழைய அளவுகோல் பதினெண் சாண் அளவுள்ளதாகவும் புதிதாய் அறிமுகப்படுத்தப்பட்ட கோல் இருபத்து நான்கு சாண் அளவுள்ளதாகவும் குறிக்கப்படுகின்றன.

'தங்கள் நாடு முன்பு பதினெண் சாண் கோலானது தவிர்ந்து, குடிதாங்கி இருபத்துநாற் சாண் கோலாக்கி வந்த குடிதாங்கி நிலம் ஒரு மாவுக்குப் பண்டாடி பழநடை புள்ளி பார்த்து கழிவு நீக்கிக் கொண்ட நிலம் பண்டாடி பழநடை ஒன்று முக்காலாக்கி வந்த நிலம், ஒருமாவுக்குக் கடமை காலாய் எழு கலனே இரு தூணியாய் வாசி ஏற்றி நாட்டவர் நாழிக் காலால் நெல் ஒன்பது கலனே இருகுறுணி நாநாழி உரியாக வந்தபடி இறுப்பதாக' எனும் கல்வெட்டு வரிகள் அந்நாளைய நிலஅளவை, வரிவிதிப்பு முறைகளை விளக்குவனவாகும். நியமத்துக் கண்டன் உதயஞ் செய்தானான காங்கேயரின் ஓலைகள் குன்றக்குடிக் கோயில் நிருவாகிகளுக்கு நிலவரி நீக்கம் பற்றிய செய்திகளைத் தருவன வாக அமைந்துள்ளன.

ஜீவிதம்

இங்குள்ள சில கல்வெட்டுகளில் குறிக்கப்படும் ஜீவிதம் என்ற சொல் வாழ்நாள் முழுவதும் அநுபவிக்கவல்ல நிலங் களையோ ஊர்களையோ சுட்டுவதாய் அமைந்துள்ளது. இராஜ ராஜ சோழரின் பெருந்தர அலுவலரான காடன் ஸ்ரீயாரூர் தேவருக்குத் தேனாற்றுப் போக்கில் ஜீவித நிலம் இருந்தது.

ஐநூற்றுவன் உய்யவந்தானான அதலையூர் நாடாள்வார் தேனாற்றுப் போக்கில் தமக்கு ஜீவிதமாய் அமைந்திருந்த சிறு வெட்டி வயல், மணியாத்திறல், செங்கணி, பலவாந்குடி, புரவுவரி நல்லூர், பாலைவாயில் போன்ற ஊர்களைப் பட்டியலிட்டுத் தருகிறார். வீரசேகரனான விருதராஜ பயங்கர நாடாள்வாரும் இது போலவே தேனாற்றுப் போக்கில் தமக்கு ஜீவிதமாக

அமைந்திருந்த குன்றக்குடி, வெழலூர், பாதிரிக்குடி, படைக்காணி, வேட்டங்குடி, சாழி, காஞ்சிரங்குடி, பாரீசுவரமங்கலம், மேற் கண்ணமங்கலம் எனும் ஊர்களை முதலாம் குலோத்துங்கரின் நாற்பதாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் சுட்டுகிறார்.

இங்குள்ள கல்வெட்டுகளில் காணப்படும் வரியினங்களின் பெயர்கள் பொதுவாகத் தமிழகத்தின் பல பகுதிகளிலும் அவ்வக் கல்வெட்டுகளின் காலத்தே வழங்கி வந்தவையாகவே உள்ளன. கடமை, குடிமை, அந்தராயம், வேலி அரிசி, புழுகு, பீலி, வெட்டி, முட்டாவாள், நாடென்ற அச்சுவரி, சில்வரி, பெருவரி, எச்சோறு, கூற்றரிசி, வினியோகம் எனப்படும் இவ்வரிகளுள் பெரும் பான்மையன நிலவரிகளாக அமைந்தன.

வேளாண்மை

நிலங்கள் முறையாக அளக்கப்பட்டு, விளைவுக்கேற்ப் வரியளவு தீர்மானிக்கப்பட்டது. நெல், கரும்பு, மஞ்சள், கருணை, தினை, வரகு, எள் முதலிய பயிர்கள் பயிரிடப்பட்டன. நிலங்கள் துடவை, செய், வயல் என்று பொதுப் பெயர்களால் குறிப்பிடப் பட்டன. பண்படுத்தப்பட்ட நிலம் வயக்கல் எனப்பட்டது. பல நிலங்கள் தனிப்படவும் பெயர் பெற்றிருந்தன.

உமைநங்கை வயக்கல், சேத்ரபால வயக்கல், சுப்பிரமணிய வயக்கல், கணபதி வயக்கல் என்று தெய்வங்களின் பெயர்களி லும் திருவாரூர் வயக்கல், பாளூர் வயக்கல், துழயூர்வல்லி, இருள் நீக்கி வயக்கல் என்று ஊர்களின் பெயர்களிலும் கரந்தை வயக்கல், காஞ்சிரந் துடவை, இலுப்பைத் துடவல், இலந்தைச் செய், விளாந் துடவை என்று தாவரங்களின் பெயர்களிலும் கந்தன் வயக்கல், வடுகன் வயக்கல், பொன்னன் வயக்கல், ஆச்சன் வயக்கல், தேவன் வயக்கல், திருமலை வயக்கல், நங்கை வயக்கல், அவதாமணி வயக்கல் என்று மக்கள் பெயர்களிலும் குசக்குழி, தச்சன் வயக்கல் என்று தொழிலர் பெயர்களிலும் இவை அழைக்கப்பட்டன.

ஒரு நிலப்பகுதி தமிழன் வயக்கல் என்று பெயரிடப் பட்டிருந்தது. தேனாற்றுநாதர் திருமுன் உள்மண்டபச் சுவரில் காணப்படும் சுந்தரபாண்டியரின் கல்வெட்டு பல நிலங்களின் பெயர்களையும் அவற்றின் உரிமையாளர்களின் பெயர்களையும் வரிசைப்படுத்துகின்றது.

இவ்விளைநிலங்கள் கிணறு, குளம், ஊருணி போன்றவற்றி லிருந்து வாய்க்கால்கள் வழி நீரைப் பெற்றன. பூங்குடிக் குளம், கூன் குளம் என நீர்நிலைகள் பெயரிடப்பட்டிருந்தாற் போல் வாய்க்கால்களுள் ஒன்று, 'தேனாற்று நாயகன் கால்' என அழைக் கப்பெற்றது. முதல் குடைவரை முகப்புத்தூண் சதுரத்தில் இருக்கும் பிலவங்க ஆண்டுக் கல்வெட்டுத் திருப்பாலைவாசல் முதலியாருக்குத் தேனாற்றுப்போக்கு நியமப்பற்றைச் சேர்ந்த திருச்சமணமழகியநல்லூர் ஊரவையார் புதிய நீரோடு கால் ஒன்றை விற்ற செய்தியைத் தருகிறது. கல்வெட்டு இதற்கான ஆவணத்தை, 'மறுகால் விலைப் பிரமாணம்' என்று பெயரிடுகிறது.[53]

சாழிக் குளத்தில் தண்ணீர் ஓரிடத்திலும் விடாமல், பிள்ளைத் தொல்லியில் கீழ்த்தரையில் முறித்து, கோயாடுதுறை மட்டும் வெட்டிப் பூங்குடிக் குளத்துக்குப் பாயுமாறு உருவாக்கப் பட்டு விற்கப்பட்ட இம்மறுகால் பற்றிய கல்வெட்டு அரியதொரு வரலாற்று ஆவணமாகும். தனியர்களுக்குள் நிகழ்ந்த நிலவிற்பனை ஒன்றைச் சோணாடு கொண்டருளிய சுந்தரபாண்டியரின் பதினெட்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு விளக்குகிறது.

கோயிற் செய்திகள்

குன்றக்குடித் திருமலை வளாகத்தில் உள்ள திருக்கோயில் களைத் தேவகன்மிகள், ஸ்ரீகாரியம் செய்வார், ஸ்ரீமாகேசுவர கண்காணி செய்வார், ஸ்ரீருத்ரமாகேசுவரர், அகநாழிகையார், கோயில் கணக்கு எனப் பல அலுவலர்கள் நிருவகித்து வந்தனர். பிற்காலத்தில் இப்பொறுப்புகளில் இருந்தவர்கள் தானத்தார், தலத்தார் என்ற பொதுப் பெயரால் அழைக்கப்பட்டனர்.

பொதுவாகத் திருக்கோயில்களில் காணப்படும் கல்வெட்டு களில் பெரும்பான்மையன விளக்குக் கொடைகளைப் பேசுவன வாகவே அமையும். ஆனால், குன்றக்குடியிலுள்ள ஐம்பது கல்வெட்டுகளில் மூன்று கல்வெட்டுகளே விளக்குக் கொடைச் செய்திகளைத் தருகின்றன.

முதலாம் இராஜேந்திரரின் ஆட்சிக்காலத்தில் இராஜேந்திர சோழ அதலையூர் நாடாள்வாரின் கூலிச் சேவகர் ஸ்ரீகுருகூர் வெள்ளாளன் உலகநாதனான துட்டடக்கிப் பேரரையர் இந்தக் கோயிலில் சந்தி விளக்கொன்று ஏற்ற ஒரு காசு கொடை

யளித்தார். இது கொண்டு திங்கள்தோறும் ஒரு நாழி நெய் செலவிட்டு நாள்தோறும் ஒரு சந்தியில் விளக்கேற்றக் கோயில் அகநாழிகையார் ஒப்புக்கொண்டனர்.

குன்றக்குடியைச் சேர்ந்த நாட்டான் அடவி என்பார் இக்கோயில் வளாகத்தில் சந்தி விளக்கொன்று ஏற்றத் திருவிளக்குத் துடவை நிலமென்று பெயரிடப்பட்ட நிலப்பகுதியை நீர்வார்த்துக் கொடுத்தார். தேனாற்றுநாதர் திருமுன்னிலுள்ள சிதைந்த கல்வெட்டு விளக்கெரிக்கத் தரப்பட்ட இறையிலி நிலக் கொடையைச் சுட்டுகிறது.

பல கல்வெட்டுகள் இறைக்கோயிலுக்குரிய தேவதான நிலங்களை இறையிலியாக்கியமை குறித்துப் பேசுகின்றன. விக்கிரம பாண்டியரின் ஆறாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் இரண்டு வீரசேகரன் ஆளுடையானான அதலையூர் நாடாள்வாரும் உய்ய வந்தான் கண்டனான காங்கேயன் தியாக மீகாமனும் குன்றக்குடி, மணியாத்திறலில் இருந்த தேவதான நிலங்களிலிருந்து தமக்கு வந்த வரிகளை நீக்கி, அவற்றின் வருவாய் கொண்டு இரண்டு குடைவரைகளிலுள்ள தெய்வங்களுக்குத் திருஅமுது படைக்க வகை செய்தனர் என்ற தகவலைத் தருகின்றன. இந்தக் கல்வெட்டுகளால் விலக்கப்பட்ட வரியினங்கள், பல்வேறு நிலங்களின் பெயர்கள், அவையிருந்த இடங்கள் தெரியவருகின்றன.

முதலாம் குலோத்துங்கரின் நாற்பதாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் இரண்டு ஐநூற்றுவன் உய்யவந்தானான அதலையூர் நாடாள்வாரும் நாட்டான் வீரசேகரனான விருதராஜ பயங்கர அதலையூர் நாடாள்வாரும் தமக்கு ஜீவிதமான ஊர்களில் இருந்த தேவதான நிலங்களை இறையிலியாக்கித் திருக்குன்றக்குடித் திருமலையுடைய மகாதேவருக்கு வழங்கியதைச் சொல்கின்றன. அதே மன்னரின் நாற்பத்தொன்பதாம் ஆட்சியாண்டில் திருக்குன்றக்குடித் திருமலையுடைய நாயனார் திருப்பலிச் சடங்கிற்கு எழுந்தருளும்போது அமுதுண்டு எழுந்தருளுவதற்கு வாய்ப்பாக நாட்டான் வீரசேகரனான அதலையூர் நாடாள்வார் கிழ்க்கண்ணமங்கலத்தில் இருந்து தாம் பெற்ற வரியினங்களை நீர்வார்த்துக் கொடையளித்தார்.

மேற்கண்ணமங்கலத்தில் இருந்த நிலங்கள் அதலையூர் நாடாள்வார்களான வெள்ளானை விடங்கள் அவைப் பஞ்சான

னுக்கும் மும்முடிசோழன் வீரசேகரனுக்கும் சரிபாதி உரிமை உடையனவாக இருந்தன. சடையவர்மர் ஸ்ரீவல்லபரின் நான்காம் ஆட்சியாண்டில் இவ்விரு பெருமக்களும் தத்தமக்கு உரிமை உடைய நிலப்பகுதிகளின் வரியினங்களைத் திருக்குன்றக்குடித் திருமலை மூலஸ்தானம் உடைய நாயனாருக்குக் கொடையாகத் தந்தனர்.

சில கல்வெட்டுகள், வரி தவிர்த்துத் தனியர்க்கு நிலங்கள் விற்கப்பட்டதையும் அப்படித் தவிர்க்கப்பட்ட வரிகளுக்கு மாற்றாக அந்நிலங்களை வாங்கியவர்கள், விளைவுக்கேற்ப குறிப் பிட்ட அளவு விளைபொருட்களையோ அல்லது தொகையையோ தேனாற்று நாயகர் கோயிலுக்குத் தரவேண்டுமென்று விதி செய்து ஒப்பந்தங்கள் அமைக்கப்பட்டதையும் தெரிவிக்கின்றன.

தேனாற்று நாயகருக்குரிய வழிபாடு, படையல்களுக்காய்ச் சில பெருமக்கள் நிலங்களை விலைக்கு வாங்கி இறையிலியாகக் கோயிலுக்குக் கொடையளித்துள்ளனர். நியமத்தைச் சேர்ந்த சூரியன் கண்டனான பஞ்சவராயன், சோணாடு வழங்கியருளிய சுந்தரபாண்டியரின் மூன்றாம் ஆட்சியாண்டில் விலைக்கு வாங்கிக் கொடையளித்த நிலப்பகுதியின் வரி மதிப்பீடு கண்டன் உதயஞ் செய்தானான காங்கேயரால் குறைக்கப்பட்டது.

முதலாம் இராஜராஜரின் பெருந்தரத்து அலுவலர் அளித்த நிலக்கொடை குன்றக்குடி இறைவனின் உச்சம்போது திருவமு திற்காய் அமைந்தது. சோணாடு கொண்டருளிய சுந்தரபாண்டி யரின் பதினெட்டாம் ஆட்சியாண்டில் பல பெருமக்கள் ஒன்றி ணைந்து தேனாற்று நாயகருக்குக் காராண்கிழமையாகப் பதினேழு மா நிலத்தை நீர்வார்த்துக் கொடுத்தனர். படையல்களுக்கும் வழிபாட்டிற்கும் கொடையளித்தாற் போலவே இக்கோயில் இறைவனுக்கு விழா எடுப்பதற்கும் கொடையளிக்கப்பட்டது.

குன்றக்குடி ஊரவையால் திருமலையுடைய மகாதேவருக்கு விழா எடுப்பதற்காகத் தரப்பட்ட இந்நிலக்கொடை விழாப் புறமாகப் பதியப்பட்டது. நாராயணன் கேசவனான தேவன் தேனாற்று வேளார் குன்றக்குடித் திருமலையுடைய மகாதேவ ருக்கு ஆயனத்துக்குக் கலசமாடியருள உமைநங்கை வயக்கலை நீர்வார்த்துக் கொடுத்தார். தேனாற்று நாயகருக்குரிய திருநந்த வனத்து அவிச்சுனையின் கீழ்க்கரையும் தென்கரையும் அமைக்கக்

குன்றக்குடிக் கட்டி அரசன் நிலக்கொடை தந்ததை ஸ்ரீவல்லப ரின் எட்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டால் அறிகிறோம்.

நடுக் குடைவரையில் இன்றும் காணப்படும் சேத்ரபாலர் திருமேனி பற்றி நேரடியாகப் பேசும் கல்வெட்டுகள் இரண்டு இங்குள்ளன. சோணாடு வழங்கியருளிய சுந்தரபாண்டியரின் எட்டாம் ஆட்சியாண்டு வைகாசித் திங்களில் வெட்டப்பட் டுள்ள இவ்விரண்டனுள் ஒன்று, தேனாற்று நாயகர் கோயிலில் சேத்ரபாலர் திருமேனியை எழுந்தருளுவித்தவராகச் சாக்களூர் பொற்பதி பிரியனான செழிய சிங்கபன்மனை அறிமுகப்படுத்துவ துடன், சேத்ரபாலரின் நித்த நிவந்தங்களுக்கான செலவினங் களுக்காகச் சில குறிப்பிட்ட நிலங்களின் இறையை நியமத்துக் கண்டன் ஆளுடையானான கல்வாயில் நாடாள்வார் நீர் வார்த்துத் தந்ததையும் கூறுகிறது.

இக்கல்வெட்டின் கீழ் இதன் தொடர்ச்சி போலக் காணப் படும் மற்றொரு கல்வெட்டு, சேத்ரபாலருக்கு அளிக்கப்பட்ட தேவதான நிலம் பற்றித் தெரிவிக்கிறது. மற்றொரு கல்வெட்டும் இது போலவே சேத்ரபாலப் பிள்ளையாரின் நித்த நிவந்தங் களுக்காகச் சில குறிப்பிட்ட நிலங்களின் வரிகளை அதலையூர் நாடாள்வார் உய்யவந்தான் வென்று முடிசூடினான் நீர்வார்த்துத் தந்த தகவலைத் தருகிறது.

தேனாற்று நாயகர் கோயிலில் இருந்த ஆளுடைய பிள்ளை யாருக்கு நியமத்துக் கண்டன் அமுதகண்டன் என்பார் சில குறிப்பிட்ட நிலங்களின் வரிகளைக் கொடையாக அளித்ததைக் குறிக்கும் கல்வெட்டுப் பெரிதும் சிதைந்துள்ளது. ஆளுடைய பிள்ளையார் என்ற பெயர் பொதுவாக ஞானசம்பந்தரைக் குறிப்பதாகும். இக்கல்வெட்டில் இப்பெயர் யாரைக் குறிக்கப் பயன்பட்டதென்பதை அறியக்கூடவில்லை. குன்றக்குடியி லிருந்த காளையூர் தாலன் திருமடத்திற்கு நியமப்பற்று நாட்டவர் இறையிலி செய்த நிலத்தைக் குடிநீங்காக் காணியாக மடப்புற மாக்கித் தந்ததைக் கூறும் கல்வெட்டும், 'பிள்ளையார்க்கு' என்ற சொல்லைக் கொண்டுள்ளது. இக்கல்வெட்டுக் குறிக்கும் பிள்ளையார் யாரென்பதும் தெரியவில்லை.

தரிசாய்க் கிடந்த தேவதான நிலத்தை வளப்படுத்தித் தம்பிக்கு நல்ல ஆவுடையானான எண்டிசை மீகாமப் பல்லவ

ராயருக்குக் குடிநீங்காத் தேவதானமாக உழும் உரிமை தந்து, நிலங்களின் தன்மை, விளைவுக்கேற்ப அவர் கோயிலுக்குத் தரவேண்டிய விளைபொருட்களின் அளவையும் குறிப்பிட்டுத் தேனாற்று நாயகர் கோயில் ஸ்ரீருத்ர ஸ்ரீமாகேசுவர ஸ்ரீகார்யம் செய்வார் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தமொன்றைச் சடைய வர்மர் ஸ்ரீவல்லபரின் முப்பத்திரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டின் வழி அறிகிறோம். இந்த ஒப்பந்தம் கல்வெட்டில், 'பிடிபாடு' என்றழைக்கப்படுகிறது. இந்தப் பிடிபாட்டை எழுதியவராக குலசேகர பட்டன் குறிக்கப்படுகிறார்.

கி. பி. 1559 தைத்திங்கள் இருபத்தோராம் நாள் வெட்டப் பட்டுள்ள கல்வெட்டொன்று, இக்கோயில் பெருமண்டபத் திருப்பணி பற்றிப் பேசுகிறது.[54] இராகுத்தமிண்டன், சூரைக்குடி யரசு என்ற சிறப்புப் பெயர்களுடன் விசையாலைய தேவர் குறிக்கப்படுகிறார். கல்வெட்டுச் சிதைவால் முழுச் செய்தியையும் அறியக்கூடவில்லை.

முருகன் கோயிலைப்பற்றி மூன்று கல்வெட்டுகள் பேசுகின் றன. இவற்றுள் ஒன்று இக்கோயில் இளைய நாயனாரின் பல்வேறுபட்ட படையல்களுக்காகச் சொக்க நாராயணனான விசையாலையர், இறையிலி நிலமொன்றைப் பழந் தேவதான நிலமொன்றிற்கு மாற்றாகக் கொடுத்ததைக் கூறுகிறது. சடைய வர்மர் வீரபாண்டியரின் இருபதாம் ஆட்சியாண்டில் வெட்டப் பட்டுள்ள இக்கல்வெட்டே இக்கோயில் பற்றிப் பேசும் காலத்தால் முற்பட்ட கல்வெட்டாகும்.[55]

கி. பி. 1484, 1515இல் வெட்டப்பட்டுள்ள இரணவீரப் பெருமாள் காங்கேயரின் இரண்டு கல்வெட்டுகளுள் முதலாவது, பெரும்பற்றப்புலியூர் மேற்குத் தெருவிலுள்ள திருவெல்லைக் காவலன் திருமடத்து வசிக்கும் பிக்ஷா மடத்துச் சந்தானம் திருப்புனவாசல் முதலியாருக்குப் புதுவூர், ஆனைமங்கலம் எனும் ஊர்களைக் காங்கேயர் இறையிலிக் கொடையாக வழங்கி யதைச் சொல்கிறது. கல்வெட்டில் முதலியார் காங்கேயரின் குரு வாகச் சுட்டப்படுகிறார். இரண்டாம் கல்வெட்டுத் திருப்பள்ளி எழுச்சியின்போது இளைய நாயனாருக்கு வழங்கப்படும் பல்வேறு படையல்களுக்காக இரவிகுலமாணிக்க நல்லூரான தயன்குடி வயலில் நிலமளித்ததைக் கூறுகிறது.

தேனாற்றுநாதர் திருமுன்னிலுள்ள மாறவர்மர் சுந்தர பாண்டியரின் மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுப் பெரிய கோட்டையில் ஏற்பட்ட கலகமொன்றில் உயிர் துறந்த நாகதேவ னான பகைச்சவர் காலப் பல்லப் பல்லவதரையன் நினைவாகப் புவனகங்கன் என்பார் இக்கோயில் வளாகத்தில் எழுந்தருளச் செய்த சுப்பிரமணியப் பிள்ளையாரின் பல்வேறு படையல் களுக்காக இவ்இறைவனுக்குரிய காராண்கிழமை நிலம் ஒருமா விற்கான வரிகளை விலக்கி அவற்றைப் பயன்படுத்திக்கொள்ளு மாறு தானத்தாருக்குக் கண்டன் உதயஞ் செய்தானானா காங்கேயர் அறிவுறுத்தியுள்ள தகவலைத் தருகிறது.

ஆங்கிரச ஆண்டு ஆனித்திங்கள் ஒன்பதாம் நாள் வெட்டப் பட்டுள்ள கல்வெட்டுக் கேரளசிங்க வளநாட்டுக் கண்டு கொண்ட மாணிக்க நாட்டாருக்குக் குன்றக்குடிக் கோயில் சுப்பிரமணியசாமி காரியத்துத் தானத்தாரும் தலத்தாரும் தங்கள் ஊரான நடுவக் கோட்டையை இறைவனுக்குத் தந்தபடியால், பஞ்ச காலத்தில் நடக்கும் திருப்பணிகளுக்குக் குடிக்கு ஒரு பணம் அளிப்பதாக உறுதியளித்த தகவலைத் தருகிறது.

முதலிரண்டு குடைவரைப் பகுதிகளிலிருந்து புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் நான்கு கல்வெட்டுகளுள் ஓரள வுக்கு முழுமையாகக் கிடைத்திருக்கும் கல்வெட்டுகள் மூன்று. இவற்றுள் ஒன்று ஸ்ரீவல்லபதேவரின் பத்தாம் ஆட்சியாண்டில் வெட்டப்பட்டுள்ளது. ஐநூற்றுவன் உய்யவந்தானான காங்கேயர் திருக்குன்றக்குடித் திருமலையுடைய மகாதேவருக்கு அளித்த நிலக்கொடையைப் பற்றிப் பேசும் இந்த ஆவணம் சோழன் தமிழனால் கையழுத்திடப்பட்டுள்ளது.

மற்றொரு கல்வெட்டு சோணாடு கொண்டருளிய சுந்தர பாண்டிய தேவரின் பதினெட்டாம் ஆட்சியாண்டில் நிகழ்ந்த நிலவிற்பனையைப் பதிவுசெய்துள்ளது. நியமத்தில் தம் தாணிப் பற்றில் சிலவற்றை மலைமண்டலத்து இடைக்கொட்டு அய்யப்ப காமனுக்கு கண்டன் உதயஞ் செய்தானான காங்கேயர் விற்ற நில விலை ஆவணமாய்த் திகழும் இக்கல்வெட்டின் பிற்பகுதி சிதைந் துள்ளதால் இதன் முழுச் செய்தியையும் அறியக்கூடவில்லை.

மூன்றாம் கல்வெட்டு இரண்டாம் குடைவரையிலுள்ள முகப்பு முழுத் தூண்களின் போதிகைகளில் வெட்டப்பட்டுள்

ளது. இதன் ஒரு பகுதியைத்தான் தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி இருபத்தாறில் முப்பத்தேழாம் கல்வெட்டின் பிற்பகுதி யாகத் தவறுதலாகச் சேர்த்திருக்கிறார்கள். இக்கல்வெட்டின் தொடக்க வரிகளின் நடுப்பகுதி சேத்ரபாலருக்காக எடுக்கப் பட்டிருக்கும் சுவரில் சிக்கியுள்ளதாலும் கல்வெட்டுச் சிதைந் துள்ளதாலும் முழுச் செய்தியையும் அறியமுடியவில்லை. எனி னும் சோணாடு வழங்கியருளிய சுந்தரபாண்டியரின் காலத்தில் சேத்ரபால பிள்ளையாருக்குத் திருவமுதிற்காகக் கண்டன் ஆளுடையானான கல்வாயில் நாடாள்வார் குறிப்பிட்ட அளவு நெல்லை முதலாக அளித்த தகவலைப் பெறமுடிகிறது.

முதல் கல்வெட்டின் தொடர்ச்சியாக அதே சுவரின் கீழ்ப் பகுதியில் மிகவும் சிதைந்த நிலையில் காணப்படும் நான்காம் கல்வெட்டு, சிங்கன் சூற்றி மூன்று மா நிலத்தைத் திருக்கோயி லுக்கு நீர்வார்த்துத் தந்த தகவலைத் தருகிறது. முருகன் கோயிலில் கண்டறியப்பட்ட ஐந்தாம் கல்வெட்டு உருவச்சிற்பம் ஒன்றின் பெயரைத் தருகிறது.

குடைவரைகளின் காலம்

இங்குள்ள மூன்று குடைவரைகளும் ஏறத்தாழச் சமகாலத் தில் எடுக்கப்பட்டவையாகவே தோன்றுகின்றன. இரண்டாம் குடைவரையில் காணப்படும் வட்டெழுத்துக் கல்வெட்டின் எழுத்தமைதி, இக்குடைவரைகளின் அமைப்புமுறை, இங்குள்ள சிற்பங்களின் கலை அமைதி ஆகிய மூன்றும் இக்குடைவரை களின் காலத்தை ஏறத்தாழக் கி. பி. எட்டாம் நூற்றாண்டில் இருத்துகின்றன.

பதிப்பும் இருப்பும்

குடைவரைகளைப் பற்றிய கட்டுரையாக இருந்தபோதும் முழுமை கருதி இவ்வளாகத்திலிருந்து அனைத்துக் கல்வெட்டு களுமே களஆய்வுகளின்போது படித்தாயப்பட்டன. அது போழ்து தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி 26ல் பதிப்பிக்கப் பட்டிருக்கும் இவ்வூர்க் கல்வெட்டுப் பாடங்களின் தகவல்களில் உள்ள சில முரண்பாடுகளை அறியமுடிந்தது. எழுத்துக்கள், சொற்கள் என்றில்லாமல் பதிப்பிக்கப்பட்டிருக்கும் கல்வெட்டுப் பாடங்களின் வரித் தொடக்கங்கள், முடிவுகள்கூட மாறியிருப்பது

கண்டறியப்பட்டது. சில கல்வெட்டுகள் காணப்படும் இடங்கள் மாற்றித் தரப்பட்டுள்ளன. சில கல்வெட்டுகளில் படிக்கும் நிலையிலுள்ள வரிகள்கூடத் தொகுதியில் வெளியிடப்பட்டிருக்கும் பாடங்களில் புள்ளிகளால் நிரப்பப்பட்டுள்ளன.[56]

இரண்டு வெவ்வேறு கல்வெட்டுகளை, அவை தொடர்பின்றி இருந்தபோதும், ஒரே கல்வெட்டாக்கி வெளியிட்டிருக்கும் நிலையும் இரண்டு கல்வெட்டுகளின் தொடர்ச்சிகள் விடுபட்டு அரைகுறையாகவே அவை வெளியிடப்பட்டிருக்கும் நிலையும் ஆய்வின்போது தெரியவந்தன.[57]

குறிப்புகள்

1. களப்பணிகள் நிகழ்ந்த ஆண்டு 1994. மீளாய்வுகள் - 2004, 2006. ஆய்விற்காகச் சென்றபோதெல்லாம் வேண்டுவன செய்து உதவிய வணக்கத்திற்குரிய தமிழ் மாமுனிவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார், வணக்கத்திற்குரிய தவத்திரு பொன்னம்பல அடிகளார், திரு. மரு. பரமகுரு, திருமடத்து அலுவலர்கள், இந்தியத் தொல்லியல்துறையின் குடைவரைக் காப்பாளர் திரு. நா. பாலகுமாரன் இவர்களுக்கும் ஆய்வில் துணைநின்ற முனைவர் அர. அகிலா, இரா. சுஜாதா, திருமதி வாணி செங்குட்டுவன் இவர்களுக்கும் நூலாசிரியர்களின் நன்றி உரியது.
2. கோ. வேணிதேவி, இரா. கலைக்கோவன், குன்னத்தூர்க் குடைவரைகள், வரலாறு 6, டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம், திருச்சிராப்பள்ளி, 1996, ப. 67.
3. SII 26 : 43; ARE 1954 - 55 : 407, 409.
4. இத்திருமேனி பைரவராகும். என்றாலும் இங்குள்ள கல்வெட்டு இத்திருமேனியை, 'சேத்ரபாலர்' என்றே குறிப்பதால் கட்டுரையிலும் இத்திருமேனி அதே பெயரால் குறிக்கப்படுகிறது. கல்வெட்டுகளால் குறிக்கப்படும் சோழர் கால சேத்ரபாலர் திருமேனிகளுக்கு நாய் வாகனம் காட்டப்படவில்லை. நாய் வாகனம் பெற்றுள்ள சிற்பங்கள் பிற வகையில் சேத்ரபாலரை ஒத்திருந்தாலும் வாகனம் காட்டப்பட்டிருப்பதால், அவ்வேறுபாடு கருதி அவை பைரவரைக் குறிப்பதாகவே கொள்ளப்படும். காண்க: மு. நளினி, இரா. கலைக்கோவன், வலஞ்சுழி வாணர், டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம், திருச்சிராப்பள்ளி, 2005, பக். 163 - 168.

5. இது போன்ற அமைப்புக் கோளக்குடி, மலையக்கோயில், கோகர்ணம் குடைவரைகளில் காணப்படுகிறது.
6. 'Feet not meeting each other' என்கிறார் கே. வி. சௌந்தர ராஜன். Rock-cut Temple Styles, Somaiyya Publications Pvt. Ltd., Mumbai, 1998, p. 79.
7. இதைப் பாசமென்கிறார் தி. இராசமாணிக்கம். தமிழகக் குடைவரைக் கோயில்கள், கழகம், சென்னை, 1984, ப. 22.
8. 'Low karanda makuta' என்கிறார் கே. வி. சௌந்தரராஜன். மு. கு. நூல், ப. 79.
9. தி. இராசமாணிக்கம் பக்கத்தூண்களும் சதுரம், கட்டு, சதுரம் எனும் அமைப்பில் இருப்பதாகக் கூறியுள்ளார். மு. கு. நூல், ப.19.
10. ARE 1954 - 55 : 411.
11. SII 14 : 208.
12. இக்குடைவரையில் வாயிற்காவலர் சிற்பங்கள் இருப்பதாகக் கூறுகிறார் கே. வி. சௌந்தரராஜன். மு. கு. நூல், ப. 79.
13. ARE 1935 - 36 : 160, 1954 - 55 : 405.
14. இக்காவலர்கள் கே. வி. சௌந்தரராஜன் நூலில் இடம்பெற வில்லை.
15. பல்லவர் பகுதிக் குடைவரைகளில் முதல் மகேந்திரர் காலத் திலிருந்தே காட்சிதரத் தொடங்கும் மழுவடியார்களைப் பாண்டியர் குடைவரைகளில் காணக்கூடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவரே பாண்டியர் பகுதியின் முதல் மழுவடியார் எனலாம்.
16. கடியவலம்பிதத்தில் இருக்கிறதென்கிறார் தி. இராசமாணிக் கம். மு. கு. நூல், ப. 22.
17. இவற்றைக் காவலர் தலையில் முளைத்துள்ள கொம்புகளாகக் காண்கிறார் தி. இராசமாணிக்கம். மு. கு. நூல், ப. 22.
18. அபயம் போல் இருக்கிறதென்கிறார் கே. வி. சௌந்தரராஜன். மு. கு. நூல், ப. 80.
19. கடிமுத்திரையில் இருக்கிறதென்கிறார் கே. வி. சௌந்தர ராஜன். மு. கு. நூல், ப. 79.
20. இதை சுவர்ணவைகாக்ஷமாகவும் கொள்ளலாம்.
21. பக்கத்தூண்களும் சதுரம், கட்டு, சதுரம் எனும் அமைப்பில் உள்ளன என்கிறார் தி. இராசமாணிக்கம். மு. கு. நூல், ப. 19.

22. இவ்வாயிலின் இருபுறத்தும் பக்கத்திற்கொன்றாக இரண்டு வாயிற்காவலர் சிற்பங்கள் இருப்பதாகக் குறித்துள்ளார் தி.இராசமாணிக்கம். மு. கு. நூல், ப. 19.
23. கடிமுத்திரை என்கிறார் கே. வி. சௌந்தரராஜன். மு. கு. நூல், ப. 80.
24. கடிமுத்திரை என்கிறார் கே. வி. சௌந்தரராஜன். மு. கு. நூல், ப. 80.
25. 'Cusped horns' என்கிறார் கே. வி. சௌந்தரராஜன். மு. கு. நூல், ப. 80.
26. வஜ்ரம் என்கின்றனர் கே. வி. சௌந்தரராஜனும் மா. சந்திர மூர்த்தியும். மு. கு. நூல், ப. 80; தமிழ்நாட்டு வரலாறு, பல்லவர்-பாண்டியர் காலம் இரண்டாம் பகுதி, 'பாண்டியர் சிற்பக் கலை', தமிழ்நாடு அரசு வெளியீடு, 1997, ப. 393.
27. சக்தி என்கிறார் கே. வி. சௌந்தரராஜன். மு. கு. நூல், ப. 80; வேல் போன்ற அமைப்புடைய சக்திப்படை என்கிறார் மா. சந்திரமூர்த்தி, மு. கு. நூல், ப. 394.
28. இரண்டு கைகளும் நெகிழ்கைகளாக உள்ளன என்கின்றார் கே. வி. சௌந்தரராஜன். மு. கு. நூல், ப. 80; மா. சந்திரமூர்த்தி வலக்கை நீண்டு வரதமுத்திரையில் உள்ளதென்கிறார். மு. கு. நூல், ப. 394.
29. கடிமுத்திரையில் இருப்பதாகக் குறிப்பிடுகிறார் கே.வி.சௌந்தர ராஜன். மு. கு. நூல், ப. 80.
30. கே.வி.சௌந்தரராஜன், இப்பிள்ளையாருக்கு நான்கு கைகள் இருப்பதாகவும் பின்கைகள் பரசு, பாசம் கொண்டிருப் பதாகவும் எழுதியுள்ளார் மு. கு. நூல், ப. 80. ஆனால், இப்பிள்ளையார் இரண்டு கைகளே கொண்டுள்ளார்.
31. இச்சிற்பத்தொகுதி கே. வி. சௌந்தரராஜன் நூலில் இடம் பெறவில்லை.
32. இக்கைகளைப் பற்றி எழுதும்போது வலமுன்கையை இறை வன் இடுப்பில் ஊன்றியிருப்பதாகவும் இடமுன்கையைக் கடியவலம்பிதமாகக் கொண்டிருப்பதாகவும் தவறாகக் குறிப்பிட்டுள்ளார் தி. இராசமாணிக்கம். மு. கு. நூல், ப. 21.
33. கடிமுத்திரை என்கிறார் கே. வி. சௌந்தரராஜன். மு. கு. நூல், ப. 80.

34. கரண்டி என்கிறார் கே. வி. சௌந்தரராஜன். மு. கு. நூல், ப. 80. இந்த அக்கமாலை சுதையால் ஆனது. இது உடைந்திருப்பதால் அகற்றிப் பார்க்கமுடிந்தது. கீழே கருங்கல் திருப்பணியாகக் கருவியேதும் காணப்படவில்லை. சுதைப்பூச்சு முற்றிலுமாய் அகற்றப்பட்டால்தான் உண்மையான கருவி வெளிப்படும்.

35. அம்பு என்கிறார் கே. வி. சௌந்தரராஜன். மு. கு. நூல், ப. 80; ஒரு கையில் அனல் உள்ளதென்கிறார் மா. சந்திரமூர்த்தி, மு. கு. நூல், ப. 393.

36. இந்தக் கை ஆஹுதி முத்திரையில் உள்ளது என்கிறார் கே.வி.சௌந்தரராஜன். மு. கு. நூல், ப. 80.

37. உடுக்கை என்கின்றனர் தி. இராசமாணிக்கமும் மா. சந்திர மூர்த்தியும். மு. கு. நூல்கள், ப. 21; ப. 393.

38. இச்சிற்பத்தை அம்மையப்பராகக் கண்டுள்ளார் சி.கோவிந்த ராசன். கல்வெட்டில் குன்றக்குடி, நன்னீராட்டு நறுமலர், மலர்க் குழு, குன்றக்குடி, 1979.

39. கடிமுத்திரையில் இருக்கிறதென்கிறார் கே. வி. சௌந்தர ராஜன். மு. கு. நூல், ப. 81.

40. இந்த ஆடல் வடிவத்தை சத்யோஜாதமூர்த்தி என்கிறார் கே.வி.சௌந்தரராஜன். மு. கு. நூல், ப. 81; சி. கோவிந்தராசன் லலிதமாக ஆடும் சிவன் என்கிறார். கல்வெட்டில் குன்றக்குடி, மு. கு. நூல்.

41. சூசி என்கிறார் தி. இராசமாணிக்கம். மு. கு. நூல், ப. 20.

42. சுத்தி என்கிறார் கே. வி. சௌந்தரராஜன். மு. கு. நூல், ப. 81; கட்வாங்கம் என்கிறார் தி. இராசமாணிக்கம். மு. கு. நூல், ப. 20.

43 கரிஅஸ்தம் என்று பிழையாக அடையாளப்படுத்தியுள்ளார் கே. வி. சௌந்தரராஜன். மு. கு. நூல், ப. 81.

44. கேடயம் என்கிறார் கே. வி. சௌந்தரராஜன். மு. கு. நூல், ப. 81.

45. குண்டலம் ஏதும் இல்லை என்கிறார் தி. இராசமாணிக்கம். மு. கு. நூல், ப. 20.

46. இவற்றுள் முதல் படுக்கையின் அடித்துடத்தில், 'ஸ்ரீஅரநாதர்' என்ற சமண முனிவரின் பெயர் பிராமி எழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ளது என்கிறார் சி.கோவிந்தராசன். கல்வெட்டில் குன்றக்குடி, மு. கு. நூல். அத்தகு பொறிப் பேதும் இங்குக் காணப்படவில்லை.

47. சி.கோவிந்தராசன் தாம் முப்பத்து மூன்று கல்வெட்டுகளைப் படியெடுத்ததாகக் குறிப்பிட்டுள்ளார். கல்வெட்டில் குன்றக் குடி, மு. கு. நூல்.

48. SII 26 : 24 - 45; ARE 1935 - 36 : 160 - 161; 1936 - 37 : 174; 1954 - 55 : 397 - 411; 1955 - 56 : 303 - 307.

49. பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளன.

50. I. Mahadevan, Early Tamil Epigraphy, Cre-A, Harvard Publication, Chennai, 2003. pp. 425 - 426.

51. 'மாசிலீசுவரம்' என்கின்றனர் சி. கோவிந்தர்ராசனும் மா. சந்திர மூர்த்தியும். மு. கு. நூல்கள்.

52. கி. பி. 1084ல் வெட்டப்பட்ட சடையவர்மர் ஸ்ரீவல்லபர் கல்வெட்டொன்று இவ்வளாகத்தில் இருப்பதாகச் சி.கோவிந்த ராசன் குறித்திருப்பது சரியன்று. கல்வெட்டில் குன்றக்குடி, மு. கு. நூல். அவர் குறிப்பிடும் காலகட்டத்தில் சடையவர்மர் ஸ்ரீவல்லபர் என்ற பெயருடைய மன்னர் எவரும் பாண்டிய நாட்டை ஆளவில்லை. என். சேதுராமன், பாண்டியர் வரலாறு, இராமன் அண்டு இராமன் கம்பெனி, கும்ப கோணம், 1989, பக். 2 - 23, 41, 47.

53. SII 26 : 29.

54. இத்திருப்பணி கி. பி. 1425ல் நடைபெற்றதாகச் சி. கோவிந்த ராசன் குறிப்பிட்டிருப்பது சரியன்று. கல்வெட்டில் குன்றக் குடி, மு. கு. நூல்.

55. சடையவர்மர் வீரபாண்டியன் என்ற பெயரில் பல மன்னர் கள் இருந்துள்ளமையால் முருகன் கோயில் இவர்களுள் எவர் காலத்தது என்பதை உறுதியாகக் கூறக்கூடவில்லை. கி. பி. 13 - 14ம் நூற்றாண்டில் இம்மலைக்கோயில் அமைந்த தாகக் கொள்வது பொருந்தும். சி. கோவிந்தராசன் சொல்வது போல் இக்கோயில் 1180ல் அமைந்ததன்று என்பதை இங்குள்ள வீரபாண்டியர் கல்வெட்டின் எழுத்தமைதி உறுதிப்படுத்துகிறது.

56. SII 26: 25 வரி 36 - 'கீழ்க் காவில்'; கல்வெட்டில் 'கீழ்க் காலில்' என்றுள்ளது; SII 26:26 வரி 10, 11 - 'காஞ்சிரந் குடவை'. கல்வெட்டில் 'காஞ்சிரந் துடவை' என்றுள்ளது; வரி 40 - 'நடு சந்தி'. கல்வெட்டில் 'ஒரு சந்தி' என்றுள்ளது; SII 26: 33 வரி 15, 16 - 'ஆலங்காட்டு'. கல்வெட்டில் 'ஆர்காட்டு' என்றுள்ளது; SII 26: 42 வரி 1 - 'கொண்டருளிய ஸ்ரீ'. கல்வெட்டில் 'கொண்டருளிய' மட்டுமே உள்ளது.

SII 26 : 42. இக்கல்வெட்டு அகத்தீசுவரர் திருமுன்னின் (சண்டேசுவரர் திருமுன்) வடக்குச் சுவரில் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இது காணப்படுவது பெரு மண்டபத்துள் பிதுக்கமாய் இழுக்கப்பட்டுள்ள மூன்றாம் குடைவரையின் பெருமண்டப மேற்குச் சுவரில்தான்.

ARE 1954 - 55 : 403. இக்கல்வெட்டு இரண்டாம் குடை வரையின் கருவறை வாயிலுக்கு இடப்புறமுள்ள சுவரில் காணப்படுவதாகக் கல்வெட்டறிக்கைக் கூறுகிறது. ஆனால் இந்த இடப்புறச் சுவர், கல்வெட்டுகளின்றி வெறுமையாக உள்ளது. கருவறை வாயிலுக்கு வலப்புறமுள்ள சுவரில் மூன்று கல்வெட்டுகள் உள்ளன. முதலிரண்டும் விட்டுப் போன தொடர்ச்சிகள். அவற்றுள் ஒன்று கல்வெட்டுத் தொகுதியில் வெளியாகியுள்ள நாற்பதாம் கல்வெட்டின் தொடர்ச்சி. மற்றொன்று முப்பத்தேழாம் கல்வெட்டின் தொடர்ச்சி. இதன் கீழே, இதன் தொடர்ச்சி போலச் சிதைந்த கல்வெட்டொன்று காணப்படுகிறது. இதைத்தான் கல்வெட் டறிக்கை 403ஆகக் கொண்டது போலும். நிலவிற்பனை பற்றிப் பேசும் இக்கல்வெட்டிலும் கல்வெட்டு எண் முப்பத் தேழில் இடம்பெற்ற கண்டன் உதயஞ் செய்தானான காங்கேயரும் அழிவஞ்சாதானான பஞ்சவராயனும் இடம் பெற்றுள்ளனர்.

இக்கல்வெட்டுப் பொறிந்துள்ளதாகவும் இறையிலியாக்கப் பட்ட நிலக்கொடைத் தகவலைத் தருவதாகவும் கல்வெட் டறிக்கைக் குறிப்புக் கூறுகிறது. ஆனால் படிக்கும் நிலை யிலுள்ள இந்தக் கல்வெட்டு அழிவஞ்சாதானான பஞ்சவ ராயனுக்குக் கண்டன் உதயஞ் செய்தானான காங்கேயர் ஆறு மா நிலமொன்றை இறையிலியாக விற்ற தகவலைத் தருகிறது. இந்த இறை நீக்கத்திற்கு மாற்றாகப் பஞ்சவராயன் தேனாற்று நாயனாருக்கு ஒரு மாவுக்கு இரண்டு கலம் நெல் கடமை இறுக்க வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

இக்கல்வெட்டின் பாடம்

1 ... அழிவஞ்சாதானான பஞ்சவராயனுக்குக் கண்டன் உத

2 யஞ் செய்தானான காங்கேயனேன் தனக்கு னாம் குறுமங் காட்டு

3 - - 13ஆவது எதிராமாண்டு காணியாக விற்று விலை

4 - - குடுத்த கிணற்றஞ் செய்யும் ஆலவட்ட

5 - - யியும் இதன் வடதலையில் ஊரணியு
6 - - ச்சன் வயக்கலும் செட்டும் செய்யும் கரைக் கீழ் னாற்ற
7 - - டி மூன்றும் ஆக சீவிதப்படி னிலம் ஆறு மாவுக்கு
8 - - நிலமிருமா நிலத்துக்கு நாடென்ற அச்சுவரி சில்
9 - - வெட்டி முட்டாவாளும் மற்றும் எப்பே
10 ர்ப்பட்டனவும் தவிந்து குடிதாங்கிப் படி
11 நிலம் ஒரு மாவுக்கு பெரும் பூவுக்கு புள்
12 ளி புக்கு நிலத்துக்குத் திருக்குன்றாக்குடி
13 திருமலை உடைய தேனாற்றுநாயனார்க்கு
14 இருகல னெல்லுக் கடமை இறுப்பதாக
15 க் கல்வெட்டிக் குடுத்தோம் ஸ்ரீசுந்தரபா
16 ண்டிய தேவற்கு யாண்டு 13வதின் எதிரா
17 மாண்டு முதல் சந்திராதித்தவற் செல்வ
18 தாக இநாயனார் கோயிலில் திருமலையி
19 லே கல்வெட்டிக் குடுத்தோம் இவை கா
20 ங்கேயந் எழுத்து இவை காங்கேய
21 ந் இராமன் மூவேந்த வேளான் எழுத்து

SII 26: 30. இக்கல்வெட்டு முதல் குடைவரை வாயிலுக்கு இடப்புறமுள்ள பாறையில் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள் ளது. ஆனால், கல்வெட்டு முதல் குடைவரையின் கருவறை வாயிலுக்கு வலப்புறமுள்ள பாறைப் பாளத்தில் செதுக்கப் பட்டுள்ளது; ARE 1954-55 : 305. இக்கல்வெட்டுத் தேனாற்று நாதர் திருமுன்னின் மேற்குச் சுவரில் இருப்பதாகக் கல்வெட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் கல்வெட்டுக் காப்பறையின் வடக்குச் சுவரில் உள்ளது.

SII 26 : 37, 40, 41. இம்மூன்றனுள் 37, 40 இரண்டும் விட்டுப்போன தொடர்ச்சிகளாகப் பின்னிணைப்பில் தரப் பட்டுள்ளன. அதனால் 41 மட்டும் இங்கு முழுமையாகத் தரப்பட்டுள்ளது.

1 ஸ்வஸ்திஸ்ரீ கோமாறுபந்மரான த்ரிபுவநச் சக்கரவத்திகள் சோணாடு கொண்டு முடிகொண்ட சோழ

2 புரத்து வீராபிஷேகமும் விஜயாபிஷேகமும் பண்ணியருளிய சுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு

3 15வதிந் எதிராமாண்டு கேரளசிங்க வளநாட்டு தேனாற்றுப் போக்கு நியமத்து கண்டனுதைய்ய

4 ஞ் செய்தானான காங்கேயனேன் மேற்படியூர் ஆழ்வான் கண்டனான கண்டன்ராயிண்டந் பந்மனுக்கு .....

5 ப் பற்றி வெழவூர் வயலில் - - சீவிதம் கழித்துடல் நிலம் அரைக்காணிக் கீழ் மாக்காணியும் காச

6 வயக்கல் நிலம் முக்காணி அரைக்காணி முந்திரிகைக் கீழ் மூந்று மா முக்காணியும் ஆரித வயக்க

7 ல் நிலம் முக்காணி அரைக்காணி முந்திரிகைக் கீழ் மூந்று மா முக்காணியும் தாபரண வயக்கல் நிலம் அரை மா

8 ஆக நிலம் சீவிதபட்ட ஒரு மாவரையிந் கீழ் - -

9 நதுக்கு வந்த அச்சுவரி சில்வரி பெருவரி வெட்டி முட்டா வாள் மற்றும் எப்பேர்பட்ட - -

10 திருக்குன்றக்குடி தேநாற்றுநாயகர்க்கு திருவமுதுபடிக்கு - -

11 இறுப்பதாகவும் கொண்ட பிஞ்ச நிலத்துக்கு இவ்வா - -

12 திராதித்தவல் செல்வதாகக் கல்வெட்டி குடுத்தோம் காங்கே - - ரக்ஷை

57. ‘விட்டுப்போன தொடர்ச்சிகள்’ என்ற தலைப்பின் கீழ்ப் பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளன.

பின்னிணைப்பு

I புதிய கல்வெட்டுகள்

கல்வெட்டு 1

இடம்: முதல் குடைவரை முகமண்டப மேற்குச் சுவர்.

1-4 திருமடந்தையும் ஜயமடந்தையும் என்று தொடங்கும் மெய்க் கீர்த்தி

5 - - கோச்சடையபன்மரான த்ரிபுவனச் ச

6 க்கரவத்திகள் ஸ்ரீவல்லபதேவற்கு யாண்டு 10ஆவது கேரள சிங்க வளநாட்டு அதலையூர் னாட்டுத் தே

7 தநாற்றுப் போக்கு திருக்குன்றக்குடித் திருமலை உடைய .... தேநாற்று னாயகற்கு ஐ

8 ஞ்ஞூற்றுவன் உய்யவந்தானான காங்கேயனேந் நீர்வார்த்துக் காணி செய்து குடுத்த நிலமாவது திருக்குன்

9 றக்குடிச் சிங்கன் சூற்றி தண்டங் கொண்ட நிலம் இத்திருக்குன்றக்குடி ... நாட்டான் வயக்கல்

10 செம்பாதி ..... சிங்கன் சூற்றி வயக்கல் நிலம் 4 மாவும் - - நா

11 வற் துடவையில் - - காஞ்சிரந் துடவை நிலம் - - தம்மை வயக்கல் - -

12 . . . மணியாத்திறல் - - ஆச்சன் வயக்கல் பாதி . . . . . குசக் குழிப்பாதியும் .. இன்நில

13 ம் அனைத்தும் இத்திருக்குன்றக்குடித் திருமலை உடைய தேனாற்று நாயகற்கு நீர்வார்த்துக் காணி செய்து குடு

14 த்தேன் ஐஞ்ஞூற்றுவன் உய்யவந்தானான காங்கேயநேன் திருமலை உடைய தேனாற்று நாயகற்கு திரு

15 க்குன்றக்குடி சிங்கன் சூற்றிய தே - - இவன் இசைவுமிட இந்நிலம் ...... சோழ

16 ன் தமிழன் எழுத்து இப்படி - - ள்ளான் எழுத்து இப்படி அறிவேந் ஆராமிது பொன்நன்

17 எழுத்து இப்படி அறிவேன் இது பன்மாஹேச்வர ரக்ஷை

கல்வெட்டு 2

இடம்: மேலது.

1 ஸ்வஸ்திஸ்ரீ திரும - - தேவதானம் இவன் .. நீர்வார்த்து சிங்கன் சூ

2 ற்றி முன்பு னீர்வார்த்து - - க்கு ஒரு சந்தி - - படிக்கு நீர்வா

3 த்துக் கல்லில் வெட் - - சூற்றியேன் இநிலம் மூன்று மா

4 வும் சிங்கன் சூற்றி - - பன்மாஹேச்வர ரக்ஷை

கல்வெட்டு 3

இடம்: இரண்டாம் குடைவரை, சேத்ரபாலருக்காக எடுக்கப் பட்டிருக்கும் தடுப்புச் சுவர்.

1 ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்ரவத்திகள் சோழநாடு கொண்டு

2 முடிகொண்ட சோழபுரத்து வீராபிஷேகமும் விஜயா பிஷேகமும் செய்தரு

3 ளிய ஸ்ரீசுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு 17ஆவதி

4 னெதிராமாண்டு கேரளசிங்க வளநாட்டு தேனாற்றுப் போ

5 க்கு நியமத்துக் கண்டந் உதையஞ் செய்தானான காங்கேய

6 நேன் மலைமண்டலத்து இடைக்கொட்டு ஐய்யப்பக்

7 காமநுக்கு விலைப் பிரமாணம் பண்ணிக் குடுத்த பரிசாவது நி

8 யமத்து நம் காணிப்பற்று குறுமடங் காட்டில் கீழை வய

9 லுக்குப் பெருநான் கெல்லையாவது கீழெல்லை தேநாற்று ணாயகர் தேவதானத்துக்

10 ... வரம்புக்கு மேற்கும் தென்பாற்கெல்லை திருக்குன்றக்குடி

11 ... லுக்கும் வடக்கும் மேல்பாற்கெல்லை பஞ்சவராயந் விலை கொண்டுடைய

12 ...... வயலில் ஆலவட்டஞ் செயில் கீழ்வரம்புக்குக் கிழக்கும் வடபாற்கெல்

13 - - தெற்கும் இப்பெருநான் கெல்லைக்குள்ளகப்பட்ட

14 - - தவிர்ந்து நிலங் குடிதாங்கியென்னுங் கோலால்

15 - - வெட்டி முட்டாவாள் அச்சுவரி சில்வரி பெருவரி உள்பட மற்றுமெ

16-22 வரிகள் மிகவும் சிதைந்துள்ளன

கல்வெட்டு 4

இடம்: இரண்டாம் குடைவரை முழுத்தூண்களின் போதிகைகள்.

1 ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் சோ

2 ழணாடு வழங்கியருளிய சுந்தரபாண்டிய தேவ

3 ற்கு யாண்டு - - - சேத்ரபால பிள்ளையாற்

4-5 - -

6 நெல்லு இப்பிள்ளையாற்குத் திருஅமுதுபடிக்கு

7 உடலாக அளப்பதாகவும் இப்படி சந்திராதிச்சவற் செ

8 ல்வதாக நீரும் வாற்து நம் எழுத்தும் இட்டோம்

9 இப்படி கல்லிலும் வெட்டிக் கொள்க இப்படி கண்டன் ஆளு

10 டையான் ஆன கல்வாயில் நாடாழ்வான் எழுத்து இவை

11 அறிவாபரண மூவேந்த வேளா

12 ந் எழுத்து ஸ்வஸ்திஶ்ரீ

13 பன்மாஹேச்வர ரக்ஷை

கல்வெட்டு 5

இடம்: முருகன் கோயிலிலுள்ள விசுவநாதர், விசாலாட்சி கருவறை முன்னால் உள்ள வலப்புறத் தூணின் மேற்சதுரம்.

1 சேவிசெட்டியார் அ   2 ளகப்பன் மகன்

3 தேந   4 ப்பன்

விட்டுப்போன தொடர்ச்சிகள்

கல்வெட்டு 1

இடம்: இரண்டாம் குடைவரைத் தூண். தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி இருபத்தாறில் 37ம் எண்ணிட்டு வெளியிடப்பட்டிருக்கும் கல்வெட்டு 55 வரிகளைக் கொண்டுள்ளது. இவற்றுள் 1-45 வரிகள் சரியாக உள்ளன. 46-47ம் வரிகள் குடைவரையில் காணப்படும் பாடத்திலிருந்து மாறுபடுகின்றன.

பதிப்பிக்கப்பட்டிருக்கும் பாடம்

46 னாட்டுத் தேனாற்றுப்போக்கு நியமத்துக் குன் . . . நஞ்செய் புன்செய் உட்கிடை . . . . . .

47 - - ன்றி அ . . . . . . னான . . . . லுக்கு இசைந்து விலை

குடைவரையில் காணப்படும் பாடம்

46 னாட்டுத்தேனாற்றுப்போக்கு நியமத்துக் கண்டன் உதையஞ் செய்தானான காங்கேயடே

47 நன் மேற்படி - - அழிவஞ்சாதானான பஞ்சவராயனுக்கு விற்பதாயிசைந்து விற்

47ம் வரிக்குப் பிறகு இக்கல்வெட்டின் தொடர்ச்சி முகமண்டபத்தின் வடசுவரில் வெட்டப்பட்டுள்ளது. ஆனால் தொகுதியில் முகப்புத் தூணின் போதிகையில் உள்ள வேறொரு கல்வெட்டின் பாடத்தை 48-55ம் வரிகளாகக் கொண்டு தந்துள்ளார்கள். இவ்வரிகள் புதிய கல்வெட்டு நான்கின் பிற்பகுதியாகப் (வரி 6-13) பொருந்துகின்றன.

கல்வெட்டு எண் 37ன் தொடர்ச்சி முகமண்டபத்தின் வட சுவரிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது.

48 ற்ற உடைய பிரான் குடிக்காட்டுக்கு எல்லையாவது - -

49 ஏற் கெல்லை அளற்றூர் குடிக்காடான வெள்ளாளர் விடங்க - -

50 வடக்கும் மேல்பாற் கெல்லை மாதவராயந் குடிக்காட் டெல்லை - -

51 . . . கிற காலுக்கு மிதிற் தென்கடையில் கடைவிட்டு - -

52 ந்த பெருநான் கெல்லையகப்பட்ட உடைய பிரான் குடிக்காட்டுக்கு - - எம்மிலிசைந்த - -

53 - - மேல் நோக்கின மரமும் கீழ்நோக்கின கிணறும் மற்றுந் தெற் - -

54 த கொடு பெருதுறையும் மீன்படுபள்ளமுந் தேன்படு பொதும் பும் மற்றுமெப்பேறபட்டதும் எம்மிலிசைந்த விலை

55 ப் பொருளுக்கு விலைக்குற விற்று விலை பிரமாணம் செது குடுத்தோம் உதையஞ் செய்தானான காங்கேயநேன் . . . அழிவ

56 ஞ்சாதானான பஞ்சவராயனுக்கு இக்குடிக்காட்டுக்கு நாடென்ற அச்சுவரி - - மற்றுமெப்பேறபட்டன

57 வும் தவுந்து - - திருக்குன்றக்குடி திருமலை உடைய தேனாற்று - - புள்ளி புக்க நிலம் ஒருமா

58 வுக்கும் அதலையூர் நாட்டு கடமை காலாலே மாத்தால் நெல் - - சந்திராதிச்சவல் செ

59 ல்வதாக கல்வெட்டிக் குடுத்தேன் கண்டன் உதையஞ் செய்தானான காங்கேயனேன் அழிவஞ்சாதானான பஞ்சவராயனுக்கு இப்படிக்கு கா

60 ங்கேயன் எழுத்து இப்படிக்கு - -

கல்வெட்டு 2

இடம்: முதல் குடைவரை முகமண்டபச் சுவர். தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி இருபத்தாறில் 40ம் எண் கல்வெட்டு நிறைவடையாமல் உள்ளது. இதன் தொடர்ச்சி வேறொரு சுவரில் இருப்பதை அறியாது, இக்கல்வெட்டின் பிற்பகுதி பாதுகாக்கப்பட வில்லை எனக் கூறியுள்ளனர். தொகுதியில் விடுபட்டுள்ள கல்வெட் டுப்பகுதி ஆய்வில் கண்டறியப்பட்டது.

50

பதிப்பிக்கப்பட்டிருக்கும் பாடம்

1 ஸ்வஸ்திஸ்ரீ த்ரிபுவனச் சக்ரவத்திகள் சோணாடு வழங்கி யருளிய ஸுந்தரபாண்

2 டிய தேவற்கு யாண்டு ஏழாவது கேரளசிங்க வளநாட்டு தேநாற்றுப் போக்கு திருக்குன்றக்குடி உடைய தேநாற்று

3 நாயகர் கோயில் ஆளுடைய பிள்ளையாற்கு நியமத்துக் கண்டன் அமுதகண்டனேன் ....ணனால்

4 .... க நமனைகுடி வல்லி பிள்ளை நங்கை வயல் னிலம் வரைக்காணி முந்திரிகைக் கீழ்

5 மாகாணியும் துழயூர் வல்லி இருணீக்கி வயக்கல் நிலம் காணியுள் பெரிய்ய வெள்ளூரந் வயக்கல் நிலம் வை

6 ரயும் .... பெரியாண்டான் குடிக்காட்டில் உளவன் துடவல் நிலம் கிழ்க்காலே மூன்றுமா முக்காணியும் ஆ

7 க நிலம் ஒரும்மாவுக்கு யாண்டு ஏழாவது முதல் கடமையும் விநிஓகமும் மற்றும் யெப்பேர்ப்பட்ட

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட தொடர்ச்சி

8 னவும் இன்னில ஓபாதி உள்ளன

9 எல்லாம் குடுத்தோம் இதுவே பிடி

10 பாடாக கல்லிலும் செம்பிலும் வெட்டுயிச்

11 சு கொள்க நம் எழுத்துமிட்டு குடுத்து

12 சந்திராதித்தவல் செய்வதாக எழுத்துமி

13 ட்டோம் இவை வடகெங்கை ஆரிய மூ

14 வேந்த வேளான் எழுத்து

2. பிரான்மலைக் குடைவரை

திருக்கொடுங்குன்றம் என்று கல்வெட்டுகளாலும் இலக்கியங்களாலும் புகழப்படும் பாரி வள்ளலின் பறம்புமலையே இன்று பிரான்மலையாகப் பெயர் மாறி வழங்குகிறது.[1] திருச்சிராப்பள்ளியிலி ந்து சரியாக எண்பது கிலோமீட்டர் தொலைவில் அமைந்திருக்கும் இவ்வூரை அடையத் திருச்சிராப் பள்ளி மேலூர்ச் சாலையில் பயணித்துப் பள்ளப்பட்டியருகே கிழக்கில் பிரியும் வைரவன் சாலையில் ஏறத்தாழ நான்கு கிலோமீட்டர் செல்லவேண்டும். மிகப்பெரும் முகடுகளுடன் ஓங்கி உயர்ந்திருக்கும் மலையின் தென்முகடொன்றின் கீழ்தான் திருக்கொடுங்குன்றத்து ஈசர் குடிகொண்டுள்ளார்.[2] அவர் இருக்கும் குடைவரையின் மேலே செங்கற் கட்டுமானமாய் நாகர தளங்கள், வேசர கிரீவம், சிகரம், தூபி.

பிரான்மலைத் திருக்கோயிலின் நுழைவாயில் எளிய அமைப்புடன் உள்ளது. இதனுள் நுழைந்ததும் நேரடியாக மேற்செல்லப் படிக்கட்டுகள் தொடங்குகின்றன. இடப்புறத்தே, அடிவாரத்தில் கட்டப்பட்டிருக்கும் இறைவன் கோயில், திருச் சுற்றும் விமானமுமாய்க் காட்சிதருகிறது. விமானத்தின் முன் பிற்கால மண்டபங்கள். இங்கிருந்தும் மேலே செல்ல வழிகள் உள்ளன. ஒன்று பாறை வழி. மற்றொன்று படிக்கட்டுகளுடன் அமைந்துள்ளது. இந்த இறைவன் கோயிலில் வாழும் மயில் பார்க்க ரம்மியமாக இருந்தாலும் வருபவர்களைக் கொத்துவதில் சுகம் காண்கிறது. மனிதர்களைத் துரத்தும் இந்த அதியச மயில் பாஞ்சாலங்குறிச்சிப் பிறப்புப் போலும்.

முதல் படிவரிசை ஏறியதும் அகன்ற மேடை போலப் பாறைத் தரை விரிந்துள்ளது. இங்கிருந்து பார்க்கும்போது நேர் கீழே இடப்புறத்தில் சுனையொன்று ஊர்மக்களுக்குப் பழ மரமாய் உதவுவதைக் காணலாம். சுற்றிலும் கிராமத்து எழில். பக்கங்களில், வளரும் மலைப்பாறைகள், நீலவானம். காவற்காரர் வந்து இந்த இடத்தில் கட்டப்பட்டிருக்கும் கோபுரத்தின் வாயிற்கதவுகளைத் திறந்ததும் மீண்டும் மேலேறும் பணி தொடங்குகிறது.

இந்தக் கோபுரமும் இதைச் சுற்றியமைந்துள்ள மதிற் சுவரும் பிற்பாண்டியர் பணிகள் என்பதற்கு இங்குள்ள

கல்வெட்டுகளே சான்றாகின்றன. அனைத்துக் கல்வெட்டுகளும் சுண்ணாம்புப் பூச்சில் சுகமின்றி எழுத்துக்களைச் சிறிது சிறிதாக உதிர்த்துக் கொண்டிருக்கின்றன. முன்னோர் ஆவணங்களைச் சிதறடிக்கும் இந்தச் சுண்ணாம்புப் பண்பு தமிழ்நாட்டுக் கோயில் நிருவாகத்தை விட்டு எப்போது அகலும் என்பதே தெரியவில்லை.

பல படிகள் ஏறியதும் மீண்டும் தரையமைப்புக் காணும் பாறைவெளியில் இடப்புறம் தென்திசைக் கடவுளின் திருமுன்னும் அடுத்து, இப்பகுதியில் பெரும்புகழ் பெற்றுள்ள பைரவர் திருமுன்னும் காட்சிதருகின்றன. கொடுங்குன்றத்தார் வலப்புறத்தே உயரத்தில் இருப்பதால் மீண்டும் படிக்கட்டுகளின் துணையோடு மேலேறும் பணி. கல்வெட்டுகள் எண்ணெய் வண்ணத்தில் மன்றாடிக் கொண்டிருக்கும் சுவர்களோடமைந்த பெருமண்டபம் முதல் நிலையாய் வரவேற்கிறது. இங்கிருந்து, கொடுங்குன்றத்தார் திருமுன் காண மீண்டும் சில படிகளுடன் ஒரு மேடை. இந்த மேடைவாயில், கொடுங்குன்றத்தார் திருமுன்னின் முன்னமைந்துள்ள தேவசபைக்குள் நம்மை அனுப்பி வைக்கிறது.

இந்தத் தேவசபையின் கூரை முழுவதும் பிற்பாண்டியர் சிற்பங்கள். நன்கு திட்டமிட்டுச் சிறுசிறு சதுரங்களாகப் பிரிக்கப்பட்ட இடஅமைப்பில், பிற்பாண்டியர் காலச் சமுதாயப் பண்பாட்டுப் படப்பிடிப்புகளாய் இச்சிற்பங்கள் அமைந்துள்ளன. வெள்ளிவண்ணப் பூச்சில் இக்கூரைச் சிற்பங்கள் கூர்மையிழந்திருந்தாலும் இவற்றின் வரலாற்றுத் தன்மையைக் குறைத்து மதிப்பிடமுடியாது. கரணக்கோலங்கள், நதிகளின் நடப்பு, இசைக் கருவிகளின் வளர்ச்சி, எண்திசைக் காவலர்களின் அணிவகுப்பு, முனிவர்கள், இறைவிளையாடல்கள் என எத்தனை வரலாற்று வளங்கள்! மண்டபத்தூண்கள் பூமொட்டுப் போதிகைகளுடன் வண்ணப்பூச்சில் குளித்துக் களையிழந்துள்ளன. சபையின் வடபுறம் தளம் அமைத்து நால்வர் திருமேனிகளைத் தென் பார்வையாக எழுந்தருள வைத்துள்ளனர்.

இந்தத் தேவசபையின் கிழக்கில் பெரிதாய் விரியும் செவ்வக மண்டபம் தெற்கிலும் வாயில் பெற்றுள்ளது. இதன் கிழக்குச் சுவரில் பிரான்மலைக் காற்றை அள்ளிவரும் சிறு சாளரம்,

ஏறிவந்த களைப்பை அகற்றிச் சுகம் தருகிறது. வடசுவரருகே தளம் அமைத்து ஆடவல்லான் திருமுன்னாக்கியுள்ளனர்.

முன்றில்

தேவசபையின் மேற்கிலுள்ள வாயில், குடைவரைக்கு முன்னுள்ள மண்டபத்துள் அநுமதிக்கிறது. இம்மண்டபத்தின் வட, தென், கிழக்குச் சுவர்கள் வெறுமையாக உள்ளன. மண்டபத்தின் மேற்கில் கட்டப்பட்டுள்ள முன்றில் வண்ணப்பூச்சில் களையிழந்த நிலையில் குடைவரைக்கு வழிவிடுகிறது.

உபஉபானம், உபானம், பெருந்தாமரையிதழ்களாய் மலர்ந்த ஜகதி, தாமரை வரிகளால் அணைக்கப்பெற்ற உருள்குமுதம், கம்புகள் தழுவலில் பாதங்களுடன் அமைந்த கண்டம், கூடுகள் பொருந்திய கபோதம், பட்டிகையென 62 செ. மீ. உயரத்துடன் கபோதபந்தத் தாங்குதளமாய் அமைந்த முன்றில் மேடையில் நான்கு பெரும் உருளைத்தூண்கள்.

இவற்றின் மேலமர்ந்த போதிகைகள் பூமொட்டு நாணுதல் களை இறக்கியபடி மதலைகளால் உத்திரம் தாங்க, மேலே வாஜனம், வலபி, கூரையின் நீட்டலாய்க் கபோதம். மண்டபத்தில் இருந்து முன்றிலையடைய தென்புறம் இரண்டு படிகள். வடபுறம் ஒரே படி. முன்றிலின் தென்புறத்தே கல்லில் வடித்த இறைவன், இறைவி சிற்பமொன்று சுவரோடு பதிக்கப்பெற்ற நிலையில் இருத்தப்பட்டுள்ளது. முன்றிலின் வடபுறத்தே மண்டப மேற்குச் சுவரைப் பாறையின் பிதுக்கத்தோடு இணைத்துப் பொருத்தி யுள்ளனர். முன்றில் மேடையின் வடபுறத்தே இரண்டு பெரும் குத்துவிளக்குகள். அவற்றின் வெளிச்சத்தில்தான் இறைவனைக் காணமுடியும்.

குடைவரை

கருவறை, முகமண்டபம், முகப்பென அமைந்திருக்கும் குடைவரையினுள் நுழைய, மண்டபத்தின் மேற்குச் சுவரில் முன்றில் மேடையின் பின்புறத்தே வாயிலமைத்துள்ளனர். 72 செ. மீ. அகலமும் 1. 44 மீ. உயரமும் கொண்டுள்ள இவ்வாயில் பக்க நிலைகளும் மேல், கீழ் நிலைகளும் கொண்டு கட்டமைக்கப் பட்டுள்ளது.

முகப்பு

நடுவில் முழுத்தூண்கள் ஏதுமின்றி, பக்கச் சுவர்களை ஒட்டிய உறுப்பு வேறுபாடற்ற இருநான்முக அரைத்தூண்களை மட்டுமே கொண்டு உருவாகியுள்ள முகப்பின்[3] தென்வடல் நீளம் 2. 28 செ. மீ. இவ்வரைத்தூண்கள் போதிகைகளின்றித் தாங்கும் உத்திரத்தின் மேல்விளிம்பையொட்டிக் கூரையைத் தழுவிய வாறு தென்வடலாக ஓடும் வாஜனம், சிறிய சதுரப்பட்டியாகக் காட்டப்பட்டுள்ளது. வாஜன விளிம்பிலிருந்து 17 செ. மீ. முன்னோக்கி நீளும் சமன் செய்யப்பட்ட கூரை, முன்மண்டப மேற்குச் சுவருடன் நன்கு இணைக்கப்பட்டிருப்பதால் கபோத அமைப்புக் கொண்டுள்ளதா என்பதை அறியக்கூடவில்லை. முகப்பின் பக்கச் சுவர்கள் அரைத்தூண்களை ஒட்டி 26 செ. மீ. அளவிற்கு இருபுறத்தும் கிழக்கில் பரவி முன்மண்டபத்தின் பின்சுவரில் ஐக்கியமாகின்றன.

முகமண்டபம்

கிழக்கு மேற்காக 46 செ. மீ. அகலமும், தென்வடலாக 2. 36 மீ. நீளமும் கொண்டு 1. 92 மீ. உயரச் செவ்வக அமைப்பாய்க் குடையப் பட்டுள்ள முகமண்டபத்தின்,[4] தென், வடபக்கச் சுவர்களும், கிழக்குச் சுவரும் சந்தனம் பூசப்பெற்று வெறுமையாகக் காட்சி தருகின்றன. மண்டபத்தின் பின்சுவர் 11 செ. மீ. உயரமுள்ள உபானத் தின் மேல் சற்று உள்ளடங்கிய நிலையில் தொடங்குகிறது. இதன் நடுவில் திறக்கப்பட்டுள்ள கருவறை வாயில், உபானத்திலிருந்து 1. 60 மீ. உயரமும், 70 செ. மீ. அகலமும் கொண்டமைந்துள்ளது. மேல், கீழ் நிலைகளும் பக்கநிலைகளும் பெற்றுள்ள இவ்வாயிலை அணைவு செய்தமைந்துள்ள உறுப்பு வேறுபாடற்ற நான்முக அரைத்தூண்கள், உபானத்தின் மீது நின்றபடி பட்டையிட்ட தரங்கப் போதிகைக் கைகளால் உத்திரம் தாங்குகின்றன.

முகமண்டப மேற்குச் சுவர், வடதென் சுவர்களைத் தொடு மிடத்து, இதே-போன்ற, உறுப்பு வேறுபாடற்ற நான்முக அரைத் தூண்கள், உபானத்தின் மீதெழுந்தபடி பக்கத்திற்கொன்றாய் அமைந்து, பட்டையிட்ட தரங்கப் போதிகைக் கைகளுடன் உத்திரம் தாங்குகின்றன. உத்திரத்தின் மேல் காட்டப்பட்டுள்ள சிறு வாஜனம் முகமண்டபத்தின் நாற்புறத்தும் தொடர்கிறது.

கருவறை வாயிலின் இருபுறத்துமுள்ள இவ்அரைத்தூண்களின் இடையே பக்கத்திற்கொன்றாய் அமைந்துள்ள தென், வட கோட்டங்களில் நின்ற கோலத்தில் சுதையுருவங்களாய்க் காவற் பெண்டுகள்.[5]

கருவறை

தென்வடலாக 2. 03 மீ. அளவும் கிழக்கு மேற்காக 1. 07 மீ. அளவும் 1. 87 மீ. உயரமும் கொண்டமைந்துள்ள கருவறையின் கூரையும் வட, தென்சுவர்களும் வெறுமையாக உள்ளன. பின் சுவரையொட்டிக் கருவறைத் தரையிலிருந்து 23 செ. மீ. உயரத்தில் அகலம் குறைந்த பின்னாளைய தளமொன்றும் அதன் பின்னே அதிலிருந்து 32 செ. மீ. உயரத்தில் கருங்கல் மேடையொன்றும் உள்ளன. இம்மேடையின் மீதே, இறைவன் மங்கைபாகராகவும் இறைவி தேனம்மையாகவும் பேருருவினராய் அமர்ந்துள்ளனர்.

கற்பூர ஒளியில் மட்டுமே காணவேண்டியிருக்கும் இத்திரு மேனிகள் எழிலார்ந்தவை. கருமையான வண்ணப்பூச்சில் உள்ள இவற்றின் தோற்றம், மஞ்சள் வண்ணச் சுவர்களின் பின்னணியில் கற்பூர ஒளியின் ஆரஞ்சு நிறத்தில் மின்னிக் கண்களில் நிறைகின்றன.

சிற்பங்கள்

1. முன்றில் மேடையிலுள்ள இறைவனும் இறைவியும்

கருவறைச் சிற்பத்தின் நகலென்று கூறப்படும் இதற்கும், கருவறைச் சிற்பத்திற்கும் மிகுந்த வேறுபாடுகள் உள்ளன. இச்சிற்பத்தில், மேடைமீதுள்ள இறைவன் இடக்காலைக் கிடத்தி, வலக்காலைக் கீழிறக்கிச் சுகாசனத்தில் உள்ளார். வலக்கை தொடைமீதுள்ளது. இடக்கை உயர்ந்து இன்னதென இனங் காணமுடியாத பொருளொன்றைப் பிடித்துள்ளது. தலையில் சடைமகுடம். செவிகளில் பனையோலைக் குண்டலங்கள். மார்பில் உபவீதமாய் முப்புரிநூல். கழுத்தில் சரப்பளி. உதர பந்தமும் காட்டப்பட்டுள்ளது. தோள், கைவளைகளும் உள்ளன. இடையில் அரைக்கச்சு இறுக்கும் சிற்றாடை.

இறைவனின் இடப்புறம் அமர்ந்துள்ள தேவி கரண்ட மகுடம் அணிந்துள்ளார். செவிகளில் கடிப்பு வகைத் தோடுகள்.

கழுத்தில் சவடி. முழங்கைகளில் கடகவளைகளும் மணிக்கட்டு களில் வளையல்களும் உள்ளன. அம்மையின் இடக்கால் கீழே தொங்கவிடப்பட்டுள்ளது. வலக்கால் மடக்கியநிலையில் மேடை மீதுள்ள இறைவனின் இடத்தொடைமீது இருத்தப்பட்டுள்ளது. இறைவியின் இடக்கை தொடைமீதிருக்க, வலக்கை வலத் தொடைமீது முஷ்டி முத்திரையிலுள்ளது. இளமைநலம் பொருந்திய மார்பகங்கள் கச்சின்றி உள்ளன.

2. காவற்பெண்டுகள்

முகமண்டப மேற்குச் சுவர்க் கோட்டங்களில், கருவறை வாயிலின் இருபுறத்தும் நிற்கும் காவற்பெண்டுகளைக் கோயிலார் துவாரசக்தி என்கின்றனர். வண்ணப்பூச்சில் மின்னும் இவர்தம் கருவறையொட்டிய கைகள் தாமரை மலர்களை ஏந்த, பக்கச் சுவர்களையொட்டிய கைகள் கடியவலம்பிதத்தில் உள்ளன.[6] சடைமகுடமும் பனையோலைக் குண்டலங்களும் பட்டாடை யும் தோள், கை வளைகளும் கழுத்தணிகளும் அணிந்துள்ள இவர்தம் எடுப்பான மார்பகங்கள் கச்சணிவிக்கப்பெற்றுள்ளன.

3. மங்கைபாகர்.

இறைவன் சுகாசனத்தில்,[7] இடக்காலை மடக்கி மேடைமேல் கிடத்தி, வலக்காலைக் கீழேயுள்ள படிக்கட்டில் பாதம் பொருந்துமாறு இறக்கியுள்ளார். பின்னால் முத்துப் பதித்த இருக்கை விரிப்புக் காட்டப்பட்டுள்ளது. சுதை பூசப்பட்டிருப்ப தால் அலங்காரங்களுக்கு அளவில்லை. பாதங்களில் தாள்செறி கள். தலையில் சடைகளின் மீது குமிழ்வைத்த கிண்ணத்தைக் கவிழ்த்தாற் போன்ற சடைமகுடம்; சடைகளில் இருபுறத்தும் நெருஞ்சிப் பூக்கள். நெற்றி முகப்பில் பதக்கமும் முத்து வடமும். நெற்றிக்கண் அமைந்த திருமுகத்தில் இளகிய சிறுநகை. செவி களில் பளபளக்கும் மகரகுண்டலங்கள். கழுத்தில் உருத்திராக்க மாலையுடன் பதக்கமிட்ட மாலைகள் இரண்டு. இருபுறமும் முத்துத் தைத்த கச்சை போல உள்ள முப்புரிநூல் நிவீதமாக உள்ளது. மார்புக்கும் வயிற்றுக்கும் இடையில் உதரபந்தம்.

இடையில் அரைக்கச்சால் அணைக்கப்பட்ட மரவுரி யாடை. இடைக்கட்டுத் தொடையளவாய்ச் சுருக்கப்பட்டு, அதன் தொங்கல் மடக்கிய இடக்காலின் கீழ் மேடைமீது விரிப்பெனப்

படிந்துள்ளது. கைகளின் மேற்பகுதியில் தோள்வளைகள்; மணிக்கட்டுகளில் பட்டை வளைகள்; விரல்களில் மோதிரங்கள். இறைவனின் கழுத்திலிருந்து, விஷ்ணுவின் மார்பில் புரளும் வனமாலையொத்த நீளமாலையொன்று தொடைவரை தொங்கு கிறது. உர்ஸ்சூத்திரமும் உள்ளது.

இறைவனின் வலக்கை தொடைமீதமர,[8] இடக்கை மடிந்து உயர்ந்து, இறைவியின் முகத்திற்காய்க் கடகமாகியுள்ள உள்ளங் கையில், பொருளொன்றை ஏந்தியுள்ளது. இப்பொருள் பலவிதழ் களின் தொகுப்புப் போல அமைந்துள்ளது. இதழ்கள் நெருங்கி மலர்ந்த மலரொன்றை ஏந்தியிருந்தால் எப்படியிருக்குமோ அப்படியுள்ள இப்பொருளின் கீழ்ப்பகுதி கைக்குள் மறைந்திருப் பதால், உறுதியாக இன்னபொருள் என்று கூறமுடியவில்லை.[9] இறைவனின் திருமுகம் இலேசான இடப்புறத் திருப்பத்தில் உள்ளது.

இறைவனின் இடப்புறம் வலக்காலைக் குத்துக்காலாக மேடைமீது இருத்தி, இடக்காலைப் பாதம் படியிலிருக்குமாறு கீழிறக்கியுள்ள உமையன்னையின் உத்குடிகாசனக் கோலம்[10] எழிலார்ந்தது. இடக்கையைத் தொடைமீதிருத்தி,[11] வலக்கையைக் குத்துக்காலாக உள்ள வலக்கால்மீது தாங்கலாய் நிறுத்தி, அக்கையில் நீலோத்பல மலரொன்று[12] ஏந்தியுள்ள இறைவியின் வலப்பாதம், இறைவனின் இடத்தொடையின் கீழ் மறைந்துள் ளது.[13] பட்டாடை அணிந்துள்ள இறைவியின் தாள்களில் செறி கள், பாடகங்கள்; விரல்களில் மிஞ்சி. இறைவியின் செவிகளை அலங்கரிக்கும் குண்டலங்கள், 'கடிப்பு' வகையினவாகலாம். தோள்களில் ஸ்கந்தமாலை.

கைகளில் தோள்வளைகள், வளைகள், மோதிரங்கள். கழுத்தில் முத்துமாலை, பதக்கம் தைத்த ஆரம். இப்பதக்கம் தேவியின் கச்சற்ற இருமார்பகங்களுக்கும் இடையில் அவற்றின் மேலெழுச்சியை முத்தமிட்டவாறு அமர்ந்துள்ளது. வயிற்றுப் பகுதியை அரவணைத்தவாறு மார்பகங்களுக்கிடையே எழுச்சி காட்டும் அணி மிக அழகாக அமைக்கப்பட்டுள்ளது.

தலையில் முத்து முகப்பணி அரவணைத்த கரண்டமகுடம். நெகிழும் சடையில் இடப்புறம் இதழ்விரித்த நெருஞ்சி. நெற்றியில்

அழகிய திலகம். இடுப்பில் மேகலை. இறைவியின் தோளில் தொங்கும் மாலை, தோளின் பின்புறம் முழங்கைவரை நீலோத்பல மலர்களின் தொகுப்பென நீள்கிறது. திருமுகம் வலச்சாய்வாய், இலேசாய்க் குனிந்த நிலையில், பார்வை கீழ்நோக்கித் தாழ நாணம் கொழிக்க அழகின் சிகரமாய் அமைந்துள்ளது.

முடிவுரை

கல்வெட்டுகள் ஏதுமற்ற எளிய கட்டமைப்புள்ள இக்குடைவரையின் பெருஞ்சொத்தாக இறைவன், இறைவி திருமேனிகளைக் குறிப்பிடவேண்டும். இவை பாறையில் செதுக்கப்பட்டுச் சுதைப்பூச்சுக் கொண்டவையென்றே கருதுமாறு பின்சுவரை ஒட்டிய நிலையில் உள்ளன.[14] அழகு கொழிக்கும் இத்திருமேனிகள் விளங்கும் இக்குடைவரையின் அமைப்புக் கொண்டு இது உருவாகிய காலத்தைக் கி. பி. எட்டாம் நூற்றாண்டாகக் கொள்ளலாம். இறைவி தனித்தமர்ந்த நிலையிலும், மங்கை பாகரென்ற பெயரை இக்குடைவரை இறைவர் ஏன் பெற்றார் என்பதற்குச் சான்றுகளில்லை. அன்னையும் அத்தனுமாய்[15] மண வழகுக் கோலத்தில் ஒளிவிடும் இவ்விறை இணையைக் கண்ணுற்றாரே கண்பெற்ற பயன்பெற்றார்.

குறிப்புகள்

1. பிரான்மலைத் திருக்கோயிலைப் பலமுறை பார்த்திருந்த போதும் முறையாக ஆய்வு மேற்கொண்ட நாட்கள் 16.2.2003, 23. 2. 2003. பிரான்மலைக் குடைவரையை முழுமையான அளவில் ஆய்வுசெய்ய அநுமதி வழங்கிய வணக்கத்திற்குரிய தவத்திரு பொன்னம்பல அடிகளாருக்கு நூலாசிரியர்களின் நன்றி உரியது. ஆய்வின்போது உடனிருந்து உதவிய சிவாச்சாரியார்கள் திரு. கல்யாணசுந்தரம், திரு. உமாபதி, கோயிற் பணியாளர்கள், தவத்திரு அடிகளாரின் நேர்முக உதவியாளர் திரு. நீலமேகம், சதுர்வேதிமங்கலம் உருத்திர கோடீசுவரத்து அலுவலர் திரு. சண்முகம், மைய ஆய்வர்கள் இரா. இலலிதாம்பாள், திருமதி வாணி செங்குட்டுவன் இவர்கட்கும் நூலாசிரியர்களின் நன்றி உரியது.
2. 'பிரான்மலையின் அடிவாரப்பகுதியில் கிழக்கு நோக்கிய சிறிய குடைவரை' என்று பிரான்மலைக் குடைவரையின் இருப்பிடத்தையே அடிவாரத்திற்கு மாற்றியுள்ளனர். சு. இராச

வேலுவும் அ. கி. சேஷாத்திரியும். தமிழ்நாட்டுக் குடைவரைக் கோயில்கள், பண்பாட்டு வெளியீட்டகம், சென்னை, 2000. ப. 169.

3. தி. இராசமாணிக்கம், சு. இராசவேல், அ. கி. சேஷாத்திரி ஆகியோர் முகப்பு இல்லை என்கின்றனர். மு. கு. நூல்கள், பக்.11-12, ப.169. வல்லம் லக்க சோமாசியார் மகள் குடைவரை அமைப்புடன் பிரான்மலைக் குடைவரையை ஒப்பிடலாம். இது போன்ற முகப்பே அங்கும் உருவாக்கப்பட்டுள்ளது. அர. அகிலா, மு. நளினி, இரா. கலைக்கோவன், 'வல்லம் குடைவரைகளும் கல்வெட்டுகளும்', வரலாறு 11-12, பக். 94-96.

4. தி. இராசமாணிக்கம், சு. இராசவேல், அ. கி. சேஷாத்திரி ஆகியோர் இப்பகுதியை அந்தராளமென்றும் இடைகழியென்றும் குறித்துள்ளனர். மு. கு. நூல்கள், ப. 11; ப. 169.

5. அர்த்தமண்டபத்தின் பக்கச் சுவர்களில் துவாரபாலகியர் இடம்பெற்றிருப்பதாகத் தவறாகக் குறித்துள்ளார் கே.வி.சௌந்தரராஜன், மு. கு. நூல், ப. 91.

6. வெளிக்கைகளில் மலர்மொட்டுக்கள் இருப்பதாகவும் உள்கைகள் மடியிலிருப்பதாகவும் பிழையாகக் கூறுகிறார் கே. வி. சௌந்தரராஜன், மு. கு. நூல், ப. 91.

7. இதை, 'அர்த்த பிரயங்காசனம்' என்று குறிக்கிறார்கள் சு. இராசவேலுவும் அ. கி. சேஷாத்திரியும். மு. கு. நூல், ப. 169. கே. வி. சௌந்தரராஜன், 'அர்த்த பர்யங்காசனம்' என்பார். மு. கு. நூல், ப. 91. அர்த்தபத்மாசனமே, அர்த்த பரியங்காசனம் என்றும் அழைக்கப்படுகிறது. வை. கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல், தொழில் நுட்பக் கல்வி இயக்கக வெளியீடு, சென்னை, 1978, ப. 59. பிரான்மலைக் குடைவரை இறைவன் சுகாசனத்திலுள்ளார்; அர்த்த பத்மாசனத்தில் அன்று.

8. வலக்கையில் மழு ஏந்தியிருப்பதாகத் தி. இராசமாணிக்கம், சு. இராசவேல், அ. கி. சேஷாத்திரி ஆகியோர் தவறாகக் குறித்துள்ளனர். மு. கு. நூல்கள், ப. 11; ப. 169.

9. இப்பொருள், 'dice block' என்கிறார் கே. வி. சௌந்தரராஜன். மு. கு. நூல், ப. 91. இடக்கை தொடைமீதிருப்பதாகத் தி. இராசமாணிக்கம், சு. இராசவேல், அ. கி. சேஷாத்திரி ஆகியோர் கூறுகின்றனர். மு. கு. நூல்கள், ப. 11; ப. 169.

10. இறைவியும் அர்த்த பிரயங்காசனத்தில் இருப்பதாகச் சு. இராசவேல், அ. கி. சேஷாத்திரி கூறுகின்றனர். மு. கு. நூல், ப. 169; அம்மை வீராசனத்தில் அமர்ந்துள்ளார் என்கிறார் தி. இராசமாணிக்கம். மு. கு. நூல், ப. 11; கே. வி. சௌந்தரராஜன், அர்த்த பர்யங்காசனத்தில் இருப்பதாகக் கூறுகிறார். மு. கு. நூல், ப. 91. மூன்று கூற்றுகளுமே பிழையானவை.

11. இக்கையில் செங்கழுநீர்ப்பூ உள்ளதென்கிறார் தி. இராசமாணிக்கம். மு. கு. நூல், ப. 11.

12. தாமரை என்கின்றனர் சு. இராசவேலுவும் அ. கி. சேஷாத்திரியும். மு. கு. நூல், ப. 169. இக்கை கர்த்தரி அஸ்தத்தில் உள்ளதென்பதோடு நிறுத்திக்கொள்ளும் கே. வி. சௌந்தரராஜன், கைப்பொருள் குறித்து ஏதும் கூறவில்லை. மு. கு. நூல், ப. 91. இக்கை தொடையிலிருப்பதாக எழுதுகிறார் தி. இராசமாணிக்கம். மு. கு. நூல், ப. 11.

13. 'Right lap of the Devi resting fondly on the left lap of the god' என்று எழுதியுள்ளார் கே. வி. சௌந்தரராஜன். மு. கு. நூல், ப. 91.

14. இவற்றைச் சுதைவடிவங்களாகக் கொள்கிறார் தி. இராசமாணிக்கம். மு. கு. நூல், ப. 11.

15. இவ்விறைவடிவங்கள் திருமலைக் குடைவரைக் கருவறையிலுள்ள இறைவடிவங்களை ஒத்திருப்பதாகச் சு. இராசவேலுவும் அ. கி. சேஷாத்திரியும் எழுதியுள்ளமை சரியன்று. மு. கு. நூல், ப. 169. இறைவனின் இடக்கையில் இருக்கும் பொருளை 'dice block' ஆகக் கொண்ட நிலையில் கே.வி.சௌந்தரராஜன், 'The scene is perhaps the counterpart of that of Thirumalai cave and Siva perhaps won the game here and wants to display it' என்று கற்பனையில் மூழ்குகிறார். மு. கு. நூல், ப. 91.

3. திருக்கோளக்குடிக் குடைவரையும் கற்றளிகளும் கல்வெட்டுகளும்

புதுக்கோட்டை மாவட்டத்தில் பொன்னமராவதியிலிருந்து 13 கி. மீ. தொலைவில் உள்ளது திருக்கோளக்குடி! புதுக்கோட்டையிலிருந்து இராங்கியம் வழியாக மிதிலைப்பட்டி வந்தும் இவ்வூரை அடையலாம். இது மிகச் சுருக்கமான வழியாகும்.

திருக்கோளக்குடி முன்னேற்றத்தை எட்டிப் பார்க்காத சிற்றூர். மிகச் சில குடும்பங்களே வாழும் இவ்வூரின் நாயகர்கள் போல் சரிந்தும் எழுந்தும் இயற்கையான குகைத்தளங்களுடன் நிற்கும் குன்றுத் தொடரில் நடுக்குன்றின் அடிவாரத்திலும் நடுப் பகுதியிலும் மேலுமாய்க் கோயில்கள். குன்றக்குடி ஆதீனத்திற்குச் சொந்தமான இத்திருக்கோயில்களே இன்றைக்குத் திருக்கோளக் குடியின் சொத்தாக விளங்குகின்றன.

திருக்கோளக்குடிக் குன்றின் அடிவாரத்தில், தெற்கிலும் கிழக்கிலும் கோயில்கள் அமைந்துள்ளன. தெற்கில் உள்ள குளத்தையொட்டி, அதன் படித்துறை மரத்தடியில் பிள்ளையார் எழுந்தருளியுள்ளார். பிள்ளையாருக்குத் தென்புறத்தே மலைப் பாறைகளைச் சேர்த்தணைத்து ஒரு சிறிய செங்கல் கட்டடம். சிதைந்துள்ள இக்கட்டமைப்பில் தண்டபாணியும் அருணகிரி நாதரும் வழிபாட்டில் உள்ளனர். இப்பகுதிப் பெரியவர் நாராயண சாமி இங்குத் தவசியாக வாழ்ந்து மறைந்ததாக ஊரார் சொல்கிறார்கள். அவரது சமாதியையும் உள்ளடக்கிய இந்தக் கட்டடப்பகுதியை ஞானியார் மடம் என்று அழைக்கிறார்கள்.

இம்மடத்திற்குப் பின்னால் குன்றின் இடைப்பகுதிக்கும் சற்றுக் கீழே இயற்கையான குகைத்தளமொன்று அமைந்துள்ளது. மிக நீளமாக அமைந்திருக்கும் இத்தளத்தின் நடுப்பகுதியில் சுவர்கள் எழுப்பி அறை போலத் தடுத்துப் பூட்டியிருக்கிறார்கள். ஆண்டார் மடம் என்றழைக்கப்படும் இத்தளத்தில், சாமியார் ஒருவர் வசித்து வந்ததாகவும் அவருக்குப் பிறகு இந்த அறையை மாம்பழம் பழுக்க வைக்கும் அறையாகப் பயன்படுத்துவதாகவும் ஊரார் சொல்கிறார்கள். இந்தக் குகைத்தளத்திற்குச் செல்லும் வழியிலும் குளமொன்று இருக்கிறது. இதன் கரையில், காய்த்துக் குலுங்கும் மாமரங்கள். உண்துறையாக ஊராருக்குப் பயன்படும்

இந்தக் குளக்கரையில் இருந்து இரண்டு புதிய கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டன.[2]

குன்றின் அடிவாரத்தில் கிழக்குமுகமாகப் பக்கத்திற்கு ஒன்றாக இரண்டு கட்டடங்கள். தென்புறம் இருப்பது திருநாள் மண்டபம். கொடுங்கையுடனான கபோதம் கொண்டு விளங்கும் இதன் நுழைவாயிலை அடுத்துப் பதினாறு தூண்கள் கொண்ட பெருமண்டபமும் அதையடுத்து உயர்த்தி அமைக்கப்பட்ட அகல மான தளமொன்றும் அதன் பின்னால் கருவறையொன்றும் காணப்படுகின்றன.

ஜகதி, உருள்குமுதம், கம்புகளின் அரவணைப்பில் பாதங்கள் பெற்ற கண்டம் கொண்டு, மேலே கூடுகளுடனான கபோதத் தோடு தளமுகப்பு அமைந்துள்ளது. ஆறு தூண்கள் நிற்கும் இந்தத் தளத்தின் நடுவில் இறைத்திருமேனிகளை இருத்த மேடை ஒன்று கட்டியுள்ளார்கள். கருவறை வெறுமையாக உள்ளது. பெரு மண்டபமும் தளமும் தரைப்பகுதியில் இணைந்திருந்தாலும் கூரைப்பகுதியில் இரண்டும் இணையுமிடம் திறப்பாகவே உள் ளது. மூடியிருந்த கூரைக்கற்கள் நழுவியதால் இந்நிலை போலும்.

பொய்யாமொழி ஈசுவரம்

மலையடிவாரத்தின் வடகிழக்கில் கற்றளியொன்று பொய்யாமொழி ஈசுவரம் என்ற பெயரில் அமைந்துள்ளது. விமானம், முகமண்டபம், பெருமண்டபம் என்ற அமைப்பில் உள்ள இந்தக் கட்டுமானத்தின் முதலிரண்டு பகுதிகளும் பிற்பாண்டியர் காலத்தவை.

பத்திப்பிரிப்புடன் அமைந்துள்ள விமானமும் முகமண்டப மும் பாதபந்தத் தாங்குதளம் கொண்டுள்ளன. இத்தாங்குதளத்தின் கீழே துணை உபானமும் உபானமும் உள்ளன. தாங்குதளத்தின் மீது வேதிக்கண்டமும் வேதிகையும் காட்டப்பட்டுள்ளன. வேதிகைக்கு அணைவாகக் கீழ்நோக்குத் தாமரைவரி. வேதிகை யின் மேல், துணைக்கம்பு அமைய, அதன்மீது நான்முக அரைத் தூண்களோடு சுவர் எழுகிறது. தாங்குதளக் கண்டம், வேதிக் கண்டம் இரண்டும் கம்பணைவுகளோடு பாதங்களும் கொண்டுள்ளன.

சுவரமைப்பின் பத்திப் பிரிப்புகளுக்கு இடைப்பட்ட ஒடுக்கங்களில் ஒருகால் பஞ்சரங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

சாலைப்பத்திகளில் கோட்டம் காட்டப்பட்டுள்ளது. பட்டிகையின் மேல் உள்ள துணைக்கம்பின் மேற்பரப்புவரை நீட்டப்பட்டுள்ள இக்கோட்டங்களின் அணைவுத்தூண்களும் நான்முகமாகவே உள்ளன. இவ்வரைத்தூண்கள் உத்திரம் தாங்க, மேலே வாஜனம், வலபி, கூடுகளுடனான கபோதம். கபோதத்திற்கு மேலே கிரீவமும் தூபிகளுடனான சாலை சிகரமும் அமைந்துள்ளன. முப்புறத்திலும் வெறுமையாக உள்ள இக்கோட்டங்கள் உள்ள சாலைப் பத்திகளில், வேதிகைத்தொகுதியின் மேலுறுப்பான வேதிகைக்கு மாற்றாகக் கூடுகளுடனான கபோதம் காட்டப்பட்டுள்ளது. இது போன்ற மாற்றமைப்பு, உறுப்பு வேறுபாடு எனப்படும்.

சுவர் அரைத்தூண்கள், வெட்டும் தரங்கமும் இணைந்தமைந்த போதிகைக் கைகள் வழி உத்திரம் தாங்க, மேலே வாஜனமும் தாமரை வலபியும். அதற்கு மேலாகக் கூடுகளோடும் கருக்கணிகளோடும் கூரையின் முன்னிழுப்பாய்க் கபோதம் அமைந்துள்ளது. கூரைக்கு மேலே உள்ள பகுதிகள் அனைத்தும் அண்மைக்காலத்தே குடமுழுக்கின்போது கட்டப்பட்டவை. கூரையமர் உறுப்புகளாகக் கர்ணகூடங்களும் சாலைகளும் அமைய, கிரீவமும் சிகரமும் நாகரமாக உள்ளன.

விமானத்திற்கும் முகமண்டபத்திற்கும் இடைப்பட்ட ஒடுக்கங்களில் கோட்டப் பஞ்சரங்கள் காட்டப்பட்டுள்ளன. முகமண்டபத்திற்கு முன்னால் உள்ள பெருமண்டபம், துணைத் தளம் கொண்டு நான்முக அரைத்தூண்கள் பெற்ற சுவரால் சூழப்பட்டுள்ளது. பெருமண்டபத்தின் தென்சுவரில் கல் சன்னல் ஒன்று ஒளியும் காற்றும் கோயிலுள் நுழைய வாய்ப்பாக அமைக்கப்பட்டுள்ளது.

பெருமண்டபத்துள் வடபுறத்தே காணப்படும் திருமுன்னில் அம்மன், மரகதவல்லி அம்மையாய் வலக்கையில் மலர்மொட்டேந்தி, இடக்கையை நெகிழவிட்டுக் கரண்டமகுடமும் சமபாதங்களுமாய்த் தெற்கு நோக்கி, நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார். அம்மன் திருமுன்னுக்குக் கிழக்கில், மேற்கு நோக்கியவராய் இலலிதாசனத்தில் பிள்ளையார்.

கருவறையில் இறைவன் இலிங்கத்திருமேனியராய், மேற்குப் பார்வையில் பொய்யாமொழி ஈசுவரர் என்னும் திருப்பெயரோடு

எழுந்தருளியுள்ளார். இக்கோயிலின் கருவறைப் புறச்சுவரில் பிற்பாண்டியர் கல்வெட்டொன்றும்[3] முகமண்டப வடஅகச் சுவரில் பதினெட்டாம் நூற்றாண்டு எழுத்தமைதியில் வெட்டப் பட்டுள்ள 'மாகாளி' என்ற பெயர் சுட்டும் கல்வெட்டொன்றும் காணப்படுகின்றன.

வரவேற்கும் திருமுன்கள்

மேலுள்ள கோயில்களுக்கு அழைத்துச் செல்லும் மலைப் படிக்கட்டுகள் நல்லமுறையில் அமைந்துள்ளன. மற்ற இடங் களைப் போலன்றி, மிக நீளமாகவும் தேவையான அகலத்துடனும் அமைந்துள்ள இப்படிகள் ஆங்காங்கே தளப்பரப்பாகவும் அமைந்து, ஏறும் களைப்பே தெரியாமல் செய்துவிடுகின்றன. முதல் வரிசைப் படிகள் மேற்கு நோக்கி ஓடி, கோபுரமற்ற வாயிலொன்றில் முடிகின்றன. இந்த வாயிலின் தென்புறத்தே பிள்ளையார் திருமுன் வடக்குப் பார்வையாக அமைந்துள்ளது. மிதிலைப்பட்டியைச் சேர்ந்த நல்ல கருப்பன் செட்டி பழனி யப்பன் என்பவரால் கட்டப்பட்டதாகக் கல்வெட்டுக் கூறும் இத்திருமுன் மிகப் பிற்பட்ட காலத்தது.

இத்திருமுன்னின் கருவறையில் வீற்றிருக்கும் பிள்ளையா ரின் வலக்கைகளில் தந்தமும் அங்குசமும் இருக்க, இடக்கை களில் மோதகமும் பாசமும் உள்ளன. துளைக்கை, இடக்கை மோதகத்தைச் சுவைக்கிறது. கரண்டமகுடமும் முகபடாமும் கழுத்தணிகளும் கேயூரங்களும் அணிந்துள்ள இவர், கோளக்குடி வளாகத்தில் இரண்டாவது பிள்ளையார்.

இவரைத் தாண்டியதும் கோபுரமற்ற முதல் வாயில் எதிர் கொள்கிறது. உள்ளே அலங்கரிக்கப்பட்ட திருமுன்னில் முருகப் பெருமான், தெய்வானையும் வள்ளியும் சற்றுத் தள்ளி எதிரெதிர் நோக்கியவர்களாய் நிற்க, மாறுபட்டதோர் அமைப்பில் காட்சி தருகிறார். பொதுவாக முருகனின் இருபுறத்தும் இத்தேவியர் நிற்க, மூவரும் ஒரே பார்வையில் அமைவர். இங்கே தந்தையைக் காணப் படியேறி வருபவர்களை வரவேற்பது போல் முருகன் கிழக்குப் பார்வையாய் நிற்க, தெய்வானை கச்சணிந்த மார்பு களுடன் வடபார்வையாகவும் வள்ளி வனப்பான மங்கையாய்த் தென்பார்வையாகவும் நிற்கின்றனர். திருக்கோளக்குடித் திருமுன் களில் காணப்படும் சில மாற்றங்களுள் இதுவும் ஒன்றாகும்.

ஒரு தேவகோட்டம் போலச் சாலை சிகரத்துடன் அமைந்துள்ள இத்திருமுன், பக்கங்களில் பிள்ளையாரையும் முருகனையும் ஓவிய வடிவில் கொண்டு, படித் திருப்பத்துக்கு வழிகாட்டியாய் அமைந்துள்ளது. இத்திருமுன்னின் இருபுறத்தும் காணப்படும் கல்வெட்டுகள் சுண்ணாம்புப் போர்வைக்குள் புழுங்கிக் கொண்டுள்ளன. இங்கிருந்து படிகள் தென்முகமாகத் திரும்புகின்றன. ஒரு குறிப்பிட்ட திருப்பத்தை அடைந்ததும் மீண்டும் படிகள் மேற்கு நோக்கிச் செல்கின்றன.

இவ்வழி நெடுக இருபுறச் சுவர்களிலும் நம் முன்னோர்களின் வரலாறுகளைத் தாங்கி நிற்கும் கல்வெட்டுகளும் அவற்றைக் கரைத்துக் கொண்டிருக்கும் இந்நாளைய மன்னர்களின் சுண்ணாம்புப் பூச்சுகளும்தான். இப்படிகளின் முடிவில் பாறைத் தளம். இத்தளத்தில் மூன்று கோயில்களும் சண்டேசுவரர் திருமுன்னும் மடைப்பள்ளியும் அமைந்துள்ளன.

சிவகாமியம்மன் கோயில்

படிக்கட்டுகள் முடியும் இடத்திற்குத் தென்புறத்தே சிவதர்மபுரீசுவரர் கோயிலும் வடபுறத்தே சிவகாமியம்மன் கோயிலும் உள்ளன. இவையிரண்டுமே கிழக்கு நோக்கி அமைந்துள்ள கற்றளிகள். இவற்றுள் சிவகாமியம்மன் கோயில் காலத்தால் மிகவும் பிற்பட்டது. வழக்கமான தளஉறுப்புகள் ஏதும் காட்டப்படாத இருவரிசைக் கல்லடுக்கின் மேல், அரைத்தூண்களை உள்ளடக்கிய சுவர் சூழ, மேலே கூரை கொண்டு, சிறிய அளவில் அமைந்துள்ள கருவறையின் மேல், வேசர கிரீவமும் சிகரமும். முகமண்டபமும் அதையடுத்து முன்மண்டபமும் அமைந்துள்ள இத்திருமுன்னில் அம்மை சிவகாமி இரண்டு கையினராய் வலக்கையில் மலரேந்தி, இடக்கையை நெகிழ்த்திச் சமபாதராய் நின்றருள்கின்றார்.

சிவதர்மபுரீசுவரர் கோயில்

சிவதர்மபுரீசுவரர் திருக்கோயில் ஒருதளக் கற்றளியாய்க் கருவறை, முகமண்டபம், திறப்பாக உள்ள பெருமண்டபம் என்ற அமைப்பிலுள்ளது. விமானத்தின் பாதபந்தத் தாங்குதளம், பத்திப் பிரிப்புடன் உபானம், ஜகதி, எண்பட்டைக் குமுதம், கம்புகளும் பாதங்களும் கொண்ட கண்டம்,.பட்டிகை என உரிய உறுப்புகள்

கொண்டமைய, அதன்மீது வேதிகைத்தொகுதியும் துணைக் கம்பும் காணப்படுகின்றன. கம்பின் மீதெழும் சுவரின் திருப்பங் களில் எண்முக அரைத்தூண்களும் சற்று முன்தள்ளி உள்ள சாலைப்பத்திகளை அணைவு செய்யுமாறு உருளை அரைத் தூண்களும் காட்டப்பட்டுள்ளன.

முப்புறத்தும் உள்ள சாலைப்பத்திக் கோட்டங்கள் வெறுமையாக உள்ளன. இவற்றின் கீழே தாங்குதளத்திற்கு மேலாகக் கண்டமும் வேதிகைக்குப் பதிலாகக் கபோதமும் காட்டப்பட்டுள்ளன. இது உறுப்பு வேறுபாடாகும். பட்டிகைக்கு மேலுள்ள துணைக்கம்பின் மேற்பரப்பே கோட்டங்களின் கீழ்த்தளமாக அமைந்துள்ளது. இக்கோட்டங்களை அணைவு செய்யும் உருளை அரைத்தூண்கள் சதுர பாதங்களின்மீது எழுந்து உத்திரம் தாங்க, மேலே வாஜனமும் வலபியும் இருகூடு களுடன் கபோதமும் உள்ளன. கபோதத்தின் மீது வடிப்பற்ற பூமிதேசமும் வேதிகைத்தொகுதியும் கிரீவமும் சிகரமும் அமைந் துள்ளன. கிரீவ நாசிகைக்கு, சிகரமுகத்தில் தோரண வளைவு காட்டப்பட்டுள்ளது. சிகரம் நான்கு தூபிகள் பெற்றுள்ளது.

பெரும்பாலான பாண்டிய நாட்டுக் கோயில்களில், கோட்டங்கள் இது போல் அமைவதே மரபாக உள்ளது. தெற்குக் கோட்டத்தின் முன், பின்னாளில் ஒரு மண்டபம் இழுத்து ஆலமர் அண்ணலை அமர்த்தியுள்ளனர். விமானத்தின் வடக்குத் தாங்குதளப்பகுதியில் திருமுழுக்கு நீர்வழி குமுதப் பகுதியை ஊடறுத்து அமைந்துள்ளது.

சுவர்த் தூண்களும் சாலைப்பத்தித் தூண்களும் வெட்டும் தரங்கமும் கொண்ட தங்கள் போதிகைக் கைகளால் உத்திரம் தாங்க, மேலே வாஜனமும் மலரிதழ் வலபியும் கபோதமும். வேசர கிரீவத்தின் பெருநாசிகைகளில் தெற்கில் ஆலமர் அண்ணலும் மேற்கில் திருமாலும் வடக்கில் நான்முகனும் கிழக்கில் முருக னும் உள்ளனர். கிரீவ சுவரிலுள்ள சிறிய நாசிகைகளில் பல்வேறு வடிவங்கள் காட்டப்பட்டுள்ளன. கிரீவத்தின் நாற்புறமும் பக்கத்திற்கிரண்டாக எட்டு நந்திகள். அலங்கரிப்புகள் கொண்ட வேசர சிகரத்தின் மீது வேசர தூபி.

முகமண்டபம், விமானத்தின் முதல் மூன்று உறுப்புகளை அப்படியே பெற்றுள்ளது. அரைத்தூண்கள் நான்முகத் தூண்

களாகப் பாலிகையுடனான பலகைகள் பெற்று அமைந்துள்ளன. தெற்கிலும் வடக்கிலும் உள்ள கோட்டங்கள் எளிய தோரணத் துடன் வெறுமையாக உள்ளன.

பிற்கால இணைப்பான பெருமண்டபத்தைப் பதினாறு தூண்கள் தாங்குகின்றன. இவற்றுள் ஒன்றில் வணக்க முத்திரை யில் காணப்படும் ஆடவர் வடிவம், இம்மண்டபத்தை எடுத்த பெரியவராகலாம். இம்மண்டபத்தில், ஆர்வத்தோடு சிவ லிங்கத்தை எட்டிப் பார்ப்பது போல் வீறுடை நந்தியொன்று அமர்ந்துள்ளது.

முகமண்டபத்தின் உட்சுவரில் சுண்ணாம்புப் பூச்சுக்குள் ளிருந்து புதிய கல்வெட்டொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.' கருவறையில் இறைவன் மிகச் சிறிய அளவிலான இலிங்கத் திருமேனியுடன் சிவதர்மபுரீசுவரர் என்ற திருப்பெயரில் எழுந் தருளியுள்ளார்.

சிவதர்மபுரீசுவரர் கோயிலின் பின்புறத்தே தலமரமான நெல்லியும்' அதையடுத்து வடபுறத்தே பலாவும் உள்ளன. நெல்லி யின் அடிவயிற்றைச் சுற்றிலும் சுவரெழுப்பி மேடையமைத்து, அந்த மேடையின் பின்புறத்தே, சுனைச் சுவர் அருகே, நாகர் வடிவங்களையும் பிள்ளையார்களையும் வரிசையாக இருத்தி யிருக்கிறார்கள். மேடையின் முகப்பில் பாறைப் பலகையிலான ஆடவல்லான்.

இந்த மேடையின் பின்னால், கீழுள்ள பாறைப் பள்ளத்தில், பாசிப் போர்வையால் பசுமைப் புரட்சி செய்து கொண்டிருக்கும் சுனைக்குச் செல்ல மூன்று வழிகள் படிக்கட்டுகளுடன் உள்ளன. இதையொட்டி எழும் பாறை முகடுகளில் காணப்படும் பெரும் தேன்கூடுகள், குறுந்தொகைப் பாடலின், 'கருங்கால் குறிஞ்சிப் பூக்கொண்டு பெருந்தேன் இழைக்கும்' காட்சியை நினை வூட்டுகின்றன.

சிவதர்மபுரீசுவரர் கோயிலுக்கு வடக்கே மடைப்பள்ளி. இங்கு அடுப்படி தவிர, கோயில் பாத்திரங்கள் 'வைக்க இரண்டு அறைகள் உள்ளன. பள்ளியின் உட்புறத்தும் வெளிப்புறத்தும் உள்ள பிற்பாண்டியர் கல்வெட்டுகள் சிமெண்ட், சுண்ணாம்புப் பூச்சுகளால் பெரிதும் பொரிந்துள்ளன.

சுனைக்கு வடமேற்கில் எழும் படிகள் மேலே உள்ள குடைவரைக் கோயிலின் பெருமண்டபத்திற்கு அழைத்துச் செல்கின்றன. பாறைத்தளத்தின் முற்பகுதியில், சிவகாமியம்மன் திருமுன்னுக்குத் தென்புறத்தே, குடைவரைக் கோயிலுக்குச் செல்லும் மற்றொரு படிவரிசை தொடங்குகிறது. இந்தப் படிவரிசையை ஒட்டிப் பாறைத்தளத்திலிருந்து 5. 73 மீ. உயரத்திற்குக் கற்சுவரொன்று கட்டப்பட்டுள்ளது.

இச்சுவர் வடபுறத்தே உள்ள ஆத்மநாயகி அம்மன் திருக்கோயிலுக்குத் திரும்பும் பாதைவரை 20. 54 மீ. நீளத்திற்குத் தென்வடலாக நீண்டு, வடக்கில் தொடர்ந்து, கிழக்கில் திரும்பி, அங்குள்ள பழைய சுவரமைப்பு ஒன்றில் இணைகிறது. இச்சுவர்க் கட்டுமானத்தில் பாறைத்தளத்தின் வடகிழக்குப் பகுதியிலுள்ள கல்வெட்டொன்றின் தொடக்க வரிகள் சிக்கியுள்ளன. பின்னாளில் ஏற்பட்ட இக்கட்டுமானத்தில் கிழக்கு முகமாகச் சிறு கோட்டமொன்றில் பழனியாண்டவர் காட்டப்பட்டுள்ளார்.

பைரவரும் நாகராசரும்

வடபுறத்தே ஆத்மநாயகி கோயிலுக்குத் திரும்பும் இடத்திற்குச் சற்று முன், பாறைத்தளத்தில் பிற்சோழர் காலத்ததாகக் கொள்ளத்தக்க பைரவர் சிற்பமொன்று தென்பார்வையாய் நிற்கிறது. பின்கைகள் உடுக்கையும் பாம்பும் ஏந்த, முன்கைகளில் முத்தலையீட்டியும் தலையோடும் கொண்டு மண்டையோட்டு மாலையும் சுடர்முடியுமாய், உதரபந்தமும் உபவீதமாய் முப்புரிநூலும் கொண்டு நிர்வாணியாய் நிற்கும் இறைவனுக்குப் பின் அவர் வாகனமான நாய். இடுப்பில், அரைஞாணாக முறுக்கிக் கிடக்கும் படமெடுத்த பாம்பு. செவிகளில் மகர, பனையோலைக் குண்டலங்கள்.

இதே பாறையெழுச்சியின் வடபுறத்தே கிழக்குப் பார்வையாய் நாகராசர். சற்றுத் தள்ளி ஆத்மநாயகி அம்மன் திருக்கோயில். நாகராசர் அழகான சோழர் காலத்துச் சிற்பமாகும். பாறைத் தளத்தில் தனியராய், வடபுறக் காவலர் போல் தலையின் பின்புறம் ஐந்து தலைப் பாம்பு படம் விரித்திருக்க, தாமரைத் தளத்தின்மீது சுகாசனத்தில் காணப்படும் இச்சிற்பம், இங்குள்ள தனிச் சிற்பங்களில் காலத்தால் பழைமையானதாகும்.

கைகள் காப்பும் அருளும் காட்டக் கரண்டமகுடராய், மலர்ந்த முகத்துடன், தொடைவரை சுருக்கிய ஆடையும் இடைக் கட்டும் கொண்டு, பனையோலைக் குண்டலங்கள், ஸ்கந்த மாலை, சரப்பளி, கண்டிகை, உபவீதமாய் முப்புரிநூல், உதர பந்தம், நாகக் கங்கணங்கள், வளைகள், மோதிரங்கள் அணிந்து காட்சியளிக்கும் இந்நாகரைப் பார்க்கும்போது தஞ்சாவூர் இராஜ ராஜீசுவரத்து நாகரும் ஆறை மேற்றளி நாகரும் நினைவில் நிழலிடு வதைத் தவிர்க்கக்கூடவில்லை. தலைக்கு மேலுள்ள பாம்பின் உடலும் வாலும் சிற்பத்தின் பின்புறம் காட்டப்பட்டுள்ளன.

நீட்டலளவைகள்

நாகருக்கு முன்னால் உள்ள பாறைத்தளத்தில் இரண்டு பழங்கால நீட்டலளவைகள் வெட்டப்பட்டுள்ளன. நீள்கோடாக வெட்டப்பட்டுள்ள முதலாவது அளவு 5. 17 மீ. நீளமுள்ளது. இதற்குச் சற்று மேலே காணப்படும் கல்வெட்டு, இந்த அளவு கோல் கி. பி. 1662ஆம் ஆண்டு ஆவணித்திங்கள் நான்காம் நாளில் வெட்டப்பட்டதைச் சுட்டுகிறது. தொடர்ந்து காணப்படும், 'இரகுநாதத் திருமலை' என்ற பெயர் இந்த அளவுகோலின் பெயராகலாம்.

கீழே உள்ள அளவுகோல் மூன்று கூட்டல்குறிகளுக்கு இடைப்பட்ட நிலையில் 5.10 மீ. நீளத்தில் உள்ளது. முதல் இரண்டு கூட்டல்குறிகளுக்கு இடையே தொடர்ந்து புள்ளி குத்தப்பட்ட நிலையில் காணப்படும் இந்த அளவுகோல், இரண்டாவது கூட்டல் குறிக்கும் மூன்றாவது கூட்டல்குறிக்கும் இடைப்பட்ட பகுதியில் அத்தகு தொடரான புள்ளியமைப்பின்றி உள்ளது. இந்த அளவுகோலின் தென்புறம் காணப்படும் கல்வெட்டு, இதன் பெயரை 'இமுவை' எனச் சுட்டுகிறது.

ஆத்மநாயகி அம்மன் கோயில்

பாறைத்தளத்தின் வடபகுதியில் அமைந்துள்ள ஆத்மநாயகி அம்மன் கோயில் சிவதர்மபுரீசுவரர் போலவே விமானம், முகமண்டபம், பெருமண்டபம் என்ற அமைப்பில் விளங்குகிறது. இவற்றுள் முன்னிரண்டும் பிற்பாண்டியர் காலத்தன. பெரு மண்டபம் சற்றுப் பிற்பட்டது.

விமான அமைப்பு ஏறத்தாழச் சிவதர்மபுரீசுவரர் கோயிலை ஒட்டியே பத்திப் பிரிப்புடன் பாதபந்தத் தாங்குதளத்தில்

தொடங்கி, இருதள விமானமாய் வடிவெடுத்துள்ளது. வடபுறக் கண்டப்பகுதியை ஊடறுத்துக்கொண்டு வெளிவரும் முழுக்கு நீர் வடிகால் சிம்ம முகத்துடன் முடிகிறது.

தாங்குதளத்திற்கு மேலே வேதிகைத்தொகுதியும் துணைக் கம்புமிருக்க, மேலே சுவர். சுவரிலுள்ள அரைத்தூண்கள் எண் முகமாக அமைய, சாலைப்பத்தித் தூண்கள் பதினாறு முகம் கொண்டும் அச்சாலைப்பத்திகளிலுள்ள கோட்ட அணைவு அரைத்தூண்கள் உருளைமுகமாகவும் அமைந்துள்ளன. இவற்றின் சதுர பாதங்களில் கருக்கணிகள். இப்பாதங்களின் மேற்புறத்தே நாகபந்தங்கள்.

சாலைப்பத்திக் கோட்டங்கள் சிவதர்மபுரீசுவரர் விமானத்தில் இருப்பது போலவே உள்ளன. வெறுமையாக உள்ள இந்தக் கோட்டங்களின் உருளைத்தூண்களை அடுத்துள்ள சுவர்ப் பகுதியில் இருபுறத்தும் வேதிக்கம்பின் மேல், தளம் அமைத்துச் சிற்றுருவச் சிற்பங்கள் காட்டப்பட்டுள்ளன. தென்புறம் பக்கத் திற்கிரண்டாய் நான்கு முனிவர் சிற்பங்களும் மேற்கில் வணங்கிய நிலையில் சங்கு மற்றும் சக்கரத்தாழ்வார்களும் இருக்க, வடபுறம் சிற்பங்கள் ஏதுமின்றி விடப்பட்டுள்ளது.

அனைத்து உறுப்புகளையும் பெற்றுள்ள சுவர்த் தூண்களும் சாலைப்பத்தித் தூண்களும் தங்கள் போதிகைகளின் மதலைகளாலும் நாணுதல்களின் மேற்பகுதிகளாலும் உத்திரம் தாங்குகின்றன. நாணுதல்களின் பூமொக்குகள் இக்கட்டுமானத்தின் காலத்தைப் பதின்மூன்றாம் நூற்றாண்டாகக் காட்டுகின்றன. அதை இங்குள்ள சோணாடு கொண்டருளிய சுந்தரபாண்டியரின் கல்வெட்டுகள் உறுதிசெய்கின்றன.[6]

மேலே வலபியில் பூதவரி இடம்பெற்றுள்ளது. இப்பூதவரியின் சில இடங்களில் பூதவடிவங்களின் மீது காவிக்கோடுகள் காணப்படுகின்றன. இத்தகு காவிக்கோடுகள் விமானம், முக மண்டபம் இவற்றின் வடபோதிகைகளின் கைகளிலும் காணப் படுகின்றன. இக்கோடுகள் காணப்படும் இடங்களை, இவை ஒத்த பிறஇடங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தபோது, கோடிட்ட இடங்களில் மேலும் வேலைப்பாடு நிகழவேண்டி உள்ளமையை அறியமுடிந்தது. இதனால், சிற்பாசிரியர்கள் வரிவடிவங்களையும் செதுக்கவேண்டிய அமைப்புகளையும் காவிக்கோட்டில் வரைந்த பிறகே உருவாக்கியுள்ளனர் என்பது வெள்ளிடைமலை.

இவ்வம்மன் கோயில் கல்வெட்டுகளின் சில பகுதிகளும் பணி முற்றுப்பெறா நிலையில் காவியெழுத்துகளாகக் காணப் படுகின்றன. இக்கல்வெட்டுகளின் முற்பகுதி வரிகள் வெட் டெழுத்துகளாக அமைய, இவை வெட்டப்படா நிலையில் வெறும் காவி வரிவடிவங்களாக உள்ளமை, அக்கால எழுத்துத் தச்சர்கள் காவியால் எழுதிப் பிறகே எழுத்துக்களை வெட்டி அமைத்தனர் என்பதை நன்குணர்த்துகிறது. கோடிட்டு எழுதும் முறையும் கல்வெட்டுத் தச்சர்களிடையே இருந்தமையை இங்குள்ள காவிக்கோடுகள் தெளிவாக்குகின்றன.

இது போல் காவியால் எழுதியும் வரைந்தும் செதுக்கி உள்ள முறையைத் தாராசுரத்திலுள்ள இராஜராஜ ஈசுவரத்திலும் திருமலைப்புரம் முற்பாண்டியர் குடைவரையிலும் காணமுடி வது இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

கபோதம், மூலைகளிலும் நடுவிலும் கருக்கணிகள் பெற்று, யாளித்தலைத் தோரணங்கள் பெற்ற ஆழமற்ற கூடுகளுடன் காட்சியளிக்கிறது. கூடுகளில் சிற்றுருவச் சிற்பங்கள். பூமிதேசத் திற்கு மேலே ஆறங்கச் சாலைகளும்[7] வழக்கமான மூன்றங்கக் கர்ணகூடங்களும் ஆரச்சுவரால் இணைக்கப்பட்ட நிலையில் பத்திகளின் மேலுறுப்புகளாய் நிற்க, அவற்றின் பின்னே இரண் டாம் தளம் காட்டப்பட்டுள்ளது. சாலைகளின் சுவர்க் கோட்டங் களில் தென்புறம் மயேசுவரியும் மேற்கில் வைணவியும் வடபுறம் நான்முகியும் கிழக்கில் கௌமாரியும் இடம்பெற்றுள்ளனர்.

இரண்டாம் தளக் கூரைமீது கிரீவமும் அதன் மீது பேரள வினதாய்ச் சாலை சிகரமும் காட்டப்பட்டுள்ளன. சிகரத்தின் தென், வடகீர்த்திமுகங்களின் கீழுள்ள கிரீவ நாசிகைகளில் சிறிய அளவிலான ஒருதள நாகர விமானங்களை அமைத்து,[8] அவற்றின் சுவர்க் கோட்டங்களில் தென்புறம் மயேசுவரியையும் வடபுறம் நான்முகியையும் காட்டியுள்ளனர். கிழக்கிலும் மேற்கி லும் உள்ள கிரீவ நாசிகைகளில் கௌமாரியும் வைணவியும் உள்ளனர். இவற்றின் இருபுறத்தும் உள்ள சிறிய நாசிகைகளில், கிழக்கில் முருகனும் பிள்ளையாரும் அமைய, மேற்கில் இவை வெறுமையாக உள்ளன.

விமானத்தைப் போலவே கீழ்த்தள உறுப்புகளைக் கொண்டுள்ள முகமண்டபமும் பத்திப்பிரிப்புக்கு ஆளாகியுள்

ளது. இதன் வட, தென்சுவர்களில் சற்று முன்தள்ளி அமைந்துள்ள சாலைப்பத்திகளின் கோட்டங்கள் வெறுமையாக உள்ளன. இக்கோட்டங்களை அடுத்துச் சிற்றுருவச் சிற்பங்கள். தலையில் ஏதோ சுமப்பன போல் உள்ள தென்புறச் சிற்பங்கள் இந்தக் கோட்டத்திற்கு உரியவராகப் பிள்ளையாரைச் சுட்டுகின்றன. வடபுறக் கவரிப் பெண்கள் அக்கோட்டத்திற்கு உரியவராகக் கொற்றவையைக் காட்டுகின்றனர். இச்சிற்பங்களின் இருப்பு விமான, முகமண்டபக் கோட்டங்களில் முன்னாளில் சிற்பங்கள் இருந்தனவோ என்றெண்ணவைக்கிறது.

கருவறைக்கும் முகமண்டபத்திற்கும் இடைப்பட்ட ஒடுக்கத்தில் தெற்கிலும் வடக்கிலும் எழிலார்ந்த கோட்டப் பஞ்சரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கருக்கணிகள் செதுக்கப்பட்டுள்ள இரண்டு சதுர பாதங்களின் மீது நாகபந்தங்கள். மேலே எண்முகக் கால்கள். இக்கால்கள் ஒவ்வொன்றின் மேலும் தாமரைக்கட்டு, கலசம் முதலான மேலுறுப்புகள் அமைந்து உத்திரம் தாங்க, மேலமர்ந்துள்ள தாமரை வலபியை அடுத்துக் கபோதம். மேலே பூமிதேசம், வேதிகை, கிரீவம், கீர்த்திமுக வளைவுத் தோரணமாய்ச் சிகரம். இதன் குழிவில் தோரணம், மதலைகள், சிறிய அளவிலான நாகர விமானம் காட்டப்பட்டுள்ளன.

மூன்று சதுரங்களும் இடையில் கட்டுகளும் கொண்டிருக்கும் பதினான்கு தூண்கள் தாங்கும் பெருமண்டபத்தினுள், வடபுறம் பள்ளியறை கட்டப்பட்டுள்ளது. இங்குள்ள நடுத் தூண்கள் நான்கிலும் உள்ள மேற்சதுரங்களிலும், நடுவில் நந்தியும் தென்மேற்கே பிள்ளையாரும் உள்ள முகமண்டபத்தின் உட்சுவர்களிலும் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.⁹ கருவறையில் அம்மன் கரண்டமகுடராய், வலக்கையில் நீலோத்பலம் ஏந்தி, இடக்கையை நெகிழ்த்தி நின்ற கோலத்தில் அருள் செய்கிறார்.

முருகன் திருமுன்

அம்மன் கோயிலுக்கு வடக்கில் பிற்காலத் திருப்பணியாய்ச் சிறியதொரு முருகன் திருமுன். கருவறையும் முன்றிலும் பெற்ற இத்திருமுன்னில், பின்கைகளில் வஜ்ரமும் சக்தியுமிருக்க, முன்கைகளில் அருளும் காப்பும் காட்டிய வண்ணம் மேற்குச் சுவரையொட்டி முருகன் நிற்க, அவரது தேவியர், கைகளில் மலர்களுடன், அவருக்குச் சற்று முன்னால் கருவறையின் பக்கச்

சுவர்களையொட்டி, எதிரெதிர்ப் பார்வையில் அமைக்கப் பட்டுள்ளனர். வள்ளி வடக்குப் பார்வையாகவும் தெய்வானை தெற்குப் பார்வையாகவும் காட்சிதருகின்றனர். இவ்விருவரையும் பிரித்துக் காட்டுவது மார்புக் கச்சுதான். குறிஞ்சிக் குமரியென்ப தால் இக்கச்சு பொதுவாக வள்ளிக்குக் காட்டப்படுவதில்லை.

இத்திருமுன்னை எடுத்ததுடன் தம் உருவத்தையும் முன்றில் தூணொன்றில் வணக்க முத்திரையுடன் சிற்பமாக்கி உள்ள பெருமகனார், குடமுழுக்கு வண்ணப் பூச்சுகளில் சிக்கிப் பச்சை யப்பராகியுள்ளார். இத்திருமுன்னின் வடசுவர், மதிலாய் வளர்ந்து அம்மன் கோயில் பெருமண்டபத்தை அடுத்து முடிகிறது. முருகன் திருமுன் அருகே இம்மதிலில் காட்டப்பட்டிருக்கும் வாயில், மலையின் வடபுறம் அழைத்துச் சென்று இயற்கைக் காட்சிகளில் மூழ்கவைக்கிறது. இதன் வழியே தொடரும் மலைப்பாதையில் சற்று மேலேறிச் சென்றால், மிக அற்புதமாக அமைந்துள்ள இயற்கையான குகைத்தளத்தை அடையலாம்.

மலைமேலுள்ள முருகன் கோயில்

இந்தப் பாதை வழியே சென்று குன்றின்மீது வெட்டப் பட்டிருக்கும் படிகளில் எச்சரிக்கையுடன் ஏறினால், குடைவரை அமைக்கப்பட்டிருக்கும் குன்றின் மேற்பரப்பை அடையலாம். பரவலான பாறைத்தளமாகப் பரந்து விரிந்த நிலையில் அமைந் துள்ள இம்மேற்பரப்பின் தொடக்கப்பகுதியில் கிழக்கு நோக்கிய முருகன் கோயிலொன்று கற்றளியாக எடுக்கப்பட்டுள்ளது.

விமானமும் முகமண்டபமுமாய் அமைந்திருக்கும் இந்தக் கோயிலின் தாங்குதளம் பாதபந்தமாக உபானத்திலிருந்து எழுகிறது. கீழே இரண்டு அடுக்குகளாலான துணைத்தளம். தாங்கு தளத்திற்கு மேலே வேதிக்கண்டமும் வேதிகையும் துணைக் கம்பும் இடம்பெற, கம்பின் மீதிருந்து சுவர் எழுப்பப்பட்டுள்ளது. சுவர்களில் காணப்படும் நான்முக அரைத்தூண்கள் வெட்டுத் தரங்கப் போதிகைக் கைகளுடன் உத்திரம் தாங்க, மேலே வாஜனம், தாமரையிதழ் வலபி, கூரை, கூரையின் வெளிநீட்ட லாய்க் கூடுகள் கொண்ட கபோதம். கபோதத்தின் மூலை, நடுப்பகுதிகளில் கருக்கணிகள். கீழ்த்தளச் சுவர்களின் முப்புறக் கோட்டங்களும் வெறுமையாக உள்ளன. பாதபந்தத் தாங்கு தளத்தின் ஜகதியிலும் குமுதத்திலும் கல்வெட்டுகள்.[10]

முதல் தளக் கூரையை அடுத்துப் பூமிதேசமும் வேதிகையும் ஆரமும் காட்டப்பட்டுள்ளன. அடுத்து இரண்டாம் தளமும் அதன் கூரைமீது நாகர கிரீவமும் சிகரமும் தூபியுடன் அமைந் துள்ளன. கிரீவ சுவரின் நாற்புறமும் உள்ள பெருநாசிகைகளில் முருகப்பெருமானின் திருவுருவங்கள். கிரீவம் அமர்ந்துள்ள வேதிகையின் நாற்புறமும் புறத்திற்கு இரண்டென மயில்கள்.

விமானக் கீழ்த்தளம் போலவே கட்டமைப்புக் கொண்டுள்ள முகமண்டபம் தெற்கிலும் வடக்கிலும் கோட்டங்கள் பெற்றுள் ளது. இக்கோட்டங்கள் வெறுமையாக உள்ளன. முகமண்டபத் தினுள் நடுப்பகுதியில் மயிலும் கருவறை வாயிலின் வலப்புறம் நாகர், பிள்ளையார் சிற்பங்களும் இடப்புறம் தலைப்பலிச் சிற்பமும் காணப்படுகின்றன.

கருவறையுள் முருகப்பெருமான் சமபாதராய், அறுமுகச் செவ்வேளாய்க் காட்சிதருகிறார். பெருமானின் வலமுன்கை காக்க, இடமுன்கை அருள்செய்கிறது. பிறகைகளில் வலப்புறம் கீழிருந்து மேலாகப் பாசம், ஈட்டி, தடி. சக்தி ஆகியன காட்டப் பட்டுள்ளன. மூன்றாவது கைக்கருவியை அடையாளம் காண முடியவில்லை. இடப்புறக் கைகளில் வேல், மணி, வில், சக்தி ஆகிய கருவிகள் இடம்பெற்றுள்ளன. நான்காம் கை, கடக முத்திரையில் உள்ளது.

கரண்டமகுடமும் கழுத்தணிகளும் கையணிகளும் கொண்டு பட்டாடையுடன் விளங்கும் பெருமானின் வலப்புறம் தெய்வா னையும் இடப்புறம் வள்ளியும் பெருமானைப் போலவே கிழக்குப் பார்வையராய்க் காட்டப்பட்டுள்ளனர். இருவருமே கரண்ட மகுடம் அணிந்து ஒரு கையில் மலரேந்தி, மறு கையை நெகிழ்த்திச் சமபாதத்தில் நிற்கின்றனர். தெய்வானை கச்சணிந்திருக்கிறார்.

முருகன் கோயிலுக்கு முன்னால், கிழக்கில், குடைவரையின் கருவறைக் கூரையாக விளங்கும் பாறைப்பகுதி உள்ளது. இதன் மீது செங்கல்லால் நாகர கிரீவமும் சிகரமும் மேலே தூபியும் காட்டியுள்ளனர். இதன் வழிக் குடைவரையின் கருவறை, மேலும் மூன்று அங்கங்கள் பெற்று விமானமாகியுள்ளது.

சிதைந்த கற்றளி

இந்தச் செங்கல் கட்டுமானங்களின் பின்புறத்தே, இரண்டு பெரும் பாறைகளுக்கிடையில் சிதைந்த நிலையில் கருவறை

மட்டும் கொண்டமைந்துள்ள கற்றளி ஒன்று காணப்படுகிறது. இங்குள்ள சிவலிங்கம் வழிபாட்டில் உள்ளது.

இத்திருமுன்னின் முன்புறத் தூணொன்றில் பிள்ளையாரின் ஊர்த்வஜாநு சிற்பமொன்று செதுக்கப்பட்டுள்ளது. வல முன்கையில் உடைந்த தந்தம்; பின்கையில் அங்குசம். இடமுன்கை அர்த்தரேசிதமாக அமையப் பின்கையில் மோதகம். துளைக்கை அம்மோதகத்தைச் சுவைபார்க்கிறது. வலக்கால் ஊர்த்வஜாநுவாக உயர, இடக்கால் பார்சுவமாக உள்ளது. கரண்டமகுடமும் முப்புரிநூலும் உதரபந்தமும் அழகுறக் காட்டப்பட்டுள்ளன. ஆடலுக்கேற்ப பிள்ளையாரின் கால்களில் சதங்கைகள். வலத் தந்தம் உடைந்துள்ளது. இவரின் இருபுறத்தும் தூண் காட்டி மேலே தோரணத்தால் இணைத்துள்ளனர்.

இந்தத் திருமுன்னின் வலப்புறப் பாறையின் பக்கத்திலுள்ள மற்றொரு பெரும் பாறையின் உச்சியில் கார்த்திகை விளக்கேற்ற விளக்குமாடம் ஒன்று அமைத்துள்ளனர். அதில் இருநூறு ஆண்டுகளுக்குப் பிறகு அண்மையில் விளக்கெரிக்கப்பட்டதைக் கோயிலார் மகிழ்வுடன் நினைவுகூர்கின்றனர்.

குகைத்தளமும் பிள்ளையார் திருமுன்னும்

குன்றின் இடைப்பகுதியிலுள்ள ஆத்மநாயகி கோயிலுக்குப் பின்னால் உள்ள பாறை முன்னோக்கிச் சரிந்து பின் உள்வாங்கி யிருப்பதால், இதன் கீழ்ப்பகுதி இயற்கையான குகைத்தளமாய், ஆத்மநாயகி கோயிலுக்கு வடக்கேயுள்ள முருகன் திருமுன்வரை நீண்டுள்ளது.

குன்றின் சரிவில் இணைக்கப்பட்ட நிலையில் அம்மன் கோயிலுக்குச் சற்றுத் தள்ளி, வடக்கில் சிறிய முன்றிலும் கருவறை யுமாய்ப் பிற்காலத்துப் பணியாகப் பிள்ளையார் திருமுன் ஒன்று கட்டப்பட்டுள்ளது. முறையான தாங்குதள அமைப்பற்ற இத்திரு முன்னின் கருவறையில் பிள்ளையார் பின்கைகளில் பாசமும் அங்குசமும் கொண்டு, முன்கைகளில் தந்தமும் மோதகமும் காட்டித் துளைக்கை மோதகத்தைச் சுவைபார்க்கக் கரண்ட மகுடராய்த் தாமரைத் தளத்தில் இலலிதாசனத்தில் உள்ளார்.

இந்தப் பிள்ளையார் திருமுன்னிற்குத் தெற்கில், மேலுள்ள குடைவரைக் கோயிலுக்கு ஏறிச் செல்ல வாய்ப்பாகப் படிகள்

காணப்படுகின்றன. இவ்வழியில் தனியராய்க் காணப்படும் சண்டேசுவரர் பிற்காலத் திருமேனியர்.

அன்னையர் எழுவர்

சண்டேசுவரரை அடுத்துள்ள நடைப்பகுதியில் மலைச் சரிவின் கிழக்கு முகத்தில் ஆழமான கோட்டம் அகழ்ந்து அதில் அன்னையர் எழுவர் சிற்பங்களையும் சிவபெருமானின் வடிவத் தையும் செதுக்கியுள்ளனர்.[11] இக்கோட்டத்தின் உயரம் 1. 47 மீ. தென்வடலாக இதன் நீளம் 3. 56 மீ. தென்புற அகலம் 73 செ. மீ. வடபுற அகலம் 69 செ. மீ. இக்கோட்டத்தின் தென்புறத்தே சிவபெருமானும் வடபுறத்தே சாமுண்டியும் எதிரெதிராக அமர்ந் திருக்க, மேற்கில் மற்ற ஆறு அன்னையரும் கிழக்குப் பார்வை யாகக் காட்டப்பட்டுள்ளனர்.[12] பாறைத்தளத்தில் வலக்காலைக் கிடத்தி இடக்காலைக் கீழிறக்கிச் சுகாசனத்திலுள்ள இந்த எட்டு வடிவங்களும் அற்புதமான சிற்பங்களாகும்.

சிவபெருமான் நந்திதேவராக உருவாக்கப்பட்டுள்ளார். இடுப்பிலிருந்து வரிவரியாகக் கீழிறங்கும் ஆடை இழுத்துச் சுருக்கியது போல் முழங்கால்வரை காட்டப்பட்டுள்ளது. வலக்கை விரல்களை மடக்கித் தொடைமேல் இருத்தி, இடக்கை யில் கடகம் காட்டும் பெருமானின் நீள்செவிகளில் குண்டலங் கள் இல்லை. கனத்து விரியும் சடைபாரத்துடன், இடப் பாதத்தை அதற்கென அமைந்த தளத்தில் இருத்திச் சற்றே முன்தள்ளிய அமர்வில் காட்சிதரும் இறைவனின் பின்புறம் தனித் தளத்தில் அமர்ந்த நிலையில் நந்தி.[13]

அன்னையர் அறுவரும் அமர்ந்திருக்கும் தளம், கீழே ஜகதி யும் மேலே பெருவாஜனமும் கொண்டு, இடைப்பட்ட நிலையில் கம்புகளற்ற கண்டம் கொண்டமைந்துள்ளது. ஜகதி யிலிருந்து அன்னையர்தம் இடத்திருவடிகட்கு ஆங்காங்கே தனித் தளங்கள் நீட்டப்பட்டுள்ளன. இங்குக் காட்டப்பட்டுள்ள பாதந்தாங்கி போலவே தூசி மாமண்டூரில் உள்ள பல்லவக் குடைவரை ஒன்றில் வாயிற்காப்போருக்குத் தாள் தாங்கிகள் காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.[14]

அன்னையர் அறுவரும் பட்டாடை அணிந்துள்ளனர். இரண்டு கைகள் மட்டுமே பெற்றுள்ள இவர்தம் இடக்கைகள் தொடைமீது இருத்தப்பட்டுள்ளன. கடகத்திலுள்ள வலக்கை களின் பின்னால் அவரவர்க்கு உரிய கருவிகள் காட்டப்

பட்டுள்ளன. அனைவரும் மார்புக் கச்சுடன், சரப்பளி, கங்கணம், பட்டை வளைகள் அணிந்துள்ளனர்.

மூன்று தலைகளைச் சுற்றிலும் பெரிய ருத்திராக்கங்களா லான தலைமாலையணிந்து, செவிகளில் பூட்டுக் குண்டலங் களும் கழுத்தில் மணியாரமும் பெற்றுள்ள நான்முகியின் வலக் கையின் பின்னால் குண்டிகை சுரைக் குடுவையெனக் காட்டப் பட்டுள்ளது. மயேச்சுவரி ஒரு செவியில் பூட்டுக் குண்டலமும் மறு செவியில் மகரகுண்டலமும் அணிந்து, கழுத்தில் ஆரம் ஒன்றும் அழகுசெய்யச் சடைமகுடத்துடன் வலக்கையின் பின்னே மழுவேந்திக் காட்சிதருகிறார்.

அதே போன்ற அணிகலன்களுடன், நெற்றி மேல் சென்னி அணிந்தவராய், வலக்கையின் பின்னே சக்தி கொண்டு கௌமாரி புன்னகைக்க, அடுத்தமர்ந்துள்ள வைணவி கிரீட மகுடத்துடன் வலக்கையின் பின்னால் சங்கு வைத்துள்ளார். இந்திராணி கிரீட மகுடராய், வலக்கையின் பின் வஜ்ரம் காட்ட, வராகி கரண்ட மகுடத்துடன் வீற்றிருக்கிறார். இவரது வலக்கையின் பின்னே கலப்பை. அன்னையர் அறுவர் தோள்களிலும் சடைப்புரிகள். ஆனால் யாருக்கும் முப்புரிநூல் இல்லையென்பது குறிப்பிடத் தக்கது.

சாமுண்டி தனிப்பெருந் தேவியாய்க் கோட்டத்தின் வட திருப்பத்தில், தென்பார்வையாய், எதிரிலிருக்கும் நந்திதேவரைப் பார்த்தபடி அமர்ந்துள்ளார். மார்புக் கச்சோ, கை வளைகளோ இல்லை. தனித் தளத்தில் இருத்தப்பட்டிருக்கும் தேவியின் இடப் பாதத்திற்கு முன்னால் தரையில் எருமைத் தலை காட்டப்பட்டுள் ளது.[15] இடுப்பாடை முழங்காலுக்கு மேலே சுருக்கப்பட்டுள்ளது.

படியச் சீவி உச்சியில் கொண்டையிட்ட சடைபாரமும் மிகப் பெரிய முகமும் கொண்டுள்ள அம்மையின் செவிகள் மிக நீளமாய்க் கீழிறங்கிப் பிணக் குண்டலங்களுடன் தோள்களை வருடுகின்றன. கொண்டையின் முகப்பில் மண்டையோடு. முப்புரிநூல் ருத்திராக்க மாலையாய் மார்பின் குறுக்கே ஓட, நடுவில் பெரிய மணியுடன் அமைந்த கழுத்தணி மார்பை அலங்கரிக்கிறது. அம்மையின் உயர்த்திய வலக்கையில் இருக்கும் பொருளை இனம் காணமுடியவில்லை. இடக்கை மற்ற அன்னையர் போல் இடத்தொடையில். அம்மையின் முகம்

உக்கிரத்திலும் கருணை காட்டும் அதிசய உணர்வுக் கலவையாய்க் காட்சிதருகிறது.

இவ்வன்னையரின் முன்னுள்ள நடைப்பகுதியை மண்டபமாக்கியுள்ளனர். இதற்காகவே அன்னையர் செதுக்கப்பட்டுள்ள மலைப்பாறையின் மேற்பகுதியில் குழிவுசெய்து, செவ்வகப் பாறைப் பாளங்களை நுழைத்து அவற்றின் மறு முனையை எதிர்த் திசையில் தூண்களின் மீதோடும் உத்திரத்தின் மீது நிறுத்தியுள்ளனர். இம்மண்டபத்தின் எதிரிலுள்ள மலைத்தளத்தில் பலா மரமொன்றும் அதன் நிழலில் சிவலிங்கமொன்றும் உள்ளன.

நடைமண்டபத்திலிருந்து எட்டுப் படிகள் மேலேறினால் குடைவரையின் முன்னாலுள்ள பெருமண்டபத்தை அடையலாம். இந்த வழியிலுள்ள மலைச்சரிவில் சோணாடு கொண்டருளிய சுந்தரபாண்டியரின் பேரளவிலான கல்வெட்டொன்று காணப்படுகிறது.[16] அதற்குக் கீழே சற்று வடபுறமாக 1. 35 மீ. உயரம், 93 செ. மீ. அகலம், 58 செ. மீ. ஆழத்திற்கு ஒரு கோட்டம் குடைந்து அதில் இலிங்கத்திருமேனியை உருவாக்கியுள்ளனர்.

அரைவட்ட வடிவில் அமைந்துள்ள ஆவுடையார் ஜகதி, உருள்குமுதம், கம்பு, கண்டம், கம்பு, பட்டிகை முதலிய உறுப்புகளைக் கொண்டு பாதபந்தமாய் அமைந்துள்ளது. இதன் மேல் 36 செ. மீ. உயரத்திற்கு இலிங்கபாணம் காட்டப்பட்டுள்ளது. இது போன்ற இலிங்கங்கள் குன்றக்குடி, கோகர்ணம், மலையக்கோயில் போன்ற இடங்களிலும் குடையப்பட்டிருப்பது இங்கு நினைக்கத்தகுந்தது. தொண்டை மண்டலக் குடைவரைகளில் இது போன்ற இலிங்கங்களைக் காணமுடிவதில்லை.

மலையின் மேற்பகுதியில் அமைந்திருக்கும் குடைவரையே இங்குள்ள கோயில்களுள் காலத்தால் பழைமையானதாகும். இக்குடைவரையின் முன்னால் பிற்காலத்தில் பெருமண்டபம் ஒன்றும் அதற்கும் முன்னால் முன்மண்டபமொன்றும் கட்டி உள்ளனர்.

முன்மண்டபம்

முன்மண்டபத்தின் கிழக்கு முகமும் தென்முகமும் திறப்பாக உள்ளன. தென்முகத்தே செங்கல்லால் ஆன பிடிச்சுவரும் கிழக்கில் கம்பித் தடுப்பும் உள்ளன. இந்த மண்டபத்தைப்

பூமொட்டுப் போதிகைகள் கொண்ட பல தூண்கள் தாங்கு கின்றன. இவற்றுள் ஒன்றில் சிதம்பரமூர்த்தி என்ற பெயர் வெட்டப்பட்டுள்ளது. இது இத்தூணைத் தந்தவரின் பெயராக லாம். மண்டபத்தை எடுப்பித்த தம்பதியரின் திருவுருவங்கள் தூண்களின் கீழுள்ள சதுரங்களில் வெட்டப்பட்டுள்ளன.

புடவையைத் தலையைச் சுற்றி முக்காடிட்டு வலப்புற மாய்த் தோளில் சரித்துள்ள அம்மை, இருகைகளையும் வணக்க முத்திரையில் கொண்டு நின்றகோலத்தில் இறைவனை வணங்கு கிறார். இவர் கணவர் சற்றுத் தள்ளி மற்றொரு தூணில் வணக்க முத்திரையில், பட்டாடையும் திறந்த மார்பினருமாய்க் காட்சி தருகிறார்.

இந்த முன்மண்டபத்தின் வடபுறத்தே இரண்டு திருமுன்கள் உள்ளன. முதலில் இருப்பது ஆடவல்லான் திருமுன். கல்வெட்டு களில், 'அழக நட்டப் பெருமாள்' என்றழைக்கப்படும் இவர் திருமுன் தெற்கு நோக்கியமைந்துள்ளது. இத்திருமுன்னில் நான்கு சுவர்களிலும் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.[17] இவற்றுள் ஒன்று பாடல் கல்வெட்டாகும்.

கருவறையின் முன், கிழக்கிலும் தெற்கிலும் திறப்பாக உள்ள அகலமான மேடை இதன் மேற்குப்புறம் சுவரால் மறைக்கப் பட்டுள்ளது. தெற்கில் இம்மேடையை அடையப் படிகள் உள்ளன. இத்திருமுன்னில் ஆடவல்லானும் உமையும் கல் திருமேனியராய் இருந்தும் அண்மைக் காலக் குடமுழுக்குக் கோலாகலங்களில் சிக்கிக் கொண்டதால், பல வண்ணப்பூச்சில் மூலநிறமும் எழிலும் இழந்து மினுமினுக்கின்றனர்.

ஆடவல்லானாய் ஆனந்தத் தாண்டவமிடும் சிவபெருமான் வலக்காலை முயலகன் முதுகின் மீதிருத்தி, இடக்காலை வலப் புறம் வீசியுள்ளார். குப்புற விழுந்திருக்கும் முயலகனின் கைகள் இரண்டில் காணப்படும் பாம்பின் உடலும் வாலும் அவன் கீழ் நசுங்க, அதன் படமெடுத்த தலையின் மீது இறைவனின் தூக்கிய திருவடி இருத்தப்பட்டுள்ளது. ஆடவல்லானின் பின் கைகளில் தீயகலும் துடியும். முன்கைகளில் வலக்கை காக்கும் குறிப்புக் காட்ட, இடக்கை வேழ முத்திரையில் உள்ளது.

விரிசடையில் மயிலிறகும் கொக்கிறகும் கொண்டு, அரையில் புலித்தோல் வீக்கி ஆடும் பெம்மானின் இடப்புறம்

கரண்டமகுடத்துடன், இடக்கையை நெகிழ்கையாக்கி வலக் கையில் மலரேந்தி அத்தனின் ஆடலை அனுபவித்தபடி உமை. இந்தத் திருமுன்னுக்கு முன்னாலுள்ள தூணொன்றின் கீழ்ச் சதுரத்தில் இதை எடுத்த பெரியவரின் திருமேனி சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது.

இத்திருமுன்னுக்குச் சற்றுத் தள்ளி ஏறத்தாழ அதே அளவில் முன் மேடையில்லாமல் மற்றொரு திருமுன். வடகிழக்கில் அமைந்துள்ள இத்திருமுன்னில் பாண்டிய மண்டலத்தின் சிறப்புக்குரிய தெய்வமான பைரவர், தெற்கு நோக்கிய பார்வை யில் எழுந்தருளியுள்ளார். இத்திருமுன்னும் திருமேனியும் பிற்காலத்தன.

முன்கைகளில் முத்தலையீட்டியும் தலையோடும் கொண்டு, பின்கைகளில் உடுக்கையும் பாம்பும் ஏந்திச் சமபாதத்தில் சினக் கோலத்தில் சுடர்முடியும் கோரைப்பற்களும் கொண்டு உடல் மீது மண்டையோடும் ருத்திராக்கமும் கலந்திணைந்த மாலை யணிந்து காட்சிதருகிறார் பைரவர். பின்னால் அவர் வாகனமான நாய், இறைவன் கையிலிருக்கும் தலையோட்டு ஊனைச் சுவைக்கும் நிலையில் காட்டப்பட்டுள்ளது. இவ்வமைப்புப் பெரிச்சியூர் கோயில் பைரவர் சிற்பத்தை நினைவூட்டுகிறது.[18]

இந்த முன்மண்டபத்திலிருந்து மலையின் முப்புறமும் பல்வேறு காட்சிகள் பார்வைக்குக் கிடைக்கின்றன. கோயிலுக்கு வருபவர்கள், இறங்கிச் செல்பவர்கள், கீழே தெரியும் சில தெருக்களே அடங்கிய திருக்கோளக்குடி ஊர், தொலைவில் தெரியும் மிதிலைப்பட்டி, பாதைகள், அவற்றில் நெளியும் ஊர்திகள் என்று பார்க்கும் கண்களுக்கும் அவற்றின் பின்னே நிற்கும் உள்ளங்களுக்கும் ஏற்பப் பல நூறு காட்சிகள்.

முன்மண்டபத்து மேற்குச் சுவரின் கீழ்ப்பாதி முழுமையும் கல்வெட்டுகளால் நிரப்பப்பட்டுள்ளது.[19] இச்சுவரின் நடுப்பகுதி யில் 2.33 மீ. உயரத்திற்கும் 1.19 மீ. அகலத்திற்குமாய் அமைந்துள்ள வாயில், பெருமண்டபத்திற்குள் வழிகூட்டுகிறது. வாயிலுக்கு முன்னால் இருபுறத்தும் சட்டத்தலை பெற்ற உருளை அரைத் தூண்கள் பக்கத்திற்கு இரண்டெனக் காட்டப்பட்டுள்ளன. நாகபந்தங்கள் பெற்ற சதுர பாதங்களுடன் தொடங்கும் இவற்றின் கீழே கபோதமும் கண்டமும் காட்டப்பட்டுள்ளன.

இது மேற்குச் சுவரின் கீழ்ப்பகுதியில் காணப்படும் வேதிகைத் தொகுதியின் உறுப்பு மாறுபாடாகும். அனைத்து மேலுறுப்புகளும் கொண்டுள்ள இத்தூண்களின் தாமரைப் பலகைகளின் மேல் வீரகண்டமும் போதிகைகளும் காட்டப்பட்டுள்ளன. போதிகைகளின் நாணுதல்கள் கீழிறங்க, மதலைகள் உத்திரம் தாங்குகின்றன. மேலே வாஜனமும் தாமரை வலபியும். உத்திரம் வாயிலுக்கு முன்னால் படர்ந்து பரந்துள்ளது. இதன் கீழ் முகத்தில் தாமரைப் பதக்கம் வெட்டப்பட்டுள்ளது.

நிலைக்கால்களும் மேல், கீழ்நிலைகளும் கொண்டு வாயில் அமைந்துள்ளது. நிலைக்கால்களின் முதலடுக்கில் நாகபந்தமும் அதற்கு மேல் தாமரையிதழ் வரியும் செதுக்கப்பட்டுள்ளன. இதையடுத்துள்ள அடுக்குக் குழிந்தபகுதியாக உருளைக்கால் வரி கொண்டு அமைய, மூன்றாம் அடுக்கு மேனோக்குத் தாமரை வரியுடன் அழகுபடுத்தப்பட்டுள்ளது. உத்திரத்தின் கிழக்கு முகத்தில் புதிய கல்வெட்டொன்று கண்டறியப்பட்டது.[20]

பெருமண்டபம்

இவ்வாயில் வழியே மிகப் பரந்து விரிந்து அமைந்துள்ள பெருமண்டபத்துள் நுழையலாம். நாற்புறச் சுவர்களிலும் கல்வெட்டுகள் கொண்டுள்ள இம்மண்டபத்தை மூன்று வகையான தூண்கள் தாங்குகின்றன. இத்தூண்கள் அனைத்துமே உடலமைப்பில் ஒன்றாகவும் போதிகை மற்றும் மேலமைப்புகளில் மாறுபட்டும் உள்ளன. மூன்று சதுரங்களும் இரண்டு கட்டுகளுமென அமைந்துள்ள இவற்றின் சதுரங்களுக்கும் கட்டுகளுக்கும் இடையில் தாமரைக்கட்டு காட்டப்பட்டுள்ளது. கட்டுகளின் நடுப்பகுதியில் ஒரு பட்டையும் கீழ்ச்சதுரத்தின் மேலே நாகபந்தங்களும் உள்ளன.

தென்புறத்தே உள்ள தூண்களின் கீழ்ச்சதுரங்களின் தலைப்பில் பேரளவிலான நாகபந்தமும் முகங்களில் கொடிக்கருக்கும் செதுக்கப்பட்டுள்ளன. மேற்சதுரங்களின் மேலுள்ள வெட்டுத் தரங்கப் போதிகைகளின் கைகள் உத்திரம் தாங்க, மேலே வாஜனமும் வலபியும் கூரையும். இந்தத் தூண்வரிசைக்கு நேராகக் கிழக்கு, மேற்குச் சுவர்களில், தூணின் மேற்பகுதியான தாமரைப் பலகையும் போதிகையும் மட்டும் காட்டி அங்கும் தூண்கள் இருப்பது போன்ற தோற்றத்தை உருவாக்கியுள்ளனர்.

இரண்டாம் வகைத் தூண்கள் மண்டபத்தின் கிழக்கு, மேற்குப் பகுதிகளில் மூன்று வரிசைகளாய் அமைந்துள்ளன. இவற்றின் போதிகைகள் மதலைகளை மேல் வளைத்து நாணுதல் களைத் தாழ்த்தியுள்ளன. மேற்கு வரிசைக்கு மட்டும் வட, தென்சுவர்களில் இவற்றிற்கு நேராக இருப்பது போல் தாமரைப் பலகையும் போதிகையும் காட்டப்பட்டுள்ளன.

இரண்டாம் வகைத் தூண்களின் மேற்கு, கிழக்கு வரிசை களுக்கு இடைப்பட்ட மண்டபத்தின் நடுப்பகுதியில் மற்ற பகுதி களைவிட கூரை உயர்த்தப்பட்டுள்ளது. இங்குதான் மூன்றாம் வகைத் தூண்கள் இடம்பெற்றுள்ளன. இரண்டாம் வகைத் தூணுடன் ஒவ்வொரு தூணுக்கும் உடனிருப்பாக அதன் முன் பகுதியில் மற்றொரு தூண் இணைக்கப்பட்டுள்ளது. இந்த உடனிருப்புகளின் கீழ்ப்பகுதி உபானம், பத்மம், சிறு கண்டம், அதன் மேல் கூடுகளுடன் கபோதம், சிறு கம்பு என அமைய, பாதம் நாகபந்தத்துடன் முப்புறமும் பூவேலைகள் கொள்ள, அதன்மீது இருஉருளைகள் இடையில் குழிவுடன் கால்பகுதி யாய் எழுகின்றன. இவற்றின் பக்கங்களிலும் குழிவையொட்டி யும் தாமரையிதழ் அணைவு. குழிவுகளில் குமிழ் வேலைப்பாடு.

மேற்பகுதியில் மாலைத்தொங்கல், தாமரைக்கட்டு, கலசம், தாடி, கும்பம், கண்டம், தாமரை, பலகை, சிறிய வீரகண்டம், மதலை அதன் பின் இரண்டு யாளிகளென உறுப்புகள் அமைய, மதலையின் மேலுள்ள போதிகைத் தளத்தில், அமர்ந்த சிம்மம் காட்டப்பட்டுள்ளது. இதன் மீது மீண்டுமொரு தாமரைத்தள மும் பலகையும் அமைய உத்திரம், வாஜனத் தழுவலில் வலபி, கூடுகளோடு கபோதம் ஆகியனவும் காட்டப்பட்டுள்ளன. எட்டுக் கூடுகள் திசைக்கு இரண்டென இந்நடுப்பகுதிக் கூரையில் அமைந்து இப்பகுதியைத் தனிச் சிறப்புக்குரியதாக்குகின்றன. இவை தவிர மூலைகளில் அரைக்கூடுகள் காட்டப்பட்டுள்ளன.

பெருமண்டபத்தின் வடசுவரையொட்டி நீளமான மேடை இழுக்கப்பட்டுள்ளது. அதில் செப்புத்திருமேனிகள் இருத்தப் பட்டுள்ளன. அவற்றுள் உமையும் ஆடவல்லானும் இருக்கும் பகுதி தனி முகப்புப் பெற்றுச் சிறப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கு முன்னால்தான் அமர்ந்த சிங்கங்களைத் தலையில் கொண்டுள்ள தூண்கள் எழுகின்றன.

மண்டபத்தின் தென்மேற்கில் சுவர் எழுப்பி ஓர் அறை போலத் தடுத்திருக்கிறார்கள். வௌவால்கள் வாசம் செய்யும் இந்த அறையின் மேற்குச் சுவரில் இரண்டு புதிய கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன.[21] இவ்வறையின் வெளிச்சுவருக்கு முன்னால் பெருமண்டபத்தில் தனி மேடையில் சோமாஸ்கந்தர். அருகே தாமரைத்தளத்தில் நின்றவராய் உமை.

பெருமண்டபத்திற்குள் நுழையக் கிழக்கு வாயில் தவிர தெற்கிலும் வடக்கிலும் வாயில்கள் உள்ளன. வடக்கு வாயில் அன்னையர் எழுவர் காட்டி, ஆத்மநாயகி அம்மன் கோயிலுக்கும் தெற்கு வாயில் மலைப்பாறையில் அகழப்பட்டுள்ள பிள்ளையார் திருமுன்காட்டிச் சுனைக்கும் அழைத்துச் செல்கின்றன. இந்த மண்டபத்தின் கிழக்கு வாயிலின் வடபுறத்தே தனியராய்க் கதிரவன்.

பெருமண்டபத்திலுள்ள செப்புத் திருமேனிகளுள் எதுவும் பழைமையானதல்ல. இருக்கும் திருமேனிகளுள் ஆடவல்லான் தொகுதியும் சோமாஸ்கந்தர் தொகுதியும் கலைநயத்துடன் காட்சியளிக்கின்றன. ஆடவல்லான் விரிசடையில் வலப்புறம் கங்கையும் இடப்புறம் பிறையும் திகழத் தலையின் முகப்பில் மண்டையோடும் கட்டிய சடைகளில் கொக்கிறகு, ஊமத்தம்பூ போன்றவையும் கொண்டு, பின்கைகளில் உடுக்கை, தீயகல் ஏந்தி, முன்கைகளில் வலக்கையைக் காக்கும் குறிப்பிலும் இடக் கையை வேழ முத்திரையிலும் காட்டி அருளாட்சி செய்கிறார்.

ஊன்றிய இவரது வலப்பாதம் முயலகனின் முதுகை அழுத்த, உயர்த்திய இடப்பாதம் ஆனந்தத் தாண்டவக் கோலத்தில் வலப் புறம் வீசப்பட்டுள்ளது. முயலகனின் கையில் பாம்பிருப்பது போல் இறைவனின் திருக்கையைச் சுற்றியும் படமெடுத்த பாம்பு. ஆடும் இறைவனின் அருகே சடையை மகுடமாய் முடித்த அன்னை, இடக்கையை நெகிழ்த்தி வலக்கையில் மலரேந்திக் காட்சியளிக்கிறார். மறுபுறம் மாணிக்கவாசகர், அக்கமாலை உள்ள வலமுன்கையில் சின்முத்திரை காட்டி, இடக்கையில் ஓலைச் சுவடியொன்று ஏந்திச் சுருள் முடியும் ருத்திராக்க மாலையுமாய்ச் சிவப்பழமாய்க் காட்சிதருகிறார். கையிலுள்ள ஓலைச்சுவடியில் நமசிவாய என்ற ஐந்தெழுத்து மந்திரம்.

முருகு உடனுறை சிவசக்தியாக சிவபெருமானும் உமையும் சுகாசனத்தில் இருக்க, இடையில் சிறு பிள்ளையாய் முருகன்.

வழக்கமான கோலத்தில் வழக்கமான அழகுகளுடன் அமைக்கப் பட்டிருக்கும் இத்திருமேனித் தொகுப்புடன் தனித் தேவியும் உடன்கூட்டமாய் எழுந்தருளியுள்ளார்.

பெருமண்டபம், குடைவரைக்கு முன்னிருக்கும் பாறைப் பகுதியையே தரையாகக் கொண்டு, ஆங்காங்கே கற்கள் பாவி எழுப்பப்பட்டுள்ளது. பார்வையில் படும் இதன் தென்புறச் சுவரின் புறப்பகுதி அலங்கரிப்பின்றியிருக்க, மறைப்பிலுள்ள வடசுவரின் புறப்பகுதி அரைத்தூண்கள் பெற்று வனப்புடன் விளங்குகிறது.

பெருமண்டபத்திலிருந்து குடைவரைக்குள் நுழைய அமைந் துள்ள வாயிலின் இருபுறமும் கோட்டப் பஞ்சரங்கள். இவற்றுள் தென்புறப் பஞ்சரத்தின் கோட்டத்தில் புதிய கல்வெட்டொன்று கண்டுபிடிக்கப்பட்டது.[22]

குடைவரையின் முற்பகுதி

குடைவரையின் முன்னால் வாயிலுடன் கற்சுவரொன்று எழுப்பி, அது குடைவரைக் கபோதத்திற்கு மேலிருந்து நீளும் பாறைப்பகுதியுடனும் பக்கவாட்டில் உள்ள பாறைச்சுவர்களுட னும் பொருந்துமாறு அமைத்து இந்தப் பெருமண்டபம் உருவாகக் காரணமாயிருந்தவர்கள், மற்றொரு துன்பமான திருப்பணியும் செய்து குடைவரையின் அழகையும் கெடுத்து, அதன் வரலாற்று விடிவிளக்குகளையும் அறியாமையால் மறைத்திருக்கிறார்கள்.

குடைவரைக்கு ஏற அதன் முகப்புக்கு முன்னுள்ள தரை யிலிருந்து படிகள் உள்ளன. இப்படிகள் குடைவரையின் தென் புறம் வெட்டப்பட்டுள்ளன. ஒரு சந்திரக்கல்லும் மேலே நான்கு படிகளும் கொண்ட இந்தப் படித்தொடருக்கு அணைவாய்ப் பிடிச்சுவரொன்று யானைத் துளைக்கைப் போல அமைந் துள்ளது. இந்தப் பிடிச்சுவரில் முதலாம் குலோத்துங்கரின் கல்வெட்டு ஒன்று புதிய கண்டுபிடிப்பாய்க் கிடைத்தது. இப்படிக்கட்டுகளுக்கு எதிரே உள்ள சுவரிலிருந்தும் புதிய கல்வெட்டொன்று கிடைத்தது.[23]

இந்தப் படிக்கட்டுப் பகுதியையும் குடைவரையின் முகப்புக்கு முன்னுள்ள தரையமைப்பையும் பின்னாள் திருப்பணி

யாளர்கள் என்ன காரணத்தாலோ மூடித் தளமிட்டு, முன்னால் ஒரு பெருமண்டபமும் எடுத்துக் குடைவரையின் பழைய அமைப்பை மாற்றியிருக்கிறார்கள். ஆய்வின்போது மூடப் பட்டுள்ள தரை முகப்பிலிருந்து கண்டறியப்பட்ட, பாதி மறைக்கப்பட்ட நிலையில் இருந்த இரண்டாம் இராஜராஜரின் கல்வெட்டைப் படியெடுக்கக்கூடவில்லை. கற்பூரத்தட்டு, செம்பில் செய்யப்பட்ட சிறிய யானை வடிவம் போன்றவையும் படிகளின் கீழ்ப்பகுதியிலிருந்து கண்டெடுக்கப்பட்டன.

மலைமூர்த்தி விநாயகர்

இந்தப் படிவரிசைக்குப் பின்னுள்ள மலைச்சரிவில்தான் கிழக்குப் பார்வையாய்ப் பிள்ளையார் வடிவம் செதுக்கப்பட்டுள் ளது. மிகப்பெரிய வடிவமாய்க் காட்டப்பட்டுள்ள இப்பிள்ளை யாரின் முன்னால் கட்டடம் எழுப்பித் தனித் திருமுன்னாக்கி இருக்கிறார்கள். 4. 99 மீ. நீளமும் 2. 31 மீ. அகலமும் உடைய இம்மண்டபத்தின் மேற்குச் சுவராகப் பாறைச்சரிவே கொள்ளப் பட்டுள்ளது. இச்சரிவில் ஒரு கல்வெட்டும் இடம்பெற்றுள்ளது.[24]

மலைமூர்த்தி விநாயகர் என்றழைக்கப்படும் இப்பிள்ளை யார் கிழக்குப் பார்வையாய் 1. 68 மீ. உயரமும் 1. 48 மீ. அகலமும் 56 செ. மீ. ஆழமும் கொண்ட கோட்டத்தில் சம்மணமிட்ட நிலையில் உருவாக்கப்பட்டுள்ளார். பாண்டியர் பகுதியிலுள்ள பழைய சிற்ப வடிவங்கள் சில இப்படிச் சம்மணமிட்ட நிலையிலேயே காட்டப்பட்டுள்ளமை இங்கு நினைக்கத்தக்கது.[25]

பிள்ளையாரின் முன்னால் பெரிய கல் உருண்டையொன்று காட்டப்பட்டுள்ளது. இதைப் பலாப்பழம் என்கிறார்கள். இதன் வலப்புறம் வாழைப்பழ அடுக்கொன்று கல்லில் காட்டப் பட்டுள்ளது. இடப்புறமும் இரண்டு சிறு கல்லுருண்டைகள் மாங்கனி வடிவத்திலுள்ளன. முக்கனி விழைந்தவராய் அமர்ந் துள்ள இவ்வலம்புரிப் பிள்ளையாரின் பின்கைகளில் வலப்புறம் தடியும் இடப்புறம் கரும்புத்தோகையும் காட்டப்பட்டுள்ளன.

முன்கைகளில் வலப்புறம் மோதகமும் இடப்புறம் தந்தமும் உள்ளன. வலம்புரித் துளைக்கையிலும் மோதகம். பொதுவாகப் பிள்ளையாரின் வலத்தந்தம் உடைந்திருக்கும். அந்த உடைந்த பகுதியை அவர் வலக்கையில் கொண்டிருப்பார். இங்கோ

இடத்தந்தம் இல்லாமல் உள்ளது. அந்தத் தந்தம் இடக்கையில் இருப்பதும் பொருத்தமாகவே உள்ளது. கழுத்தில் சரப்பளி. நெற்றிப்பட்டமும் முகப்பணிகளும் கொண்ட கரண்டமகுடம் அணிந்து, கங்கணங்கள் பொலிய, முப்புரிநூல் பெற்று, கணுக் கால்வரை ஆடையணிந்து செம்மாந்து அமர்ந்துள்ளார் இந்தப் பாறைப் பிள்ளையார். பிள்ளையாரின் பழங்கால வடிவங்களுள் குறிப்பிடத்தக்கன பாண்டிய மண்டலத்திலேயே கிடைப்பது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செய்தியாகும்.

குடைவரை

இந்த மலைமீது முதன் முதலாக எடுக்கப்பட்ட இறைக் கோயில் இங்குள்ள குடைவரைதான். இதன் அமைப்புமுறையும் கட்டட உறுப்புகளின் வளர்ச்சிநிலையும் இதைக் கி. பி. எட்டாம் நூற்றாண்டளவில் எடுக்கப்பட்டதாகக் காட்டுகின்றன.

முகப்பு, முகமண்டபம், உள்மண்டபம், கருவறை என்றமைந் துள்ள இக்குடைவரையின் முகப்புக்கு முன்னுள்ள தரை அமைப்பு தென்வடலாக 6. 90 மீ. நீளமும் கிழக்கு மேற்காக 1. 13 மீ. அகலமும் கொண்டமைந்துள்ளது. முகப்பையொட்டிய இதன் முதற்பகுதி பாறையாகவும் பெருமண்டபச் சுவரையொட்டிய பின்பகுதி கல் பாவிய தளஅமைப்பாகவும் உள்ளன. இத்தள அமைப்பின் கீழ்தான் இக்குடைவரையின் படிக்கட்டுகள் மறைக்கப்பட்டுள்ளன.

குடைவரைக்கு முன்னால் நிற்கும் பெருமண்டபச் சுவர், வாயிலுக்குத் தென்புறத்தே 2. 53 மீ. அளவும் வடபுறத்தே 2. 60 மீ. அளவும் பரந்து, குடைவரை முகப்பின் முன்னுள்ள பக்கச் சுவர் களுடன் இணைகின்றது. இப்பக்கச்சுவர்கள், குடையப்பட்ட பாறையின் பக்கப் பகுதிகளாகும். இவற்றுள் வடபுறச் சுவரின் அகலம் 1. 32 மீ. தென்புறச் சுவரின் அகலம் 1. 35 மீ.

முகப்பு

நடுவில் இரண்டு முழுத்தூண்களையும் பக்கங்களில் இரண்டு அரைத்தூண்களையும் கொண்டு உருவாகியுள்ள முகப்பு, கிழக்கு மேற்காக 81 செ. மீ. அகலத்திலும் தென்வடலாக 6. 52 மீ. நீளத்திலும் அமைந்துள்ளது. முகப்புத் தூண்கள் அனைத்துமே சதுரம், கட்டு, சதுரம் என்ற அமைப்பில், சதுரங்

களின் அனைத்து முகங்களிலும் தாமரைப் பதக்கங்கள் கொண்டு வடிக்கப்பட்டுள்ளன. அரைத்தூண்களின் கிழக்கு முகங்களில் மட்டும் அரையளவே காட்டப்பட்டுள்ள இத்தாமரைப் பதக்கங்கள், பல்லவர் பதக்கங்களைப் போலவே குவி, விரிஇதழ்கள் கொண்டு தாமரையைச் சுற்றி வட்டம், பின் அதைச் சுற்றிச் சதுரமென அணி செய்யப்பட்டுள்ளன. தெற்கு அரைத்தூணின் கீழ்ச்சதுரத்தில் உள்ள மேற்குமுகத் தாமரை சிதைந்துள்ளது. இத்தூண்கள் நான்குமே கல்வெட்டுகளைக் கொண்டுள்ளன.[26]

வடக்குத் தூணின் கீழ்ச்சதுரம் 72 செ. மீ. உயரமுடையதாகவும் 65 செ. மீ. அகலமுடையதாகவும் உள்ளது. இதன் மீதுள்ள கட்டு 92 செ. மீ. உயரமும் 2.11 மீ. சுற்றளவும் கொண்டிருக்க, மேற்சதுரம் 71 செ. மீ. உயரமும் 61. 5 செ. மீ. அகலமும் பெற்றுள்ளது.

தெற்குத் தூணின் கீழ்ச்சதுரம் 74 செ. மீ. உயரமும் 65 செ. மீ. அகலமும் கொண்டிருக்கக் கட்டு 91 செ. மீ. உயரமுடையதாகவும் 2. 11 மீ. சுற்றளவுடையதாகவும் அமைக்கப்பட்டுள்ளது. மேற்சதுரத்தின் உயரம் 72 செ. மீ. அகலம், தென்வடலாக 62 செ. மீ.

மேற்சதுரங்களின் மேலமர்ந்துள்ள போதிகைகளிலிருந்து கிளைக்கும் கைகள் தரங்க அமைப்புடன் விரிகோணத்தில் உத்திரத்தைச் சென்றடைகின்றன. நடுப்பட்டை கொண்டுள்ள இவற்றின் கீழ்க் கைகளைவிட மேற்கைகள் பெரியவை. கீழ்க்கை மேற்கையாகத் திரும்பும் இடத்திலுள்ள தரங்க எழுச்சி ஏனைய தரங்கங்களைவிடப் பெரிய அளவினதாக அமைந்துள்ளது. மேற்கை உத்திரத்தைத் தொடுமிடத்தில் சிறிய மடிப்புக் காட்டித் தொடுகிறது. அகலமான உத்திரம், உயரத்தில் போதிகையை விடச் சற்றுக் குறைவாக உள்ளது.

உத்திரத்தின் மேல் பிதுக்கமாக உள்ள வாஜனம் தெற்கு வடக்காக முகப்பு முழுவதற்குமாய்க் காட்டப்பட்டுள்ளது. பாறையின் மேற்பரப்பு கூரையாக நீட்டப்பட்டுள்ளது. குன்றக்குடிக் குடைவரை போல மிக நீளமான கூரை. வாஜன விளிம்பில் இருந்து 69 செ. மீ. நீளத்திற்கு விரிந்து பரந்திருக்கும் இக்கூரையின் அடிப்பரப்பு நன்கு சமன் செய்யப்பட்டுள்ளது. கபோதமாய் வடிவமைக்கப்பட்டிருக்கும் இதன் முகப்பில் இரண்டு பெரிய கூடுகள் தென், வடஅங்கணங்களின் நடுப்பகுதிக்கு நேர் மேலே காட்டப்பட்டுள்ளன. இவற்றின் வளைவுகள் வெறுமையாக

உள்ளன. கபோத வடிப்பின் மேல் உள்ள பாறையின் நீட்சி பெருமண்டபத்தின் கிழக்குச் சுவர் உச்சியில் முடிகிறது.

முகமண்டபம்

முகப்பையடுத்துள்ள மண்டபம், மற்றொரு வரிசைத் தூண்களாலும் மேடை போல் உயர்த்தப்பட்ட தரையமைப்பாலும் முகமண்டபம், உள்மண்டபம் என இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது.[27] முகப்புத் தூண்களுக்கும் இரண்டாம் வரிசைத் தூண்களுக்கும் இடைப்பட்ட முகமண்டபம் தென்வடலாக 7. 41 மீ. நீளமும் கிழக்கு மேற்காக 2. 10 மீ. அகலமும் கொண்டுள்ளது.

நன்கு பொளியப்பட்டு, வழவழப்பாக்கப்பட்டுள்ள முகமண்டபத் தரையின் நடுவே தாய்ப்பாறையிலேயே உருவான நந்தியொன்று கருவறையை நோக்கி அமர்ந்துள்ளது.[28] தரையில் இருந்து 4 செ. மீ. உயரத்தில், 1. 56 மீ. நீளத்திற்கும் 91 செ. மீ. அகலத்திற்குமாய் அமைக்கப்பட்டுள்ள தளத்தின்மீது, முன்னங்கால்களை மடக்கி அமர்ந்தநிலையில் உருவாக்கப்பட்டுள்ள நந்தியின் கழுத்து மடிப்புகளும் திமிலும் சிறு கொம்புகளும் அழகுற அமைந்துள்ளன. இதன் பின்னால் பிற்காலப் பலித்தளமொன்று வைக்கப்பட்டுள்ளது.

முகமண்டபக் கூரையின் நாற்புறமும் வாஜனம் காட்டப்பட்டுள்ளது. தென், வடசுவர்களில் பக்கத்திற்கொன்றாய் இரண்டு முனிவர்களின் சிற்பங்கள் தளஅமைப்புகளுடன் செதுக்கப்பட்டுள்ளன. வடபுறத்தே இத்தள அமைப்பையொட்டி பிற்காலத்தே கல்லால் ஒரு மேடையெழுப்பியுள்ளனர்.

சுவர்ச் சிற்பங்களுள் தென்புறமிருக்கும் வடிவத்தை அகத்தியர் என்றும் வடபுறமிருக்கும் வடிவத்தைப் புலத்தியர் என்றும் கோயிலார் குறிக்கிறார்கள். இது வழிவழிச் செய்தியாக விளங்கி வருகிறது. இதே போன்ற சிற்பங்கள் இவற்றினும் அழகாகவும் சிறப்பாகவும் தேவர்மலைக் குடைவரையில் காணப்படுகின்றன. அங்கும் இப்பெயர்களாலேயே அழைக்கப்படும்[29] இவை முனிவர்களைக் குறிக்கிறதென்பதில் யாதொரு ஐயமும் இல்லை.

தென்புறச் சிற்பம் சடைமகுடத்துடன் வலத்தோளில் சடைப்புரிகள் புரளத் தொங்குமீசையும் தாடியுமாய் 1. 84 மீ. உயரத்திற்குக் காட்சியளிக்கிறது. அணிகலன்களற்ற நீள்செவிகள்.

துணியை முப்புரிநூல் போல் அணிந்திருக்கும் இம்முனிவரின் வலக்கை ஞானமுத்திரையெனக் கொள்ளத்தக்க அமைப்பில் நாபிக்குக் கீழே காட்டப்பட்டுள்ளது.[30] உயர்த்திய இடக்கையில் பல மலர்கள் ஒருங்கிணைப்பட்ட மலர்க்கொத்து.

கருவறை நோக்கிச் செல்பவர் போல் திரும்பியுள்ள இந்தப் பெரியாரின் கணுக்கால்வரை கச்சம் வைத்த பட்டாடை. இவர் நிற்கும் கல்தளத்தின் உயரம் தரையிலிருந்து 53 செ. மீ. மேல் நிலையில் 59 செ. மீ. அகலமும் கீழ்நிலையில் 63 செ. மீ. அகலமும் உள்ள இத்தளத்தின் முகப்பு ஜகதி, உருள்குமுதம், கம்புகளுடனான கண்டம், பட்டிகை எனப் பாதபந்தமாய் உள்ளது.

வடபுறமுள்ள 1.95 மீ. உயர வடிவத்தின் வலக்கை உயர்ந்து போற்றி முத்திரையில் இருக்க,[31] இடக்கை தாமரை மொட்டுடன் நெஞ்சருகே. நீள்செவிகள் வெறுமையாக உள்ளன. இடுப்பில் அரைக்கச்சு இருத்தும் கச்சம் வைத்த பட்டாடை கணுக்கால் வரை நீண்டுள்ளது. துணியை மடித்து முப்புரிநூல் போல் அணிந்துள்ள இவரது சடை, மகுடமாய்ப் புனையப்பட்டிருந்தும் தோள்களில் பரவலாய்ப் புரிகள். தாடி, மீசையின்றி இளமைக் கோலத்தில் உள்ள இவ்வடிவமும் கருவறை நோக்கிச் செல்வது போல வலப்பாதத்தைப் பார்சுவமாக்கி இடப்பாதத்தைச் சமத்தில் வைத்து நிற்கிறது.

உள்மண்டபம்

முகமண்டபத் தரையிலிருந்து 10 செ. மீ. உயர்த்தப்பட்டுள்ள உள்மண்டபத் தரையில், பிற்காலத் திருப்பணியாளர்கள் 57 செ. மீ. உயரத்திற்குக் கற்களை நிறுத்தித் தளம் அமைத்துள்ளனர். உள் மண்டப நான்முகத் தூண்கள்[32] பழந் தரையமைப்பிலிருந்து 10 செ. மீ. உள்தள்ளி எழுகின்றன. நடுத்தூண்கள் இரண்டும் முழுத்தூண்களாய் அமையப் பக்கத்தூண்கள் அரைத்தூண் களாய் உள்ளன.

தென்முழுத்தூணின் முன்னால், முகமண்டபத் தரையமைப் பிலிருந்து மூன்று படிகள், உயர்த்தப்பட்ட உள்மண்டபத் தளத்தை அடைவதற்காகப் பிற்காலத் திருப்பணியாளர்களால் அமைக்கப்பட்டுள்ளன. இந்தப் படிகளுக்குப் பிடிச்சுவர் இல்லை. உள்மண்டபத் தரை உயர்த்தப்பட்டதால் நான்கு

தூண்களுமே தங்கள் கீழ்ப்பாதியைக் கட்டட அமைப்பில் இழந்து மேற்பாதியை மட்டும் மேனியாய்க் காட்டி நிற்கின்றன.

உயர்த்தப்பட்டிருக்கும் உள்மண்டபத் தரையின் முகப்பு, நந்திக்கு முன்னால் மட்டும் கபோதம் போல வடிவமைக்கப்பட்டு இரண்டு கூடுகளுடன் காட்சியளிக்கிறது. இக்கூடுகள் உள் மண்டப முழுத்தூண்களுக்கு முன்னால் காட்டப்பட்டுள்ளன. தூண்களின் போதிகைகளிலிருந்து கிளைக்கும் கைகள் விரிகோணத்தில் உத்திரம் தொடுகின்றன. உத்திரம் 57. 5 செ. மீ. அகலமும் 19. 5 செ. மீ. உயரமும் கொண்டமைந்துள்ளது. போதிகைக் கைகளின் நீளம் தூணுக்குத் தூண் வேறுபடுகிறது. உத்திரத்தின் பிதுக்கமான வாஜனம் தென்வடலாக உள்மண்டபக் கூரையை ஒட்டித் தெற்கிலும் வடக்கிலும் நீட்டப்பட்டுள்ளது.

தூண்களின் இருப்பால் மூன்று அங்கணங்களாகப் பிரிக்கப் பட்டுள்ள உள்மண்டபத்தின் வடஅங்கணத் தரையில் இலிங்கத் திருமேனியொன்று இருத்தப்பட்டுள்ளது. தென்அங்கணம் கிழக்கிலும் வடக்கிலும் சுவரெழுப்பப்பெற்றுத் தனியறையாக்கப் பட்டுள்ளது. வடசுவரில் வாயில் கொண்டு காப்பறையாகப் பயன்படும் இந்த அறையில் இறையலங்காரப் பொருட்கள் வைக்கப்பட்டுள்ளன. நடுஅங்கணத்தின் அகலம் 1. 61 செ. மீ.

கருவறை

உள்மண்டபத்தின் வட, தென்சுவர்களும் கூரையும் வெறுமையாக உள்ளன. பின்சுவரிலிருந்து 37 செ. மீ. முன்தள்ளி அமைந்துள்ள கருவறை வாயிலின் அகலம் 76 செ. மீ. உயரம் 1. 64 மீ. இருபுறமும் திருநிலைக்கால்களோடு அமைந்துள்ள இவ்வாயிலின் கீழ்நிலை உள்மண்டபத் தரையிலிருந்து 14 செ. மீ. உயரத்தில் அமைந்துள்ளது. வாயிலின் இருபுறமும் பக்கத்திற் கொன்றாக இரண்டு அரைத்தூண்கள். வடபுறத்தூண் மூன்று சதுரங்களும் அவற்றிற்கிடையிலான இரண்டு கட்டுகளும் என்ற அமைப்பில் உள்ளது. தென்புறத்தூண் நான்முகமாகக் காட்சி யளிக்கிறது. இது பிற்காலத் திருப்பணிகளின் விளைவாகலாம்.

வடதூணின் மேற்சதுரத்தின் மேல், பாலிகை, பலகை போன்ற உறுப்புகள் உள்ளன. இருதூண்களுக்கும் இடையில் காட்டப்பட்டுள்ள தோரணத்தை உமிழும் மகரங்கள், இந்தப் பலகைகளின் மேல் நிற்கின்றன. இவற்றின் வால்பகுதி தோகை

போல் பல சுருள்களாய்க் காட்டப்பட்டுள்ளது. வடதூண் பலகையின் பக்கவாட்டில் கிளைக்கும் போதிகை, தரங்கமும் பட்டையும் கொண்டுள்ளது. போதிகைக் கைகள் தொடும் உத்திரத்தின் பிதுக்கமாய் கருவறை முகப்புச் சுவரின் முப்புறமும் தொடர் ஒழுங்கோடு அமைந்துள்ள வாஜனம், உள்மண்டபப் பின்சுவரைத் தொட்டதும் நின்றுவிடுகிறது.

கருவறை வாயிலுக்கு இருபுறத்தும் உள்ள அரைத்தூண்கள் தவிர, பக்கத்திற்கிரண்டாக மேலும் நான்கு அரைத்தூண்கள் வாயிலை ஒட்டியுள்ள வடதூணின் அமைப்பிலேயே பொளியப் பட்டுள்ளன. முகப்புச் சுவரின் திருப்புமுனைகளில் உள்ள அரைத் தூண்களில் கிழக்கு முகமாகவும் ஒரு போதிகை காட்டப்பட்டுள் ளது. இவற்றின் மேற்குப் போதிகைகள் 34. 5 செ. மீ. அகலத்திற்கு உள்மண்டபப் பின்சுவர்வரை பரவியுள்ளன. தூண் சதுரங்களின் கிழக்கு முகங்களில் சிறிய அளவிலான தாமரைப் பதக்கங்கள் காட்டப்பட்டுள்ளன.

மகரதோரணத்தில் காட்டப்பட்டுள்ள மகரங்கள் மிகப் பெரியவை. இவை தம் துளைக்கைகளை நன்கு உயர்த்திச் சுருட்டி உள்ளன. இவற்றின் வாயிலிருந்து வெளிப்படும் பூத்திரள் வாயிலின் நடுப்பகுதிக்கு மேலே காட்டப்பட்டிருக்கும் நடு மகரங்களை அடைகின்றன. இந்த நடு மகரங்கள் சந்திக்குமிடத் தின் நெற்றிப்பகுதியில் பூப்பதக்கம் செதுக்கப்பட்டுள்ளது.

2. 24 மீ. உயரமும் 3. 17மீ. பக்கமுமுள்ள கருவறையில், தாய்ப்பாறையில் வெட்டிய 1. 28 மீ. பக்கமுள்ள சதுரமான ஆவுடையாரும் அதன்மீது 67 செ. மீ. உயரமுள்ள இலிங்கத் திருமேனியும் நடுநாயகமாக அமைந்துள்ளன. வடபுறமாகச் சிறு கோமுகம் காட்டப்பட்டுள்ளது. ஜகதி, உருள்குமுதம், கம்பு களுடனான கண்டம், துணைக்கம்பு, பட்டிகை, மேற்கம்பு என ஆவுடையார் அழகுபடுத்தப்பட்டுள்ளது. கருவறையின் கூரையும் பக்கச் சுவர்களும் வெறுமையாக உள்ளன. தரையில் கோமுகத் தின் கீழே முழுக்கு நீரை வாங்கும் பள்ளமொன்று உள்ளது. இப்பள்ளத்தையொட்டிப் புறப்படும் நீரோடுகால், திருமுழுக்கு நீரைக் கருவறையிலிருந்து வெளியேற்றுவதற்காகப் பிற்காலத்தே செய்யப்பட்ட பணியாகும்.

இக்குடைவரையின் சிறப்புகள்

பிற்காலத் திருப்பணிகளற்ற நிலையில், இக்குடைவரை பாண்டியர் மண்டலத்தின் பெரிய அளவிலான குடைவரைகளுள் ஒன்றாய் விளங்கியிருக்கவேண்டும். முற்பாண்டியர் கலைமுறையில், தென்சரிவில் பிள்ளையாரைக் கொண்டிலங்கும் இந்தக் குடைவரையின் எப்பகுதியிலும் வாயிற்காவலர்கள் இல்லாமை குறிப்பிடத்தக்கதாகும். முனிவர் பெருமக்கள் குடைவரை முகமண்டபப் பக்கச் சுவர்களில் இடம்பெற்றதால் வாயிற் காவல் தேவையற்றுப்போனது போலும். தேவர்மலைக் குடைவரையிலும் வாயிற்காவலர்கள் இல்லாமை இங்கு ஒப்பிடத்தக்கது.

இக்குடைவரையின் அருமையான, உயரமான படியமைப்பு, திருமலை தவிர, ஏனைய முற்பாண்டியர் குடைவரைகளில் காண முடியாத அமைப்பாகும். இங்குள்ள பிள்ளையார் திருமேனி குன்றக்குடி, பிள்ளையார்பட்டி, மலையக்கோயில், செவல்பட்டி, திருமலைப்புரம், திருக்கோகர்ணம் குடைவரைகளில் காணப்படும் பிள்ளையார் திருமேனிகளுடன் பலவிதங்களில் ஒப்பிடத்தக்கதாய் அமைந்துள்ளது. முற்பாண்டியர் குடைவரைகளில் காணப்படும் பிள்ளையார் திருமேனிகள் குறித்த ஒப்பாய்வு பல பயனுடைய தகவல்களைத் தந்துள்ளது.[33] இங்குள்ள அன்னையர் எழுவர் சிற்பங்களும் தனியிடம் பெறுகின்றன. சாமுண்டியின் முன்னால் காட்டப்பட்டிருக்கும் எருமைத்தலை வேறெந்தக் குடைவரை அன்னையர் சிற்பத் தொகுதிகளிலும் காணப்படாத சிறப்பம்சமாகும். இக்குடைவரையின் காலத்தைக் கி. பி. எட்டாம் நூற்றாண்டாகக் கொள்ளலாம்.

கல்வெட்டுகள்

திருக்கோளக்குடி வளாகத்திலிருந்து இந்திய அரசின் கல்வெட்டுத்துறை 1916ல் எண்பத்துமூன்று கல்வெட்டுகளைப் படியெடுத்து அவற்றின் சுருக்கங்களை மட்டுமே பதிப்பித்துள்ளது. இவற்றுள் ஒன்றிற்குக்கூடப் பாடம் வெளியாகாத காரணத்தால் அனைத்துக் கல்வெட்டுகளையும் படிக்கவேண்டியிருந்தது. இப்பணியில் ஈடுபட்ட காலத்துப் பதினெட்டுப் புதிய கல்வெட்டுகள் கண்டறியப்பட்டன. அவற்றுள், குன்றின் மேற்றளத்தில் கண்டறிந்த பதப்பிலீசுவரம் கல்வெட்டும் குடைவரையின் மறைக்கப்பட்ட தென்சுவரில் இருக்கும் பிசாசுக் கல்வெட்டும் மிக முக்கியமானவை.

தென்தமிழ்நாட்டில் கண்டறியப்பட்ட காலத்தால் முற்பட்ட தமிழ் வரிவடிவக் கல்வெட்டுகளுள் பதப்பிலீசுவரம் கல்வெட்டுக்குச் சிறப்பிடமுண்டு. தமிழ்நாட்டின் வேறெந்தக் கல்வெட்டிலும் இடம்பெறாத 'பிசாசு', கோளக்குடியிலுள்ள ஊருணியொன்றின் பத்தாம் நூற்றாண்டுப் பெயராய் அமைந்து மக்கள் நம்பிக்கைகள் பற்றிய புதிய பக்கத்தைத் திறந்துள்ளது.

கோளக்குடி வளாகத்திலுள்ள நூற்றியொரு கல்வெட்டு களுள் காலத்தால் முற்பட்டது பதப்பிலீசுவரம் கல்வெட்டே யாகும். கி. பி. ஏழாம் நூற்றாண்டு எழுத்தமைதியில் உள்ள இந்தக் கல்வெட்டே பாண்டிய நாட்டில் இதுநாள்வரையிலும் கண்டு பிடிக்கப்பட்டுள்ள தமிழ் வரிவடிவக் கல்வெட்டுகளுள் காலத் தால் முற்பட்டதெனலாம். இங்குள்ள கல்வெட்டுகளுள் சோழர் காலத்தன ஏழு. அவற்றுள் மன்னன் பெயரற்றவை இரண்டு. பதி னோராம் நூற்றாண்டு எழுத்தமைதியிலுள்ள இவை இரண்டுமே புதிதாகக் கண்டறியப்பட்டனவாகும். எஞ்சிய ஐந்தனுள் நான்கு முதலாம் குலோத்துங்கர் ஆட்சிக்காலத்திலும் ஒன்று இரண்டாம் இராஜாதிராஜர் ஆட்சிக்காலத்திலும் வெட்டப்பட்டுள்ளன.

எஞ்சியுள்ள தெண்ணூற்றிரண்டு கல்வெட்டுகளுள் பிற் பாண்டியர் பொறிப்பாக உள்ளவை நாற்பத்தெட்டு. அவற்றுள் பதினான்கு கல்வெட்டுகள் முதலாம் மாறவர்மர் சுந்தரபாண்டியர் காலத்தன. முதலாம் மாறவர்மர் குலசேகரர் காலத்தனவாகப் பத்துக் கல்வெட்டுகள் உள்ளன. இருபத்து மூன்று கல்வெட்டுகள் ஸ்ரீவல்லபர், குலசேகரர், சடையவர்மர் சுந்தரபாண்டியர், மாற வர்மர் வீரபாண்டியர் ஆகியோர் காலத்தன. இம்மன்னர்களை இன்னாரென அடையாளம் காணக்கூடவில்லை. கிருஷ்ண தேவராயர், நாயக்கர் காலத்தன இரண்டு. கி. பி. பதினேழாம் நூற்றாண்டினதாகக் கொள்ளத்தக்க கல்வெட்டுச் சாயண உடையாரைக் குறிப்பிடுகிறது.

மன்னர் பெயர் ஏதுமற்ற கல்வெட்டுகளின் எண்ணிக்கை நாற்பத்திரண்டாக உள்ளமை, பிற தமிழ்நாட்டுக் குடைவரை வளாகங்களில் காணப்பெறாத அமைவாகும். இவற்றுள் பெரும் பான்மையன பதினாறாம், பதினேழாம் நூற்றாண்டுகளுக்கு உரியனவாக உள்ளமை, அக்காலகட்டத்தில் இப்பகுதியில் நிலவிய நிலையற்ற அரசியல் நிலைமைக்குச் சான்றாக உள்ளது.

திருக்கோளக்குடி

இராஜராஜப் பாண்டிநாட்டு இராஜேந்திர சோழ வள நாட்டுப் புறமலைநாட்டின் கீழிருந்த ஊராகக் குலோத்துங்கர் கல்வெட்டில் அறிமுகமாகும் திருக்கோளக்குடி, பிற்பாண்டியர் கல்வெட்டுகளில் வளநாட்டுப் பெயர்களை இழந்த நிலையில் புறமலைநாட்டுத் திருக்கோளக்குடியாக மட்டுமே குறிக்கப் படுகிறது. பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுக் கல்வெட்டு களிலும் இவ்வூர் புறமலைநாட்டின் கீழிருந்ததாகவே சுட்டப் படுகிறது. ஊராரால் கூட்டுறவாக நிர்வகிக்கப்பட்ட திருக்கோளக் குடி, ஏறக்குறைய பதின்மூன்று நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து வழிபாட்டில் இருந்துவரும் திருக்கோயில் வளாகத்தைப் பெற்றுள்ளமை, அவ்வூரின் பழைமையையும் பெருமையையும் எடுத்துக்காட்டுமாறு உள்ளது.

இவ்வூரின் பெயர், அனைத்துக் கல்வெட்டுகளிலும் மிகத் தெளிவாகத் 'திருக்கோளக்குடி' எனக் குறிக்கப்பட்டிருந்தும் ஊர் மக்களும் சுற்றுப்புற ஊர்களில் வாழ்பவர்களும் இவ்வூரைக் 'களாக்குடி' என்றழைப்பதிலேயே மகிழ்கின்றனர். திருக்கோளக் குடி என்ற பெயரைச் சொல்லி வழிகேட்டால், இடம் தெரியாது குழம்பும் சுற்றூர் மக்கள், களாக்குடி என்றவுடன் வழிக் கூறுவ தோடு, 'இதை முன்பே சொல்லியிருக்கலாமே. ஊர்ப் பெயரைத் தவறாகச் சொல்லி எங்களைத் தடுமாற வைத்து விட்டீர்களே' என்று வருந்துகிறார்கள்.

வளநாடுகள்

திருக்கோளக்குடிக்கு அண்மையிலுள்ள பொன்னமராவதி யும் இராஜராஜப் பாண்டிநாட்டு இராஜேந்திர சோழ வள நாட்டுப் புறமலைநாட்டில் இருந்த ஊராகவே சோழர் கல்வெட்டுகளில் குறிக்கப்படுகிறது. பிற்பாண்டியர் கல்வெட்டு களில் இவ்வூரும் வளநாட்டுச் சுட்டல் இழந்து புறமலைநாட்டுப் பொன்னமராவதியாக மட்டுமே குறிக்கப்பட்டுள்ளமை கருதத் தக்கது. கேரள சிங்க வளநாடு, கடலடையாதிலங்கை கொண்ட சோழ வளநாடு, மதுரோதய வளநாடு, விருதராஜ பயங்கர வளநாடு, வடவெள்ளாறான சுந்தரபாண்டிய வளநாடு, குலோத் துங்க சோழ வளநாடு என்பன கோளக்குடிக் கல்வெட்டுகளில் இடம்பெற்றிருக்கும் பிற வளநாடுகளாகும். சோழ மண்டலம்,

மலைமண்டலம் எனும் பெரும் பிரிவுகளும் இக்கல்வெட்டு களில் இடம்பெற்றுள்ளன.

நாடுகள்

நாடு, கூற்றம் என்பன ஒரே பொருள் தரும் வருவாய்ப் பிரிவுகளாகும். கோளக்குடிக் கல்வெட்டுகளில் ஒல்லையூர்க் கூற்றம், அரும்பூர்க் கூற்றம், முத்தூற்றுக் கூற்றம், மிழலைக் கூற்றம் எனும் கூற்றங்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் ஒல்லையூ ரும் முத்தூற்றுக் கூற்றமும் சங்கப் பழைமையன. முத்தூற்றுக் கூற்றம் பூலாங்குறிச்சிக் கல்வெட்டுகளில் இடம்பெற்றுள்ளது.[34] புறப்பாடல் ஒன்றில் ஒல்லையூர், 'சாகாவரம்' பெற்ற ஊராய் இடம்பிடித்துள்ளது.[35]

பூங்குன்றநாடு, கல்வாயில்நாடு, அண்டநாடு, கீழ்வெம்ப நாடு, சுரபிநாடு, கருங்குடிநாடு, கீழைச் செம்பிநாடு, திருமல்லி நாடு, கானநாடு, செவ்விருக்கைநாடு, வடதலைச் செம்பிநாடு, வடவலதைத் திருக்கைநாடு, குலோத்துங்க சோழ வல்லநாடு, உறுமாநாடு, வடப்பிறப்புநாடு, திவந்தணக்குடிநாடு, மேலை இரணியமுட்டநாடு, பனையூர்நாடு எனப் பல நாட்டுப் பிரிவுகள் கோளக்குடிக் கல்வெட்டுகளில் சுட்டப்பெறுகின்றன.

புறமலைநாட்டின் கீழிருந்த பொன்னமராவதி, ஒரு கல்வெட்டில் பொன்னமராபதி என்று அழைக்கப்படுவதுடன், திருக்கோளக்குடியைத் தன் கீழ்க் கொண்டிருந்த வருவாய் அமைப்பாகச் சுட்டப்படுவதும் குறிப்பிடத்தக்கது. மேலை இரணியமுட்டநாடு அழகர் திருவிடையாட்டமாகக் காட்டப் பெற்றுள்ளது. தென்கோனாடும் ஒல்லையூர்க் கூற்றமும் ஒரே வருவாய்ப் பிரிவின் இருவேறு பெயர்களாக அமைந்துள்ளன.

'பற்று' எனும் சொல் கோளக்குடிக் கல்வெட்டுகளில் பல பொருள் தரும் சொல்லாக ஆளப்பெற்றுள்ளது. ஒன்றிரண்டு இடங்களில், நிருவாக நிலப்பிரிவினைச் சுட்டவும் இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. 'தேவிமண்டலப் பற்று', 'படைப் பற்றான விரையாச்சிலை' எனும் ஆட்சிகள் நினைக்கத்தக்கன.

ஊர்கள்

கோளக்குடிக் கல்வெட்டுகள் 134 ஊர்களின் பெயர்களைத் தரும் களஞ்சியங்களாக விளங்குகின்றன. இவற்றுள் ஐம்பத்

தொரு பெயர்கள், 'ஊர்' எனும் பின்னொட்டுக் கொண்டுள்ளன. இப்பெயர்களுள், இரண்டு ஊர்கள் மட்டுமே மேலூர், கானூர் என மூன்றெழுத்துப் பெயர்களைப் பெற்றுள்ளன. நான்கெழுத்து ஊர்ப்பெயர்கள் பதினாறாக உள்ளன. இவற்றுள் ஒக்கூர், சங்கப் புலவரான ஒக்கூர் மாசாத்தியாரை நினைவூட்ட, வெட்சியூர் வெட்சித் திணையைக் கருதவைக்கிறது. மிக நீளமான பெயர் களாகத் தடங்கண்ணிச் சிற்றூரையும் கீழைக் கொடுமலூரையும் குறிக்கலாம். சிறு, பெரு எனும் முன்னடைகள் பெற்று மூன்று பெயர்கள் உள்ளன.

ஊரென முடியும் இவ்வூர்ப் பெயர்களுள் ஆறு, பின்னாட் களில் பெயர் மாற்றம் பெற்றன. வெட்சியூர், மும்முடிசோழ நல்லூராக, கீழைக் கொடுமலூர் மதுரோதய நல்லூரானது. கப்பலூர் உலகளந்த சோழ நல்லூராகவும் அத்தியூர் அருமொழி சோழ நல்லூராகவும் விளத்தூர் ஜெயங்கொண்ட சோழ நல்லூ ராகவும் கீழ்நெட்டூர் திவராலைய நல்லூராகவும் பெயர் மாறின.

'குடி' எனும் பின்னொட்டுடன் முடியும் ஊர்ப்பெயர்கள் பத்தொன்பது உள்ளன. இவற்றுள் மிகச் சிறிய பெயராகக் 'குடி' என்பதைக் குறிக்கலாம். வடபாம்பாற்றுத் தண்ணரி அண்டக் குடி என்பதே மிக நீளமான பெயராகும். ஆய்க்குடி, சிறுகுடி என்பன சங்க நினைவுகளைத் தூண்ட, வாணியங்குடி, வாணியர் குடியிருப்பாக முன் நிற்கிறது.

'நமன்குடி' எனும் பெயர் மாறுபட்ட பெயராக அமைந் துள்ளது. இளையாத்தக்குடியும் குமரத்தக்குடியும் கோளக்குடிக் கோயிலுடன் தொடர்புடைய ஊர்களாகப் பல கல்வெட்டு களில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வூர்ப் பெயர்களுள் ஐந்து பின்னாட்களில் பெயர் மாற்றம் பெற்றன. முன்னக்குடி முடிவழங்கும் பெருமாள் நல்லூராக, இளான்குடி இந்திரபுரி நல்லூரானது. பெருங்கூற்றங்குடி சுந்தரபாண்டிய நல்லூராகவும் தண்ணரி அண்டக்குடி காளிபிச்ச நல்லூராகவும் ஆய்க்குடி அழகிய பாண்டிய நல்லூராகவும் பெயரேற்றன.

'புரம்' என முடியும் பெயர்களாகக் குலசேகரபுரம், சுந்தர பாண்டியபுரம், இராசவல்லபுரம், எழுதுப் பெருந்தெருவான வீரபாண்டியபுரம் எனும் நான்கு ஊர்ப்பெயர்களும் உள்ளன. இவற்றுள் மூன்று ஊர்கள் பாண்டிய அரசர்தம் பெயர்களை

ஏற்றுள்ளமை கவனிக்கத்தக்கது. 'நல்லூர்' என முடியும் ஊர்ப் பெயர்கள் பத்தொன்பது உள்ளன.

அவற்றுள் பதினொரு ஊர்கள் ஊர், குடி என முடியும் பெயர்களைக் கொண்ட பழைமையான குடியிருப்புகளைக் கொண்ட ஊர்களாக இருந்தபோதும் காலக் கட்டாயத்தினால் தம் பெயர்களுடன் நல்லூர் என முடியும் புதுப்பெயர்களையும் ஏற்றுப் பதிவாகியுள்ளன. பெருநல்லூர், கீழ்மணநல்லூர், இராச மார்த்தாண்ட நல்லூர், கலியாணசுந்தர நல்லூர், ஸ்ரீபராந்தக நல் லூர், தியாகஞ்சீலப் பெருமாநல்லூர், சக்கரபாணி நல்லூர், பெரு மாள் நல்லூர் ஆகியன புதிய உருவாக்கங்களாக அமைந்துள்ளன.

சோழ நாட்டு ஊர்ப்பெயர்களில் மிகுதியான அளவில் பங்கேற்கும் மங்கலம், சதுர்வேதிமங்கலம் எனும் பின்னொட்டு கள் பாண்டிய நாட்டுக் கல்வெட்டுகளில் குறைந்த அளவிலேயே இடம்பெற்றுள்ளன. நூற்று முப்பத்துநான்கு ஊர்களை வெளிப் படுத்தும் கோளக்குடிக் கல்வெட்டுகளில் கொற்றமங்கலம், கண்ணமங்கலம், புள்ளமங்கலம், மாவிலிமங்கலம், நத்தமங்கலம், ஏனாதிமங்கலம், குமாரமங்கலம், இராசசிங்கமங்கலம் எனும் எட்டு ஊர்களே அந்தணர் குடியிருப்புகளாக வெளிப்படுவது நோக்கத்தக்கது.

பத்து விழுக்காட்டிற்கும் குறைவான இந்நிலைக்கு முற்றிலும் மாறாக, இம்மண்ணின் பழைமையான குடியிருப்புகளாக ஊரும் குடியும் ஐம்பது விழுக்காட்டளவிற்குத் திகழ்வதற்கு இப்பகுதி யில் அன்று நிலவிய பொருளாதாரச் சூழல்களைக் காரண மாகக் கூறலாம். வளமான நதிக்கரைப் பகுதிகளிலேயே அந்தணர் குடியிருப்புகள் செழித்தமையை ஓர் ஆய்வு முன்வைப் பது இங்குக் கருதத்தக்கது.[36] ஏரிகளையும் குளங்களையுமே பாசனத்திற்கு நம்பியிருக்கும் கோளக்குடியும் அதன் சுற்றூர் களும் அந்தணர்களை ஈர்க்கவில்லை போலும்.

பல்வேறு பின்னொட்டுகளுடன் முடியும் பெயர்களை உடைய முப்பத்து மூன்று ஊர்களின் பெயர்களைக் கோளக் குடிக் கல்வெட்டுகள் அறிமுகப்படுத்துகின்றன. அவற்றுள் நாட்டியத்தான் குளம், புதுப்பேர்குளம், மஞ்சனேரி எனும் பெயர்கள் நீர்நிலைகளோடு தொடர்புடையனவாக உள்ளன. 'பசலை' எனும் ஊர்ப்பெயர் சங்க இலக்கியப் பாடலடிகளை

நினைவுபடுத்துகிறது. திருவானைக்கா, திருவையாறு, திருத்தவத் துறை, திருநெல்வேலி, திருக்காரோணம் முதலிய பாடல் பெற்ற ஊர்களும் கோளக்குடிக் கல்வெட்டுகளில் கொடையாளிகள் அல்லது சான்றாளர்களின் ஊர்களாக இடம்பெற்றுள்ளன.

நிருவாக அமைப்புகள்

சபை எனும் அமைப்பு மங்கலங்களிலும் சதுர்வேதி மங்கலங் களிலும் நிருவாகம் மேற்கொண்டிருந்தாற் போல ஊரார், நாட்டார் எனும் அமைப்புகள், ஊர், நாடு சார்ந்த நிருவாக அலுவல்களைத் தம் கீழ் வைத்திருந்தன. இவ்விரண்டனுள், 'நாட்டார்' எனும் அமைப்புப் பற்றிய சில தகவல்கள் கோளக் குடிக் கல்வெட்டுகளில் காணக்கிடைக்கின்றன.

பொன்னமராவதி நாட்டார் திருக்கோளக்குடிக் கோயில் தானத்தாருக்குச் செய்தளித்த ஒப்பந்தமாக அமைந்துள்ள பதின் மூன்றாம் நூற்றாண்டுக் கல்வெட்டொன்று, நாட்டார் ஆட்சிக்கு உட்பட்ட நிலங்களின் மீது, 'நாட்டு வினியோகம்' எனும் வரி நாட்டவரால் வசூலிக்கப் பெற்றமையையும் அவ்வரியை விலக்கிக் கொள்ளுமாறு ஆணையிடும் உரிமை அரசர்களுக்கு இருந்த மையையும் தெளிவுபடுத்துகிறது. இந்த ஆவணத்தில் கையெழுத் திட்டுள்ள நாட்டார் உறுப்பினர்களாகத் தப்பிலா வேளான், நிலைமை அழகிய வேளான், பிரகடகண்ட வேளான், பெரிய வேளான், மனமொத்தவன் வேளான், கரியாண்டான், அதியமான் ஆகியோர் பெயர்கள் கிடைக்கின்றன.[37]

திருக்கோளக்குடி சிவதர்மீசுவரமுடைய நாயனார் திருக் கோயில் தானத்தாருக்குக் கானநாடான விருதராஜ பயங்கர வள நாட்டு நாட்டவர் செய்தளித்த ஒப்பந்தமாக அமைந்துள்ள முதலாம் மாறவர்மர் குலசேகரரின் கல்வெட்டொன்று, இறைவ னுக்குப் பாண்டிய அரசர் அமைத்த செண்பகக் குலைசேகரன் சந்திக்குத் தேவையான அமுதுபடி, சாத்துபடி உள்ளிட்டவை களுக்கும் ஆனித்திருநாள் தேவைகளுக்கும் நாட்டவர் குடிப் பற்றாய் இருந்த பெருநல்லூர், பாண்டிய அரசர் திருமுகப்படித் தேவதான இறையிலியாகத் தரப்பட்டமையைக் கூறுகிறது.[38]

இக்கல்வெட்டை எழுதியவர் நாட்டுக் கணக்கு நாலுகவிப் பெருமாள்தாசன். இவ்ஆவணத்தின் கையெழுத்தாளர்களாக உலகளந்த சோழக் கானநாட்டான், வல்லநாட்டு வேளான்,

முனையதரையன், உத்தமசோழக் கானநாட்டு வேளான், உறுமா நாட்டு வேளான், நீலகங்கரையர், பொன்னாண்டார், அம்பலவன் திருவானைக்காவுடையான், சுந்தரப் பெருமாள் ஆகிய நாட்டார் உறுப்பினர்கள் அறிமுகமாகின்றனர்.

முதலாம் மாறவர்மர் சுந்தரபாண்டியருடையதாகக் கொள்ளத்தக்க கல்வெட்டொன்று, கானநாட்டைச் சேர்ந்த குமரத்தக்குடி புரவு நிலத்தால் வந்த நாட்டு வினியோகத்தைக் கானநாட்டார் தவிர்த்துக் கொண்டமையையும் அவ்வினி யோகம் கொண்டு திருக்கோளக்குடிக் கோயில் தானத்தார் சிவதர்மீசுவரமுடைய நாயனார் திருநாளில் நடுவில் திருநாளின் போது இறைவனை நாட்டுக்கு நன்றாக எழுந்தருளுவித்தல் வேண்டுமென்று ஒப்பந்தம் ஏற்பட்டமையையும் தெரிவிக்கிறது.[39]

இந்த ஒப்பந்த ஆவணத்தில் கையெழுத்திட்டுள்ள நாட்டார் உறுப்பினர்களாக உலகளந்த சோழக் கானநாட்டு வேளான், விக்கிரம சோழக் கானநாட்டு வேளான், வாரண வாகீசப் பெருமா ளான உத்தமசோழக் கானநாட்டு வேளான், குலோத்துங்க சோழ வல்லநாட்டு வேளான், உத்தமபாண்டிய கான நாட்டு வேளான், செம்பியன் கானநாட்டுக் கோன், சவுரிப் பெருமாள் வேளான், ஆழ்வான் விழுப்பரையன், சுந்தரபாண்டிய கான நாட்டு வேளான், இராசன், உறுமாநாட்டு வேளான், வேளான் பொன்னன், வீர ராஜேந்திர கானநாட்டு வேளான், எதிரிலி பாண்டிய கானநாட்டு வேளான், பெருந்துறைச் சீராளன் பேராயிரமுடையான், அரசன் அரசன், சீராமன் அவையன், சடையன் அரசு, வேளான் பூவனான செல்வ ஞானசம்பந்தன், பெருமாள் நாராயண தேவன், சோலை, சிவலோகமுடையான் ஆண்டபிள்ளை ஆகியோர் பெயர்கள் கிடைக்கின்றன.

கி. பி. 1586ம் ஆண்டிற்குரியதாக அமைந்துள்ள மன்னர் பெயரற்ற கல்வெட்டு, பொன்னமராவதி நாட்டார் விரையாச் சிலை, கொட்டியூர் ஊரவருக்கு வழங்கிய நிலவரி ஆவணமாக உள்ளது. இதில் நல்லமை அழகிய வேளான், ஏறக்குடையான், பிரகடகண்ட வேளான், பெரிய வேளான், அறிவுடை மூவேந்த வேளான் ஆகிய நாட்டார் உறுப்பினர்கள் கையெழுத்திட்டுள்ள னர்.[40] முதலாம் மாறவர்மர் சுந்தரபாண்டியரின் கல்வெட்டுப் புறமலைநாட்டுக் கணக்காகச் சுந்தரத் தோளுடையானான சோறுடையானைக் காட்டுகிறது.[41]

'நாடாள்வார்' என்ற சிறப்பழைப்புடன் கல்வெட்டுகளில் குறிக்கப்படுவோருக்கும் நாட்டார் மன்றத்திற்கும் இடையில் இருந்த பொறுப்பு வேறுபாடுகளைத் தெளிவாக அறியக்கூட வில்லை. எனினும், நாடாள்வார்களுள் சிலர், நாட்டாருக்கு ஓலை அனுப்பியிருப்பதையும் வரிவிலக்குகள் அளித்திருப்பதையும் பிற ஊர்க் கல்வெட்டுகளில் காணநேர்வதால், நாடு தொடர்பான ஆட்சிப்பொறுப்பில் நாடாள்வார்களின் கை ஓங்கியிருந்ததாகக் கருதலாம். நாடாள்வார்களுள் சிலர் தற்குறிகளாக இருந்தமை யால், அவர்கட்குப் பதிலாக நாட்டுக் கணக்குகள் ஆவணங் களில் கையெழுத்திட்டுள்ளமையையும் காணமுடிகிறது.[42]

ஊரவர் அமைப்பின் செயற்பாடுகள் பற்றிய விளக்கமான கல்வெட்டுகள் கிடைக்கவில்லையாயினும் கொட்டியூர், வேலங் குடி, விரையாச்சிலை ஊரவர்களின் நிலவிற்பனை பற்றி அறிய முடிகிறது. இவ்விற்பனை ஆவணங்கள் ஊராரின் கூட்டுப் பொறுப்பை உணர்த்துவனவாய் உள்ளன.

சிற்றரசர்கள்

நிஷதராஜன் என்ற பின்னொட்டுடன் முடியும் பெயர் களைக் கொண்ட சிற்றரச மரபினர் பொன்னமராவதியைச் சில காலம் தங்கள் கட்டுக்குள் வைத்திருந்தமையைச் சில கல்வெட்டு களால் அறியமுடிகிறது. முதலாம் குலோத்துங்கரின் பதினாறாம் ஆட்சியாண்டான கி. பி. 1086ல் பொன்னமராவதியை ஆட்சி செய்தவராக இராஜேந்திர சோழன் கேரளனான நிஷதராஜன் வெளிப்படுகிறார்.[43] இரண்டாம் இராஜாதிராஜரின் ஏழாம் ஆட்சியாண்டான கி. பி. 1170ல் பொன்னமராவதியிலிருந்த ஆட்சியாளராக கேரளன் திருக்கொடுங்குன்றம் உடையானான நிஷதராஜன் கொடையாளியாகக் காட்சிதருகிறார்.[44]

சுந்தரவில்லியான நிஷதராஜன் கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் இப்பகுதியில் ஆட்சிசெய்துள்ளார்.[45] இவர்கள் தவிர வீமன் இராஜேந்திர சோழனான நிஷதராஜனையும் திருக்கொடுங்குன்றம் உடையான் அழகிய தேவனான நிஷத ராஜனையும் பொன்னமராவதிக் கல்வெட்டுகளில் சந்திக்க முடிகிறது.[46] இந்நிஷதராஜர்களுள் சிலர் தங்களைக் 'கேரளன்' என்று அழைத்துக்கொள்வதும் கோளக்குடிக் கல்வெட்டு ஒன்று, திருக்கோளக்குடியைச் சேர்ந்த பழைய இடையர்களாகக் கேரள இடையர்கள் சிலரை அடையாளப்படுத்துவதும்,

'கேரளன் தவணை போந்த' என்ற கல்வெட்டுச் சொல்லாட்சியும்[47] கேரளர்களுக்கும் இக்கோயிலுக்கும் இருந்த தொடர்புகளைப் புலப்படுத்துவனவாய் உள்ளன.

முதலாம் மாறவர்மர் சுந்தரபாண்டியரின் ஆட்சிக்காலத்தில் கோளக்குடிக் கோயில் தானத்தாருக்கு விக்கிரமசிங்கதேவர் அனுப்பியுள்ள இரண்டு ஓலைகளும், அவர் தமக்கு வரவேண்டிய வரியினங்களை இவ்வளாகத்திலிருந்த முதலியார் திருமடத்திற்கும் இறைவனுக்கான படையல்களுக்குமென அளித்துள்ளமை சுட்டுவதால், விக்கிரமசிங்கதேவரை இப்பகுதியிலிருந்த சிற்றரசர்களுள் ஒருவராய்க் கொள்ளலாம்.[48]

மூன்று கல்வெட்டுகள் திப்பரச உடையார், இரங்கநாத நாயக்கர், சிதம்பரநாத முதலியார் எனும் ஆட்சியாளர்களைச் சுட்டுகின்றன. கி. பி. 1502ல் வெட்டப்பட்டுள்ள நரசிங்கராயர் கல்வெட்டில், நரச நாயக்கர் சார்பு ஆட்சியாளராக வெளிப்படும் திப்பரச உடையாரின் நலத்துக்காக, அவர் செயலராக விளங்கிய தம்மைய நாயக்கர் இக்கோயில் இறைவனுக்கு உஷாபூசை அமுது செய்யும் கட்டளைக்குக் கீழ்மணநல்லூரைத் தேவதானமாகத் தந்த செய்தியைப் பெறமுடிகிறது.[49]

கி. பி. 1542ல் வெட்டப்பட்டுள்ள கல்வெட்டு, இராமப்ப நாயக்கருக்குப் புண்ணியமாக அவர் செயலர் வங்காரமுடையார் பல்லவராயர், வேலங்குடி நிலத்துண்டொன்றை இறையிலித் தேவதானமாகக் கோயிலுக்கு அளித்த தகவலைத் தருகிறது.[50] கி. பி. 1597ல் வெட்டப்பட்டிருக்கும் கல்வெட்டுச் சிதம்பரநாத முதலியார் என்பவரைக் குறிக்கிறது. இவருடைய செயலரான எல்லபட்டரும் கோயில் பண்டாரத்தாரும் இணைந்து இளையாத்தங்குடி நகரத்தாருக்குச் செய்தளித்த ஒப்பந்தம் பேசும் இக்கல்வெட்டுச் சிதம்பரநாத முதலியார் வகித்த பொறுப்புப் பற்றி அமைதி காப்பதால் இப்பெரியாரின் ஆட்சித் தகுதியை அறியக்கூடவில்லை.[51]

அரசு அலுவலர்கள்

கோளக்குடியில் காணப்படும் மூன்று கல்வெட்டுகள் அரச ஆணைகளாக அமைந்துள்ளன. இவற்றின் மூலம் பாண்டிய அரசர்தம் வாய்மொழி உத்தரவுகள் யார் யார் கையெழுத்துப் பெற்றுத் திருமுகங்களாக மாறி உரியவர்களை அடைந்தன

என்பதை அறியமுடிகிறது. எழுவர் அன்னையர் சிற்பத்தொகுதிக்கு மேல் உள்ள பாறைப்பகுதியில் வெட்டப்பட்டிருக்கும் முதலாம் மாறவர்மர் சுந்தரபாண்டியரின் கி. பி. 1221ம் ஆண்டுக் கல்வெட்டு, புறமலைநாட்டுப் பொன்னமராவதி அரண்மனைக் கோமாறன் பள்ளிக்கூடத்திருந்த பள்ளிப்பீடமான மழவராயனில் எழுந்தருளியிருந்து, மைத்துனர் அழகப்பெருமாள் பரிந்துரை ஏற்றுத் திருக்கோளக்குடி சிவதர்மீசுவரமுடைய நாயனார் கோயில் சிவஅந்தணர்களுக்கும் தானபதிகளுக்கும் அரசர் பிறப்பித்த ஆணையாக அமைந்துள்ளது.[52]

சிவதர்மீசுவரமுடையாருக்கு அரசர் பெயரால் அமைக்கப் பட்ட முடிவழங்கும் பெருமாள் சந்திக்கும் அர்த்தசாம பூசைக்கும் திருப்படிமாற்று உள்ளிட்ட தேவையான நிவந்தங்களுக்குமாக முன்னக்குடி எனும் ஊரும் நாட்டியத்தான் குளமும் அரசரால் தேவதான இறையிலியாக்கப்பட்டன.

இக்கொடையை அறிவிக்கும் அரசரின் வாய்மொழி உத்தரவு இதைத் தொடர்ந்து, 'இறையிலியாக இறுப்பதாக இட்டமைக்கு வரியிலார் எழுத்திட்ட உள்வரியும் நம் ஓலையும் தரச்சொன்னோம்' என்று தெளிவுசெய்து, இக்கொடைச் செய்தியைக் கல்லிலும் செம்பிலும் வெட்டுவித்துக் கொள்க என முடிகிறது. திருவாய் மொழிந்தருளினார் என்ற சுட்டலுடன் எழுத்துவடிவம் பெற்று ஓலையாகும் இவ்வரச ஆணையில் பல உயர்நிலை அரசு அலுவலர்கள் கையெழுத்திட்டுள்ளனர்.

மிழலைக் கூற்றத்துக் கீழ்க்கூற்று வெட்டனூருடையான் வெண்காடு தேவன் திருக்காரோணம் உடையானான குலசேகர மாதவராஜன் முதல் கையெழுத்தாளராக அமைந்திருப்பதால், இவரைத் திருமந்திர ஓலை நிலை அலுவலராகக் கருதலாம். இரண்டாவதாகக் கையெழுத்திட்டுள்ள திருமல்லிநாட்டுத் தடங் கண்ணிச் சிற்றூருடையான் உய்யநின்றாடுவானான குருகுல ராஜனைத் திருமந்திர ஓலைநாயகமாகக் கொள்ளலாம். அண்ட நாட்டுப் பெருமணலூர் மந்திரி இராமனான பல்லவராஜன் மூன்றாம் நிலை அலுவலராகக் கையெழுத்திட்டுள்ளார். அடுத்து, 'உள்வரி' என அழைக்கப்பட்ட வருவாய் அலுவலர் கீழ்வெம்ப நாட்டு இராசவல்லபுரத்து உடையான் ஒருவாறு உணர்ந்தானான தமிழப் பல்லவரையர் கையெழுத்திட்டுள்ளார்.

இவர்களை அடுத்து ஓலையில் கையெழுத்திட்டுள்ள அலுவலர்கள் அனைவரும் புரவுவரித் திணைக்களமென்று அழைக்கப்பட்ட வருவாய்த்துறையைச் சேர்ந்த உயர் அலுவலர் கள். அருளாளன் சேவகத் தேவனான கச்சியராயன், அண்டக் குடையான் தேவன், சேவகத் தேவன் அழகனான அதிகைமான், அரவணை சேந்தபிரானான செம்பியதரையன், அரையன் கதிராயிரமுடையானான காலிங்கதரையன், ஸ்ரீவல்லவன் சுந்தரத் தோளுடையானான சுந்தரபாண்டிய அதிகைமான், கரையேற விட்டானான இராசராசப் பல்லவதரையன், உதையதிவாகரம் துணையிருந்தானான முனையதரையன், பொண்ணைப்பிரான் விரதம் முடித்தான் எனும் இவர்கள் ஒன்பதின்மரும் புரவுவரித் திணைக்கள நாயகங்களாக இருந்து இவ்வரி மாற்றங்களை உறுதிப்படுத்தியுள்ளனர்.

முதலாம் மாறவர்மர் சுந்தரபாண்டியர் சோழ மண்டலத்தில் குலோத்துங்க சோழ வளநாட்டு முடிகொண்டசோழபுரத்து அரண்மனையில் இராஜராஜன் மண்டபத்தில் பள்ளிப்பீடமான மழவராயனில் வீற்றிருந்தபோது திருக்கோளக்குடி சிவதர்மீசு வரத்துத் தானபதிகளுக்கு உவந்தளித்த ஆணையிலும் பாண்டிய அரசு சார்ந்த உயர் அலுவலர்கள் பலராய்ச் சுட்டப்பட்டுள்ளனர்.[53] இக்கோயில் இறைவிக்குரிய சில நிலத்துண்டுகளைத் திருக்காமக் கோட்டப்புற இறையிலியாக்க வேண்டுமென் மருமகனார் குலசேகரதேவர் பரிந்துரைக்க அதையேற்று, அரசரிட்ட வாய்மொழி ஆணையின் எழுத்து வடிவமாக அமைந்துள்ள இக்கல்வெட்டிலும் திருமந்திர ஓலை, ஓலைநாயகம், உள்வரி, புரவுவரித் திணைக்கள நாயகங்கள் கையெழுத்திட்டுள்ளனர்.

முன்னக்குடி ஊரைத் தேவதான இறையிலியாக்கி இரண் டாம் மாறவர்மர் சுந்தரபாண்டியர் இட்ட ஆணையும் பரிந்துரை யால் நிகழ்ந்ததுதான். மதுரை அரண்மனைப் பள்ளியறைக் கூடப் பள்ளிப்பீடம் மழவராயனில் இருந்தபடி, கி. பி. 1249ல் மன்னர் இட்ட இந்த ஆணையும் பாண்டிய நாட்டு அரசு அலுவலர்கள் பெயர்களைக் கொண்டுள்ளது. 'தேவதான இறையிலியாக இட்டு நம் வரியிலார் எழுத்திட்ட உள்வரிப்படி நம் கேள்வியும் தரச் சொன்னோம் கைக்கொண்டு இப்படி சந்திராதித்தவற் செல்வதாக கல்லிலுஞ் செம்பிலும் வெட்டு

வித்துக்கொள்க என்று திருவாய் மொழிந்தருளினார்' என்று அரசரது வாய்மொழி ஆணையை ஓலை பதிவு செய்துள்ளது.[54]

இவ்ஆணையில் திருமந்திர ஓலையாகத் திருமல்லிநாட்டுத் தடங்கண்ணிச் சிற்றூருடையார் கையெழுத்திட, ஓலைநாயக மாகச் செவ்விருக்கை நாட்டுச் சக்கரபாணிநல்லூர் அரையன் விரதம் முடித்தானான பல்லவராயன் கையெழுத்திட்டுள்ளார். புரவுவரித் திணைக்கள நாயகங்களாக அருளாளன் சேவகத் தேவனான வாணராயன், சிவல்லவன் ஏறுதிருவுடையானான காலிங்கராயன், அரசன் அழகனான முனையதரையன், கலிங்கத் தரையன், அரசன் அழகனான கச்சியராயன், ஒருவாறு உணர்ந்தா னான நல்ல பெருமாள் தமிழப் பல்லவதரையன், அரையன் திருநாவுடையானான நீலகங்கரையன், சீராளன் பட்டாலகனான பழந்திபராயன், கேசவப் பெருமாளான செழியதரையன், பரஞ் சோதி சிராமனான சேதியராயன், தேவசிலைப் பெருமாளான நுளம்பாதராயன், சதிரன் திருவெண்ணையடைந்தானான பல்ல வரையன் ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர்.

இவ்வரச ஆணைகளில் திருமந்திர ஓலை, ஓலைநாயகம் எனும் பணிகள் சுட்டப்படவில்லையாயினும், சோழர் கல்வெட்டுகளின் அடிப்படையில், அரச ஆணையை உறுதிப் படுத்தும் முதல் மூன்று கையெழுத்தாளர்களாக வெளிப்படும் உயர் அலுவலர்களைத் திருமந்திரஓலை, திருமந்திர ஓலைநாயகம் எனவோ, அல்லது அவற்றிற்கு ஒப்பான பொறுப்புகளில் இருந்தவர்களாகவோ கருதத் தடையில்லை. அது போலவே, புரவுவரித் திணைக்களம் சார்ந்தும் நாயகங்கள் மட்டுமே அரச ஆணைகளில் கையெழுத்திட்டுள்ளனர். சோழர் கல்வெட்டு களில் காணப்படும் பிற படிநிலை அலுவலர்களான முக வெட்டி போன்ற வருவாய் அலுவலர்களின் கையெழுத்து களை இவ்ஆவணங்களில் காணமுடியவில்லை.

பதினாறாம், பதினேழாம் நூற்றாண்டுகளில் இப்பகுதிகளில் நிலையான அரசு இல்லாமையின் பெருநிலக்கிழார்களே அவ்வப் பகுதிகளைத் தங்கள் கட்டுப்பாட்டில் கொணர்ந்து தன்னாட்சி மேற்கொண்டிருந்தனரோ என்று கருதுமாறு பல கல்வெட்டுகள் கோயில் தானத்தாருக்கான தனியர் ஓலைகளாக அமைந்துள்ளன.

வரிகள்

பல கல்வெட்டுகள் பிற்பாண்டியர் காலத்தில் வழக்கிலிருந்த வரியினங்களை அடையாளப்படுத்துகின்றன. கடமை, குடிமை, குடிக்கலம், அந்தராயம், எலவை, புதியிதுபடி, காசு, மாவடை, தறியிறை, ஆயவர்க்கம், செக்கிறை, தட்டொலி, தட்டார்ப் பாட்டம், ஆள்வரி, இனவரி, குளமீன்பாட்டம், பொன்வரி, காணிக்கை, கார்த்திகைப்பச்சை, உகவை, கையேற்பு, விநியோகம், ஆண்டெழுத்துத்தேவை, ஓலையெழுத்து, வாசல்பேறு, இலாஞ் சினைப்பேறு, ஆள்தேவை, தச்சுத்தேவை, ஆனைச்சாலை, கடைக் கூட்டு இலக்கை, குதிரைப்பந்தி, குற்றத்தண்டம், கொற்றிலக்கை, புறவுடல், சிற்றாயம், அச்சு, காரிய ஆராய்ச்சி, வெட்டிபாட்டம், பஞ்சுபீலி, இடையர்வரி, முதலிப்பேறு, முட்டாவாள், பெருவரி, வேலிக்கால் அச்சு, எச்சோறு, சந்துவிக்கிரகப்பேறு, கற்பூர விலை, சில்வரி, சிற்றாயம், கூற்றரிசி, ஆட்டுவரி, சாட்டுவரி, ஈழம் புன்செய், சேவகம், கண்மாளப் பறையர் சிற்றாயம் எனப் பல்வகையான வரிகள் நிலம், தொழில், ஆட்சித்தேவை, நிருவாகம் சார்ந்து தண்டப்பெற்றன.[55]

இவற்றுள் சில ஊழியமாகவும் அமைந்தன. இவ்வரியினங் களுள் பெரும்பாலானவை சோழர் காலத்திலிருந்தே வழக்கில் இருப்பன. குடிக்கலம், புதியிதுபடி, கையேற்பு, ஆண்டெழுத்துத் தேவை, ஓலையெழுத்து, ஆள்தேவை, தச்சுத்தேவை, குதிரைப்பந்தி, முதலிப்பேறு, சாட்டுவரி என்பன புதிய வரியினங்களாக உள்ளன.

இவ்வரியினங்களுள் எலவை, புதியிதுபடி, குடிக்கலம், கையேற்பு, புறவுடல் என்பவை எதன் பொருட்டுப் பெறப்பட்டன என்பதை அறியக்கூடவில்லை. எனினும், கடமை, அந்தராயம் எனும் நிலவரிகளோடு சேர்ந்தே இவையும் கூறப்பெறுவதால் இவற்றையும் நிலம் சார்ந்த வரிகளாகவே கொள்ளவேண்டி உள்ளது. அரசு அலுவலர்களுக்குப் பயணத்தின்போது ஊராரால் அளிக்கப்பட்ட சோற்றையும் தங்குமிடத்தையும் குறித்த வரி யினமே கொற்றிலக்கை என்றும் எச்சோறு வழங்கத் தேவைப் படும் அரிசி குற்றும் ஊழியத்தைக் குறித்ததே கூற்றரிசி என்றும் கல்வெட்டறிஞர் கருதுவர்.[56]

கடைக்கூட்டு இலக்கை, கண்காணி செய்வார் பொருட்டுப் பெறப்பட்ட வரியாகும்.[57] 'முதலி' என்ற சொல் தலைவரைக்

குறித்து நின்றதால் முதலிப்பேறு ஊர்த்தலைவர்களின் அலுவல் பேறாக அமைந்த வரியாகலாம்.[58] ஈழம்பூச்சி என்ற வரியினமே ஈழம் புன்செய் என்றும் ஈழம் புஞ்சை என்றும் மாறி அமைந்துள்ளது. இது ஈழவர் மீது விதிக்கப்பட்டிருந்த வரியாகும்.

கி. பி. பதினாறாம் நூற்றாண்டுக் கல்வெட்டொன்று, நிலத்தின் மீதான வரியினங்களாக இறை, தரம், ஊழியம், பாழியம் இவற்றைக் குறிக்கிறது.[59] நிலத்தின் தன்மைக்கும் விளைவுக்கும் ஏற்ப வரி வசூலிக்கப்பட்டமையைச் சில கல்வெட்டுகளால் அறியமுடிகிறது.

நில விளைச்சலில் அரசாங்கத்தின் பங்காக அமையும் மேல் வாரமாக மூன்றில் ஒரு பங்கு விளைவு, நன்செய் நிலப் பசான விளைவிலிருந்து பெறப்பட்டமையைச் சடையவர்மர் சுந்தர பாண்டியரின் கல்வெட்டால் அறிகிறோம். தினை, வரகு, எள்ளு ஆகிய குறுவைப் பயிர்களின்போது இம்மேல்வாரம் நான்கில் ஒரு பங்காகவும் கரும்பு, கொடிக்கால், கருணை, மஞ்சள், இஞ்சி, வாழை, வழுதலை, பூசணி உள்ளிட்ட பயிர் விளைவில் மேல் வாரம் எட்டில் ஒரு பங்காகவும் அமைந்தது.

சடையர்வர்மர் சுந்தரபாண்டியரின் மற்றொரு கல்வெட்டும் நன்செய் நிலப் பசான விளைவின் மேல்வாரத்தை மூன்றில் ஒரு பங்காகவே குறிக்கிறது. தினை, வரகு, எள்ளு, பயறு, கரும்பு, கொழுந்து, கருணை, மஞ்சள், இஞ்சி, செங்கழுநீர், வாழை, வழுதலை, பூசணி உட்படப் பயிர்களுக்கும் மரப்பனை, நாரத்தை, எலுமிச்சை, குளஇஞ்சி, நெல்லி, இலுப்பை உட்பட மரங்களுக்கும் ஐந்திலொரு பங்கு விளைவும் தெங்கு, கமுகு மரப்பயனில் ஏழிலொரு பங்கு விளைவும் மேல்வாரமாயின.

காடு வெட்டித் திருத்தின நிலங்களில் முதலாண்டில் பத்தில் ஒரு பங்கு விளைவும் இரண்டாமாண்டு ஒன்பதிலொரு பங்கும் மூன்றாமாண்டு எட்டிலொன்றும் நான்காமாண்டு ஏழிலொன்றும் பின்வரும் ஆண்டுகளில் மூன்றிலொரு பங்குமாக மேல்வாரம் அமைந்தது.[60]

சடையவர்மர் சுந்தரபாண்டியரின் மற்றொரு கல்வெட்டுத் திருவம்பலப் பெருமாளான களப்பாளருக்குத் திருக்கோளக் குடிக் கோயில் நிருவாகத்தார் ஏழு மா நிலத்தைக் காராண் கிழமையாக இராசிப்பணம் எழுபதிற்கு விற்றதைக் கூறுகிறது.

இந்நிலத்திற்குக் கடமையாகப் பசானத்து நெல் திருக்கொட்டாரக் காலால் பதினாறு கலம் பெறப்பட்டது. கோடைப் போகம், ஆடிக்குறுவைப் பயிர்களுக்கு மாத்தால் இவ்வளவு நெல் எனத் தண்டப்பெற்றது.

வழுதலை, பூசணி உட்படப் புன்பயிர் செய்யும் நிலத்துக்கு மாத்தால் நெல் 4 கலம் என நிர்ணயிக்கப்பட்டது. இது போலவே தெங்கு, கமுகு, பலா, நாரத்தை எலுமிச்சை முதலிய மரங்களுக்கும் மாத்தால் கடமை நெல் இவ்வளவு என்பது தீர்மானிக்கப்பட்டது. தோப்பாகச் செய்யும் நிலத்திற்கான கடமையும் இக்கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது. இவை தவிர காசுக் கடமையாக ஆண்டு ஒன்றுக்கு இரண்டு இராசிப் பணம் பெறப்பட்டது.[61]

வீரபாண்டியரின் ஆட்சிக்காலத்திலும் நன்செய் நிலத்தில் மூன்றில் ஒரு பங்கு விளைவே மேல்வாரமாகப் பெறப்பட்டது. தினை, வரகு, எள்ளு, கொடிப்பயிர், கரும்பு, தலைக்கடையான புன்பயிர்கள், மரங்கள் ஆகியவற்றிற்கு மேல்வாரம் ஐந்தில் ஒருபங்காக அமைய, பிற புன்செய்ப் பயிர்களுக்கு இது ஏழில் ஒரு பங்காக இருந்தது.[62]

குடிப்பெயர்வுகளும் குடியமர்த்தல்களும்

கோளக்குடிக் கல்வெட்டுகள் இப்பகுதியில் உருவான இரண்டு அந்தணர் குடியிருப்புகள் பற்றி விரிவாகப் பேசுகின்றன. வெட்டுவான் பொய்யஞ்சியான நகலராச நாடாள்வார் தாம் விலைக்குப் பெற்ற கொற்றமங்கலம் எனும் ஊரைத் தாம் விலை கொண்டு அநுபவித்தவாறே கோளக்குடி மலை அடிவாரத்தில் உள்ள பொய்யாமொழி ஈசுவரமுடையாருக்குத் திருநாமத்துக் காணியாகத் தந்து, திருக்கோளக்குடி இறைவனுக்கு அத்யயனம் செய்வதாக உறுதியளித்து வந்த பட்டர்கள் அவ்வூரில் அகரம் அமைக்க வகை செய்தார்.

ஆனால், பட்டர்கள் அத்யயனம் செய்யாமலும் கொற்ற மங்கலம் வயலில் பயிர் செய்யாமலும் வாளா இருந்தனர். பயிர் விளையாமையால் வரியாகச் செலுத்தவேண்டிய கடமை நின்றது. இதனால் கோளக்குடிக் கோயில் பணிகள் தடைப்படவே, பட்டர்களைக் கொற்றமங்கலத்திலிருந்து அகற்றிய நாடாள்வார், அவர்களுக்கு மாற்றுக் குடியிருப்பாக மஞ்சநேரி வயலில் நிலமும் மனையும் அமைத்துத்தந்தார்.[63]

கி. பி. பதினான்காம் நூற்றாண்டளவில் மக்கள் நாயனான கண்டியதேவர் மணலூரில் அதன் பழம்பெயர் முதலானவை நீக்கி மன்னர் சுந்தரபாண்டியர் பெயரால் சதுர்வேதிமங்கலம் ஒன்று அமைத்தார். இங்குக் கண்டியதேவரால் குடியமர்த்தப் பட்ட இருபது சதுர்வேதி பட்டர்களுக்கும் ஆளுக்கு ஒரு பங்கென இருபது பங்கு நிலம் ஒதுக்கப்பட்டது. சுந்தரபாண்டிய ஈசுவரமுடையார் என்ற பெயரில் சிவலிங்கமும் குலசேகர விண்ணகர ஆழ்வார் என்ற பெயரில் விஷ்ணு வடிவமும் எழுந்தருளுவிக்கப்பட்டன.

இவற்றிற்காக நான்கு பங்கு நிலம் தேவதானமாக அளிக்கப் பட்டது. வரியிலியாக்கப்பட்ட தங்கள் நிலங்களில் பட்டர்கள் பயிர்செய்து விளைவை அனுபவித்துக் கொள்வதுடன் கோளக் குடிக் கோயிலுக்குரிய கடமையாகக் கலனே தூணி நெல் இறுக்குமாறு தீர்மானிக்கப்பட்டது. தேவதானப் பங்குகளின் விளைவு அந்தந்த இறைத்திருமேனிகளின் வழிபாட்டிற்கும் படையலுக்குமெனக் கொள்ளப்பட்டது.[64]

கோளக்குடியிலும் அதன் சிற்றூர்களிலும் ஏற்பட்ட குடிப் பெயர்வுகள், அவற்றிற்கான காரணங்கள், அத்தகு குடிப்பெயர்வு களுக்கு மாற்றாகக் குடியமர்த்தல்கள் நிகழ்த்தப்பட்டமை இவை பற்றிச் சில கல்வெட்டுகள் பேசுகின்றன. கி. பி. பதினா றாம் நூற்றாண்டினதாகக் கொள்ளத்தக்க கல்வெட்டொன்று, கோளக்குடி அழிந்து, குடிகள் இடம்பெயர்ந்தமையைச் சுட்டு கிறது. ஊரில் புதிய குடிகளை அமைக்க யாரும் முயற்சி எடுக்கா மையின் சிட்டம்ம நாயக்கரும் காளப்பையரும் கூடலூரில் இருந்து சக்க தேவர் வேட்டுவர் காத்தவனான சாயபடைதாங்கி, அவருடைய தம்பி சிங்கக் காத்தவன் இருவரையும் அழைத்து அவர்களுக்குப் பாடிகாவல் பணியளித்தமையுடன், ஊரில் புதுக்குடிகளை அமர்த்தும் பொறுப்பையும் ஒப்புவித்தனர்.[65]

கி. பி. 1537ல் வெட்டப்பட்டுள்ள மற்றொரு கல்வெட்டும் கோளக்குடி வாழ் மக்கள் வரி செலுத்த முடியாமல் பல இடங் களுக்குக் குடிபெயர்ந்தமையைத் தெரிவிக்கிறது. இப்படிக் குடி பெயராமல் இருந்த குடும்பங்களுக்கும் புதிதாக வந்து குடியேறிய குடும்பங்களுக்கும் கோயிலுக்குரிய வரியினங்கள் கோயில் பண்டாரத்தாரால் தீர்மானிக்கப்பட்டு ஒப்பந்தம் நிறைவேற்றப் பட்டது. இதன்படி, ஏருக்கு மூன்று பணம் செலுத்தப்பட்டது.

கைவிளை ஏருக்கு ஒன்றரைப் பணமும் புறக்குடி ஏருக்கு இரண்டு பணமும் பருவகாரனுக்கு ஒரு பணமும் வரியாக அமைந் தன. இத்துடன், இறைக்கோயிலுக்குரிய ஊழியங்களையும் குடிகள் செய்திடல் வேண்டுமென முடிவானது.[66]

சமுதாயம்

மக்கள்

கோளக்குடிக் கல்வெட்டுகள் கோயிலோடு தொடர்பு கொண்டிருந்த சுற்றூர் மக்களான வேலங்குடி மறவர், புகலூர் மலையாள முதலிகள், இளையாத்தங்குடி நகரத்தார், விரையாச் சிலை மறமுதலிகள், அரசமக்கள் இவர்கள் பற்றியும் உள்ளூர் மக்களான கோளக்குடி இடையர்கள், நகரத்தார், சிவஅந்தணர், தந்திரிமார், கொல்லர், தட்டார், மறமுதலிகள், கம்மாளர், பறையர் இவர்கள் பற்றியும் சில தகவல்களை முன்வைக்கின்றன.

விரையாச்சிலையிலும் கோளக்குடியிலும் வேலங்குடியி லும் வாழ்ந்த மறவர்களின் தலைவர்கள் மறமுதலிகள் என்று அழைக்கப்பட்டுள்ளனர். படைவீரர் கொண்ட ஒரு சாதிப் பிரிவாகத் தந்திரிமார் அமைந்தனர். இவர்களைக் கேரளர் களாகக் கொள்ளினும் தகும். வணிக ஊர் மன்றத்தார் நகரத்தார் என்றழைக்கப்பட்டனர்.

கல்வெட்டுகளில் காணப்படும் கணக்கற்ற மக்கள் பெயர் களில் தூய தமிழ்ப் பெயர்கள் பிற ஊர்க் கல்வெட்டுகளினும் இங்குச் சற்றுக் கூடுதலான எண்ணிக்கையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. எனக்கு நல்ல பெருமாள், பொன்னாண்டார், பாண்டிய பெருமாள் பிள்ளை, சிவந்தகால் அழகியார், சிவந் தெழுந்தார், நல்லமை அழகிய வேளான், அறிவுடை மூவேந்த வேளான், திருக்கை வேல் அழகியான், உய்யநெறிகாட்டினான், திருநிலைஅழகியான், திருமலைக் கொழுந்தன், ஆரும் ஒவ்வாத பெருமாள், அழகிய பாண்டிய விழுப்பரையன், பொன்னன், பெருமாள் நம்பி, பனையன் கூத்தனான செழியன் அஞ்சியன், அழகனான வானவன் விழுப்பரையன், ஏறுதிருவுடையான் ஈழத்தரையன் என்னும் பெயர்கள் பலதள மக்களாலும் கொள்ளப்பட்டிருந்தன. அழகிய, அழகன், அழகியான் எனும் அழகு தொடர்பான சொற்கள் பெயர்களின் முன்னொட்

டாகவோ அல்லது பின்னொட்டாகவோ பரவலாக அமைந் துள்ளமை நோக்கத்தக்கது.

கோளக்குடிக்கும் கேரளர்களுக்கும் இருந்த தொடர்பை அறியக்கூடவில்லை எனினும், கேரளநாட்டினர் பலர் இங்கு வாழ்ந்திருந்தமை கல்வெட்டுகளால் தெரியவரும் உண்மையாகும். 'கேரளன்' என்ற சொல்லைத் தம் பெயருடன் இணைத்துக் கொண்டிருந்த நிஷதராஜன் மரபினர் பொன்னமராவதியில் தலைமையராய் இருந்தமையும், 'கேரளன் தவணைபோந்த வரிப் படி' என ஒரு கல்வெட்டுக் குறிப்பதும் இங்கு நினைக்கத்தக்கன.

திருக்கோளக்குடிப் பழைய இடையர்களாக கேரளன் மாதவன், கேரளன் பொன்னன், கேரளன் கேரளன், கேரளன் பெரியான், கேரளன் பிள்ளான் ஆகியோரைக் குறிப்பதுடன் இவர்கள் விக்கிரமசிங்க தேவருக்கு இறை இறுத்தமையையும் முதலாம் மாறவர்மர் சுந்தரபாண்டியரின் கல்வெட்டொன்று சுட்டுகிறது.[67] இறை, குடிமைகள், குடிக்கலம் உட்பட மற்றும் எப்பேர்ப்பட்டனவும் நாட்டோபாதியாகத் தருமளவு நில உரிமையாளர்களாக இவ்விடையர்கள் கோளக்குடியில் வாழ்ந்தமை எண்ணத்தக்கது.

கல்வி

பிரமதேய ஊர்களின் நிருவாக சபை உறுப்பினராவதற்கான தகுதிகளில் ஒன்றாக வேதஅறிவும் குறிப்பிடப்படுவதால் அந்நாளில் வேதக்கல்வி சிறப்புற்று விளங்கியதாகக் கருதலாம். விலை ஆவணங்கள் எழுதப்பட்டுள்ள நேர்த்தியும் அவற்றில் காணப்படும் சொல்லாட்சிகளும் கணக்கியல் கூறுகளும் அக் கால மக்களின் சட்ட, கணித அறிவுக்குச் சான்றுகளாகின்றன.

அரசர்தம் வாய்மொழி ஆணைகள் திருமுகங்களாகி உரியவர்களால் நிறைவேற்றப்பட்ட பாங்கும் வருவாய்த்துறை செயற்பட்ட முறையும் அங்கிருந்த பதிவேடுகளும் அக்கால மக்களின் நிருவாக அறிவு பற்றிய தெளிவிற்கு வித்திடுகின்றன. தமிழ்ப் பெயர்கள் பலவாக அமைந்திருப்பதாலும் பலர் தமிழன், தமிழதரையன் எனப் பெயர் கொண்டிருப்பதாலும் மொழிப் பற்றும் கல்வியும் உடையவர்கள் இப்பகுதியில் வாழ்ந்ததாகக் கொள்ளலாம். இக்கோயிலில் காணப்படும் பதினான்காம் நூற்றாண்டுச் செய்யுள் கல்வெட்டுத் தமிழில் பாவியற்றும் வல்லமையாளர்கள் இருந்தமைக்குச் சான்றாகிறது.

வேளாண்மை

ஏந்தல், குறிச்சி, குடிக்காடு, வயல் எனப் பல பெயர்களால் விளைநிலம் அழைக்கப்பட்டது. நீர்வரத்து மிக்கிருந்த நிலப் பகுதி நீர்நிலம் என்றும் இடைப்பட்ட நிலையில் நீர் பெற்ற நிலம் நன்செய் என்றும் நீர்வரத்துக் குறைந்தபகுதி புன்செய் என்றும் பகுத்தறியப்பட்டன. மக்கள் வாழ்ந்த பகுதி நத்தம் எனப்பட்டாற் போல, வயல் சார்ந்த குடியிருப்புப் புறக்கம், புறக்குடி எனப் பெயரிடப்பட்டிருந்தது.

பசானம், கோடைப்பயிர், குறுவை என மூன்று விளைச்சல் தந்த நிலங்கள் சிலவாகவும் பசானம், குறுவை என இரண்டு விளைச்சல் தந்த நிலங்கள் பலவாகவும் இருந்தன. அவற்றுள் பசானம் பெரும் அறுவடைப் போகத்தையும் குறுவை குறுகிய கால அறுவடைப் போகத்தையும் சுட்டி நின்றன. கார், மறு என விளையும் காலம் குறித்தும் ஒரு பூ, இருபூ, வம்பு என விளை திறன் குறித்தும்கூட நிலங்கள் பகுக்கப்பட்டிருந்தன.

காடுகள், திடல்கள் இவற்றைப் பண்படுத்தி உழவுக்குக் கொணர்ந்தபோது திருத்தப்பட்ட அந்நிலப்பகுதிகள் வயக்கல் என்றழைக்கப்பட்டன. சோழன் வயக்கல், பெரியான் வயக்கல் எனும் நிலத்துண்டுகள் இராஜசிங்கமங்கலத்தில் இருந்ததாக ஒரு கல்வெட்டுக் கூறுகிறது.[68] இத்தகு திருத்தப்பட்ட நிலங்களுக்கு முதல் நான்காண்டுகளுக்குக் குறைவான வரியே பெறப்பட்டது.

இவை விற்கப்பட்டபோதும் விற்பனை ஆவணங்களில், 'பயிர் தாழ்வறப் பயிரேற்றுமாறு' கேட்டுக்கொள்ளப்பட்டமை யுடன், 'குளம், கிணறு வெட்டி, நிலமளந்து, பல தடி ஒரு தடியாக மேடும் பள்ளமும் ஒக்க இட்டுத் திருத்தி' உழுதுகொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டமையையும் பார்க்கமுடிகிறது.[69] சில ஆவணங் கள், பயிர் செய்துகொண்டு, வேண்டும் மரங்களும் வைத்துப் புன்செய்களும் பயிர் செய்துகொண்டு, நத்தமும் குடியேற்றிக் கொண்டு, பசானத்துக்கும் குறுவைக்கும் உரிய நிலவரியைச் செலுத்திக்கொண்டு நிலமாள வழிகாட்டுகின்றன.[70]

விளைநிலங்கள் பொதுவாகக் குடிக்காடு என்றழைக்கப் பட்டாலும் பெரும்பாலானவை அவற்றின் உரிமையாளர் பெய ராலேயே குறிக்கப்பட்டன. கரிகால சோழப் பல்லவதரையர் குடிக்காடு, ஒரு சொல் வாசகப் பேரையன் குடிக்காடு, செம்பிய

தரையன் குடிக்காடு, இம்மையே திருவாளர் குடிக்காடு, நாட்டுப் பேரையன் குடிக்காடு என்பன அவற்றுள் சில. நாவணி வயல், ஊற்றுக்குழி வயல், நம்பன் குடிக்காடு, தேவன் குடிக்காடு, சிந்திய குடிக்காடு என்று பொதுப் பெயர்களைப் பெற்றிருந்த நிலங்களும் இருந்தன.

கோயில் நங்கைக் குடிக்காடு எனக் குறிக்கப்படும் நிலம் கோயில் சார்ந்த தெய்வமொன்றிற்குத் (பிடாரி?) தரப்பட்ட நிலமாகலாம். இவை தவிர, தட்டார் காணி, கொல்லர் காணி, கண்மாளர் குடிக்காடு, பறையர் குடிக்காடு, பாரசிவக்காணி என உரிமையாளர்களின் தொழில் சார்ந்து பெயரேற்ற நிலங்கள் இருந்தமையையும் பார்க்கமுடிகிறது.

இந்நிலங்களில் கரும்பு, வாழை, மஞ்சள், இஞ்சி, கொழுந்து, வரகு, சாமை, எள்ளு, கொள்ளு, புல், தினை, பருத்தி, ஆமணக்கு, வழுதலை, பூசணி, கருணை, செங்கழுநீர் ஆகியன பயிர்செய்யப் பட்டன. எலுமிச்சை, பனை, நாரத்தை, குளஇஞ்சி, நெல்லி, இலுப்பை, தெங்கு, கமுகு முதலான மரங்களும் வளர்க்கப்பட்டன. மரங்களைக் காப்பது கடமையாகக் கருதப்பட்டது. இம்மரங் களின் வருவாயிலிருந்து காய்ப்பிற்கேற்ப வரி பெறப்பட்டது.

நிலங்களுக்குப் பாசனமளிக்கவும் குடிநீர்ப் பயன்பாட்டுக்கும் கிணறு, குளம், ஏரி, ஊருணி ஆகியன அமைக்கப்பட்டன. திருக்கோளக்குடி மலைக்குத் தெற்கிலுள்ள ஊருணியின் படித் துறையில் இருக்கும் கல்வெட்டு, அந்நீர்நிலையை ஆண்டார் ஊருணி என்றழைக்கிறது.[71] இரண்டாம் மாறவர்மர் குலசேகரரின் முப்பத்திரண்டாம் ஆட்சியாண்டில் (கி. பி. 1346), கல்வாயில் நாட்டுச் சுந்தரபாண்டியபுரத்து நன்னெறிப்பாண்டி உடையான் திருவேகம்பமுடையான் அழகப்பெருமாள் இந்த ஊருணிக்குக் குளப்புறமாக இராஜசிங்கமங்கலத்தாரிடமிருந்து தாம் விலைக்குப் பெற்ற மூன்று நிலத்துண்டுகளையும் இரண்டு கிணறுகளையும் அளித்திருந்தார். இந்நிலவருவாய் கொண்டு ஊருணி பாது காக்கப்பட்டது.

இதே ஊரில் மலையின் மேற்குப்புறமுள்ள ஊருணியைத் தெலிங்ககுலகாலபுரத்துப் பாக்கத்தைச் சேர்ந்த அடையமுத்தித் திருவான சோழப்பர் என்பார் சோழர் காலத்தில் அமைத்துக் கொடுத்துள்ளார். இவ்விரண்டு ஊருணிகளும் இன்றளவும்

கோளக்குடி மக்களுக்கும் கோயில் வழிபாட்டிற்கும் நீர் தரும் நிலைகளாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவை தவிர, இங்குப் பொன்னி ஊருணி என்ற பெயரிலும் ஓர் ஊருணி இருந்தது. பிச்சிக்குழிக்கரை என்றும் அறியப்பட்ட அதன் கரையில் அக்கசாலைப் பிள்ளையார் எழுந்தருளி இருந்தமையை மாறவர்மர் குலசேகரரின் கல்வெட்டொன்று எடுத்துரைக்கிறது.[72]

மூவேந்தன் என்னும் பிசாசின் பெயர்கொண்டு கோளக்குடிக்கு முன்பு ஓர் ஊருணி இருந்ததாகச் சோழர் காலக் கல்வெட்டொன்று கூறுகிறது. பிசாசு என்ற சொல் தமிழ் இலக்கியங்களில் கலித்தொகையில் மட்டுமே இடம்பெற்றுள்ளது. பேய், பூதம் இவற்றைக் குறிக்கும் திருமுறைகளில்கூடப் பிசாசு இடம் பெறவில்லை. பிசாசு ஒன்றிற்குப் பெயரிடப்பட்டிருந்ததும் அப்பிசாசின் பெயரில் ஊர் நடுவில் ஊருணி ஒன்று அமைந்திருந்ததும் தமிழ்நாட்டிலேயே திருக்கோளக்குடியில் மட்டும் தான் என்பது குறிப்பிடத்தக்கது. பதினோராம் நூற்றாண்டு மக்களின் இந்தப் பிசாசு நம்பிக்கை வரலாற்றிற்குப் புதிய செய்தியாகும்.

நில விற்பனை பேசும் கோளக்குடிக் கல்வெட்டுகளுள் பல அந்நிலத்துண்டுகளுக்கான குளங்கள், ஏரிகள், கிணறுகள் பற்றித் தவறாமல் குறிப்பிடுகின்றன. பெரும்பாலான நிலத்துண்டுகள் பாசனத்திற்கான கிணறுகளைப் பெற்றிருந்தன. அந்நிலத்துண்டுகள் விற்கப்பட்டபோது கிணறுகளும் சேர்த்து விற்கப்பட்டமையைப் பல ஆவணங்கள் உறுதிசெய்கின்றன. வயக்கல் நிலங்களைப் பயிர் செய்யுமிடத்துக் குளம், கிணறு வெட்டுதல் தலையாய பணியாகக் கருதப்பட்டது. புதுக்குளம், நாலாதூர் குளம், நாட்டுப் பேரையன் குளம், நாட்டியத்தான் குளம், சோறுண்டைக் குளம், ஐஞ்நூற்று மங்கலக் குளம், மாங்குடிக் குளம், முன்னக்குடிக் குளம், சக்தி குளம், பிரான் குளம், மருதன் குளம், வேண்டுவன இடாதான் குளம் எனப் பல குளங்கள் கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளன.

குளங்களிலிருந்து நிலத்துண்டுகளுக்கு நீரெடுத்துச் சென்ற கால்கள் வதிகள் எனப்பட்டன. ‘வதியமந்து கிடக்கிற குளங்களும்’ எனும் கல்வெட்டுச் சொல்லாட்சியும் ‘குளம் உடை குளப்பட்டு, வயலும் வதியழிஞ்சு காடும் எழுந்து பாழாய்க் கிடக்கை

யில்' எனும் கல்வெட்டு வரியும் நோக்கத்தக்கன.[73] குளங்களில் இருந்து நீர் வெளியேறும் வழிகளில் இடம்பெற்ற மதகுகள் 'குளவாய்' என்றும் 'குளவாய்த்தலை' என்றும் அழைக்கப் பெற்றன. 'நீர்நக்கல்' என்ற சொல்லாட்சி நீர்த்தேக்கங்களின் விளிம்பைக் குறித்தது. நில எல்லைகளைக் குறிப்பிடும்போது இச்சொல்லாட்சி பயன்படுத்தப்பட்டுள்ளமையை, 'தென்பாற் கெல்லை கொற்றமங்கலத்து நிலத்துக் குளத்து நீர்நக்கலுக்கு வடக்கு' எனும் வரி நிறுவவல்லது.[74]

குளத்தின் நீர்ப்பிடிப்புப் பகுதி குளக்கோப்பு, குளக்கோவை எனவும் குளக்கரையின் சரிவுப்பகுதி குளப்பரிப்பு என்றும் அறியப் பட்டன. குளங்கள் விற்கப்பட்டபோது அவ்ஆவணங்களில், 'குளப்பரிப்பு' என்ற சொல்லும் இடம்பெற்றமையைக் காண முடிகிறது. 'இன்னாயனார் திருநாமத்துக்காணி உள்ளூர்க் குடிக் காட்டுப் புரவில் ஊற்றுக்குழி பெருநான்கெல்லைக்குட்பட்ட நீர்நிலமும் நன்செய் புன்செய்யும் நத்தமும் தோட்டமும் குளமும் குளப்பரிப்பும் கீணோக்கிய கிணறும் மேல் நோக்கிய மரமும் மற்றும் எப்பேற்பட்ட சமஸ்தப்ராப்திகளும் உள்பட' எனும் சடையவர்மர் சுந்தரபாண்டியர் காலக் கல்வெட்டுத் தொடர் அக்காலத்தே விற்கப்பட்ட நிலங்களுக்கான ஆவண அமைப்பு முறையைக் கண்முன் நிறுத்துகின்றது.[75]

ஒரு நிலத்தை விற்றபோது அந்நிலம் சார்ந்த குளத்தின் நீர் நிலைமை கருத்தில் கொள்ளப்பட்டமையை, 'இந்நாட்டுப் பேரை யன் குளத்துக்கு நீர் ஏற்றி இக்குளங்கோவை மேல் வரம்புக்கு மேற்கு ஏறின மட்டம் ஏறுவதாகவும்' எனும் கல்வெட்டுத் தொடர் நிறுவவல்லது.[76] இது போலவே, குளத்திற்கு நீர்க்கொணரும் கால்களும் அவற்றில் நீர்ப்பாயும் முறைமையும் நிலவிலை ஆவணங்களில் இடம்பெற்றுள்ளமையை, 'நாட்டுப் பேரையன் குளத்துக்கு நீர் வரவு கால் முதலியார் குடிக்காடு ஐந்நூற்றுமங் கலத்துக் குளத்தில் வடக்கடைய அடுத்தும் வடவயலை அடுத்தும் வடக்குக் கிழ்மேலாக வருகிற கால் நீர்ப் பாய்வதாகவும் இந்தக் குளத்துக்குத் தென்கடையில் முன்பிலாண்டு வரும் மரியாதிப் படி உள்ள கால் நீர் பாய்வதாகவும்' எனும் கல்வெட்டு வரிகள் வழி அறியலாம். இத்தகு நீர்க்கால்களுள் சில பெயரேற்றிருந் தமையை, 'விருதரையன் கால்' எனும் சொல்லாட்சி எடுத்துக் காட்டுகிறது.[77]

முதலாம் மாறவர்மர் சுந்தரபாண்டியரின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டான கி. பி. 1228ல் விரையாச்சிலை அரையர்கள் குமரத்தக்குடி ஊரவரிடம் பதினெட்டுப் பழங்காசுகள் பெற்றுக் கொண்டு தம் காணியான அமராதிச்சன் குடிக்காட்டுக் குளத்து நீரை விற்றனர். நீர் விலைப் பிரமாணம் என்றழைக்கப்படும் இவ்ஆவணத்தில், இந்த அமராதிச்சன் குடிக்காட்டுக் குளம் கரையுடைந்து, வயலும் வதியழிந்து காடாகிப் பாழ்பட்டுக்கிடந்ததாகச் சுட்டப்பட்டுள்ளது. அமராதிச்சன் குடிக்காட்டுக் குளத்தில் நீர் பாயுமிடத்துக் குளத்தில் வாய்க்கால் வெட்டிப் பிரான் குளத்தில் அந்நீரைப் பெற்று, அங்கிருந்து கால் வெட்டி அந்நீரை மருதங் குளத்தில் பாய்ச்சிக்கொள்ள ஒப்புதலானது.[78]

கோயில்

கோளக்குடிக் கோயில்களில் காலத்தால் முற்பட்டவை பதப்பிலீசுவரமும் குடைவரையும்தான். குன்றக்குடியிலுள்ள மசிலீச்சுரத்தைப் பெயரளவில் நினைவூட்டும் பதப்பிலீசுவரம், இன்று அடித்தளமும் இலிங்கத்திருமேனியும் மட்டும் கொண்டு வழிபாடிழந்து காட்சிப்பொருளாகியுள்ளது. சிவதர்மீசுவரர், கோளக்குடி உடைய நாயனார், கோளக்குடி ஆண்ட நாயனார் என்று காலநிரலாகக் கல்வெட்டுகளில் அழைக்கப்பெறும் குடைவரை இறைவன், தம் முதற் பெயரை நிருவாகத்தார் குன்றின் நடுப்பகுதியிலுள்ள சிவபெருமானுக்குத் தந்துவிட்டமையால், கோளக்குடி நாயனாராய் ஒடுங்கியுள்ளார். இவரது இறைவி காமக்கோட்ட நாச்சியாய் ஆத்மநாயகி அம்மன் என்ற திருப்பெயருடன் குடைவரையின் வடபுறத்தே தனிக்கோயிலில் உள்ளார்.

குன்றின் நடுப்பகுதியில் பிற்பாண்டியர் கைவண்ணக் கற்றளியில் சிவதர்மீசுவரராய் எழுந்தருளியுள்ள இறைவனின் தனிமை கருதி, பக்கத்திலேயே சிவகாமி அம்மனுக்கும் கோயிலெடுத்துள்ளனர். அடிவாரத்தில் பொய்யாமொழி ஈசுவரர் தம் இறைவி மரகதவல்லியைத் தனியே பிரிக்கவிடாமல் கற்றளிக்குள்ளேயே நிற்க வைத்திருக்கிறார்.

கோளக்குடிக் கல்வெட்டுகள் இங்குள்ள இறைத்திருமேனிகளுக்கு அளிக்கப்பட்ட வழிபாடு, படையல் பற்றிக் கூறுவதுடன் இங்கு ஏற்றப்பட்ட விளக்குகள், நடத்தப்பட்ட திருவிழாக்கள், அளிக்கப்பட்ட மரியாதைகள், எழுந்தருளுவிக்கப்பட்ட இறைத்

திருமேனிகள், இயங்கிய திருமடங்கள் எனக் கோயில் சார்ந்திருந்த ஒரு சமுதாயத்தின் அறுநூறு ஆண்டுக்காலப் படப்பிடிப்பையும் கண்முன் நிறுத்துகின்றன.

வழிபாடு, படையல்

கண்டன் சுந்தரவில்லியான துவராபதி வேளார் சிவதர்மீசுவரருக்கான நள்ளிரவுப் படையலுக்கெனத் தம் ஆளுகையில் இருந்த செம்பங்குடிக்கான வரிகளை அளித்தார்.[79] உலகுடைய நாயனாரென்று அறியப்பட்ட முதலாம் மாறவர்மர் சுந்தர பாண்டியரின் இருபத்தோராம் ஆட்சியாண்டான கி. பி. 1237ல் அரசரின் நலத்திற்காக சிவதர்மீசுவரருக்குத் தயிர், பால் ஊட்ட வாய்ப்பாக விக்கிரமசிங்கதேவன் தமக்குக் கோளக்குடி இடையர் கள் இறுத்து வந்த வரிகளைக் கொடையளித்தார்.[80]

பராக்கிரமபாண்டிய மாவலி வாணாதராயன், 'பாளைங் காறன் சந்தி' என்ற பெயரில் சிவதர்மீசுவரருக்கு ஒரு வழிபாடு அமைத்தார். இதற்கான செலவினங்களுக்காகப் பழந்தேவ தானம், திருவிடையாட்டம், பள்ளிச்சந்தம், மனிதர் இறையிலி நீக்கி பொன்னமராவதி நாட்டு நகரமான குமரத்தக்குடியை இறையிலித் தேவதானமாக்கி வழங்கினார் அரசர்.[81] இறைவனுக்குக் காலைப் பூசையின்போது படையலளிப்பதற்காகக் கீழ்மண நல்லூரைத் தேவதானமாக அளித்தார் தம்மைய நாயக்கர். திப்பரச உடையாருக்குத் தர்மமாக அளிக்கப்பட்ட இக்கொடையில் பழந் தேவதானம், திருவிடையாட்டம், பிராமணர் நிலம் சேர்க்கப் படாமை குறிப்பிடத்தக்கது.[82]

முதலாம் மாறவர்மர் சுந்தரபாண்டியர் பெயரால் சிவதர்மீசுவரருக்கு அமைக்கப்பட்ட முடிவழங்கும் பெருமாள் சந்திக்கும் நள்ளிரவுப் பூசைக்குமான செலவினங்களுக்காக முன்னக்குடி, நடு, நாட்டியத்தான் குளம் இவை அரசரால் தேவதான இறையிலி யாக்கப்பட்டன. இவ்வாணையைத் தம் மைத்துனர் அழகப் பெருமாளின் பரிந்துரையேற்றுப் பிறப்பித்த மன்னர், ஆணை வழங்கியபோது பொன்னமராவதி அரண்மனையில் கோமாறன் பள்ளிக்கூடத்தில் மழவராயன் பள்ளிப்பீடத்தில் இருந்ததாகக் கல்வெட்டுக் கூறுகிறது.[83]

கி. பி. 1249ல் வெட்டப்பட்டுள்ள இரண்டாம் மாறவர்மர் சுந்தரபாண்டியரின் பதினோராம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு,

மன்னர் மதுரை அரண்மனைப் பள்ளியறைப் பள்ளிப்பீடம் மழவ ராயனில் இருந்தவாறு, கோளக்குடிக் கோயிலார் பூங்குன்ற நாட்டு வேலங்குடி மறவரிடமிருந்து விலைக்குப் பெற்று அநுப வித்து வந்த புறமலைநாட்டு முன்னக்குடி ஊரைச் சிவதர்மீசுவர ருக்கான திருப்படிமாற்று உள்ளிட்ட தேவைகளுக்காக இறை யிலித் தேவதானமாக்கி ஆணை பிறப்பித்தமையைச் சொல்கிறது. இவ்வாணை மழவராயர் பரிந்துரையால் பிறப்பிக்கப்பட்டது.[84]

திருக்கோளக்குடி சிவதர்மீசுவரருக்கு அமைந்த வீரமிண் டன் சந்திக்கான அமுதுபடி, சாத்துபடி, பூச்சுப்படி, பலபணி நிவந்தக்காரர், திருவிளக்கெண்ணெய் இவற்றிற்காக முன்னக்குடி ஊர்க் குடிமக்கள் இறுத்துவந்த இறுப்புகள், குற்றத்தெண்டன், வெட்டித் தேவை இவற்றை விக்கிரமசிங்கதேவர் ஓர் ஓலை வழிக் கோயிலுக்களித்து உத்தரவிட்டார்.[85] அது போலவே இறைவனின் குறிப்பிட்ட ஒரு சந்திக்கான திருப்படிமாற்று உள்ளிட்ட நிவந்தங் களுக்காக வேளார் குடிக்காடு, கரிகால சோழப் பல்லவதரையன் குடிக்காடு ஆகிய நிலப்பகுதிகளின் வரிகள் காங்கேயரால் கி. பி. 1237ல் கோயிலுக்கு அளிக்கப்பெற்றன. இந்நிலப்பகுதிகளைக் கோயிலுக்கு விற்றவர்களாக விக்கிரம பாண்டிய மூவேந்த வேளான், குலசேகரப் பல்லவதரையன், களப்பாளன், திரிபுவன கங்கன் உள்ளிட்டார் சுட்டப்பட்டுள்ளனர்.[86]

கி. பி. 1312ல் கோளக்குடி இறைவனுக்கு முதலாம் மாறவர்மர் குலசேகரர் அமைத்த செண்பகக் குலைசேகரன் சந்திக்குத் தேவை யான அமுதுபடி, சாத்துபடி இவற்றிற்கும் ஆனித் திருநாள் தேவைகளுக்கும் விருதராஜ பயங்கர வளநாட்டு நாட்டவர் குடிப் பற்றாய் இருந்த பெருநல்லூர், அரசர் திருமுகப்படித் தேவதான இறையிலியாகத் தரப்பட்டது. அது போலவே குலசேகரரால் நிறுவப்பட்ட அய்யன் அங்ககாரன் சந்திக்கான செலவினங்களுக் காகத் தென்கோனாட்டு ஒல்லையூர்க் கூற்றத்தைச் சேர்ந்த பெருங்கூற்றக்குடியான சுந்தரபாண்டிய நல்லூரில் நிலக்கொடை தரப்பட்டது.[87]

'ஆத்மநாயகி' என்ற பெயரில் இப்போது அழைக்கப்படும் கோளக்குடி இறைவி, முதலாம் மாறவர்மர் சுந்தரபாண்டியர் காலத்தில் கீழ்வெம்பநாட்டு இராஜவல்லபுரத்துத் தமிழப் பல்லவ தரையரால் ஆளுடைய நாச்சியார் என்ற பெயரால் எழுந்தருளு

விக்கப்பட்டவர். கல்வெட்டுகளில் இவர் திருக்கோயில், 'திருக் காமக்கோட்டம்' என்றழைக்கப்படுகிறது. இவ்விறைவியின் வழி பாடு, பூசை இவற்றிற்காக மன்னர் தம்முடைய பத்தாம் ஆட்சி யாண்டான கி. பி. 1226ல் கானநாட்டுக் குமரத்தக்குடியில் இரண்டு வேலி நிலத்தைத் தம் மைத்துனர் அழகப்பெருமாளின் பரிந்துரை யேற்றுத் திருக்காமக்கோட்ட இறையிலியாக அறிவித்தார்.[88]

இதே மன்னரின் பதினான்காம் ஆட்சியாண்டான கி. பி. 1230ல் மன்னர் சோழ மண்டலத்தில் குலோத்துங்க சோழ வளநாட்டு முடிகொண்டசோழபுரத்து அரண்மனையில் இராஜராஜன் மண்டபத்துப் பள்ளிப்பீடமான மழவராயனில் இருந்தபோது, இறைவியின் திருப்படிமாற்று உள்ளிட்ட நிவந்தங்களுக்காகக் குமரத்தக்குடியில், அவ்வூர்த் தான்தோன்றீசுவரருக்கு அளிக்கப் பட்ட தேவதான நிலம் கால் வேலியும் கானநாட்டு விண்ணகர் ஆழ்வாருக்கு அளிக்கப்பட்ட நிலம் இரண்டு மாவரையும் நீக்கி, எஞ்சியுள்ள நிலம் மன்னரின் மருமகன் குலசேகரர் பரிந்துரைக் கேற்ப காமக்கோட்டப்புற இறையிலியாக்கப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டது. இவ்வாணை ஏற்கனவே இவ்விறைவிக்கு குமரத்தக்குடியில் அளிக்கப்பட்டிருந்த இரண்டு வேலி நிலத்தை யும் உள்ளடக்கியதாக அமைந்தது.[89]

அரசரின் இந்த ஆணையைக் கோயிலாருக்குத் தெரிவித்த கானநாட்டு நாட்டார், குமரத்தக்குடி நிலத்தின் புரவில் தாங்கள் பெற்றுவந்த நாட்டுவினியோகம் என்னும் வரியினத்தைக் கோயிலுக்காக விலக்கிக் கொண்டதுடன், சிவதர்மீசுவரமுடை யாரின் திருவிழாத் திருநாளில் நடுவில் திருநாளை, 'நாட்டுக்கு நன்றாக'க் கொண்டாடுமாறு வேண்டுகோள் வைத்தனர்.[90]

கோளக்குடிக் குன்றின்மீது கட்டப்பட்டுள்ள முருகன் கோயில் கருவறைத் தாங்குதளக் கல்வெட்டொன்று, முதலாம் மாறவர்மர் குலசேகரரின் இருபத்திரண்டாம் ஆட்சியாண்டில் (கி. பி. 1290) கோளக்குடிக் கோயில் நிருவாகம் முருகப் பெருமா னின் அமுதுபடிக்கும் கோயில் திருப்பணிக்குமாகத் திருவாண்டி ஏரி உட்பட்ட நிலப்பகுதியைத் திருநாமத்துக்காணியாக விற்றுத் தந்த தகவலைத் தருகிறது.[91]

அகளங்க நாடாள்வாரின் தம்பி சோமாண்டார், சிவதர்மீசு வரமுடைய நாயனார் திருக்கோயிலில் தாம் எழுந்தருளுவித்த

கூத்தாடு தேவருக்குப் படையலிட மஞ்சனேரி ஊரை விலைக்கு வாங்கிக் கொடையளித்தார். காலிங்கராயர் பரிந்துரையால் அரசரின் பதினோராம் ஆட்சியாண்டில், மன்னர் கங்கை கொண்ட பட்டணத்தில் முகாமிட்டிருந்தபோது இம்மஞ்சனேரி இறையிலியாக அறிவிக்கப்பட்டது.[92]

கி. பி. 1507ல் கல்வாயில்நாட்டு இளையாத்தக்குடியான குலசேகரபுரத்து சிறுசெற்றூர் உடையான் மீயான் வழக்குடையாரும் அதே ஊரைச் சேர்ந்த பிள்ளையாரும் வழக்குடையார் அடியார்க்கு நல்லார் உள்ளிட்டாரும் ஆவுடையார் உள்ளிட்டாரும் கோளக்குடித் திருக்கோயிலில் சம்பந்தப் பெருமான் திருவுருவத்தை எழுந்தருளுவித்தனர். இப்பெருமக்களின் அறச் செயலைப் போற்றிய கோயிலார் திங்கள் திருநாட்களில் இவர் கட்குத் திருமெய்ப்பூச்சு, திருப்பரிவட்டம், திருமாலை அளித்த துடன், ஒவ்வொரு திருக்கார்த்திகையின்போதும் பிரசாதம் அளித்துச் சிறப்புச் செய்தனர்.[93]

இக்கோயிலில் இருந்த ஞானசம்பந்தர் திருமேனிக்கான வழிபாட்டிற்காக, இரண்டாம் மாறவர்மர் விக்கிரம பாண்டியரின் பெயரால் உருவாக்கப்பட்ட புவனேகவீரன் சந்திச் செலவினங் களுக்காக வடபிறப்பு நாட்டுச் சிறுகுடியில் இறையிலித் தேவ தானமாக நிலமும் குளமும் அளிக்கப்பட்டன.[94]

கி. பி. 1519ல் வெட்டப்பட்டுள்ள கிருஷ்ணதேவராயரின் கல்வெட்டு, சிவதர்மீசுவரரின் திருவமுது உள்ளிட்ட நாள் தேவை களுக்காகத் தேவதானமாய் விளங்கிய ஆய்குடி, காரைநிலை உள்ளிட்ட ஊர் நிலங்கள் சர்வமான்யமாக அளிக்கப்பட்ட தகவலைத் தருகிறது. கல்வெட்டில் அறந்தாங்கியைச் சேர்ந்த தம்பிரானார் ஸ்ரீபாசுபத நாயனார், திருநட்டப்பெருமான் தொண்டைமான் பெயர்கள் உள்ளன. கல்வெட்டுச் சிதைந்திருப் பதால் இவர்களுக்கும் இக்கொடைக்கும் உள்ள தொடர்பை அறியக்கூடவில்லை.

கோளக்குடிச் சொக்கலிங்கத்துக்கு நித்தப்படி, சதுர்த்தி, பிரதோஷம், பௌர்ணமி, அமாவாசை ஆகியவற்றிற்காகத் தரப்பட்ட நிலக்கொடையைப் பதினெட்டாம் நூற்றாண்டின தாகக் கொள்ளத்தக்க கல்வெட்டொன்று சுட்டுகிறது.[95] இந்தச் சொக்கலிங்கம், குடைவரை இறைவனைக் குறிப்பதைக் குடை

வரை நுழைவாயில் வலச்சுவரிலுள்ள கல்வெட்டு நிறுவுகிறது.[96] திருமூல சந்தான குருவான மங்கை பண்டாரத்தின் ஆத்மார்த்த மாகச் சொக்கலிங்கம் சுட்டப்படுவதுடன் அவர் திருமுன்னும் இக்கல்வெட்டால் அடையாளம் காட்டப்பட்டுள்ளது.

பூங்குன்ற நாட்டு வேலங்குடியார் கோளக்குடிக் கோயிலுக் குத் திருநாமத்துக்காணியாக விற்றுத்தந்த முன்னக்குடியால் வந்த வேலிக்கால் அச்சு, நாட்டுவினியோகம் ஆகியவற்றைப் பொன்ன மராவதி சுந்தர வில்லியான நிஷதராஜன் இத்திருக்கோயில் திருநாள் தினப்படி நடைகளுக்கென அளித்தார்.[97]

இறைத்திருமேனிகள்

மிகச் சிதைந்த நிலையில் காணப்படும் முதலாம் குலோத்துங் கர் காலக் கல்வெட்டொன்று, சிவதர்மீசுவரர் கோயிலில் எழுந் தருளுவிக்கப்பட்ட இறைத்திருமேனி ஒன்றைக் குறிப்பிடுகிறது.[98] கல்வாயில் நாட்டுக் குலசேகரபுரத்துத் திருவேட்பூரைச் சேர்ந்த இன்பனைப் பெருமாள் திருமுண்டமழகியார் கி. பி. 1455ல் இந்தக் கோயிலில் சந்திரசேகரர் வடிவத்தை எழுந்தருளுவித்தார். இவர் பணியைப் பாராட்டிக் கோயிலார் இவருக்குத் திருநாட்களின் போது திருமெய்ப்பூச்சு, திருப்பட்டம், திருமாலை அளித்தனர்.

இவர் மகன்களான ஏகைக்கோனார் அழகிய சொக்கன், மெய்யன் அழகப் பரிபாலர் இருவரும் இவ்விறைவடிவத்திற்கான பூசை முதலுக்கும் திருநாள் செலவுகளுக்கும் நாவணி வயல் விளைவைத் தந்து உவந்தனர். இவ்வயல் கோயிலாரிடமிருந்து அறவிலைக்குப் பெற்றதாகும். இவர்கள் பணியைப் பாராட்டிய கோயிலார் இவர்கட்கு வைகாசி மாதம் எட்டாம் திருநாளின் போது பரிவட்டம் கட்டிச் சிறப்புச் செய்ததுடன் திருக்கார்த் திகைப் பிரசாதமும் தந்தனர்.[99]

கோயில் உலாத் திருமேனியாக இருந்த நாச்சியார் வடிவம் சிதைந்துபோனமையால், திருக்கோளக்குடிச் சுந்தரபாண்டியப் பெருந்தெருவில் வாழ்ந்த நகரத்தாரில் ஒருவரான உடப்பாண்டார் முதலியாரான செழியதரையர், அத்திருமேனிக்கு மாற்றாகப் புதிய திருமேனி செய்தளித்தார். இதற்காகக் கோயிலார் இவருக்குப் பெருந்திருநாளின்போது பரிவட்டம் கட்டி, தீர்த்தம், திருநீறு அளித்துச் சிறப்பித்தனர்.[100]

கோயில் இறைத்திருமேனிகளான இறைவன், நாச்சியார், உலா நாச்சியார், பூண்டான் நாயகர் இவற்றிற்குத் தனித்தனியே கனமாகத் திருவாசி செய்தளித்த சுந்தரசோழபுரத்து சுத்திரம நல்லூர் நகரத்தாருக்குப் பெருந்திருநாளின்போது கோயிலார் தீர்த்தம், திருநீறு, பரிவட்டம் அளித்துச் சிறப்பித்தனர்.[101]

கி. பி. பதினேழாம் நூற்றாண்டில் சுந்தரசோழபுரமான தேசி யுகந்த பட்டணத்துக் கண்ணனூர் உடையார் பூவனூர் கிழவர் பொன்னாண்டார் திருக்கோட்டியாரான கனகராயர், கோளக் குடிக் கோயிலில் பல்லக்குச் சொக்கரை எழுந்தருளுவித்தார். இவ்வறச் செயலைப் போற்றுமாறு திங்கள் தீபங்களின்போது தீர்த்தம், திருநீறு, திருமாலை அளித்ததுடன், பெருந்திருநாளின் போது பரிவட்டம் அளித்துக் கோயிலார் சிறப்பித்தனர்.[102]

ஆத்மநாயகி அம்மன் திருமுன் முன்மண்டபத் தூண்களுள் ஒன்றில் அதைக் கொடையளித்தவராகக் கோளக்குடித் தானத்தா ரில் இரண்டாம் அடைவைச் சேர்ந்த சைவ சிகாமணி திருவர்த்த சாம அழகியார் பெயர் இடம்பெற்றுள்ளது. மற்றொரு தூண் அதைத் தந்தவராகக் கோளக்குடி அவையம் புக்கானான ஆலால சுந்தர வேளானைச் சுட்டுகிறது. மூன்றாம் தூண் தில்லையார் பொன்னன் செய்தளித்தது. இவர் கோளக்குடித் தானத்தாரில் இரண்டாம் கரணத்தாராகக் குறிப்பிடப்படுகிறார்.[103] இத்தூண் கள் உள்ள பகுதி கல்வெட்டில் நாச்சியார் திருமுன் சோபானம் என்று அழைக்கப்பட்டுள்ளது. நாச்சியாரும் அவைய நாச்சியார் என்று பெயர் மாற்றம் பெற்றுள்ளார். இம்மூன்று தூண் கல்வெட்டுகளும் பதினான்காம் நூற்றாண்டினவாகலாம்.

ஆத்மநாயகி அம்மன் திருமுன்னின் இடப்புறத்தே பாறைத் தளத்திலுள்ள சுப்பிரமணிய சுவாமி கோயிலையும் அதற்கான படிக்கட்டுகளையும் கட்டி அங்கு முருகனையும் தெய்வானை, வள்ளியையும் எழுந்தருளுவித்தவராகச் சுந்தரசோழபுரத்தைச் சேர்ந்த கலவையூர் உடையார் ஆவுடையார் அழகர் சுட்டப்படு கிறார். இங்குள்ள தூணொன்றில் இவர் சிற்பம் இடம்பெற்றி ருப்பது குறிப்பிடத்தக்கது.[104]

குன்றின் மேலுள்ள முருகன் கோயிலில் பதினான்காம் நூற் றாண்டு எழுத்தமைவில் காணப்படும் கல்வெட்டுகள் அக்கோயில் கட்டமைப்புக்கு உதவியவர்களாக பெருமாள் அதிரவீசி ஆடு

வான் காங்கேயன், அரசபிள்ளை திருவீராஈச்சுவரத்து ஆரியன் தங்க நாராயண தேவன், கடிநாயனார் தாயார் அழகப்பெருமாள், வீரபாண்டியரின் மலையாண் முதலிகளில் பெரியான் பாதம் தாங்கினான் வழுதிபன்மர், மலைமண்டலத்துச் சுந்தரபாண்டிய கௌரராயர், ஆளுடையான், கொங்கப்பெருமாள் ஆரியபட்டர் களில் ஆதித்த பட்டர், வீரகொடியார், நாயனார் விரதம் முடித்த பெருமாள் முதலிகளில் வீரகொடியார் ஆகியோர் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.[105]

கி. பி. 1528ல் வெட்டப்பட்டுள்ள கல்வெட்டு, இத்திருக்கோயி லில் தேசியுகந்த பட்டணத்தைச் சேர்ந்த ஒருவர் இறைத்திரு மேனி ஒன்றை எழுந்தருளுவித்ததுடன், முதலியார் மண்டபமும் திருமுன்னில் இரண்டு தூண்களும் எடுப்பித்ததாகக் கூறுகிறது. இவருக்குக் கோயிலார் பெருந்திருநாளில் பரிவட்டம், தீர்த்தம், திருநீறு, திருமாலை அளித்துச் சிறப்பித்தனர். இவ்இறைத்திரு மேனி, 'முதலியார் புழுகு சாத்துத் திருமேனி' என்று கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது.[106] இவ்வளாகத்துள்ள கல்லாலான நடராச ருக்கும் உமைக்கும் அம்பலம் செய்தவர் அழகிய சேமன் அருள் மன்னன் என்பது இங்குள்ள கட்டளைக் கலித்துறைச் செய்யு ளால் தெரியவருகிறது.[107]

கட்டுமானங்கள்

கோளக்குடிக் கோயிலில் மன்னர் சுந்தரபாண்டியர் பெயரால் நிகழ்ந்த சுந்தரபாண்டியர் அருவரை உள்ளிட்ட திருப்பணிகளுக் குக் கோளக்குடி வாழ் மறவர், இடையர், வலையர் உட்பட்ட குடிகள் மீமலை வயல், கொட்டி வயல் ஆகியவற்றிற்குத் தந்த அரசு சார் வரியினங்களை முதலாம் மாறவர்மர் சுந்தரபாண்டியர் திருப்பணிப்புறமாக அளித்தார்.[108] கோளக்குடிக் கோயில் வளா கத்து சத்ரசபாபதி கோயில் திருநிலைக்காலில் உள்ள கல்வெட்டு, அதை அளித்தவராக நடராசப் பண்டாரத்தின் மகன் சிதம்பர னைச் சுட்டுகிறது. சத்ரசபாபதி கோயிலுக்கு முன்னுள்ள மண்டபத் தூணை அளித்தவராக மயிலைச் சிதம்பரத்தின் மகன் குறிக்கப்பட்டுள்ளார். கோளக்குடிக் குன்றின் வெளிப்படிக்கட்டு கள் முடியுமிடத்து உள்ள பிள்ளையார் கோயிலைக் கி. பி. 1899ல் மிதிலைப்பட்டி மாத்தூர் கோயில் குளத்தூருடையார் நல்ல செட்டி பழனியப்பன் எடுப்பித்தார்.[109]

குடைவரையின் முன்னுள்ள பெருமண்டபக் கிழக்குச் சுவரிலுள்ள கல்வெட்டு அம்மண்டபத்தைப் பெருமாளான மழவராயன் திருமண்டபம் என்று பெயரிடுவதுடன், அதைச் செய்வித்தவராகக் கீழ்வெம்பநாட்டுத் தச்சனூர் உடையானைச் சுட்டுகிறது.[110] மலைமேல் முருகன் கோயிலை அடுத்துள்ள சுனையில் தூர் எடுத்துச் சுனையைச் சுற்றிலும் கல்லால் கரை கட்டியவராக ஒல்லையூர் கூற்றத்துச் சுந்தரசோழபுரமான தேசியுகந்த பட்டணத்தில் வாழ்ந்த பரம்பையூரைச் சேர்ந்த பொன்னாண்டார் திருக்கை வேல் அழகியாரைச் சுட்டும் பாறைக் கல்வெட்டு, கி. பி. பதினேழாம் நூற்றாண்டினதாகலாம்.[111] இக்கோயிலுக்கு ஏதோ ஒரு வகையில் துணை நின்றவர்களாகக் கருப்பன் வயிராவி மகன் வயிரன், ஈசுவரமூர்த்தி, தன்மபட்டர் உமையொருபாகன், அழகப்பன் பெயர்கள் கல்வெட்டுகளாகப் பொறிக்கப்பட்டுள்ளன.[112]

தேர்

இக்கோயிலுக்கு அமைந்த தேர் குறித்து மூன்று கல்வெட்டுகள் பேசுகின்றன. மாறவர்மர் குலசேகரரின் நான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று, கி. பி. பதினான்காம் நூற்றாண்டளவிலேயே கோளக்குடி சிவதர்மீசுவரருக்குத் தேரோட்டம் இருந்ததாகக் குறிப்பிடுகிறது. இத்திருத்தேர் உற்சவத்தை நடைமுறைப்படுத்த பல்வேறு நாட்டவர்கள் தங்களுக்குள் முறை ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டனர். வடம் பிடிப்பதற்கும் வினாயக பூசை செய்வதற்கும் திருநீறுபெறுவதற்கும் துக்கா் நாட்டார் முதலிடமும் கல்வாயில் நாட்டார் இரண்டாமிடமும் பூங்குன்ற நாட்டார் மூன்றாமிடமும் புறமலைநாட்டார் நான்காமிடமும் கோனாட்டார் ஐந்தாமிடமும் பெறுமாறு ஒப்பந்தம் கையெழுத்தானது.[113]

கி. பி. 1551ல் கல்வாயில் நாட்டுக் குலசேகரபுரத்து இளையாத்தக்குடி நகரத்தார் கோளக்குடிக் கோயிலுக்குத் தேர் ஒன்று செய்து தந்தனர். இத்தேருக்கு உரிய பொற்குடம், வடம், சட்டை, பிறை, தண்ணுமை, தூக்கம் இவற்றைக் கோயில் பண்டாரத்திலேயே ஏற்பாடு செய்துகொள்வதாக ஒப்பிய பண்டாரச் செயலிகள், தேர் தந்த நகரத்தாருக்குத் திருத்தேர் ஓடும்போது தேர் முன்னே பரிவட்டம் கட்டி, தீர்த்தம், திருநீறு, திருமாலை ஆகியன அளித்துச் சிறப்பிப்பதாகக் கூறினர்.[114]

நகரத்தார் பெருமக்கள் செய்தளித்த இத்தேர் 46 வருடங்களில் பழுதுபட்டுப்போனது. அதனால், கி. பி. 1597ல் புதிய தேரொன்றை நகரத்தார் செய்தளித்தனர். இப்புதிய தேர் ஓடும் விழாநாள் செலவுகளைக் கோயில் பண்டாரமே ஏற்று நடத்துவதெனவும் இதற்காகக் கோயில் தேவதானமான பெருநல்லூரில் இருந்து வரும் வருமானத்தில் ஆண்டுதோறும் ஐம்பது பொன்னும் ஐந்நூறு கலம் நெல்லும் பெறுவதெனவும் பெருநல்லூர் விளைச்சல் இல்லாது போகுமானால் தேவிமண்டலப் பற்றிலே விளைந்த கிராம முதலில் ஐம்பது பொன்னும் ஐந்நூறு கலம் நெல்லும் கொள்வது எனவும் ஒப்புதலானது.[115]

திருவிழாக்கள்

கல்வாயில் நாட்டுக் குலசேகரபுரத்து அரும்பாற்கிழான் திருவனசயந்தனான பாண்டியதரையர், திருக்கோளக்குடியில் உள்ள பிடாரி அழகிய நாச்சியார் கோயிலில் உற்சவத் திருமேனியாக நாச்சியார் உதையாண்டாரை எழுந்தருளுவித்தார். இத்திருமேனியின் திருவிழாச் செலவினங்களுக்காக நிலத்துண்டொன்றைத் திருநாட்புறமாக அமைக்க விழைந்த பாண்டியதரையர் கோளக்குடிக் கோயிலாரிடமிருந்து ஊற்றுக்குழி வயலைப் புதுக்குளிகைப் பணம் ஐம்பதிற்குத் தேவதானமாய்ப் பெற்றார்.

இந்நிலம் கோளக்குடி இறைவனின் திருநாமத்துக்காணி நிலமாகும். பாண்டியதரையரிடம் பெற்ற விலைப்பொருளைக் கோயிலார் சாத்துபடிக்கும் படையல் செலவுகளுக்குமெனக் கொண்டனர். குடிநீங்காத் திருநாமத்துக்காணியாக உழுவதற்கு நிலத்தைப் பெற்ற பாண்டியதரையர், பயிரேற்றிக் குளமும் கிணறும் வெட்டி, உரிய வரிகள் செலுத்தி, நிலவிளைவைப் பிடாரிக்குப் பயன்படுத்திக் கொண்டதாகக் கல்வெட்டுக் கூறுகிறது.[116]

கோளக்குடிச் சுந்தரபாண்டியன் பெருந்தெருவில் வசித்த நகரத்தாருள் சிற்றம்பலமுடையார் நல்லா உடைய பிள்ளையாரான வணிகர் புரந்தரரும் நல்லா உடையாரான நாட்டியரும் அன்பன் தில்லையுள் ஆடுவாரும் திருவர்த்தசாம அழகியார் ஆவயரான சுந்தரபாண்டிய சக்கரவர்த்தி உள்ளிட்டாரும் கோளக்குடிக் கோயில் இறைவனின் உலாத் திருமேனிக்கான திருவாசி, பறமபடம், செய்தளித்ததுடன் நாச்சியார் திருமேனியையும் உருவாக்கித் தந்தனர். இவ் அறச்செயலைப் பாராட்டித் திங்கள்

தீபத்தின்போது இப்பெருமக்களுக்குத் தீர்த்தமும் திருநீறும் வழங்கப்பெற்றது. பெருந் திருவிழாவின் ஏழாம் நாளன்று இறைத் திருமேனிக்குச் சந்தனப்பூச்சுக் கட்டளையமைத்த சுந்தரசோழ புரம் உள்ளிட்ட நான்கு நகரத்தாரும் சாந்துவரியாகப் பொன் அளித்தனர்.[17]

கோளக்குடிக் கோயில் தானத்தாருக்குப் பொன்னமராவதி நாட்டார் செய்தளித்த ஒப்பந்தமாக அமைந்துள்ள கல்வெட்டு, சடையவர்மர் சுந்தரபாண்டியர் முன்னாளில் தந்த திருமுகப்படிக் கோளக்குடி உள்ளிட்ட பகுதிகளைத் தேவதான இறையிலியாக நாட்டார் ஏற்றுக்கொண்டிருந்தமையைக் கூறுவதுடன், இதற் காகத் தரப்பட்டு வந்த நாட்டுவினியோகத்தைப் பெறவேண்டாம் என்று அரசர் மீண்டும் திருமுகம் அனுப்பியதையும் எடுத்துரைக் கிறது. திருமுக ஆணையேற்று நாட்டாரும் அவ்வினியோகம் ஏற்காது, அது கொண்டு, இறைவன் திருப்பள்ளியெழுச்சியின் போது பொன்னமராவதி நாடன் சந்தியில் திருவமுது படைக்கு மாறு கோயிலாருக்கு அறிவுறுத்தினர்.[18]

விளக்குகள்

வெளியாற்றூர் நம்பி ஆரூரன் திருநீறணிந்தானான தற்புருஷ தேவரிடமிருந்து பழமுதல் அச்சு இரண்டு பெற்றுக்கொண்டு சிவதர்மீசுவரமுடைய நாயனார் கோயில் முப்பத்திரண்டு வட்ட சிவபிராமணர்கள், இறைவன் திருமுன் சிறுகாலைச் சந்தியில் ஐந்து திருவிளக்குகளும் நம்பிராட்டியார் கோயிலில் விநாயகப் பிள்ளையாருக்கு இராக்காலத்தில் ஒரு திருவிளக்கும் சந்தியா தீபமாக ஏற்றிட ஒப்புதலளித்தனர்.[19]

தேவரடியார்

கோளக்குடிக் கோயிலில் இருந்த தேவரடியார்கள் கி. பி. பதினான்காம் நூற்றாண்டளவில் இப்பகுதிகளில் நிலவிய அரசியல் குழப்பங்களினாலும் ஆட்சி மாற்றங்களினாலும் கோயிலை நீங்கி வாய்ப்பான இடங்களுக்குப் பெயர்ந்தனர். தேவரடியார்கள் இல்லாமல் வழிபாடுகள் நிறைவுபெறாமை கண்டு வருந்திய கோயிலார், ஆரும் ஒவ்வாத பெருமாளை உதவும்படி வேண்டினர். அவ்வம்மையும் சூலக்குறி பொறிக்கப் பட்ட பிள்ளையார், சாத்தாவுடையாள், வளத்து வாழ்விச்சாள், பாண்டிப்பெருமாள், கோளாண்டி, அமரி, உடையநாச்சி, உதைய

மழகி, சிறுப்பிள்ளி, திருவகத்தி ஆகிய பத்துப் பெண்களை இக்கோயிலுக்குத் தேவரடியார்களாக வழங்கி மகிழ்ந்தார்.

இவர்தம் படிக்கும் பாக்கு வெற்றிலைக்கும் புடவை முதலுக்குமாக இராசிப்பணம் 160க்கு ஓமறா வயல் குடிநீங்காக் காணியாட்சியாக விற்கப்பட்டது. பாளைங்காறன் திருவீதியில் இப்பெண்களுக்கு மனைகள் ஒதுக்கப்பட்டதுடன், நாளொன் றுக்கு இருநாழி அரிசி பிரசாதமும் தரப்பட்டது. சிறப்புத் திருநாள், ஆடிப்பூரம், திருக்கார்த்திகை, திருப்புதியது, விஷு, அயன சங்கராந்திகள் ஆகியவற்றில் இப்பெண்களுக்குச் சிறப்பு மரியாதைகள் செய்யப்பட்டன.[120]

நிலவிற்பனைகள்

தனியாரிடமோ, கோயில் நிருவாகத்திடமோ நிலத்துண்டு களை விலைக்குப் பெற்ற மக்கள், அவற்றைக் கோயில் சார்ந்த பல்வேறு பணிகளுக்காகவும் பூசை வழிபாட்டிற்காகவும் கொடை யளித்தாற் போலவே, கோயில் நிலங்களில் பயிரிடும் உரிமையைச் சில நிபந்தனைகளுடன் தனியாருக்குத் தந்து, அல்லது விற்று, கோயில் நடைமுறைகளுக்குக் குறைவு வராமல் நிருவாகம் செயற்பட்ட முறைமைகளைச் சில கல்வெட்டுகள் எடுத்துரைக் கின்றன. இவ்வாறு பயிரிடும் உரிமை வழங்கப்பெற்ற நிலங்களைக் கல்வெட்டுகள் காராண்மைக் காணிகளாகச் சுட்டுகின்றன.

கோளக்குடி இறைவனின் திருநாமத்துக்காணி நிலங்களான முள்ளிக்குடியான முடிவழங்கும் பெருமாள் நல்லூரையும் நடுவிற் குடிக்காட்டையும் பூமதேவன் அழகிய மணவாளப் பெருமாளான வீரபாண்டிய காலிங்கராயருக்குக் குடிநீங்காக் காராண்மைக் காணியாக இராசிப்பணம் இருநூறுக்கு கோயி லார் விற்றனர். இந்நிலங்களின் முன்னாள் பற்றாளர்களிடம் வாங்கிய தவணை முதலைத் திருப்பித் தரவும் இறைவனின் நகைகளுக்கான முதலுக்காகவும் இத்தொகை பெறப்பட்டது.

இந்நிலப்பகுதிகளை வாங்கிய காலிங்கராயர் பசானம், குறுவை என இருபோக விளைவு கொள்ளவும் தினை, வரகு, எள், பயறு, கரும்பு, வெற்றிலை, கருணை, வழுதலை, மஞ்சள், இஞ்சி, சாமை, பூசணி செங்கழுநீர் இவையும் இன்னபிறவும் பயிர் செய்து கொள்ளவும் தேவையான மரங்களை வைத்துக் கொள்ளவும் புன்செய்ப் பயிர்கள் விளைவிக்கவும் அனுமதிக்கப்

பட்டதுடன், நிலம் சார்ந்த குடியிருப்பு மனைகளில் குடியேற்றிக் கொள்ளவும் ஒப்புதலானது. நிலம் சார்ந்த வரிகளான மாவடை, புறவுடல், சிற்றாயம் இவற்றிற்கான வாடாக் கடமையாக அன்றாடு வழங்கும் பணம் பத்தும் திருக்கொட்டாரக் காலால் நூற்றிருபது கலம் நெல்லும் காலிங்கராயன் கோயிலுக்குத் தருவதென முடிவானது.[121]

கோயிலுக்கு நிலம்

கி. பி. 1084ல் பொன்னமராவதியைச் சேர்ந்த நிஷதராஜன் கோளக்குடிக் கோயில் பள்ளியறை இறைவனுக்கும் பிள்ளையாருக்கும் சில நிலத்துண்டுகளை வழங்கினார். கி. பி. 1086ல் இதே சிற்றரசர் இக்கோயில் இறைவனான சிவதர்மீசுவரமுடையாருக்குத் தேவதானமாக சிறிது நிலம் வழங்கியுள்ளார்.[122] கி. பி. 1170ல் கேரளன் திருக்கொடுங்குன்றம் உடையாரான நிஷதராஜன் கோளக்குடி வயலில் பழந்தேவதானம் நீக்கி எஞ்சிய நிலப்பகுதியை சிவதர்மீசுவரருக்கு இறையிலித் தேவதானமாக அளித்தார்.[123] கி. பி. 1275ல் காரையூர் கீழை மட சந்தானத்தைச் சேர்ந்த ஒருவர், தாம் மடப்புற இறையிலியாக அனுபவித்து வந்த சோழபாண்டிய வளநாட்டுக் கீழ்வகைச் சேர்ந்த குளங்காரை என்னும் நிலப்பகுதியைக் கோயில் இறைவனுக்கு இறையிலித் திருநாமத்துக்காணியாக அளித்தார்.[124]

பதினான்காம் நூற்றாண்டில் செவ்வூர் ஊராரும் முதலிகளும் விற்க முனைந்த அவர்தம் பற்றான மாங்குடி ஊரைத் திருக் கோளக்குடி மடத்திலிருந்த தவசியான தேவர்கள் தேவர், இக்கோயிலில் விளங்கும் ஆடல் இறைவனான அழகநட்டப் பெருமாளுக்கு இறையிலி திருநாமத்துக்காணியாக வாங்கித் தந்தார். இந்நிலத்திற்கான வரியினங்களைத் தாங்களே செலுத்துவ தாக உறுதியளித்த செவ்வூர் ஊராரும் முதலிகளும் இவ்வூருக் கான பாடிகாவலாக மாத்தால் பன்னிரண்டரையும் தூணி நெல்லும் குளத்தில் மீனும் பெற்றுக்கொள்வதாகவும் ஒப்பினர்.[125]

இதே நூற்றாண்டில் பூங்குன்ற நாட்டு வேலங்குடி ஊரார், ஊர்க்கீழ் இறையிலி திருநாமத்துக்காணியாகக் கோளக்குடி இறைவனுக்கு ஒருசொல் வாசகப் பேரையன் குடிக்காட்டையும் குளத்தையும் விற்றனர். இக்குளம் உடைபட்டு, வயலும் வரம் பழிந்து காடாய் இருந்த நிலையில், நிலவரி கட்டமுடியாத சூழலேற்பட்டு, நிலத்தை ஊரார் விற்பனைக்குக் கொணர்ந்ததாக

ஆவணம் பேசுகிறது. நிலத்தை விற்ற ஊரார் அதற்கான வரியினங்களைத் தாமே செலுத்துவதாகப் பொறுப்பேற்றுக் கொண்டதால், நிலம் ஊர்க்கீழ் இறைலியானது.[126]

குமரத்தக்குடி ஊரவரிடமிருந்து விரையாச்சிலை அரசு மக்களில் காமபோதராயர் உள்ளிட்ட சிலர் வாங்கிய நாட்டுப் பேரையன் குடிக்காடு எனும் நிலத்துண்டை, விரையாச்சிலை அரசு மக்களும் மறமுதலிகளும் ஊர்க்கீழ் இறையிலியாகக் கோளக்குடி இறைவனுக்கு விற்றனர். விலைத் தொகையாக 800 பணமும் பரிவட்டத்திற்காக 200 பணமுமாக ஆயிரம் பணம் பெறப்பட்டதாகக் கூறும் ஆவணம், விரையாச்சிலை ஊரார் இந்நிலத்துண்டை விற்றமைக்கான காரணத்தை ஒரு சோகக் கதையாகப் பகிர்ந்து கொள்கிறது.[127]

கி. பி. 1290ல் கானநாட்டைக் கைப்பற்றியவரும் சிற்றசர் பாண்டியதேவரின் அரசு அலுவலர்களில் ஒருவருமான திருநெல் வேலி உடையார், விரையாச்சிலை நிலங்களுக்கு நடப்பாண்டு வரியாகவும் நிலுவை சேர்த்தும் நான்காயிரம் பணம் செலுத்து மாறு ஊரவருக்கு ஆணையிட்டார். ஊரார் 'அடி, குடி, கன்று, காலி அகப்பட விற்றும் ஒற்றி வைத்தும்' அத்தொகையைச் செலுத்த வகையின்றித் தவித்தனர். கடனும் பெறமுடியாமல் விளைச்சலும் சரியாக இல்லாமல் துன்பப்பட்ட ஊரவர்க்குத் திருநெல்வேலி உடையார் பெருந் தொல்லைகளை உண்டாக்கி னார். துன்பம் தாங்காத ஊர்மக்கள் தங்கள் நிலப்பகுதிகளுள் ஒன்றை விற்றேனும் துயரிலிருந்து தப்பிக்கக் கருதி இந்நாட்டுப் பேரையன் குடிக்காட்டை விற்றதாக ஆவணம் பேசுகிறது.

கி. பி. பதினான்காம் நூற்றாண்டில் காரையூரைச் சேர்ந்த திருவேந்தல் கூத்தாடுவாரும் திருவேந்தல் அம்மையேரிப் பிள்ளையான மெசிலாயதேவனும் சோழபாண்டிய வளநாட்டுக் கீழ்வகைச் செம்பங்குடியில், வெளியாற்றூர் உடையார் குவலயத் தரையன் சொக்கனாரும் குவலயத்தரையன் ஆண்டபிள்ளையார் உள்ளிட்டாரிடம் பயிரிடும் உரிமையை விலைக்குப் பெற்றுப் பயிரிட்டு அநுபவித்து வந்த செம்பங்குடி வயலின் ஒரு பகுதியைத் தாங்கள் அநுபவிக்குமாறே, கோளக்குடி இறைவனுக்குக் காராண்மை திருநாமத்துக்காணியாகத் தந்தனர்.[128] கல்வாயில் நாட்டுக் குன்றத்தூர் உடையார் காங்கேயன் திரிபுவனசிங்கன்

கோளக்குடி இறைவனுக்குக் கரிகால சோழப் பல்லவதரையன் குடிக்காட்டைத் திருநாமத்துக்காணியாக விற்றுத்தந்தார். விலைப் பொருள் கல்வெட்டில் குறிக்கப்படவில்லை.[129]

முதலாம் மாறவர்மர் குலசேகரரின் பதினான்காம் ஆட்சி யாண்டான கி. பி. 1283ல் விரையாச்சிலை அரசுமக்களும் மறமுதலிகளும் குமரத்தக்குடி ஊரவரிடம் விலைக்குப் பெற்ற நாட்டான் ஏரியைக் கோளக்குடி இவைனுக்கு இறையிலி திருநாமத்துக்காணியாக விற்றுத்தந்தனர். இவ்விலை ஆவணம் பல சுவையான தகவல்களைத் தருகிறது. நாட்டான் ஏரியை விலைக்குப் பெற்று அநுபவித்து வந்த அரசு மக்களும் மறமுதலி களும் அந்நிலத்திற்குரிய வரியினங்களைக் கட்டமுடியாமல் தாம் விலைக்குப் பெற்ற குமரத்தக்குடியாரிடமே அதை மீண்டும் கைக்கொள்ளுமாறு கேட்டனர்.

குமரத்தக்குடியார் தங்களால் அந்நிலத்தை விலைக்குப் பெற இயலாது என்று தங்கள் ஆற்றாமையை வெளிப்படுத்தியமை யால், துன்பமுற்ற விரையாச்சிலை மக்களுக்குக் கோளக்குடிக் கோயில் நிருவாகம் கைகொடுத்தது. விரையாச்சிலை ஊரார் மகிழ்ந்து நிலத்தைக் கோயிலுக்கு ஊர்க்கீழ் இறையிலியாக விற்றுத்தந்தனர். நிலத்தின் பழைய ஆவணங்களையும் கோயில் பண்டாரத்தில் ஒப்புவித்தனர். ‘முன்பு குடிக்காடு விலை கொண்ட மூல சாதனம்’ என்று இந்நிலத்தின் மூல ஆவணம் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது.[130]

இக்கோயிலில் இருந்த ஞானசம்பந்தர் திருமேனிக்கான வழிபாட்டிற்காக இரண்டாம் மாறவர்மர் விக்கிரமபாண்டியரின் பெயரால் உருவாக்கப்பட்ட புவனேகவீரன் சந்திக்கான அமுது படி, சாத்துபடி உள்ளிட்ட செலவினங்களுக்காகச் சிறுமருதூ ரைச் சேர்ந்த பொன்பற்றி உடையான் உய்யவந்தான் சூரியதேவ னான காங்கேயர், திருநாமத்துக்காணியாக நிலத்துண்டு ஒன்றை அளிக்க அதை இறையிலியாக்கி மன்னர் உத்தரவிட்டார். இக்கல்வெட்டில் ஞானசம்பந்தர், திருஞானம் பெற்ற ஆளுடைய பிள்ளையார் என்று குறிக்கப்படுவது நோக்கத்தக்கது.[131]

கி. பி. 16 அல்லது 17ம் நூற்றாண்டினதாகக் கொள்ளத்தக்க கல்வெட்டு, ரெங்கநாதநாயக்கரின் செயலரான மலைப்பெருமா ளும் பண்டாரச் செயலிகளும் முள்ளிக்குடிச் செட்டிக்காடு நிலத்துண்டை, கோளக்குடி இறைவனுக்கு நாள்தோறும் உதயத்

தில் முழுக்காட்டிற்கு ஊருணி நீர்க்கொணரும் பணிக்காகச் சர்வமானியமாக அளித்து மகிழ்ந்தமையைத் தெரிவிக்கிறது.[132]

பொன்னமராவதியைச் சேர்ந்த வெட்டுவான் பெரியஞ்சி யான நகுலராயனுக்குக் கொற்றமங்கலம் என்னும் ஊரைக் காங்கேயர் காராண்மையாக விற்றதுடன், இவ்வூரின் மீதான அனைத்து வரிகளையும் கோளக்குடி இறைவன் பெறுமாறு செய்தார். இது குறித்த காங்கேயரின் ஓலை கோயில் தானத்தா ருக்கு அனுப்பப்பெற்றது.[133]

பதினான்காம் நூற்றாண்டினதாகக் கொள்ளத்தக்க ஸ்ரீவல்லப ரின் இருபத்தாறாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, வணிகக் குழுக் களான பதின்தேசியும் எண்விஷயமும் இணைந்து மஞ்சள், சுக்கு, உப்பு, வெங்காயம் இவற்றின் தீர்வைப் பங்கினைக் கோளக்குடிக் கோயிலுக்கு அளித்த தகவலைத் தருகிறது. கல்வெட்டுச் சிதைந் துள்ளமையால் விரிவான தரவுகளைப் பெறக்கூடவில்லை.[134]

சிறப்புச் செய்திகள்

கோயில், சமுதாயம் சார்ந்த பல்வேறு சிறப்புச் செய்திகளைக் கோளக்குடிக் கல்வெட்டுகளில் காணமுடிகிறது. இக்கோயில் சிவஅந்தணர்களில் ஒருவரான இன்பன் உஞ்சானான பொற் கோயில் பட்டன் இவ்வளாகத்தில் தமிழப் பல்லவதரையர் எழுந்தருளுவித்திருந்த ஆளுடைய நாச்சியாருக்கு வழங்கப்பட்ட படையலில் தாமும் தம் வழியினரும் நாளும் நானாழிச் சோறு பெறும் உரிமையை முதலாம் மாறவர்மர் சுந்தரபாண்டியரின் மைத்துனர் அழகப்பெருமாள் ஓலை வழிப் பெற்றிருந்தார்.

பொற்கோயில் பட்டன் பெற்று வந்த இந்த உரிமைச் சோறு நாளடைவில் கோயில் தானத்தாரால் நிறுத்தப்பட்டது. சோற்றைத் தொடர்ந்து வழங்குமாறு கி. பி. 1229ல் அரசாணை பிறந்தது. இந்த அரசாணையில் அழகப்பெருமாள் ஓலை குறிக்கப் பட்டுள்ளது. ஓர் அரசாணை கோயில் நிருவாகத்தால் மீறப் பட்டமையும் அம்மீறலை நிறுத்தி, முன் உத்தரவை மீள இயங்கச் செய்ய மற்றோர் அரசாணை பிறப்பிக்கப் பெற்றமையும் தமிழ் நாட்டு வரலாற்றில் அடிக்கடி கேட்கக் கிடைக்கும் செய்தியன்று.[135]

கோயில் நிருவாகம் கோளக்குடித் தட்டார் திருமணக் கன்னிமலை ஆசாரி தர்மர் உள்ளிட்டாருக்குச் செய்து தந்த காணி

யாட்சி விலையாவணம், அக்காலத்தே நடந்த சச்சரவு ஒன்றைப் படம்பிடிக்கிறது. கோளக்குடிக் கொல்லர் கூலி தர ஆற்றூருக்குச் சென்றபோது, திருக்கைவேலன் மகன் உலகன் உள்ளிட்டார், அவர்களுடன் சச்சரவு செய்துள்ளனர். கல்வெட்டுச் சிதைவால் சச்சரவு எதன் பொருட்டு நடந்தது என்பதை அறியக்கூட வில்லை. சச்சரவைத் தீர்க்கக் கருதிய கோயில் தானத்தாரும் பூச்சைய நாயக்கர் சார்பில் தேகனும் ஆற்றூர் சென்று ஊராரை அழைத்து நியாயம் கேட்டபோது, உலகன் ஊராருக்குக் கைக் கூலி தந்து தானத்தாரைத் தாக்குமாறு செய்தார். கொல்லக்காணி, தட்டார்காணி, மன்றாடிக்காணி என உழைக்கும் பிரிவினரின் உரிமை நிலங்கள் பற்றிய குறிப்பும் இக்கல்வெட்டில் உள்ளது.[136]

குலசேகரபுரத்துக் கழனிவாயிலுடையார் சிவந்தெழுந்தா ரான சுந்தரபாண்டிய வணியமானார், ஆவுடையாரான கனகராயர், குடியுடையான் சிவந்தகால் அழகியாரான சேதிராயர், எழுதுப் பெருந்தெருவான வீரபாண்டியபுரத்துத் தமனிவாயிலுடையான் பாண்டியப் பெருமாள் பிள்ளையார் இவர்கள் வேலங்குடிச் சுண்டைக்காடு, திருக்குரம்பூர், செவ்வலூர் ஆகிய மூன்று ஊர்ப் பாதுகாவலருக்கும் செய்தளித்த காவல் சுதந்திரமாகத் திகழும் கி. பி. 1508ம் ஆண்டுக் கல்வெட்டு, காவலருக்கு அளிக்கப்பட்ட ஊதியம் பற்றி விரித்துரைக்கிறது. அதன்படி, துவாரூர் காணி யாட்சி நிலங்களில் ஒரு மா நிலத்துக்கு ஊருக்கொரு கட்டாக மூன்று கட்டும் ஊருக்குக் குறுணியாக முக்குறுணி நெல்லும் காவலர் பெற்றனர்.[137]

'காணிப்பிடிபாடு' என்றழைக்கப்படும் இரண்டு ஆவணங் கள் கோயிலுக்கும் தனியருக்கும் இடையிலான நிலவிற்பனைத் தரவுகளை முன்வைக்கின்றன. உய்யவந்தான் பாண்டியனான சுந்தரபாண்டிய நரசிங்கதேவருக்கு இருநூற்றைம்பது இராசிப் பணத்திற்குப் புரவயல், பந்தன் வயல், தட்டான் வயல் எனும் மூன்று நிலத்துண்டுகளை உழவுக் காணியாகக் கோயிலார் விற்றனர். வயிராகியளுக்குத் தவணை முதலாகத் தந்த 160 இராசிப் பணம், சாத்துபடிச் செலவுகளுக்கு 90 இராசிப்பணம் எனக் கணக்கிடப்பட்டே விலைத்தொகை முடிவு செய்யப்பட்டுள்ளது.

நிலத்துண்டின் எல்லைகள் குறிக்குமிடத்து, கீழ் மேலாகச் சென்ற வண்டிப் பெருவழி, கீரனூரிலிருந்து வந்த வழிச் செவ்வை ஆகியன சுட்டப்பட்டுள்ளன. நிலத்திற்கான வரியினங்கள்,

விளைச்சலில் கொள்ளும் வரிமுறை, நிலப்பண்படுத்தல், அதன் விளைச்சலில் வரிகொள்ளும் முறை எனப் பல அரிய தரவுகள் இந்த ஆவணத்தில் மிக விரிவாகப் பேசப்பட்டுள்ளமை வேளாண் வரலாற்றுக்குச் சிறந்த வரவாகும்.[138]

உய்யவந்தான் பராக்கிரம பாண்டிய நரசிங்கதேவருக்குக் கோயிலாரால் எழுதித் தரப்பட்ட மற்றொரு ‘காணிப்பிடிபாடு’ ஆவணம், விற்றவர்கள் வாங்கியவருக்கு விதித்த நிபந்தனைகளைத் தெளிவுபடுத்துகிறது. ஆண்டார்கள் அடைவில் நான்கில் ஒரு பங்கு நிலம் குத்தகைக்குப் பெற்ற நரசிங்கர், நிலத்துடன் அது சார்ந்த மனைகளையும் பெற்றார். நிலம், மனைகள் இவற்றை விலைத்தொகையின்றிப் பெற்ற நரசிங்கர், அதற்கு மாற்றாகக் கோயில் செலவுத் திட்டங்களில் நான்கில் ஒரு பங்கிற்குப் பொறுப்பேற்றார்.

‘நிவந்தங்கள்’ என்றழைக்கப்பட்ட இச்செலவுத் திட்டங்களை நிறைவேற்றுவாரை அமர்த்தல், அவர்கட்கான நெல் கூலி, நிலமளிப்பு, கொற்றடைப்பு இவற்றை நரசிங்கர் மேற்கொள்ள நேர்ந்தது. ஊர் சார்ந்த கோயிற் செயற்பாடுகளில் நான்கில் ஒரு பங்கிற்குக் கையெழுத்திடும் உரிமையும் கோயில் பொருட்டு வரும் செலவுத் திட்டங்களைக் கோயில் நிருவாகத்தோடு ஒக்க நின்று நிறைவேற்றும் உரிமையும் அவருக்கு அளிக்கப்பட்டன.[139]

விரையாச்சிலை உலகவிடங்கீசுவரமுடையார், பிடாரியார், திருப்புத்தூர் திருத்தளியாண்டார், செவ்வலூர்த் திருப்பமீசுவர முடையார் எனும் பிற ஊர் சார்ந்த நான்கு திருக்கோயில்கள் கோளக்குடிக் கல்வெட்டுகளில் இடம்பெற்றுள்ளன. கி. பி. பதினான்காம் நூற்றாண்டளவில் திருத்தளியாண்டார் கோயிலுக்கு ஒற்றிவைக்கப்பட்ட நிலத்துண்டுகள் சில செம்பங்குடியில் இருந்தமையை ஒரு கல்வெட்டுக் கூறுகிறது.[140]

தியாகஞ்சிலப் பெருமாள் அம்மத்தேவனான காங்கேயருக்குக் காராண்கிழமை உழவுக்காணியாகக் கரிகாலசோழப் பேரையன் குடிக்காட்டைக் கோளக்குடிக் கோயிலார் நானூறு புதுக்குளிகைப் பணத்திற்குப் பிடிபாடு செய்தளித்தனர். இக்குடிக் காடு பாழாகி, குளம் உடைந்து, வயலும் வதியழிந்து பெருமரக் காடாக மாறியிருந்த நிலையில் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இந்தக் காணியிலிருந்து கோளக்குடி இறைவனுக்குக் கடமை கொள்ளும் முறையும் நிச்சயிக்கப்பட்டது.

உழவுக்காணியாகத் தரப்பட்ட இந்நிலம் சுந்தரபாண்டியன் கோல் இருபத்துநான்கினால் அளக்கப்பட்டு 256 குழி ஒரு மா எனக் காணக்கிடப்பட்டது. நிலத்திற்கான பசானக் கடமை மாத்தால் இராசிப்பணம் நான்கும் நெல் 14 கலமுமாக அமைந்தது. புன்செய்ப் பயிர்களுக்கான கடமை மாத்தால் இராசிப்பணம் ஐந்தும் நெல் 20 கலமுமாக அமைந்தது. புதிய பயிர் விளைவித் தால் போகம் தோறும் விளைவு அளக்கவும் ஒப்புதலானது. காங்கேயருக்குக் கோயில் வடக்குத் திருவீதியில் மனையும் புழைக்கடையும் அளிக்கப்பட்டன.[141]

பனையூர்நாட்டுத் திருப்புகலூர் மலையாள முதலிகளில் நெல்வேலி உடையான் துறையாண்டான் திருவம்பலப் பெருமா ளான களப்பாளருக்குக் கோளக்குடிக் கோயில் நிருவாகத்தார் ஏழு மா நிலத்தை இராசிப்பணம் எழுபதிற்குக் காராண்கிழமை யாக விற்றனர். இறைவன் திருநாமத்துக்காணியான முள்ளூர்க் குடிக்காட்டுப் பற்றில் இருந்த இந்நிலம், சுந்தரபாண்டியன் 24 அடிக் கோலால் அளக்கப்பட்டது. மக்கள் நாயனான பராக் கிரமபாண்டிய மகாபலி வாணாதிராயர் பெயரால் நீர்நிலை ஒன்று இங்கு வெட்டப்பட்டது.

இக்குளம் வெட்ட ஆள்கூலிக்கு 40 இராசிப்பணம் செலவிடப்பட்டது. எஞ்சிய தொகை நாச்சியாருக்கு நகைகள் செய்யப் பயன்பட்டது. நிலத்துக்கான வரியளவாகப் பசான நெல் 16 கலமும் புன்பயிர் நிலத்துக்கு மாத்தால் 4 கலமும் இராசிப்பணம் இரண்டும் நிர்ணயிக்கப்பட்டன. நெல்லளக்கச் சிறப்பு அளவையான கொட்டாரக்கால் பயன்படுத்தப்பட்டது. களப்பாளருக்கு வடக்குத் திருவீதியில் புழைக்கடையுடனான மனை வழங்கப்பட்டது.[142]

திருக்கோளக்குடி மறமுதலிகளில் கன்னிமலை நாடாள் வான் உள்ளிட்டார் ஊர்ப் பொதுநிலமான இராஜேந்திர சோழன் குடிக்காடு, செழியதரையன் ஏம்பல், வயல், இவற்றைக் கோளக்குடிக் கோயிலில் பூசை செய்த நம்பிமாரில் அழகிய தேவன் சொக்கனான பரமேசுவர பட்டருக்கு விற்றனர். புரங் கோட்டை வயலுக்கான பெருவழி, நரசிங்கமங்கலப் பெருவழி ஆகியன இவ்ஆவணத்தில் விற்கப்பட்ட நிலங்களின் எல்லை களாக இடம்பெற்றுள்ளன. விற்ற நிலங்களுக்காகக் கோயிலுக் குச் செலுத்தவேண்டிய ஆண்டுக் கடமையும் ஆவணத்தில்

குறிக்கப்பட்டுள்ளது. கோளக்குடி இறைவனின் உரிமை நிலத் துண்டுகளுள் ஒன்று ஊருக்கு வடக்கே குளத்துடன் சித்திர மேழி நல்லூர் என்ற பெயரில் அமைந்திருந்தது.[143]

கோளக்குடிக் கோயிலுக்கு உரிமையுடைய உவச்சக்காணி யாக நிலமிருந்தும், உவச்சர்கள் இல்லாமல் போனமையால் முதலாம் குலோத்துங்கரின் நாற்பத்தோராம் ஆட்சியாண்டான கி. பி. 1111ல் கோயில் நிருவாகிகள் கூடி, அக்காணியைக் குலோத் துங்க சோழ வாத்யமாராயருக்குப் பாரசிவக்காணியாக நிச்சயித் துத் தந்தனர். பேரிகை கொட்டவும் கைம்மணி அடிக்கவும் ஆட்கள் இருந்தமையை அறியமுடிகிறது.[144]

திருமடங்கள்

கோளக்குடியிலும் சுற்றூர்களிலும் இருந்த திருமடங்கள் சில இக்கோயில் கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ளன. கி. பி. 1237ல் கோளக்குடியிலிருந்த முதலியார் திருமடம், திருவிளக் கெண்ணெய், தயிரமுது, பாலமுது பெற வாய்ப்பாக விக்கிரம சிங்கதேவன் தமக்கு உரிமையுடைய வரியினங்களை அளித்தார்.[145] கோளக்குடிச் சுந்தரபாண்டியன் பெருந்தெருவில் திருக்கைவேல் அழகியார் மடம் இருந்தது.[146]

கோளக்குடியிலிருந்த மற்றொரு மடத்தில் தவசிகள் வாழ்ந்தனர். அவர்களுள் ஒருவரான தேவர்கள் தேவர், கோளக் குடிக் கோயில் அழகக நட்டப் பெருமாளுக்கு நிலமளித்தார்.[147] கேரளசிங்க வளநாட்டுக் காரையூரில் கிழை மடம் இருந்தது.[148] அழகப்பெருமாள் கேரளன் உள்ளிட்டார், வல்லபதேவன் உள்ளிட்டார், தவசி கூத்தன் உள்ளிட்டார், பென்னமத்தனயன் பிரமன் உள்ளிட்டார் எனக் கோளக்குடி வாழ்ந்த கேரளத் தந்திரிமார் சிலர் ஒரு கல்வெட்டில் இடம்பெற்றுள்ளனர்.[149]

கோளக்குடிக் கோயில் பெருமண்டப மேற்குச் சுவரின் தென்புறத்திருந்து படியெடுக்கப்பட்ட புதிய கல்வெட்டொன்று பல அரிய தரவுகளின் களஞ்சியமாகத் திகழ்கிறது. பூங்குன்ற நாட்டைச் சேர்ந்த முன்னக்குடி வயலில் காணியுடைய வேலங் குடி ஊராரும் முதலிகளுமாய்ச் சேர்ந்து, சோணாடு கொண்ட ருளிய சுந்தரபாண்டியரின் இருபத்தோராம் ஆட்சியாண்டில், முன்னக்குடி வயல், நத்தம் ஆகியவற்றைத் திருக்கோளக்குடி இறைவனுக்குச் சண்டேசுவரப் பெருவிலையாக விற்றனர்.

நிலத்தின் விலைப்பொருளில் ஒரு பகுதியாக 22 அச்சுப் பெறப்பட்டது. எஞ்சிய தொகையைத் தரப் பண்டாரத்தில் பொருள் இல்லாமையால் தியாகஞ்சிரியான் 37 காசுகள் தந்தார். நிலத்தின் நாற்புறமும் திரிசூலக்கல் நாட்டிக் கோயிலார் நிலத்தை அநுபவித்து வந்தனர். ஆனால் நிலத்தில் உரிமையுடைய சிலர், விலையாகத் தந்த பொருள் போதாதெனக் கூறி, அந்நிலத்தின் ஒரு பகுதியைக் கைப்பற்றி அதைப் பாழ்நிலமாக்கிச் சுடுகாடாகப் பயன்படுத்தினர்.

காணியாளர் சிலரின் இத்தவறான செயலால் வருந்திய பொன்னமராவதி நாட்டவரும், ஸ்ரீகார்யம், கோயில் நிருவாகி, மாகேசுவர கண்காணி, சிவனடியார்களை மேற்பார்வை செய்பவர், காளையகாலப் பெருந்தெரு, சுந்தரசோழபுரம் சேர்ந்த நகரத்தார் இவர்களும் உரிமையாளருக்குப் பண்டாரத்திலிருந்து மேலும் சிறிது பொருள் கொடுக்குமாறு செய்து அந்நிலத் துண்டை மீட்டனர். இறைவனுக்குச் சுந்தரபாண்டியர் இட்ட பட்டம், பஞ்சசரம், அழகப்பெருமாள் இட்ட பட்டம், விக்கிரமபாண்டியர் இட்ட வயிரக்கட்டு வடம், ஆகியவற்று டன் பைரவர் செப்புத்திருமேனிகள் இரண்டு கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளன. இவற்றை வாங்க 10 அச்சு செலவானது.[150]

கோயிலாட்சி

கோளக்குடிக் கோயிலின் நிருவாகம் ஸ்ரீகார்யம், ஸ்ரீருத்ர ஸ்ரீமாகேசுவரர், தானத்தார், தேவகன்மிகள், கோயில் கணக்கு கள் ஆகியோரின் பார்வையில் செவ்வனே நடைபெற்றமை யைப் பல கல்வெட்டுகளால் அறியமுடிகிறது. ஸ்ரீகார்யம் என்பார் கோயிலின் மேனிலை நிருவாகியாவார்.

கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த முதலாம் சடையவர்மர் சுந்தரபாண்டியர் ஆட்சிக்காலத்தில் (கி. பி. 1250-1284) கோளக்குடிக் கோயிலில் ஸ்ரீஇரவி நாராயண தேவனும் களப்பாளனும் ஸ்ரீகார்யமாக இருந்தனர். ஸ்ரீமாகேசுவரர்களாக வும் தானத்தாராகவும் எல்லாம் தலையான பாண்டிய பிரமாத ராயன், வீரபாண்டிய பிரமாதராயன், சொக்கபட்டர், தேவப் பிள்ளை, ஆலாலசுந்தர பட்டர், குலசேகர பட்டர், பரமாறம் சிவர், மகாதேவ பட்டர், பரமேசுவர பட்டர், திருநிலை அழகியார், திருக்கொடுங்குன்றமுடையான், நல்லமங்கை பாகன் ஆகியோர் அமைந்தனர்.

மாடாபத்தியமாக உய்யநெறிகாட்டினாரும் பித்தனும் அமையக் கோயிற் கணக்குகளாகப் பரநாகலூருடையான் திருஞானசம்பந்த வேளானும் பங்கலூர் உடையான் ஆண்டான் திருவர்த்தசாம அழகியானும் பொறுப்பு வகித்தனர். திருக்கை வேல் அழகியான் மாகேசுவர கணக்காக இருந்தார்.[151]

பதின்மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் (கி. பி. 1290) கோளக்குடிக் கோயில் மாகேசுவரர்களாகத் திருச்சிற்றம்பல பட்டர், திருநெல்வேலி உடையார், குலசேகர பட்டர், ஆலால சுந்தர பட்டர், விசுவேசுவர பட்டர், தில்லை மூவாயிர பட்டர், மலைமேல் மருந்தி, பெரிய பட்டர் ஆகியோரும் தேவர்கன்மி யாகச் சந்திரசேகர பட்டரும் ஸ்ரீமாகேசுவர கண்காணியாக உய்யநெறிகாட்டினாரும் ஸ்ரீகார்யமாகக் கப்பலூருடையானும் அமையக் கோயிற் கணக்காகச் சோழன் ஆண்டபிள்ளையான திருஞானசம்பந்த வேளார் இருந்தார்.[152]

பதினான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த மாறவர்மர் வீர பாண்டியரின் ஆட்சிக்காலத்தில், இக்கோயில் ஸ்ரீமாகேசுவரர் களாகத் திருமலைக் கொழுந்தன், சுந்தரபாண்டிய பிரமாத ராயன், காலிங்கராய பிரமாதராயன், முதலிபட்டர், பரமேசுவர பட்டர், சதாசிவபட்டர், மாதேவபட்டர், பெருமாள் நம்பி, தன்மானபரன், சூரியதேவன் ஆகியோர் இருந்தனர். மாடாபத்திய மாகப் பாகரும், மாகேசுவர கணக்காக திருவர்த்தசாம அழகியா ரும் இருந்தனர்.[153]

கி. பி. 1507ல் நரசிங்க பிரமாதராயர், சைவசிகாமணி, சுந்தர பாண்டிய பிரமாதராயர் ஆகியோர் இக்கோயில் பண்டாரச் செயலிகளாக அமைந்தனர்.[154] கி. பி. 1525ல் குருகுல பிரமராயரும் ஆலாலசுந்தர பட்டரும் சுந்தரபாண்டிய பிரமாதராயரும் பண்டாரச் செயலிகளாக இருந்தனர்.[155] கி. பி. 1537ல் நரசிங்க பிரமாதராயர், ஆலாலசுந்தர பட்டர், சுந்தரபாண்டிய பட்டர் ஆகியோர் இப்பொறுப்பிலிருந்தனர். மாடாபத்தியமாக உய்ய நெறிகாட்டினாரும் கோயில் கணக்காக முன்னக்குடி உடையான் திருவொற்றசாமம் அழகியாரான திருஞானசம்பந்த வேளாரும் பொறுப்பில் இருந்தனர்.[156]

கி. பி. 1551ல் இவர்களுடன் மாணிக்கவாசக பட்டரும் இணைந்தார். இவ்வாண்டில் மாடாபத்தியமாகத் தொண்டை

மான் பிச்சரும் கோயில் கணக்காக அகளங்கப் பிரியனும் இருந்தனர்.[157] பதினேழாம் நூற்றண்டினதாகக் கொள்ளத்தக்க கல்வெட்டு ஒன்று, கோயில் நிருவாகக் குழுவினராகக் கணநாத பிரமாதராயரையும் சுந்தரபாண்டிய பிரமாதராயரையும் ஆலாலசுந்தர பட்டரையும் சுட்டுகிறது. இக்காலத்தே கோயிற் கணக்காக இருந்தவர் ஆதனரங்கராயன். பாரபத்தியமாக எல்லப்ப முதலியார் இருந்தார்.[158]

குறிப்புகள்

1. இக்கோயில் வளாகத்தில் முதலாய்வு மேற்கொண்ட நாள் 18. 6. 1994. நூற்றியொரு கல்வெட்டுகளைப் படிக்க வேண்டியிருந்தமையால், தொடர்ந்து வாய்ப்புக் கிடைத்தபோதெல்லாம் இவ்வளாகத்திற்கு வரவேண்டியிருந்தது. கோயில் வளாகம் பற்றிய முதல் கட்டுரை வரலாறு ஆறாம் தொகுதியில் 1996ல் வெளியானது. 'பதிப்பிக்கப்படாத பாடங்கள்' என்ற தலைப்பின் கீழ் வரலாறு 6ம் தொகுதியிலிருந்து வரலாறு 12-13ம் தொகுதிவரை இவ்வளாகக் கல்வெட்டுகளின் பாடங்கள் தொடர்ந்து வெளியிடப்பெற்றுள்ளன.

வரலாறு 6	1996	ARE 1916 : 35 - 52
வரலாறு 7	1997	ARE 1916 : 53 - 65
வரலாறு 8	1998	ARE 1916 : 66 - 75
வரலாறு 9-10	1999, 2000	ARE 1916 : 76 - 90
வரலாறு 11	2001	ARE 1916 : 91 - 102
வரலாறு 12-13	2002, 2003	ARE 1916 : 103 - 117

இவ்வளாகத்தில் கண்டறியப்பட்ட புதிய கல்வெட்டுகள் (பு. க) பின் னிணைப்பாகத் தரப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டுக் குடைவரை ஆய்வுகளில், கோளக்குடி வளாகம் எடுத்துக்கொண்ட கால அளவினை வேறெந்தக் குடைவரையும் கொள்ளவில்லை. இக்கோயில் வளாகத்தை ஆய்வுசெய்ய அழைத்துப் புதியன கண்டுபிடிக்கப்பட்ட போதெல்லாம் வாழ்த்தி, தொடர்ந்து துணையிருந்த அமரர் தவத்திரு குன்றக்குடி அடிகளார், தவத்திரு பொன்னம்பல அடிகளார், மரு. பரமகுரு, கோ. சங்கர நாராயணன், திருமடத்து அலுவலர்கள், கோயில் அலுவலர்கள் இவர்கள் அனைவர்தம் அன்பிற்கும் ஒத்துழைப்பிற்கும் உளமார்ந்த நன்றி உரியது.

களப்பணிகளில் உடனிருந்து உதவியவர்கள் பேராசிரியர்கள் முனைவர் அர. அகிலா, முனைவர் கோ. வேணிதேவி, திருமதி வாணி செங்குட்டுவன். பயணங்களின்போது உணவளித்து உதவிய திருமதி பாப்பா வெங்கடாசலம், திருமதி சிந்தாமணி இவர்கள் நன்றிக்குரியவர்கள். அழைத்தபோதெல்லாம் வந்து உடனிருந்து உதவிய கோளக்குடிச் செல்வி இராதா கள ஆய்வுகளின் உயிர்மூச்சாய் இருந்தார். இப்பகுதிப் பயணங்களுக்கு ஒட்டுநராய் இருந்து உதவியவர்களுள் குறிப்பிடத்தக்கவர் திரு. இரா. ஜெய்சங்கர்.

பழங்கல்வெட்டுகள் அனைத்திலும் ஊரின் பெயர் மிகத் தெளிவாகத் 'திருக்கோளக்குடி' என்று சுட்டப்பட்டிருந்தபோதும் திரு. கே. வி. சௌந்தரராஜன் இவ்வூரின் 'original name' கைக்கோளக்குடி என்று எழுதியுள்ளார். மு. கு. நூல், ப. 84.

2. ம. ஜான்சி, கோ. வேணிதேவி, மு. நளினி, திருக்கோளக்குடி ஊருணிக் கல்வெட்டுகள், வரலாறு 6, ப. 16-18.

3. அர. அகிலா, மு. நளினி, பதிப்பிக்கப்படாத பாடங்கள், வரலாறு 12-13, பக். 44-45.

4. பின்னிணைப்புக் காண்க: பு. க. 18.

5. தி. இராசமாணிக்கம் தலமரமாகப் பலாவைக் குறிப்பிடுகிறார். மு. கு. நூல், ப. 16.

6. அர. அகிலா, மு. நளினி, பதிப்பிக்கப்படாத பாடங்கள், வரலாறு 9-10, பக். 44-51.

7. ஆறங்கச் சாலைகள் பல்லவர் கற்றளிகளிலேயே வழக்கிற்கு வந்தவிட்டன. இக்கலைமுறையைப் பழுவேட்டடையர்களும் கொடும்பாளூர் வேளிர்களும் பின்பற்றியுள்ளமையை அவர் தம் கோயில்களில் காணமுடிகிறது.

8. கிரீவ நாசிகைகளில் இது போல் விமானங்களை அமைக்கும் முறை பல்லவப் பழைமையதாகும். மாமல்லபுரத்து ஒருகல் தளியான பீமரதத்திலும் சகாதேவரதத்திலும் இவ்வமைப்பு முறையை முதன்முறையாகப் பார்க்கமுடிகிறது. இக்கலை முறை முற்சோழர் காலத்தும் பின்பற்றப்பட்டமைக்குக் கிழையூர் அவனிகந்தர்வ ஈசுவர கிருக வளாகத்துள்ள தென்வாயில் ஸ்ரீகோயில் சான்றாகும்.

9. ARE 1916 : 82, 83, 92-95.

10. மேற்படி, 108-110.

11. இது போன்ற குடைவரைச் செதுக்கல்களாய் அன்னையர் எழுவரையும் சிவபெருமானையும் குன்னத்தூரிலுள்ள (வரிச்சியூர்) மூன்றாம் குடைவரையில் காணமுடிகின்றது. இவர்களோடு பிள்ளையாரையும் இணைத்த நிலையிலான சிற்பத்தொகுதிகள் கோகர்ணம், பரங்குன்றம், மலையடிப்பட்டி சிவன் கோயில் ஆகிய குடைவரைகளில் பாறைச் செதுக்கல் களாக அமைந்துள்ளன. தமிழகத்திலுள்ள மிகப் பழைமை யான அன்னையர் எழுவர் வடிவங்களாக இவ்வைந்து தொகுதிகளையும் கொள்ளலாம்.

12. இது போன்ற அமைப்புமுறையில்தான் குன்னத்தூரிலுள்ள மூன்றாம் குடைவரையிலும் இச்சிற்பங்கள் அமைந்துள்ளன.

13. குன்னத்தூர் மூன்றாம் குடைவரையிலுள்ள சிவபெருமானும் நந்தி பின்னிருக்கக் காட்சிதருவது இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

14. மு. நளினி, இரா. கலைக்கோவன், மகேந்திரர் குடைவரைகள், அலமு பதிப்பகம், சென்னை, 2004, ப. 51.

15. கோளக்குடி, கோகர்ணம், பரங்குன்றம், மலையடிப்பட்டி சிவன் கோயில், குன்னத்தூர் மூன்றாம் குடைவரை ஆகிய ஐந்து குடைவரைகளிலும் பார்வைக்குக் கிடைக்கும் சாமுண்டி வடிவங்களுள் கோளக்குடிச் சிற்பம் மட்டுமே பாதத்திற்கு முன்னால் எருமைத் தலையைக் கொண்டுள்ளது. ஆகமங்கள் சாமுண்டியை எமனின் துணைவியாகக் குறிக்கின்றன. அதைச் சுட்டுமாறு போல எருமையின் தலை சாமுண்டியின் முன்னால் காட்டப்பட்டுள்ளதா அல்லது சாமுண்டியே மகிடவதம் செய்தவள் என்பதை இவ்வமைப்புக் குறிப்பால் உணர்த்துகிறதா என்பது ஆய்விற்குரியது.

16. ARE 1916 : 77.

17. ARE 1916 : 68-76; மு. நளினி, திருக்கோளக்குடிக் கல்வெட்டுகள், வரலாறு 4, பிப்ரவரி 1995, ப. 5.

18. இரா. கலைக்கோவன், 'பெரிச்சியூர் பாலதேவர்', தினமணி கதிர், 16.12.1990.

19. ARE 1916 : 47- 61.

20. பு. க. 14.

21. பு. க. 4, 5.

22. பு. க. 17.

23. பு. க. 10, 11; தினமலர், 30.07.1994.

24. ARE *1916 : 43.*

25. *மு. நளினி, இரா. கலைக்கோவன், பெண்தெய்வ வழிபாடு தோற்றமும் வளர்ச்சியும், டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மைய வெளியீடு, திருச்சிராப்பள்ளி, 2005, பக். 187-206.*

26. ARE *1916 : 35-39.*

27. *தி. இராசமாணிக்கம் முகப்பினை அடுத்து அர்த்த மண்டபமும் கருவறையும் இருப்பதாகக் கூறுகிறார். மு. கு. நூல், பக். 16. திரு. கே. வி. சௌந்தரராஜன்,* 'The cave temple is unusual in keeping the entry point into the rock-cut part of this largely elaborated medieval complex, at a lower level allowing a high plinth for the cave to be viewed' *என்று எழுதியிருப்பது குடைவரையின் அமைப்பை அவர் சரியாக உள்வாங்கிக் கொள்ளாமையைப் புலப்படுத்துகிறது. மு. கு. நூல், ப. 84.*

28. 'Nandi at a lower level in front of the mandapa'*என்று நந்தியின் இருப்பிடத்தைத் தவறாகக் குறித்துள்ளார் கே. வி. சௌந்தரராஜன். மு. கு. நூல், ப. 84.*

29. *அர. அகிலா, தேவர்மலைக் குடைவரை, வரலாறு 3, பக். 57-66.*

30. *கே. வி. சௌந்தரராஜன், இந்தக் கை,* 'inward contemplation or meditation'*ல் இருப்பதாகக் கூறுகிறார். மு. கு. நூல், ப. 84.*

31. *விஸ்மயம் என்கிறார் கே. வி. சௌந்தரராஜன். மு. கு. நூல், ப. 84.*

32. *தி. இராசமாணிக்கம், இத்தூண்கள் மேலும் கீழும் சதுரமாகவும் நடுவில் எட்டுப்பட்டை கொண்டனவாகவும் இருப்பதாகக் கூறுகிறார். மு. கு. நூல், ப. 17.*

33. *மு. நளினி, இரா. கலைக்கோவன், பெண்தெய்வ வழிபாடு தோற்றமும் வளர்ச்சியும், பக். 187-206.*

34. *எ. சுப்பராயலு, எம். ஆர். ராகவவாரியர், பூலாங்குறிச்சிக் கல்வெட்டுகள், ஆவணம் 1, அக்டோபர் 1991, தமிழகத் தொல்லியல் கழக வெளியீடு, திருச்சிராப்பள்ளி, பக். 57-69.*

35. *புறநானூறு, 242.*

36. M. Nalini, Political Geography of Valluvappadi Nadu and Malanadu With Special Reference to Thiruchirappalli District from 7th century to 17th century A.D., Ph.D Dissertation submitted to Bharathidasan University, Thiruchirappalli, 1999.

37. ARE 1916 : 105.
38. ARE 1916 : 106.
39. ARE 1916 : 89.
40. ARE 1916 : 60.
41. ARE 1916 : 102.
42. மேற்படி
43. ARE 1916 : 40; இவரை இரண்டாம் இராஜராஜர், மூன்றாம் குலோத்துங்கர் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்தவராகப் பி. ஆர். சீனிவாசன் கருதுகிறார். SII 26: 3, 4.
44. ARE 1916 : 43; பி. ஆர். சீனிவாசன் இவரைக் குலசேகர பாண்டியர் காலத்தில் வாழ்ந்தவராகக் கருதுகிறார். SII 26: 10.
45. பு.க. 5.
46. SII 26: 9, 5.
47. ARE 1916 : 37, 35.
48. ARE 1916 : 35, 37.
49. ARE 1916 : 47.
50. ARE 1916 : 65.
51. ARE 1916 : 45.
52. ARE 1916 : 77.
53. ARE 1916 : 78.
54. ARE 1916 : 82.
55. ARE 1916 : 58, 68, 74, 80.
56. தமிழ்க் கல்வெட்டுச் சொல்லகராதி, (பதிப்பு: எ. சுப்பராயலு) சாந்தி சாதனா, சென்னை, 2002, ப. 217.
57. மேற்படி, ப.140.
58. மேற்படி, ப.505.
59. ARE 1916 : 50.
60. ARE 1916 : 62, 66.
61. ARE 1916 : 104.
62. ARE 1916 : 64.

63. ARE 1916 : 117.
64. ARE 1916 : 68.
65. ARE 1916 : 48.
66. ARE 1916 : 49.
67. ARE 1916 : 37.
68. பு.க.1.
69. ARE 1916 : 62.
70. ARE 1916 : 63.
71. பு.க.1.
72. ARE 1916 : 91.
73. ARE 1916 : 66, 75, 90.
74. ARE 1916 : 102.
75. ARE 1916 : 62.
76. ARE 1916 : 81.
77. ARE 1916 : 40.
78. ARE 1916 : 90.
79. ARE 1916 : 36.
80. ARE 1916 : 37.
81. ARE 1916 : 58.
82. ARE 1916 : 47.
83. ARE 1916 : 77.
84. ARE 1916 : 82.
85. ARE 1916 : 102.
86. ARE 1916 : 101.
87. ARE 1916 : 106, 114.
88. ARE 1916 : 84.
89. ARE 1916 : 78.
90. ARE 1916 : 89.
91. ARE 1916 : 110.
92. ARE 1916 : 71, 72.
93. ARE 1916 : 52.
94. ARE 1916 : 100.
95. ARE 1916 : 97.
96. பு.க.17.
97. பு.க.5.
98. ARE 1916 : 42.
99. ARE 1916 : 53.
100. ARE 1916 : 56.
101. ARE 1916 : 57.
102. ARE 1916 : 59.
103. ARE 1916 : 93, 94, 95.
104. ARE 1916 : 96.
105. ARE 1916 : 109.
106. ARE 1916 : 69.
107. ARE 1916 : 70.
108. ARE 1916 : 111.
109. பு.க.6, 8, 9.
110. ARE 1916 : 54.
111. ARE 1916 : 98.
112. பு.க.12, 13, 14, 15, 16.
113. ARE 1916 : 108.
114. ARE 1916 : 51.
115. ARE 1916 : 45.
116. ARE 1916 : 62.
117. ARE 1916 : 46.
118. ARE 1916 : 105.
119. ARE 1916 : 113.
120. ARE 1916 : 64.

121. ARE 1916 : 63.
122. ARE 1916 : 39, 40.
123. ARE 1916 : 43.
124. ARE 1916 : 38.
125. ARE 1916 : 74.
126. ARE 1916 : 75.
127. ARE 1916 : 81.
128. ARE 1916 : 83.
129. ARE 1916 : 85.
130. ARE 1916 : 86.
131. ARE 1916 : 100.
132. பு.க. 2.
133. ARE 1916 : 80.
134. ARE 1916 : 55.
135. ARE 1916 : 87, 88.
136. ARE 1916 : 44.
137. ARE 1916 : 61.
138. ARE 1916 : 66.
139. ARE 1916 : 67.
140. ARE 1916 : 83.
141. ARE 1916 : 103.
142. ARE 1916 : 104.
143. ARE 1916 : 107.
144. பு.க. 10.
145. ARE 1916 : 35.
146. ARE 1916 : 46.
147. ARE 1916 : 74.
148. ARE 1916 : 38.
149. ARE 1916 : 99.
150. பு.க. 4.
151. ARE 1916 : 62, 63, 66, 67.
152. ARE 1916 : 110.
153. ARE 1916 : 64.
154. ARE 1916 : 52.
155. ARE 1916 : 44.
156. ARE 1916 : 49.
157. ARE 1916 : 51.
158. ARE 1916 : 57.

பின்னிணைப்பு

I புதிய கல்வெட்டுகள்

கல்வெட்டு 1

இடம்: திருக்கோளக்குடி மலைக்குத் தெற்கிலுள்ள ஊருணிப் படித்துறை.

1 ஸ்வஸ்திஸ்ரீ குலசேகரதேவற்கு யாண்
2 டு முப்பத்திரண்டாவது கல்வாயில் நாட்
3 டுச் சுந்தரபாண்டியபுரத்து நன்நெறி
4 பாண்டி உடையான் திருவேகம்பமுடை
5 டயான் அழகவிடங்கப்பெருமாள் எங்

6 கள் தன்மமாக ஆண்டார் ஊருணிக்கு
7 குளப்புறமாக இராசசிங்கமங்கலத்
8 து ஊரவர் பக்கல் முன்னாள்ப் பதிடே
9 னழாவது இவ்வூர்ப் பற்றான புறதுற
10 ங் கொட . றட வயல் யிறையிலியா
11 க நான் கொண்டு இட்ட பெரியா
12 ன் வயக்கலும் கிணறும் சோழன்
13 வயக்கலும் கிணறும் இதன் தெற்
14 கில்த் துடவலும் ஆகத் தடி மூன்
15 றும் கிணறிரண்டும் குளப்புறமா
16 க ஊரஞ்சாதி இறையிலியாக கொண்
17 டு இன்னிலங்களுக்கு இவூரவரை இடுவி
18 த்துத் திருச . மான பளமும் பண்ணிக்
19 குடுத்து இவ்வூரணிக்கும் பெரி
20 யாநேன் அழகவிடங்கப்பெருமா
21 னே பன்மாஹேச்வர ரகைஷ

கல்வெட்டு 2

இடம்: மேலது.

1 இராக்கிஷ
2 வருசம் அற்பசி பு
3 5 உ ஶ்ரீமத் இர
4 ங்கனாத னாயக்
5 கரையன் காரி
6 யத்துக்கு கத்தரான
7 மலைப்பெருமாள்
8 பிள்ளையவர்களும் ஶ்ரீ
9 பண்டார காரியத்துக்கு
10 கடவாரும் சுவாமி தி
11 ருக்கோழ நாதற்கு அ
12 பிஷேக தவணை தின
13 சரி வூருணி உதையத்
14 திலே அபிஷேக நெய்
15 வேதியமாக பெற கட்ட
16 ளையிட முள்ளிக்குடி
17 செட்டிகாடு உள்பட நா
18 ன்கெல்லையும் சறு
19 வமானியமாக சந்
20 திராதித்தவரையும்

கல்வெட்டு 3

இடம்: திருக்கோளக்குடி மலையின் மேற்குப்புற ஊருணிக் கரையிலுள்ள கற்பலகை.

1	--	2	னாட்டு நகரம்
3	தெலிங்க குல	4	காலபுரத்து பாக்
5	கம் உடையான்	6	அடைய முத்திதிரு
7	வான சோழப்பர்	8	தன்மம் இந்த ஊ
9	ரணி நாம் செய்	10	து அடைய மு
11	த்தி திருவான் உ		

கல்வெட்டு 4

இடம்: பெருமண்டபத்தின் தென்புற அறையிலுள்ள பாறைப் பகுதி.

1 ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீஸுந்தர பாண்டிய தேவற்கு யாண்டு 6 வதின் எதி

2 ர் 2 வது உடையார் திருக்கோளக்குடி யுடைய நாயநாற்கு பூங்குன்ற நாட்டு பே

3 வலங்குடி ஊரோமும் முதலிகளும் முன்னைக்குடி வயலில் கொண்டுடைய அனை

4 வோமும் சோணாடு கொண்டருளிய சுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு 20 வது எதிராமாண்

5 டு நாங்கள் சுற்றடங்க விலை பேசித் தண்டேசுரப் பெருவிலையாக விற்ற முன்னைக்குடி வயலு

6 க்குந் நத்தத்துக்கும் பொருள் செலவு ஊருதம் விற்றுக் குமரத்தக்குடியில் அச்சுவரியில் கொண்

7 ட அச்சு 22ம் பின்பு எங்களாற்றாமை மாற்றடங்கக் கொள்ள வேண்டுமென்று சொல்லப் ப

8 ண்டாரத்து முதலில்லை யென்ன மற்றும் அன்னியர் கொள்வரில்லை நீங்கள் கொண்ட நிலப் பெ

9 பாருள் முகவிடுதல் சுற்றடங்கக் கொள்ளுதல் செய்ய வேணு மென்ன சுற்றடங்கக் கொண்டு தியாகஞ்சி

10 ரியான் பட்டமற விட்டுத் தரக் கொண்ட காசு 37ம் கொண்டு நான்கெல்லையுந் திருச்சூலக் கல்லு நாட்டி

11 க் குடுத்து அனுபவித்துப் போதச்சிதே இதிலே சிறிது காணியுடையவர்கள் அனுபோக விரோதம் பண்ணி

12 பிணம் படு மாஹேச்வர மரச்சிங்காதநமிட்டும் பாழ் கிடத்தலில் பொன்னமராபதி நாட்டவரும் முத

13 லிகளும் நியம காளையகாலப் பெருந்தெரு சுந்தரசோழபுரம் இன்னகரங்களுங் கூடி சிங்காதநம்

14 எடுப்பித்து இன்னமும் இவர்களுக்குச் சிறிது பொருள் குடுங்கோளெந ரெண்டாம் படியாய் முடி

15 வழங்கும் பெருமாள்ளிட்ட பட்டமும் பஞ்ச சரமும் நாயனார் அழகப்பெருமாளிட்ட பட்டமும் பிள்

16 ளையார் விக்கிரமபாண்டிய தேவரிட்ட வயிரக்கட்டு வடமும் திருச்சிராப்பள்

17 ளி முதலியார் இரண்டு தேவ முதலியார் கண்காணிப்படி ஏறவிட்டுத் தரக்கொண்ட அந்தராயம் ஊ

18 ர் வினியோகத்துக்கு கொண்ட ஆடிய எம் நாயனார் பண்டாரத்தில் நாடாகத் தனிசு வராகி

19 க் கொண்ட நாளில் நாங்கள் தனிசு கொண்டு பண்டாரத் துக்கு கடவ தீட்டுப்படியால் நெல் 682

20 கலம் தூணிப்பதக்கு பின்பு இவ்வயல் வரியிறங்கிட நாட்டவ ரும் நாங்களும் தேவர் நிஷதராயரும் இராசிங்கமங்கலத்து பொ

21 ப்பாரெடி வயக்கலை வராவடை வைத்துத் தரக் கொண்ட காசு 30ம் ஆக அச்சு 76ல்ப் பட்ட வயிராகி வீரப

22 த்திர பிள்ளைக்கும் நிலை நின்ற வயிராகிக்குந் திருமேனி வாற்க நீக்கின அச்சு 10 நீக்கி அச்சு 66 நெல் 682 கலம்

23 தூணிப்பதக்கு அச்சு நூற்று அறுபத்து ஆறும் நெல்லு அறுநூற்று எண்பத்து இரு கலநே தூணிபதக்கும் இம்முத

24 ல் அறக்கொண்டு பொருள்ச் சிலவு பிடிபாடு குடுத்தோம் வேலங்குடி ஊரோமும் முதலிகளும் முன்னைக்

25 குடி வயலில் காணியுடைய யனைவோமும் உடையார் திருக்கோளக்குடி உடைய நாயனாருக்கு இது உசித வா

26 சகப் பேரையனும் அரச நாராயணப் பேரையனும் மேநாட்டரையனும் வலங்கை மாணிக்கப் பேரைய

27 னும் கண்டராதித்தப் பேரையனும் புறமலைநாட்டுப் பேரையனும் நகுல மீகாம பேரையனும் நகுல

28 சிங்கப் பேரையனும் பூங்குன்றநாட்டுப் பேரையனும் நிகத மண்டலப் பேரையனும் விக்கிரம சோழ நாடாழ்

29 வானும் ஆரம்பூண்டானும் அடந்தறு காலப் பேரையனும் நாட்டுப் பேரையனும் மண்டல மாணிக்கப் பே

30 ரையனும் பழியஞ்சிப் பேரையனும் குலதீப நாடாழ்வானும் கடக்க சிந்தாமணி பேரையனும் வேல

31 ங்குடி நாடாழ்வானும் தேவேந்திர நாடாழ்வானும் வைய்யகத் தரையனும் ஆலால சுந்தர நாடாழ்வானு

32 ம் இராசேந்திர நாடாழ்வானும் தப்பிலாப் பேரையர் கிழ்ப்புறநாட்டுப் பேரையனும் கோடாமொ

33 ழிப் பேரையனும் இவ்வனைவர் சயிக்கிளையாதன்மையு மிட்டு இவர்கள் சொல்ல இப்பொருள்

34 செலவு பிடிபாடு எழுதினேன் வேலங்குடிக் கணக்குத் திருவையாறுடையான் அழகிய நாய

35 னான ஏறக்குடையான் எழுத்து

கல்வெட்டு 5

இடம்: மேலது.

1 திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீசுந்தரபாண்டிய தேவ

2 ற்கு யாண்டு 8வதின் எதிர் 2வது புறமலைநாட்டுப் பொன்னமராபதி சுந்தரவில்லியான நிஷதரா

3 ஜனேன் இன்னாட்டுத் திருக்கோளக்குடி உடையார் திருக்கோளக்குடி உடைய நாயனார் ஆதிசண்டே

4 ச்வர தேவற்குப் பூங்குன்றநாட்டு வேலங்குடியார் திருநாமத் துக்காணியாக விற்ற புறமலைநாட்டு முன்

5 னைக்குடிப் பெருநான் கெல்லைக்குட்பட்ட புன்செய் நன்செயால் வந்த வேலிகாலச்சு நா

6 ட்டுவினியோகம் வந்தந பொன்னமராபதிப் பற்று நாட்டவர் இன்னாயனார் திருநாள் நடுவிற் தி

7 னபடி நடைகளுக்கும் வேண்டுவனவைபிற்றுக்கு இம்முன் னைக்குடி வயலால் வந்த வினியோகம்

8 தவிர்த்து முன்னைக்குடி புறவிறங்கட்டுக் (கல்வெட்டு முற்றுப் பெறவில்லை)

கல்வெட்டு 6

இடம்: சத்ரசபாபதி கோயில் திருநிலைக்கால்.

1	நடராசப்	2	பண்டார	3	த்தின் மக
4	ன் சிதம்	5	பரன்		

கல்வெட்டு 7

இடம்: குன்றுத் தொடரின் வடபுறத்தே பொன்னழகியம்மன் திருக்கோயிலுக்கு நேர் மேலே, மலைப்பாறை ஒன்றில் கட்டம் கட்டிச் செதுக்கப்பட்டுள்ளது.

1	ஸ்ரீபதப் பி	2	ல்லி ஈ	3	ச்வரம்

கல்வெட்டு 8

இடம்: முன்மண்டபத் தூண்.

1	மய்லை சிதம்பர	2	மகன்
3	நி	4	த்த
5	ம்	6	சதா சேர்வை

கல்வெட்டு 9

இடம்: மலைக் கோயில் நுழைவாயில் கோபுரத்திற்கு அருகிலுள்ள பிள்ளையார் கோயில் கருவறை முகப்புச் சுவர்.

1	கலியுகாதி	2	வருடம் 5000ன்
3	நிகளுகின்ற	4	விசுவாவசு
5	வருடம்	6	சிவமயம்
7	மிதுலைப்பட்டி	8	மாத்தூர் கோவிர்
9	குளத்தூருடையா	10	ன் நல்ல கருப்ப
11	ஞ் செட்டி பளணி	12	யப்பன் செய்த
13	யித்திருப்பணி	14	தற்மம்

கல்வெட்டு 10

இடம்: குடைவரையின் மறைக்கப்பட்டுள்ள படிகளின் பிடிச்சுவர்.

1 - - - - ஸ்ரீகுலோத்துங்க சோழதேவர்க்கு யாண்டு 41ஆவது பாண்டி நாட்டி ராஜேந்த்ர சோழ

2 - - - - உவச்சக் காணிக்கு உவச்சுக் கொட்டுவாரில்லாமையில் இக்கோயில் ஸ்ரீருத்திர ஸ்ரீமாயேச்வரரும் விசதராஜமா

3 - - - - நாந கொலோத்துங்க சோழ வாச்சியமாராயனுக்கு காணி செய்து குடுத்த பரிசாவது பேரிகை கொட்டுவாநுக்கு விற்றுக்கு

4 - - - - கு மாண் போகமாந மேலை வயலில் நச்சிநெடுங்கணும் நக்கி நெடுங்கணும் . ழுமித் துடவையும் இவை

5 - - - - கைம்மணி கொட்டுவார் இருவற்க்கு நாள் நாநாழி அரிசிச் சோறும்

6 - - - - இப்பாட.பாரசிவக்காணியும் எப்பேர்ப்பட்டதும் காணி காராண்கிழமை மீயாச்சி உள்ளிட இவனுக்குக் காணி

7 - - - - லுத்துவாந்நாகவும் இவன் ... முள்ளவும் நிற்ப்பதாக ஸம்

8 - - - - பாரசிவகாணி செய்து குடுத்தோம் இக்கோயில் ஸ்ரீருத்ர ஸ்ரீமாஹேச்வரரு

9 - - - - ரோம்

கல்வெட்டு 11

இடம்: மறைக்கப்பட்டுள்ள படிக்கு எதிர்ப்புறமுள்ள சுவர்.

1 ஸ்வஸ்திஸ்ரீ திருக்கோளக்குடி

2 முன்பில் ஊருணி மூவேந்தந் எ

3 ந்நும் பசாசின் பேர்

கல்வெட்டு 12

இடம்: பெருமண்டபத் தெற்கு நுழைவாயிலின் மேற்குநிலை.

1	கறுப்ப	2	ன் வயி
3	ராவி	4	மகன்
5	வஈரன்		

கல்வெட்டு 13

இடம்: பெருமண்டபத் தெற்கு நுழைவாயில் கிழக்குநிலை.

1	ஈசுவர மூ	2	ற்த்தி

கல்வெட்டு 14

இடம்: பெருமண்டபக் கிழக்கு நுழைவாயில் உத்திரம்.

1	தன்ம பட்ட உ	2	மை ஒரு பாகந் ச
3	தா சேர்வை		

கல்வெட்டு 15

இடம்: முகமண்டபத் தூண் படிக்கட்டுக்கு அருகில்.

1	சிதம்	2	பரமு	3	ற்த்தி

கல்வெட்டு 16

இடம்: பெருமண்டப நுழைவாயிலுக்கு அருகில் முன் மண்டபக் கூரை.

1	அழகக	2	ப்பன்
3	சதா சேர்	4	வை

கல்வெட்டு 17

இடம்: குடைவரை நுழைவாயில் வலப்புறச் சுவர்.

1	திருமூல			2	சந்தா		
3	ன குரு			4	வான ம		
5	ங்கை பா			6	க பண்டா		
7	ரத்தின் ஆ			8	ற்மாற்த்த		
9	ம்	10	ெ	11	ச	12	ா
13	க்	14	க	15	லி	16	ங்க
17	த்தி	18	ன்	19	சன்ன	20	தி

கல்வெட்டு 18

இடம்: சிவதர்மீசுவரர் கோயில் முகமண்டப வடக்கு, கிழக்குச் சுவர்கள்.

1 ஸ்வஸ்திஸ்ரீ மந் மஹா மண்டலேச்வர - -

2 சமுத்ராதிபதி ஸ்ரீக்ருஷ்ண தேவ மகாராயர் ப்ருத்வி ராச்சியம் பண்ணி அருளா நின்ற சகாப்தம் 1441 இதன் மேல் செல்லா நின்ற பிரமாதி வர்ஷம் உத்திராடத்து ....

3 ப நாயற்று பூற்வ பக்ஷத்து பூற்வாத தஷண பூஷணையும் --

4 நாட்டுத் திருக்கோளக்குடி சிவதன்மீச்ரவமுடைய நாயனார் கோயிற் தேவகன்மிகளுக்கும் மாயேசுவரரும்

அறந்தாங்கி ......ளுடைய தம்பிரானார் சீபாத நாயனார் ......

5 - -

6 திருநட்டப் பெருமான் தொண்டைமான் - - கடலடையா திலங்கை கொண்ட சோழ

7 வளநாட்டு ஒல்லையூர் கூற்றத்து ...... நாட்டு ஆய்குடி நான் கெல்லைகுட்பட்டனவும் காரைநிலை

8 நத்தமும் புஞ்சைகளும் உட்பட்ட நீர் நிலங்களும் நஞ்சை புஞ்சையும்

9 நத்தமும் தோட்டமும் குளமும் .....யும் உட்பட நிலக்கடமையு அந்தராயம் இனியோகம் நிதி நிக்ஷேப ஜலபாஷனமும் .....

10 களு கந்றும் எற்பேற்பட்ட சமுத்த ப்ராப்திகளும் - -

11 . . ஏந்த அமுது செய்யும் படிக்குத் தர அமுது வேண்டுமாய் நிவந்தங்களும் ஆக - -

12 நஞ்சையும் உட்பட்ட நீர்நிலையும் நஞ்சை . . . . நத்தமும் தோட்டமும் உட்பட்டனவும் . . . . கொண்டு சந்த்ரா தித்தவர்செல - -

13 நிலமும் நத்தமும் நீர்நிலமுமான நஞ்சை புஞ்சையும் நத்தமும் தோட்டமும் மற்றும் - -

14 ம் வெட்டிக் கொண்டு இந்நாள் முதல் நில்லாதே தேவதா - -

15 வெட்டி பாட்டம் - -

16 யால் அனுபவித்துக் கொள்ளவும் இப்படிக் கொடுத்த தேவதானத்துக்கு - -

17 ப்ராமணணையும் மாதா பிதாவையும் கொன்ற பாவத்திலே போகக் கடவாராகவும் - -

18 - - திராதித்தவரை செல்ல சர்வமான்யமாக - - கொள்ளவும் இப்படி (கல்வெட்டு மிகவும் சிதைந்துள்ளது)

4. அரளிப்பட்டிக் குடைவரை

திருப்புத்தூர்ச் சிங்கம்புணரிச் சாலையில், திருப்புத்தூரில் இருந்து பதின்மூன்று கிலோமீட்டர் தொலைவில் வலப்புறம் பிரியும் சாலை, அரளிப்பட்டிக்கு அழைத்துச்செல்கிறது.[1] இரண்டு கிலோமீட்டர் தொலைவு இந்தச் சரியற்ற பாதையில் செல்லத் துணிந்தவர்கள் அரளிப்பட்டியை அடையலாம். அழகான தாமரைக் குளமும் ஆளரவமின்றி இருக்கும் கரை யோர மடங்களும் அறைகளாகத் தடுக்கப்பட்டிருக்கும் மஞ்சு விரட்டு மாட்டுக் கொட்டிலும் கண்ணுக்கெட்டிய தொலைவு வரை பரந்துகிடக்கும் வெற்று மைதானமும் அரவங்கிரிப் பாறையை முப்புறத்தும் சூழ்ந்துள்ளன. இப்பாறையின் பின்னால் பசுமையோ பசுமை. குன்றின் உச்சியில், செட்டியார் பெரு மக்களின் திருப்பணியாய் முளைத்துச் சதுர்வேதிமங்கலத்து உருத்திரகோடீசுவரரின் ஆட்சிக்குள் அரவணைக்கப்பட்ட முருகன் திருக்கோயில். ஒருகாலப் பூசையில் பசுமைகளைப் பார்த்தே பசி தீர்த்துக் கொள்கிறார் எம்பெருமான்.

மண்டபம்

அரவங்கிரியின் தென்சரிவில் கிழக்குப் பார்த்த நிலையில், 'போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்ற கொள்கையில் அசைக்கமுடியாத பற்றுடைய யாரோ வெட்டிச் சென்ற அளவில் சிறிய மண்டபக் குடைவரை.[2] தென்வடலாக 2. 23 மீ. நீளமும் கிழக்கு மேற்காக 90 செ. மீ. அகலமும் கொண்டுள்ள மண்டபத்தின் தரையில், முழுக்காட்டு நீர் வெளியேற ஆழமான, ஒழுங்கற்ற காலொன்று காணப்படுகிறது. மண்டபத்தின் தென், வடசுவர்களில் ஆழமான கோட்டங்கள் வெட்டப்பட்டுள்ளன.

தென்சுவரில் 92 செ. மீ. உயரத்தில், 72 செ. மீ. அகலத்தில் அமைந்துள்ள 12 செ. மீ. ஆழக் கோட்டத்தில் ஆடவர் சிற்பம் ஒன்று நிறைவடையாப் பணியாய் விளைந்துள்ளது. வடசுவரில் 58 செ. மீ. உயரத்தில், 71 செ. மீ. அகலத்தில் வெட்டப்பட்டுள்ள 12. 5 செ. மீ. ஆழக் கோட்டத்தில், 33 செ. மீ. உயரமுள்ள சிறிய அளவிலான இலிங்கபாணம் வெட்டி அதன் முகப்பில் பிள்ளை யாரைச் செதுக்கியுள்ளனர்.[3] உற்றுப் பார்ப்பவர்களுக்கே இப்பிள்ளையாரின் தரிசனம் கிடைக்கும். மண்டபக் கூரையின்

வெளிநீட்டலாய் 10 செ. மீ. அளவிற்கு நீளும் பாறைப்பகுதி கபோதம் போல வடிவமைக்கப்பட்டுள்ளது.

கருவறை

மேற்குச் சுவரின் நடுவில் 70 செ. மீ. அகலத்தில், 1. 80 மீ. உயரத்திற்கு நிலை அமைப்போ, அணைவுத் தூண்களோ அற்ற திறப்புச் செய்து கருவறை அகழ்ந்துள்ளனர். தென்வடலாக 2. 60 மீ. அளவும் கிழக்கு மேற்காக 2. 65 மீ. அளவும் கொண்டு சதுரமாக அமைந்துள்ள கருவறையின் உயரம் 2. 04 மீ.

தரையின் நடுவே பாறையில், உயரக் குறைவானதொரு சதுர தளத்தின்மீது 47 செ. மீ. உயர வேசர ஆவுடையாரும் அதன்மீது 29 செ. மீ. உயர உருளைப் பாணமும் செதுக்கப்பட்டுள்ளன. சிறிய அளவிலான கோமுகம் வடபுறம் காட்டப்பட்டுள்ளது. அதன் கீழே தரையில் முழுக்காட்டு நீர் வாங்கும் பள்ளம். இந்நீர் வெளியேறக் கருவறைத் தரையிலும் மண்டபத் தரையிலும் ஆழமான ஒழுங்கற்ற காலொன்று வெட்டப்பட்டுள்ளது.

சிற்பங்கள்

தென்கோட்ட ஆடவர்

இரண்டு கால்களையும் குத்துக் கால்களாக வைத்து அமர்ந்த நிலையில் வலக்கையை முழங்கால் மீது இருத்தி,[4] இடக்கையின் முழங்கைப்பகுதி இடமுழங்கால் மீது தாங்கலாக இருக்குமாறு கையை மடித்து இடப்புறமாக உயர்த்தியுள்ள இத்தென்கோட்ட ஆடவரின் வெறுமையான செவிகள் நீள்செவிகளாக உள்ளன. உயர்த்தியுள்ள இடக்கையில் சிதைந்த நிலையில் மலர்.[5] பாதங் களும் முகமும் சிதைந்துள்ளன.[6] தலையில் மகுட அமைப்புகள் ஏதுமில்லை. மார்பும் இடுப்பும் சிதைந்திருப்பதால் ஆடை, அணிகலன்களை அடையாளம் காணக்கூடவில்லை.

வடகோட்ட இலிங்கப் பிள்ளையார்

இலிங்க பாணத்தின் முகப்பில் இலலிதாசனத்தில் காட்டப் பட்டுள்ள இப்பிள்ளையார் இடம்புரியாகக் கரண்டமகுட ராய்க் காட்டப்பட்டுள்ளார். வயிற்றின் நடுவே உதரபந்தம். இட முன்கை வயிற்றருகே உள்ளது. துதிக்கையின் கீழ்க் காணப்படும் வலமுன்கை சிதைந்துள்ளது. பின்கைப் பொருட்களை அடையாளம் காணக்கூடவில்லை. தமிழ்நாட்டுக் குடைவரை

கள் எவற்றிலும் இடம்பெறாத இந்த இலிங்கப் பிள்ளையார் சிதைந்திருந்தபோதும் சரித்திரத்தில் இடம் பிடித்துள்ளார்.

முடிவுரை

இக்குடைவரையின் எளிய அமைப்பு, சிவகங்கை மாவட்டக் குன்னத்தூர்க் குடைவரைத் தொகுதியின் முதல் குடைவரையை யும் மகிபாலன்பட்டிக் குடைவரையையும் நினைவூட்டுகிறது.[7] கட்டமைப்பு, சிற்பங்கள் கொண்டு இதன் காலத்தைக் கி. பி. எட்டாம் நூற்றாண்டின் தொடக்கப்பகுதியாகக் கொள்ளலாம்.

குறிப்புகள்

1. இக்குடைவரையில் ஆய்வு மேற்கொண்ட நாட்கள் 23.7.1994, 13. 3. 2003. உடன் வந்தவர் வணக்கத்திற்குரிய குருமகா சந்நி தானம் தவத்திரு பொன்னம்பல அடிகளாரின் நேர்முக உதவியாளர் திரு. நீலமேகம். ஆய்விற்கு உதவியவர்கள் பேராசிரியர் முனைவர் அர. அகிலா, இரா. இலலிதாம்பாள்.
2. தி. இராசமாணிக்கம், சு. இராசவேல், அ. கி. சேஷாத்திரி ஆகியோர் இக்குடைவரைக் கோயில் கருவறை மட்டுமே கொண்டுள்ளது என்று பிழையாகக் குறிப்பிட்டுள்ளனர். தென்னகக் குடைவரைக் கோயில்கள், கழகம், சென்னை, 1989, ப. 71: மு. கு. நூல், ப. 151.
3. தி. இராசமாணிக்கம், சு. இராசவேல், அ. கி. சேஷாத்திரி இவர்கள் இவ்வடிவத்தை முகலிங்கமாகக் கண்டுள்ளனர். மு. கு. நூல்கள், பக். 71, 151.
4. வலக்கைத் தொடைமீது இருப்பதாகத் தி. இராசமாணிக்கம் பிழையாகக் குறித்துள்ளார். மு. கு. நூல், ப. 72.
5. தி. இராசமாணிக்கம், சு. இராசவேல், அ. கி. சேஷாத்திரி இவர்கள் இக்கையிலுள்ள பொருள் சரியாகத் தெரிவில்லை என்று குறிப்பிட்டுள்ளனர். மு. கு. நூல்கள், பக். 72, 151.
6. தி. இராசமாணிக்கம், சு. இராசவேல், அ. கி. சேஷாத்திரி இவர்கள் சிதைவினால் செதிலாகப் பிளந்திருக்கும் பகுதி யைத் தாடியாகக் காண்கின்றனர். மு. கு. நூல்கள், பக். 72, 151.
7. விரிவான தரவுகளுக்குக் காண்க: கோ. வேணிதேவி, இரா. கலைக் கோவன், 'குன்னத்தூர்க் குடைவரைகள்', வரலாறு 6, ப. 55-72. தி. கமிதா, இரா. கலைக்கோவன், மகிபாலன்பட்டிக் குடைவரை, வரலாறு 6, பக். 82-88.

5. ஒப்பீடு

திருவண்ணாமலை ஆதீனத்தின் ஆளுகையில் உள்ள கோளக்குடி, குன்றக்குடி, பிரான்மலை, அரளிப்பட்டிக் குடைவரைகள் எவற்றிலுமே உருவாக்கியவர்களைச் சுட்டும் கல்வெட்டுகள் இடம்பெறவில்லை. இந்நான்கனுள் எளிய குடைவரையாக அரளிப்பட்டியைக் குறிக்கலாம். தமிழ்நாட்டில் காணப்படும் முழுமையடைந்த குடைவரைகளுள் எளிய குடைவரைகளாய் அமைந்தவை எண்ணிக்கையில் குறைவே. அவற்றுள்ளும் மிக எளிய அமைப்பினைக் கொண்ட குடைவரையாக அரளிப்பட்டி அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இக்குடைவரையின் ஒரே சிறப்பு இங்குள்ள இலிங்கப் பிள்ளையார்தான்.

பிரான்மலைக் குடைவரை இடைநிலைக் குடைவரைகளுள் ஒன்று. வல்லம் குடைவரைகளோடு ஒப்பிடத்தக்க வகையில் அமைந்துள்ள இதன் சிறப்பே கருவறை வடிவங்கள்தான். இவை கல்லில் ஆனவையா அல்லது சுதையுருவங்களா என்பதை ஆராய்ந்து அறியக்கூடவில்லை. வழிபாடு செய்பவர்கள், ‘இவை சுதையுருவங்கள் அன்று, கற்சிற்பங்களே’, எனக் கூறுவதுடன், அச்சிற்பங்களின் மீது சுதைப்பூச்சும் தைலக்காப்பும் தேவைக்கேற்ப செய்யப்படுவதாகவும் கூறுகின்றனர்.

பரங்குன்றம் குடைவரைச் சிற்பங்களுள் பெரும்பான்மையன இதே போல் சுதைப்பூச்சும் தைலக்காப்பும் பெற்றுள்ளமை இங்கு நினைக்கத்தக்கது. சிற்பங்களின் மீதமையும் சுதைப்பூச்சு அச்சிற்பங்களின் உண்மையான அமைப்பை அறியமுடியாதபடி செய்வதால், அவை இடம்பெற்றுள்ள குடைவரைகளின் காலத்தை நிர்ணயிக்கக் கட்டடக்கலைக் கூறுகளையே பெருமளவு சார்ந்திடும் நிலை ஏற்படுகிறது. எளிய நிலைக் கோட்டங்களும் தூண்களும் கூரையுறுப்புகளும் கொண்டுள்ள இக்குடைவரையை, கட்டடக்கலைக் கூறுகளின் அடிப்படையில் கி. பி. எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியினதாகக் கொள்ள முடியும்.

குன்றக்குடிக் குடைவரைகள் மூன்றனுள், இரண்டாம், மூன்றாம் குடைவரைகளே சிற்பங்கள் கொண்டுள்ளன. முதல் குடைவரை வாயிற்காவலர் சிற்பங்கள்கூடப் பெறாது, ஆனால்,

அதே சமயம் முதல்நிலைக் குடைவரைகளுக்கேற்ப முகப்பும் பெரிய அளவிலான முகமண்டபமும் கருவறையும் பெற்றுள்ளது. இரண்டாம் குடைவரை, காவலர் சிற்பங்களும் கருடாந்திக விஷ்ணு சிற்பமும் பெற்று மிளிர, மூன்றாம் குடைவரை அனைத்துச் சுவர்களிலும் சிற்பங்கள் பெற்று, முகப்பருகே காவலர்களும் பெற்று, முகப்பின் பக்க விரிவுகளில் பிள்ளையார், முருகன் கொண்டு மூன்றனுள், முதன்மையானதாகத் திகழ்கிறது.

இரண்டாம் குடைவரையில் காணப்படும், 'மசிலீச்சுரம்' என்ற வட்டெழுத்துப் பொறிப்பு அதன் காலத்தை எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியாக நிர்ணயிக்க உதவுகிறது. கட்டமைப் பில் இம்மூன்று குடைவரைகளுமே ஒன்று போல் உள்ளமை குறிப்பிடத்தக்கது. இரண்டாம், மூன்றாம் குடைவரைகளில் உள்ள சிற்பங்களின் கலையமைதியும் ஏறத்தாழ ஒன்று போல் உள்ளமையால், இவை மூன்றையுமே ஒரே காலகட்டக் குடை வரைகளாகக் கொள்வதுதான் ஏற்புடையதாகத் தோன்றுகிறது. குன்றின் மீதுள்ள பழந்தமிழ்க் கல்வெட்டும் படுக்கைகளும் இப்பகுதியைப் பழந்தமிழர் வாழிடமாய் உறுதிப்படுத்துகின்றன.

இங்குள்ள சிற்பங்களுள் 'கருடாந்திக விஷ்ணு', பல்லவர் பகுதியில் மாமல்லபுரத்தில் அருச்சுனர் தளியிலும் தருமராஜர் தளியிலும் இடம்பெற்றுள்ளது. இலிங்கோத்பவர் சிற்பம் பிள்ளை யார்பட்டியிலும் திருமெய்யம் சத்தியகிரீசுவரர் கோயிலிலும் காணப்படுகிறது. சங்கரநாராயணரைப் பிள்ளையார்பட்டியில் காணமுடிகிறது. கொற்றவையும் சிவபெருமானின் ஆடல்சிற்ப மும் இப்பகுதிக் குடைவரைகள் எவற்றிலும் காணப்படாத தனித்தன்மையனவாய் விளங்குகின்றன. இவற்றுள்ளும் கொற்றவை, தென்தமிழ்நாட்டுக் குடைவரைகளுள் பரங்குன்றத் தில் கருவறைத் தகுதி பெற்றுள்ளமையுடன், சிராப்பள்ளிக் கீழ்க் குடைவரையில் குன்றக்குடி போலவே கோட்டத் தெய்வமாக இடம்பெற்றுள்ளமை கருதத்தக்கது.

பரங்குன்றத்திலும் பரங்குன்றத்திற்குத் தெற்கே செவல் பட்டியிலும் திருமலைப்புரத்திலும் சிவபெருமானின் முற்கால ஆடல் வடிவங்களைக் காணமுடிந்தாலும், அவற்றினின்று பல நிலைகளில் வேறுபட்டும் செவல்பட்டி ஆடல் வடிவத்துடன் காலமைப்பிலும் அர்த்தஸ்வஸ்திகக் கையமைப்பிலும் ஒன்று

பட்டும் திகழும் இச்சிற்பம் அர்த்தஸ்வஸ்திகக் கரணத்தின் முத்திரை வெளிப்பாடாய் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சுதைப்பூச்சை அகற்றினால் மட்டுமே இதையும் செவல்பட்டி வடிவத்தையும் முழுமையான அளவில் ஒப்பீடு செய்து அர்த்த ஸ்வஸ்திகக் கரண நுணுக்கங்களை ஆராய்வது இயலுவதாகும்.

பல்லவர் பகுதியில் பரவலாக அறியப்பட்ட ஆனால், தென்தமிழ்நாட்டுக் குடைவரைகளில் இதுவரையிலும் அடையாளப்படுத்தப்படாதிருந்த மழுவடியாரைக் குன்றக்குடிக் குடைவரையில்தான் முதன்முறையாகப் பார்க்கமுடிகிறது. சூலத்தேவரும் மழுவடியாரும் இணைய நிற்கும் முதல் தென்தமிழ் நாட்டுக் குடைவரையாக குன்றக்குடி இரண்டாம் குடைவரை பெருமை கொள்கிறது.

திருவண்ணாமலை ஆதீனக் குடைவரைகளுள் கோளக்குடிக் குடைவரையே அளவில் பெரியது. கருவறைக்கும் முகப்பிற்கும் இடைப்பட்ட மண்டப அமைப்பைத் தூண்வரிசையொன்று இரண்டு பகுதிகளாகப் பிரித்து முகமண்டபம், அர்த்தமண்டபம் என வரையறை செய்துள்ளமையை இங்கு மட்டுமே காணமுடிகிறது. பெரும்பாலான தென்தமிழ்நாட்டுக் குடைவரைகளில் காணப்படாத இப்பகுப்புப் பரங்குன்றம் குடைவரையில் பின்பற்றப்பட்டுள்ளமையும் பல்லவர் பகுதியில் பரவலாகக் கையாளப்பட்டுள்ள இம்முறை தென்தமிழ்நாட்டுக் குடைவரைகளில் அருகியே காணப்படுவதும் நினைக்கத்தக்கன.

இந்நூலாசிரியர்கள் அறிந்தவரையில் தென்தமிழ்நாட்டுக் குடைவரைகளில் மலையடிக்குறிச்சியில் மட்டுமே காணப் படும் மகரதோரணம் கோளக்குடிக் கருவறை வாயிலை அழகு செய்கிறது. இதை, ஆதீனக் குடைவரைகளில் கோளக்குடிக்குக் கிடைத்த தனிப் பெருஞ் சிறப்பாகக் கருதலாம்.

குன்றக்குடி மரபிற்கேற்ப, பிள்ளையாரைத் தனி நிலைப் பாறைச் சிற்பமாகப் பெற்றுள்ள கோளக்குடிக் குடைவரையில், குன்றக்குடிக் குடைவரைகளில் காணப்படும் பிற சிற்பங்களுள் எதுவுமே இடம்பெறாமை குறிப்பிடத்தக்கது. மாறாகத் தேவர் மலைக் குடைவரைக் கோட்டங்களில் காணப்படும் முனிவர் சிற்பங்கள் இங்குச் சுவர்ச் சிற்பங்களாக அமைந்துள்ளன.

குன்னத்தூர் மூன்றாம் குடைவரையருகே காணப்படும் எழுவர் அன்னையர் தொகுதி போலவே இங்கும் தனிநிலைத் தொகுதியாக, குடைவரையின் இடப்புறப் பாறையில் வெட்டப் பட்டுள்ள எழுவர் அன்னையர் தொகுதியில், வேறெங்கும் இடம்பெறாத அமைப்பில் சாமுண்டியின் சிற்பம் தனித் தன்மையுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. அம்மையின் திருவடி களுக்கு முன் காணப்படும் எருமைத்தலை இவரைப் புராணங்கள் குறிப்பிடும் 'இயமியாக' அடையாளப்படுத்துவதுடன், மகிடா சுரமர்த்தினியாகவும் கொள்ளச் செய்வது எண்ணத்தக்கது.

கி. பி. எட்டாம் நூற்றாண்டினவாகக் கருதத்தக்க ஆதீனக் குடைவரைகளுள் பிரான்மலை தவிர ஏனைய அனைத்தும் சிவலிங்கத்தைக் கருவறைத் தெய்வமாகக் கொண்டுள்ளன. பிரான்மலையில் உமாசகிதராக அப்பனும் அம்மையும் அமர்ந் துள்ளனர். சதுரமாய் அமைந்துள்ள கருவறை இலிங்கத் திருமேனிகளுள் குன்றக்குடி இலிங்கங்களே அளவில் பெரியவை. இலிங்கத் திருமேனிகளின் கோமுகப் பகுதியைப் பூதமொன்று தாங்குமாறு குன்றக்குடி முதல் குடைவரையில் காட்டப் பட்டுள்ள அமைப்பினைத் திருமெய்யம் மேற்குடைவரையிலும் காணமுடிகிறது. இதே ஊரிலுள்ள சத்தியகிரீசுவரர் கோயிலில் பூதத்திற்கு மாற்றாகச் சிம்மத்தைக் காட்டியுள்ளனர். மலையக் கோயில் சிறிய குடைவரையிலும் இது போல் சிம்ம அமைப் புள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டுக் குடைவரைகளுள் எந்த ஒரு வளாகத்திலும் இல்லாத அளவிற்குக் கோளக்குடி வளாகம் நூற்றியொரு கல்வெட்டுகளைப் பெற்று முதன்மைக் குடைவரையாகத் திகழ் கிறது. தமிழ்நாட்டளவில் மிகப் பெரிய அளவிலான கல்வெட்டு களைப் பெற்ற மிகச் சில குடைவரை வளாகங்களுள் ஒன்றாக வும் கோளக்குடியைக் குறிப்பிடலாம். இதற்கிணையான அளவில் பெரிய கல்வெட்டுகளை மெய்யத்திலும் குடுமியான் மலையிலும் மட்டுமே பார்க்கமுடிகிறது. சோழர் காலத்தில் இருந்து தொடர்ந்து புரக்கப்பட்டு வரும் மிகச் சில தமிழ் நாட்டுக் குடைவரைகளுள் கோளக்குடியும் ஒன்றாகும்.

தமிழ்நாட்டில் நான்கு குடைவரைக் கோயில்களைத் தம் திருமடத்து அரவணைப்பில் பெற்றிருக்கும் ஒரே ஆதீனமாகத்

திருவண்ணாமலை ஆதீனத்தைக் குறிப்பிடலாம். ஆளுகையில் உள்ள பெரும்பான்மையான கோயில்களின் முழுமையான வரலாற்றைத் தொகுக்கத் துணைநின்றிருக்கும் ஒரே ஆதீனமாக வும் திருவண்ணாமலை ஆதீனத்தைக் கொண்டாடலாம். தமிழ், சமயம், வரலாறு எனும் இம்மூன்றையும் ஒரே நிலையில் வைத்துப் போற்றும் இத்திருமடத்துத் தலைவர்களின் பரந்த சமுதாயக் கண்ணோட்டமும் அன்பு கலந்த ஒத்துழைப்பும் இக்குடைவரைகளைப் போலவே இணையற்றன.

கட்டமைப்பு, சிற்ப இருப்பு இவ்விரண்டிலும் தென்தமிழ் நாட்டுக் குடைவரைகள் ஒன்றோடு ஒன்று சில நிலைகளில் வேறுபட்டும் பல நிலைகளில் ஒன்றுபட்டும் அமைந்துள்ளன. தொடர்பிழைகளைக் காணமுடியும் அதே நேரத்தில், தனித்துவங் களையும் அடையாளப்படுத்த முடிகிறது. தோன்றிய இடம், காலம், சூழ வாழ்ந்த சமுதாயம், அதன் சமயக் களம், நிலவிய வரலாற்றுப் பின்னணி இவற்றின் அடிப்படையில் இக்குடை வரைகளை ஆராய்வது அவசியமாகிறது. அப்போதுதான் தமிழ் நாட்டுக் குடைவரைக் கோயிற்கலையின் பொருளார்ந்த பின் புலத்தைத் தெளிய அறியமுடியும். அதற்கு இக்குடைவரைகள் அனைத்தையும் ஒருசேரப் பார்க்கும் வாய்ப்புத் தேவைப்படு கிறது. அந்த நோக்கத்தில் இந்நூலாசிரியர்கள் எடுத்துவைத் துள்ள முதல் அடியாக இந்த ஒப்பீட்டைக் கொள்ளலாம்.

துணைநூல் பட்டியல்

I முதல் நிலைச் சான்றுகள்

1. கல்வெட்டுகள்

1. Annual Report on Indian Epigraphy volumes 1909,1916, 1935 - 36, 1936 - 37, 1954 - 55 , 1955 - 56.
2. South Indian Inscriptions volumes 14, 26.

2. ஆகமங்கள், அகராதிகள்

1. காசியப சில்ப சாஸ்திரம், ஸ்ரீவாணி விலாஸம் பதிப்பகம், திருவரங்கம், 1968.
2. சில்பரத்தினம், சரசுவதி மகால் நூலக வெளியீடு, தஞ்சாவூர், 1989.
3. மயமதம், ஸ்ரீவாணி விலாஸம் பதிப்பகம், திருவரங்கம், 1966, 1968.
4. ஸ்ரீதத்துவநிதி, சரசுவதி மகால் நூலக வெளியீடு, தஞ்சாவூர், 1963, 1964, 1966.
5. Sakaladhikara of Sage Agastya, (Ed.) V. Gopala Iyengar, Sarasvathi Mahal Library, Thajavur, 1973.
6. தமிழ்க் கல்வெட்டுச் சொல்லகராதி, சாந்தி சாதனா, சென்னை, 2002.
7. மதுரைத் தமிழ்ப் பேரகராதி, இ. மா. கோபால கிருஷ்ணக் கோன் வெளியீடு, மதுரை.

3. இலக்கியங்கள்

1. புறநானூறு, அவ்வை சு. துரைசாமி உரை, கழக வெளியீடு, 1968.

II இரண்டாம் நிலைச் சான்றுகள்

1. தமிழ் நூல்கள்

1. ஆசிரியர் குழு, தமிழ்நாட்டு வரலாறு, பல்லவர் - பாண்டியர் காலம், முதல் தொகுதி, 1990; இரண்டாம் தொகுதி, 1997; சோழப் பெருவேந்தர் காலம் முதல் தொகுதி, இரண்டாம் தொகுதி, 1998, பாண்டியப் பெருவேந்தர் காலம், 2000, தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை.

2. இராசமாணிக்கம், தி., நெல்லைக் குடைவரைக் கோயில்கள், கழகம், சென்னை, 1980.

3. ....., தமிழகக் குடைவரைக் கோயில்கள், கழகம், சென்னை, 1984.

4. ....., தென்னகக் குடைவரைக் கோயில்கள், கழகம், சென்னை, 1989

5. இராசமாணிக்கனார், மா., சைவ சமய வளர்ச்சி, பூங்கொடிப் பதிப்பகம், சென்னை, 1999.

6. ....., பல்லவர் வரலாறு, கழக வெளியீடு, சென்னை, 2000.

7. இராசவேல், சு., சேஷாத்திரி, அ. கி., தமிழ்நாட்டுக் குடைவரைக் கோயில்கள், பண்பாட்டு வெளியீட்டகம், சென்னை, 2000.

8. கணபதி ஸ்தபதி, வை., சிற்பச் செந்நூல், தொழில் நுட்பக் கல்வி இயக்கக வெளியீடு, சென்னை, 1978.

9. கலைக்கோவன், இரா., கலை வளர்த்த திருக்கோயில்கள், கழக வெளியீடு, சென்னை, 1986.

10. ....., சுவடழிந்த கோயில்கள், பாரி நிலையம், சென்னை, 1987.

11. ....., பழுவூர்ப் புதையல்கள், கழக வெளியீடு, சென்னை, 1989.

12. ....., பழுவூர் அரசர்கள், கோயில்கள், சமுதாயம், இலக்கியப்பீடப் பதிப்பகம், சென்னை, 2002.

13. ....., சோழர் கால ஆடற்கலை, அலமு பதிப்பகம், சென்னை, 2003.

14. ....., தலைக்கோல், சேகர் பதிப்பகம், சென்னை, 2004.

15. சதாசிவ பண்டாரத்தார், தி. வை., பிற்காலச் சோழர் வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1974.

16. சுப்பராயலு, எ., இராசு, செ., தமிழ்க் கல்வெட்டியலும் வரலாறும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2001.

17. சேதுராமன், என்., பாண்டியர் வரலாறு, இராமன் அண்டு இராமன் கம்பெனி, கும்பகோணம், 1989.

18. நளினி, மு., கலைக்கோவன், இரா., அத்யந்தகாமம், டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம், 2004.

19. ....., தளிச்சேரிக் கல்வெட்டு, கழக வெளியீடு, சென்னை, 2002.

20. ....., மகேந்திரர் குடைவரைகள், அலமு பதிப்பகம், சென்னை, 2004.

21. ....., பெண்தெய்வ வழிபாடு தோற்றமும் வளர்ச்சியும், டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம், திருச்சிராப்பள்ளி, 2005.

22. ....., வலஞ்சுழி வாணர், டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம், திருச்சிராப்பள்ளி, 2005.

23. ....., கோயில்களை நோக்கி, டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம், திருச்சிராப்பள்ளி, 2005.

2. English Books

1. Gopinatha Rao,T.A., Elements of Hindu Iconography, Two vols., Motilal Banarsidass, Madras, 1974.

2. Gravely, F.H., Sivaramamurthi, C., An Introduction to South Indian Temple Architecture and Sculpture, Udaya Printers, Madras, 1992.

3. Kapila Vatsyayan, Classical Indian Dance in Literature and the Arts, Second Edition, Sangeet Natak Academy, New Delhi, 1977.

4. Krishna Sastri, H., South Indian Images of Gods and Goddesses, Asian Educational Services, New Delhi, 1986.

5. Mahadevan, I., Early Tamil Epigraphy, Cre-A, Harvard Publication, Chennai, 2003.

6. Manomohan Gosh (Translator), The Natyasastra, Manisha Grantalaya Pvt. Ltd., Calcutta,1967.

7. . . . . ., (Ed.), Abhinaya Darpanam, Manisha Grantalaya Pvt.Ltd.,Calcutta,1981.

8. Nilakanta Sastri, K.A., The Cholas, Madras University, 1964.

9. Shanmugam, P., The Revenue System of the Cholas 850-1279, New Era Publications, Madras, 1987.

10. Soundararajan, K.V., Rock-cut Temple Styles, Somaiyya Publications Pvt. Ltd., 1998.

11. Srinivasan, K.R., Cave-Temples of the Pallavas, ASI, New Delhi, 1964.

12. . . . . ., Temples of South India, National Book Trust, New Delhi, 1998.

3. தமிழ் இதழ்கள்

1. வரலாறு ஆய்விதழ் 1-16 தொகுதிகள், டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம், திருச்சிராப்பள்ளி.

2. ஆவணம் 1, அக்டோபர் 1991, தமிழகத் தொல்லியல் கழக வெளியீடு, திருச்சிராப்பள்ளி.

3. கலைக்கோவன், இரா., தினமணி கதிர், 16. 12. 1990.

4. கோவிந்தராாசன், சி., கல்வெட்டில் குன்றக்குடி, நன்னீராட்டு நறுமலர், மலர்க் குழு, குன்றக்குடி, 1979.

5. www.varalaaru.com volumes.

6. Nalini, M., Kalaikkovan, R., In the Name of a Ghost!, Studies in Indian Epigraphy, Vol.xxxi, The Epigraphical Society of India, Mysore, 2005.

4. Dissertation

1. Nalini, M., Political Geography of Valluvappadi nadu and Malanadu With Special Reference to Thiruchirappalli District from 7th century to 17th century A.D., Ph.D Dissertation submitted to Bharathidasan University, Thiruchirappalli, 1999.

5. Newspapers

1. தினமணி, 01. 08. 1994, 08. 07. 1996, 30. 07. 1999.

2. தினமலர், 30. 07. 1994, 29. 07. 1999.

3. தினத்தந்தி, 28. 07. 1994, 29. 07. 1999.

4. Indian Express, 27.11.1987.

5. The Hindu, 10. 07. 1996, 28. 07. 1999.

10. Soundararajan, K.V., Rock-cut Temple Styles, Somaiya Publications Pvt. Ltd., 1998.

11. Srinivasan, K.R., Cave Temples of the Pallavas, ASI, New Delhi, 1964.

12. ———, Temples of South India, National Book Trust, New Delhi, 1998.

3. [illegible]

1. [illegible]

2. [illegible]

3. [illegible]

4. [illegible]

5. www.varalaru.com volumes.

6. Nalini, M., Kalaikkovan, R., In the Name of a Ghost, Studies in Indian Epigraphy, Volume XXX, The Epigraphical Society of India, Mysore, 2005.

4. Dissertation

1. Nalini, M., Political Geography of Valluvappadi nadu and Malanadu With Special Reference to Thiruchirapalli District from 7th century to 17th century A.D., Ph.D Dissertation submitted to Bharathidasan University, Thiruchirapalli, 1998.

5. Newspapers

1. [illegible]

2. [illegible]

3. [illegible]

4. Indian Express, 27.11.1997.


5. The Hindu, 10.07.1996, 28.07.1999.

தென்தமிழ்நாட்டுக் குடைவரைகள்


தொகுதி – I

ஒளிப் படங்கள்

*



முதல் குடைவரை முகப்பும் முகமண்டபமும்




இரண்டாம் குடைவரை வாயிற்காவலர்கள் கிழக்கர்




இரண்டாம் குடைவரை வாயிற்காவலர்கள் மேற்கர்



இரண்டாம் குடைவரை கருடாந்திக விஷ்ணு



மூன்றாம் குடைவரை முகப்பும் முகமண்டபமும்



மூன்றாம் குடைவரை வாயிற்காவலர்கள் கிழக்கர்



மூன்றாம் குடைவரை வாயிற்காவலர்கள் மேற்கர்



மூன்றாம் குடைவரை முருகன்



மூன்றாம் குடைவரை பிள்ளையார்



மூன்றாம் குடைவரை கருடாந்திக விஷ்ணு




மூன்றாம் குடைவரை இலிங்கோத்பவ நான்முகன்



மூன்றாம் குடைவரை இலிங்கோத்பவர்




மூன்றாம் குடைவரை இலிங்கோத்பவ விஷ்ணு




மூன்றாம் குடைவரை சங்கரநாராயணர்



குன்றக்குடி சண்டேசுவரர்




பிரான்மலை முன்றில் மேடை இறைச்சிற்பம்



பிரான்மலை மங்கைபாகர் விமானமும் கோபுரமும்




மங்கைபாகர் குடைவரைக் காவற்பெண்டு




மங்கைபாகர் குடைவரைக் காவற்பெண்டு




மங்கைபாகர் கருவறை இறைச்சிற்பங்கள்




பிரான்மலைத் தேனம்மை



கோளக்குடி நாகர்




கோளக்குடிக் காமக்கோட்டம்




கோளக்குடி சிவபெருமான்



வராகி




எழுவர் அன்னையரில் மூவர்



எழுவர் அன்னையரில் இருவர்





கோளக்குடிக் குடைவரை முகப்பு




குடைவரை அர்த்தமண்டபமும் கருவறையும்

கருவறை மகரதோரணம்







அர்த்தமண்டபக் கருவறைத் தூண்கள்




கோளக்குடிப் பிள்ளையார்




கோளக்குடிப் புலத்தியர்



அரளிப்பட்டிக் கோட்டச் சிற்பம்



அரளிப்பட்டி இலிங்கப் பிள்ளையார்



அரளிப்பட்டிக் கருவறை

குறிப்பு :

எமது வெளியீடுகள்

நமக்குத் துணை நல்ல புத்தகங்களே

தமிழாய்வில் கண்ட உண்மைகள்	முனைவர் இரா. மதிவாணன்	100.
சொல்லாய்வுக் கட்டுரைகள்	முனைவர் இரா. மதிவாணன்	85.
தொல்காப்பியர் காலம்	முனைவர் இரா. மதிவாணன்	65.
சிலம்பின் காலக் கணிப்பு	முனைவர் இரா. மதிவாணன்	80.
கடைக் கழக நூல்களின் காலமும் கருத்தும்	முனைவர் இரா. மதிவாணன்	75.
கடல் கொண்ட தென்னாடு முதல் சிந்துவெளி வரை	முனைவர் இரா. மதிவாணன்	65.
பதிப்பியல் சிந்தனைகள்	முனைவர். இ. சுந்தரமூர்த்தி	100.
அகப்பொருளில் அச்சமெய்ப்பாடு	அ.வெ. சுப்பிரமணியன்	100.
தேனினும் இனிய தேவாரம்	அ. வெ. சுப்ரமணியன்	65.
வளர்தமிழ்ச் சிந்தனைகள்	முனைவர் மு. முத்துவேலு	65.
இராமாயணச் சிந்தனைகள்	பேராசிரியர் செ. வேங்கடராமன்	54.
சிவப்பிரகாசர் சிந்தனைகள்	பேராசிரியர் செ. வேங்கடராமன்	56.
இலக்கியச் சிந்தனைகள்	பேராசிரியர் செ. வேங்கடராமன்	50.
திறனாய்வுச் சிந்தனைகள்	பேராசிரியர் செ. வேங்கடராமன்	65.
அமைதி	புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்	30.
தொடுவானம்	கவிஞரேறு வாணிதாசன்	50.
காணிப் பழங்குடி மக்களின் பாடல்களும் வழக்காறுகளும்	முனைவர் யோ. தர்மராஜ்	85.
நாட்டார் வழக்காறுகளில் மக்கள் இடம் பெயர்வும் வரலாறும்	நெல்லை சு. தாமரைப் பாண்டியன்	50.
வல்லாள மகாராசன் கதை	"	70.
சங்க இலக்கியத்தில் அகவுணர்வு (உயிரினப் பயன்பாடு – நற்றிணை)	ச. பெ. சீனிவாசன்	70.

தென்தமிழ்நாட்டுக் குடைவரைகள் – தொகுதி –1		**205**
குமரிக் கண்டம் மூழ்கவில்லை	முனைவர் கொடுமுடி. சண்முகன்	70.
திறனாய்வுச் சுடர்	முனைவர் மறைமலை இலக்குவனார்	80.
சங்கத் தமிழ் இன்பம்	முனைவர் கா.பெ. சந்திரசேகரன்	42.
மொழியும் இலக்கிய வளமையும்	முனைவர் கா.பெ. சந்திரசேகரன்	42.
புறத்திணை விருந்து	பொ. சுந்தரமகாலிங்கம்	45.
விமர்சன வேள்வி	கா. ஜெயபாலன்	65.
பாவேந்தர் படைப்பில் அங்கதம்	கவிஞர் முருகு. சுந்தரம்	70.
கவிஞர் முருகுவின் சிந்தனைச் சிறகுகள்	முனைவர் மீனாட்சி முருகு ரத்தினம்	85.
சுற்றுச் சூழலியல் கல்வித் திட்டம்	முனைவர் ஜே. இலட்சுமி	63.
இந்தியா ஒளிர்ந்திடச் சிந்தனைகள்	முனைவர் டாக்டர் தில்லைநாயகம்	45.
கிருத்திகை – விளக்கச் சொற்பொழிவு	தவத்திரு ஞானியாரடிகள்	35.
அறிவியலே இலக்கியம்	நெல்லை சு. முத்து	90.
அறிவியலும் இலக்கியமும் சில மதிப்பீடுகள்	நெல்லை சு. முத்து	100.
காவடிச் சிந்தும் கவிஞன் வரலாறும்	அருட்கவி அரங்க சீனிவாசன்	80.
வில்லியனூர் விடுதலைவீரர்	முத்து. சுந்தரமூர்த்தி	80.
மங்கையர் சாதனைகள்	கோகிலா சுந்தரம்	40.
தேசீயம் பேசும் பெருமைகள்	கிளமென்ட் ஈசுவர்	25.
புதுவைக்குப் புகழ் சேர்த்த பெண்மணிகள்	கிளமென்ட் ஈசுவர்	135.
மன ஒருமையும் மாணவர் உலகமும்	நல்லாசிரியர் மு. மந்திரம்	25.
சின்னச் சின்னக் கதைகள்	ஆ. கோவிந்தராஜுலு	30.
அறிஞர் பி.எல். சாமியின் ஆய்வுக் கட்டுரைகள்	புலவர் ந. வேங்கடேசன்	45.
பண்பும் பயனும்	புலவர் ந. வேங்கடேசன்	25.
தேவாரத்தில் இசைக் கருவிகள்	புலவர் ந. வேங்கடேசன்	45.
வரலாற்றில் மதகடிப்பட்டு	புலவர் ந. வேங்கடேசன்	53.
வரலாற்றில் வில்லியனூர்	புலவர் ந. வேங்கடேசன்	50.
நகைச் சுவை விருந்து	எஸ். நல்லபெருமாள்	25.

சிற்றூரில் ஒரு சித்தர்	முனைவர் நாகப்பா நாச்சியப்பன்	30.
பொய்மான்	மகிழ்நன்	36.
ஓரடி முன்னால்	மகிழ்நன்	50.
கல்விக் கதைகள்	வெள்ளையாம்பட்டு சுந்தரம்	32.
ஈரம்	பொன். திலகவதி	50.
நடிகையின் கதை	மு. பரமசிவம்	46.
துடிக்கின்ற மனமொன்று	சசிரேகா	90.
பெண்கள் உடை – சோளிகள்	கற்பகம் வெங்கடேசன் D.M.T.B.C.,	45.
புதுமை தையற்கலை – செல்வார் – கம்மீஸ்	இரா. மோகன்தாஸ்	50.
வரலாற்றில் பெண்ணாகடம்	ச. கிருஷ்ணமூர்த்தி	50.
புதுவை இலக்கணச் செம்மல்	சி. இரமேஷ்	36.
பாவேந்தருடன்	குடந்தை புகழேந்தி	32.
குயில் பூங்கா	முனைவர் இளமாறன்	28.
திரையுலகில் விந்தன்	மு. பரமசிவம்	50.
திரையுலக நகைச்சுவை மன்னர்கள்	மு. பரமசிவம்	50.
தமிழ் ஒளி – 80	மு. பரமசிவம்	100.
விண்ணைத் தொடும் எண்ணங்கள்	என். இராஜசேகர் இ.ஆ.ப.,	40.
வளமையின் வாயில்கள்	என். இராஜசேகர் இ.ஆ.ப.,	32.
தமிழ்ச் சிறுகதைகளில் மனித நேயம்	மு. பரமசிவம்	42.
நெடுநல்வாடை	நலங்கிள்ளி	18.
வரலாற்று ஆவணங்கள்	சி.எம். கணபதி	80.
குணாதிசயம் பலவிதம்	உளவியல் நிபுணர் செ. இலக்குவன்	32.
உளவியல் நிபுணர் கையேடு	உளவியல் நிபுணர் செ. இலக்குவன்	35.
வீர மங்கையர்	புலவர் ம. அய்யாசாமி	52.
செஞ்சிப் பகுதியில் சமணம்	அணந்தபுரம் கோ. கிருட்டிணமூர்த்தி	80.
வழக்கிழந்த தமிழ்ச் சொற்கள்	அணந்தபுரம் கோ. கிருட்டிணமூர்த்தி	25.

சொல்லும் சுவையும்	முத்து எத்திராசன்	50.
எழுச்சி முழக்கம்	டாக்டர் சா. சகத்ரட்சகன்	45.
இரு பெரும் புலவர்கள்	டாக்டர் சா. சகத்ரட்சகன்	70.
கல்வெட்டில் தேவார மூவர்	பேராசிரியர் கா. ம. வேங்கடராமையா	28.
பாவேந்தர் புரட்சி நூறு	பாவலர் இலக்கியன்	30.
வாணிதாசன் பாடல்கள் ஓர் அறிமுகம்	தேவி. திருவளவன்	40.
இலக்கிய வண்ணங்கள்	கலைமாமணி கல்லாடன்	90.
வாணிதாசனாரின் பாட்டு வளம்	கலைமாமணி கல்லாடன்	50.
புன்னகைப் பூக்கள்	கோப்பெருந்தேவி கல்லாடன்	45.
கொழுந்து	கோவி. கலியபெருமாள்	30.
உரைவேந்தர் புலமையில் நற்றிணை	டாக்டர் வேனிலா ஸ்டாலின்	75.
தமிழ் நாவல்களில் நாட்டுப்புற வழக்காறுகள்	முனைவர் கோ. வெ. கீதா	85.
திருக்குறள் காமத்துப்பால் - உரை விளக்கம்	கி.சு.வி. இலட்சுமி அம்மணி	60.
சிலம்பின் காலம்?	டாக்டர் செல்லன் கோவிந்தன்	80.
சிலம்பின் காலம் மீண்டும் ஒரு விளக்கம்	”	55.
கண்ணகி வழிபாடு – தென்னகத்திலும் இலங்கையிலும்	டாக்டர் செல்லன் கோவிந்தன்	65.
தமிழ்ச் சுவடிப் பதிப்பும்	பாலகவி மு. கோ. ராமன்	75.
இரட்டைப் புலவர்களின் ஏகாம்பரநாதர் உலா	முனைவர் சிவ. சண்முக சுந்தரம்	75.
அரங்கப்பத் திருவேங்கடம் பிள்ளை நாட் குறிப்பு	முனைவர் எஸ். ஜெயசீலன் ஸ்டீபன்	40.
குமாரன் ஆசான் பாரதிதாசன் ஓர் ஒப்பாய்வு	முனைவர் காஞ்சனா	100.
தமிழர் பண்பாட்டுப் பதிவுகள்	முனைவர் சொ. சாந்தலிங்கம்	110.
தமிழ் இலக்கியத்தில் சமுதாயச் சிந்தனைகள்	முனைவர் ச. முருகேசன்	65.
போலி நோய் (நாடகம்)	முனைவர் இ. தூக்கோவளன்	70.

பொன்முடி தமிழுக்கு (நாடகம்)	"	60.
கடல் வாழ் உயிரினங்கள்	த. செல்வி	45
சுற்றுச் சூழல் சுகவாழ்வு	முனைவர் ஆ. யோகமூர்த்தி	60.
நம்மைச் சுற்றி அறிவோம்	"	60.
பொன் பரப்பின வாணகோவரையன்	புலவர் ந. வேங்கடேசன் மா. சந்திரமூர்த்தி	85.
நந்திக் கலம்பகம் (மூலமும் உரையும்)	புலவர் ம. அய்யாசாமி	60.
அணியியல் சிந்தனைகள்	ம. கருணாநிதி	85.
மலையாளசாமி வழிபாடு	முனைவர் ஆ. கணேசன்	50.
புலேந்திரன் களவு மாலை - கூத்து	தொ. சீனிவாசன்	50.
வரலாற்றில் திருப்பாதிரிப்புலியூர்க் கோவில்	அனந்தபுரம்-கோ கிருட்டிணமூர்த்தி	
தென் தமிழ் நாட்டுக் குடைவரைகள் தொகுதி - 1	மு. நளினி, இரா.கலைக்கோவள்	100.
மனோன்மணீயம் சுந்தரனார்	கவிமாமணி பி. குமரேசன்	
தேனினும் இனிய தேவாரம்	அறிஞர் அ.வெ. சுப்பிரமணியன்	60.
குயிலவண்ணான் கதை	சு. தாமரைப் பாண்டியன்	
மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ் - ஒப்பாய்வு	சு. பாலுசாமி	80.
தொல்காப்பியம் வேற்றுமைக்கோட்பாடு	சு. பாலுசாமி, சு. லலிதா பாலுசாமி	65.
கலை வரலாற்றுப் பயணங்கள்	மு. ஸ்ரீனிவாசன்	130.

